# ஸ்ரீ காயத்ரி

## தமிழ் துணைவன்

## பதினோராம் வகுப்பு


**ஆசிரியர்கள்**

R.**சாந்தி**, எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,
முதுகலை தமிழாசிரியை.
P.**விஜயாள்**, எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,
முதுகலை தமிழாசிரியை.
K.**அங்கயற்கண்ணி**, எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,
முதுகலை தமிழாசிரியை.


மேலான கருத்துகள், விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன.


**ஸ்ரீ காயத்ரி பப்ளிகேஷன்**
**ஸ்ரீ ராஜ் பப்ளிகேஷன்**
**(கல்வி நூல் வெளியீட்டாளர்)**
**19, திருநகர் (தெற்கு), கிரி சாலை விரிவாக்கம்,**
**சீனிவாசபுரம், தஞ்சாவூர் - 9.**
**அலைபேசி: 94427 14154,**
**94432 57890, 94883 33422**


www.tnpscjob.com

# பொருளடக்கம்


## செய்யுள்

| இயல் | பாடத்தலைப்புகள் |
|---|---|
| 1. | 1. யுகத்தின் பாடல் |
| | 2. நன்னூல் பாயிரம் |
| 2. | 1. திருமலை முருகன் பள்ளு |
| | 2. ஏதிலிக்குருவிகள் |
| | 3. ஐங்குறுநூறு |
| 3. | 1. காவடிச்சிந்து |
| | 2. குறுந்தொகை |
| | 3. புறநானூறு |
| | 4. திருக்குறள் |
| 4. | 1. விஞ்ஞானி |
| | 2. நீலகேசி |
| | 3. புறநானூறு |
| 5. | 1. பிள்ளைக்கூடம் |
| | 2. நற்றிணை |
| | 3. தொல்காப்பியம்: சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் |
| 6. | 1. சீறாப்புராணம் |
| | 2. அகநானூறு |
| | 3. திருக்குறள் |
| 7. | 1. ஆத்மாநாம் கவிதைகள் |
| | 2. குற்றாலக் குறவஞ்சி |
| | 3. திருச்சாழல் |
| 8. | 1. புரட்சிக்கவி |
| | 2. பதிற்றுப்பத்து |
| 9. | 1. ஜப்பானிய ஹைக்கூ |
| | 2. காவியம் |
| | 3. தொலைந்து போனவர்கள் |
| | 4. வில்லிபாரதம் |
| 10. | 1. ஒவ்வொரு புல்லையும் |
| | 2. மனோன்மணீயம் |

## இலக்கணம்

| இயல் | பாடத்தலைப்புகள் |
|---|---|
| 1. | மொழி முதல், இறுதி எழுத்துகள் |
| 2. | மெய்ம் மயக்கம் |
| 3. | பகுபத உறுப்புகள் |
| 4. | புணர்ச்சி விதிகள் |
| 5. | படைப்பாக்க உத்திகள் |
| 6. | பா இயற்றப் பழகலாம் |
| 7. | கலைச் சொல்லாக்கம் |
| 8. | ஆக்கப் பெயர்கள் |
| 9. | நிறுத்தற்குறிகள் |
| 10. | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் |

## உரைநடை

| இயல் | பாடத் தலைப்புகள் |
|---|---|
| 1. | பேச்சு மொழியும் கவிதை மொழியும் |
| 2. | இயற்கை வேளாண்மை |
| 3. | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு |
| 4. | தலைமைச் செயலகம் |
| 5. | தமிழகக் கல்வி வரலாறு |
| 6. | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு |
| 7. | காலத்தை வென்ற கலை |
| 8. | காற்றில் கலந்த பேரோசை |
| 9. | சித்தர் உலகம் |
| 10. | தாகூரின் கடிதங்கள் |

## துணைப் பாடம்

| இயல் | பாடத்தலைப்புகள் |
|---|---|
| 1. | ஆறாம் திணை |
| 2. | யானை டாக்டர் |


➔

PROOF COPY



www.tnpscjob.com

# பதிப்புரை

**அன்புமிகு மாணவச் செல்வங்களே!**

சாதிக்கப் பிறந்த சாதனையாளர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள் !

நீங்கள் எழுதவிருக்கும் அரசுப் பொதுத் தேர்வில் அரசு வகுத்த பாடத் திட்டத்தின்படி, மொழித்தாளான தமிழ்ப் பாடத்திலும் முழு மதிப்பெண்கள் பெற்று மகிழ, இவ்வுரை நூல் உங்களுக்குப் பெரிதும் துணை புரியுமாறு தெளிவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாக எளிய இனிய நடையில் மாணவர்கள் ஓரிருமுறை படித்தாலே மனதில் பதியும் வண்ணம் இவ்வுரை நூல் அமைந்துள்ளது.

வினாவிற்குரிய விடைகளைக் குவித்து வைக்காமல், கருத்துகளை தெளிவாக வகைப்படுத்தி அமைத்து இருப்பது மாணவர்களுக்குப் பெரும் பயன் தரும்.

ஆகவே இவ்வுரை நூலைப் பன்முறை படித்து, பசுமரத்தாணி போல் மனதில் பதித்து, நன்முறையில் தேர்வெழுதி மதிப்பெண்களை அள்ளிடுங்கள்! வெற்றி மேல் வெற்றி அடைந்து வாழ்வில் சிகரம் தொட வாழ்த்துகள்!

PROOF COPY

3. வாடி வாசல்
4. இனிக்கும் இன்சுலின்
5. இதழாளர் பாரதி
6. பிம்பம்
7. இசைத்தமிழர் இருவர்
8. சிந்தனைப் பட்டிமன்றம்
9. காஞ்சனை- முன்னுரை
10. செவ்வி

**பிற் சேர்க்கை**

**இயல் பாடத்தலைப்புகள்**

1. மனப்பாடப் பகுதி
2. இலக்கணக் குறிப்பு
3. பகுபத உறுப்பிலக்கணம்
4. புணர்ச்சி
5. இலக்கியநயம் பாராட்டல்
6. தமிழாக்கம் தருக
7. சொல் - பொருள்



www.tnpscjob.com

# இயல் - 1
## 1. யுகத்தின் பாடல்

**I. ஒரு மதிப்பெண் வினாக்கள்:**

1. படிப்போரின் ஆழ்மனதில் **புதுக்கவிதை** ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.
2. யுகத்தின் பாடலின் ஆசிரியர் **கவிஞர் சு. வில்வரத்தினம்.**
3. கவிஞர். சு. வில்வரத்தினம் பிறந்த ஊர் **யாழ்ப்பாணத்தில உள்ள புங்குடுத் தீவு.**
4. கவிஞர் சு. வில்வரத்தினம் எழுதிய கவிதைத் தொகுப்பின் பெயர் **உயிர்த்தெழும் காலத்துக்காக.**
5. கவிஞர் சு. வில்வரத்தினம் கவிதைகள் தொகுக்கப்பட்ட ஆண்டு **2001.**
6. தன் இனத்தையும், மொழியையும் பாடாத கவிதை **வேரில்லாத மரம்** கூடில்லாத **பறவை.**
7. அந்நியர் தேசத்தில் நம்மவர் நிலை **அகதி நிலை.**
8. என் புன்னகையைக்கூட **மொழிபெயர்க்க முடியாத** நிலையில் நான் இருந்தேன்.
9. நிறைமணி என்பதன் இலக்கணக் குறிப்பு - **வினைத்தொகை.**
10. துள்ளி உயிர்த்தெழுந்தேன் பரவச வெளியில் நானுமோர் **பறவையானேன்.**
11. என் காயத்தை வருடிச் சென்றது. **தாய்மொழியின் அமுதிசை.**

**II. இரு மதிப்பெண் வினாக்கள்:**

**1. புதுக்கவிதை என்பதற்கு விளக்கம் தருக?**

மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதை என்பர்.

**2. பன்முகத்தன்மை கொண்டது எது? எவ்வாறு?**

- பன்முகத்தன்மை கொண்டது புதுக்கவிதை.
- படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது.

**3. கவிதை பற்றி இரசூல்கம்சதோவ் கருத்து என்ன?**

தன் இனத்தையும், மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் ; கூடில்லாத பறவை என்பதே இரசூல்கம்சதோவ் கருத்து ஆகும்.

**4. அந்நிய தேசத்தில் நம் நாட்டு மக்களின் நிலை என்ன?**

- தன் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத நிலை.
- மற்றும் உதற முடியாத நிலை, உரக்க குரல் எடுக்க முடியாத நிலை.

**5. இனம், மொழி குறித்த இரசூல்கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.**

இனம், மொழி பற்றி இரசூல்கம்சதோவ் இனத்தையும், மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் ; கூடில்லாத பறவை என்று குறிப்பிடுகின்றார்.

**6. *என் அம்மை, ஒற்றியெடுத்த / நெற்றிமண் அழகே!***
***வழிவழி நினதடி தொழுதவர், / உழுதவர், விதைத்தவர்,***
***வியர்த்தவர்க் கெல்லாம் / நிறைமணி தந்நவளே!***



PROOF COPY
www.tnpscjob.com

**இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

**வினையாலணையும் பெயர்கள்:**

• தொழுதவர் • உழுதவர் • விதைத்தவர் • வியர்த்தவர்

7. **சு.வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?**

பூமித்தாயின் நெற்றி மண் அழகு. பூமித்தாயின் திருவடிகளை வழிவழியாய்த் தொழுகின்றனர். உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர் எல்லாருக்கும் நிறைந்த பொருளைத் தந்தவள் பூமித்தாய் அவளுக்குப் பல்லாண்டு பாடத் தான் வேண்டும். அதுபோல நமது தமிழ்த்தாய் சங்க காலம் தொடங்கி இன்றைய காலம் வரை நமக்கு ஏற்பட்ட இடர்களைக் களைந்து உயர்தனிச் செம்மொழியாய் செழித்தோங்கி இருக்கின்றாள். அவள் பெருமையை எல்லாத் திசைகளிலும் பரவச் செய்ய நாம் பல்லாண்டு வாழ்த்துப்பாட வேண்டும்.

## 2. நன்னூல் - பாயிரம்

I. **ஒரு மதிப்பெண் வினாக்கள்:**

1. நன்னூலின் ஆசிரியர் **பவணந்தி முனிவர்.**
2. பவணத்தி முனிவரின் காலம் **கி.பி. 13 ஆம் நூற்றாண்டு.**
3. நன்னூலில் **2** அதிகாரங்கள் உள்ளன.
4. நன்னூலில் உள்ள அதிகாரங்கள் • **எழுத்ததிகாரம்** • **சொல்லதிகாரம்.**
5. பவணந்தி முனிவர் ........................ வேண்டுகோளுக்கு இணங்க நன்னூல் இயற்றினார். **சீயகங்கன் என்னும் சிற்றரசர்**
6. தமிழின் முதல் இலக்கண நூல் **தொல்காப்பியம்.**
7. நன்னூல் ஒரு .............. நூலாகும். **வழி**
8. நூலுக்கு முகம் போல முற்பட்டிருப்பது **நூன்முகம்**.
9. நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது **அணிந்துரை**.
10. நூலுக்கு முன் சொல்லப்படுவது **முகவுரை**.
11. பாயிரத்திற்கு உரிய பெயர்கள் மொத்தம் **ஏழு**.
12. .............. இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது. **பாயிரம்**
13. நன்னூல் பாயிரம் .............. வகையைச் சார்ந்தது. **நூற்பா வகை**
14. பாயிரம் இல்லது .............. அன்றே. **பனுவல்**

II. **இரு மதிப்பெண் வினாக்கள் (சிறு வினா):**

1. **பாயிரம் எதற்கு உதவுகிறது?**

• நூலைப் புரிந்து கொள்ளவும்.

• நூலின் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது.

2. **பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்கள் யாவை?**

• முகவுரை • பதிகம் • அணிந்துரை • புனைந்துரை

• நூன்முகம் • புறவுரை • தந்துரை.

PROOF COPY



www.tnpscjob.com

**3. முகவுரை என்றால் என்ன?**

நூலுக்கு முன் சொல்லப்படுவது முகவுரை எனப்படும்.

**4. பதிகம் என்பது என்ன?**

ஐந்து பொதுவும், பதினொரு சிறப்புமாகிய பல்வகைப் பொருள்களையும் எடுத்துச் சொல்வது பதிகம் எனப்படும். (பொது என்பது பொதுப்பாயிறம் சிறப்பு என்பது சிறப்புப் பாயிரத்தையும் குறிக்கும்.)

**5. அணிந்துரை என்பது யாது?**

நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது அணிந்துரை எனப்படும்.

**6. நூன்முகம் என்றால் என்ன?**

நூலுக்கு முகம் போல முன்னால் இருப்பது நூன்முகம் எனப்படும்.

**7. புறவுரை என்பது யாது?**

நூலில் சொல்லப்பட்ட பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்தே சொல்வது புறவுரை எனப்படும்.

**8. தந்துரை என்பது யாது?**

நூலில் சொல்லப்பட்ட பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது தந்துரை எனப்படும்.

**9. பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பாயிரம் இரண்டு வகைப்படும். அவை: 1. பொதுப்பாயிரம் 2. சிறப்புப்பாயிரம்

**10. பொதுப்பாயிரம் என்றால் என்ன?**

• நூலின் இயல்பு • ஆசிரியர் இயல்பு • கற்பிக்கும் முறை

• மாணவர் இயல்பு • கற்பிக்கும் முறை

என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம் எனப்படும்.

**11. சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் யாது?**

- நூலாசிரியர் பெயர்
- நூல் பின்பற்றிய வழி
- நூல் வழங்கப்படுகின்றன நிலப்பரப்பு
- நூலின் பெயர்
- தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு
- நூலில் குறிப்பிடப்படும் கருத்து
- நூலைக் கேட்போர் (மாணவர்)
- நூலைக் கற்பதனால் பெறுகின்றன பயன்

ஆகிய எட்டுச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆகும்.

**12. சிறப்புப்பாயிரத்தில் மேலும் கூறப்பட்டுள்ள மூன்று செய்திகள் யாவை?**

• நூல் இயற்றப்பட்ட காலம் • நூல் அரங்கேற்றம் செய்யப்பட்ட அவைக்களம் • நூல் இயற்றப்பட்டதற்கான காரணம்.



PROOF COPY
www.tnpscjob.com

**13. பாயிரத்தின் சிறப்பு யாது?**

ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக் கூறினாலும் பாயிரம் இல்லையென்றால் ஒருநூல் சிறந்த நூலாக மதிக்கப்பட மாட்டாது.

**14. அணிந்துரையின் சிறப்பு யாது?**

மாடங்களுக்கு ஓவியங்களும், பெரிய நகரங்களுக்கு கோபுரங்களும், அழகிய தோள்களைக் கொண்ட மகளிருக்கு அணிகலன்களும் எழிலைத் தரும். அதுபோல எல்லா வகை நூல்களுக்கும் முன்னர் அழகு தருவதாக அணிந்துரையைப் புலவர்கள் பெருமையுடன் சேர்த்து வைத்தனர்.

**15. நன்னூல் பாயிரம் பாடலில் எடுத்தாளப்பட்டுள்ள உவமைகள் யாவை?**

- மாடங்களுக்கு ஓவியங்கள்
- பெரிய நகரங்களுக்கு கோபுரங்கள்
- அழகிய தோள்களைக் கொண்ட மகளிருக்கு அணிகலன்கள்

இவையே நன்னூல் பாயிரம் பாடலில் எடுத்தாளப்பட்டுள்ள உவமைகள்.

**16. நன்னூல் இலக்கண நூலில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன? அவை யாவை?**

நன்னூல் இலக்கண நூலில் இரண்டு அதிகாரங்கள் உள்ளன.

அவை 1. எழுத்ததிகாரம் 2. சொல்லதிகாரம்.

**17. நன்னூல் எழுத்ததிகாரம் எத்தனை பகுதிகளை உடையது? அவை யாவை?**

நன்னூல் எழுத்ததிகாரம் 5 பகுதிகளை உடையது.

அவை: 1.எழுத்தியல், 2.பதவியல், 3.உயிரீற்றுப் புணரியல், 4.மெய்யீற்றுப் புணரியல், 5. உருபுப் புணரியல்

**18. நன்னூல் சொல்லதிகாரம் எத்தனை பகுதிகளை உடையது? அவை யாவை?**

நன்னூல் சொல்லதிகாரம் 5 பகுதிகளை உடையது. அவையாவன: 1.பெயரியியல், 2.வினையியல், 3.பொதுவியல், 4.இடையியல், 5.உயிரியியல்

**19. பவணந்தி முனிவர் யார் வேண்டுகோளுக்கு இணங்க நன்னூல் இலக்கண நூலை இயற்றினார்?**

பவணந்தி முனிவர் சீயகங்கன் என்னும் சிற்றரசன் வேண்டுகோளுக்கு இணங்க நன்னூல் இலக்கண நூலை இயற்றினார்.

**20. பவணந்தி முனிவரின் உருவச் சிற்பம் இன்றும் எங்குள்ளது?**

ஈரோடு மாவட்டம் மேட்டுப்புதூர் என்ற ஊரில் எட்டாம் தீர்த்தங்கரான சந்திர பிரபாவின் கோவிலில் பவணந்தி முனிவரின் உருவச் சிற்பம் இன்றும் உள்ளது.

**21. நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

- நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும்
- அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்க வேண்டும்.



PROOF COPY

www.tnpscjob.com

**III. பெருவினா:**

1. **நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க?**

**பொதுப்பாயிரம்:** • நூலின் இயல்பு • ஆசிரியர் இயல்பு
• கற்பிக்கும் முறை • மாணவர் இயல்பு • கற்கும் முறை
என்னும் ஐந்தையும் பற்றிக் கூறுவது பொதுப்பாயிரம் எனப்படும்.

**சிறப்புப் பாயிரம்:** • நூல் ஆசிரியர் பெயர் • நூல் பின்பற்றி வழி
• நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு • நூலின் பெயர்
• தொகை, வகை, விரி என்பனவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு
• நூலில் குறிப்பிடப்படும் கருத்து • நூலைக் கேட்போர் (மாணவர்)
• நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்
ஆகிய எட்டுச் செய்திகளையும் அதனுடன்
• நூல் இயற்றப்பட்ட காலம் • நூல் அரங்கேற்றப்பட்ட அவைக்களம்
• நூல் இயற்றப்பட்டதற்கான காரணம் என்னும் இம்மூன்றையும் சேர்த்துக் கூறுவது சிறப்புப் பாயிரம் எனப்படும்.

## இயல் - 2

## 1. திருமலை முருகன் பள்ளு

**I. ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1. பள்ளு எவ்வகை இலக்கியம்? **சிற்றிலக்கியம்**
2. சிற்றிலக்கியம் மொத்தம் எத்தனை? **தொண்ணூற்றாறு**
3. நெல்லு வகையை எண்ணினாலும் **பள்ளு** வகையை எண்ண முடியாது.
4. வேளாண் இலக்கியம் என்றழைக்கப்படும் நூல் எது? **பள்ளு**
5. அரிய பல செய்திகளின் கருவூலமாக விளங்கும் நூல் எது? **பள்ளு**
6. பள்ளு நூலுக்கு உரிய மற்றொரு பெயர் யாது? **உழத்திப் பாட்டு**
7. பள்ளு இலக்கியம் தொல்காப்பியம் குறிப்பிடும் **புலன்** என்னும் இலக்கிய வகையைச் சாரும்.
8. திருமலை முருகன் பள்ளு என்ற நூலின் ஆசிரியர் **பெரியவன் கவிராயர்.**
9. பெரியவன் கவிராயரின் காலம் **18ஆம் நூற்றாண்டு.**
10. பண்புளிப்பட்டணம் எங்கு அமைந்துள்ளது?
**திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகில்**
11. பண்புளிப்பட்டணம் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகின்றது?
• **பண்பை** • **பண்பொழில்** என்று அழைக்கப்படுகின்றது.
12. பண்புளிப்பட்டணத்தில் உள்ள சிறுகுன்றின் பெயர் என்ன? **திருமலை**
13. திருமலை முருகன் பள்ளுவின் பாட்டுடைத் தலைவர் யார்?
**திருமலையில் கோவில் கொண்டுள்ள முருகப் பெருமான்.**

PROOF COPY



www.tnpscjob.com

14. திருமலை முருகன் பள்ளுவிற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
**1. பள்ளிசை, 2. திருமலை அதிபர் பள்ளு**
15. வட ஆரி நாடு என்பது **திருமலையைக்** குறிக்கும்.
16. தென் ஆரி நாடு என்பது **குற்றாலத்தைக்** குறிக்கும்.
17. ஆரளி என்பதன் பொருள் **மொய்க்கின்றன வண்டு.**
18. இந்துணம் என்பது **ஒரு வகை பண்ணைக்** குறிக்கும்.
19. இடங்கணி என்பது **சங்கிலி.**
20. உளம் என்பது எவ்வகை பறவை? **உள்ளான் என்ற பறவை**
21. சலசவாவி என்பது குறிப்பது எதை? **தாமரைத் தடாகம்**
22. தரளம் என்பது **முத்து.**
23. கா என்பதன் பொருள் **சோலை.**
24. முகில்தொகை என்பது **மேகக்கூட்டம்.**
25. மஞ்ஞை என்பது எது? **மயில்**
26. கொண்டல் என்பது எதைக் குறிக்கிறது? **கார்கால மேகம்**
27. கண்காணி என்பது பேச்சு வழக்கில் **கங்காணி என்று பயன்படுத்தப்படுகிறது.**
28. பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல் **கண்காணம்.**
29. கண்காணம் என்பது **கங்காணம்** என்றும் வழங்கப்படுகிறது.

**II. இரு மதிப்பெண் வினாக்கள்:**

1. **பள்ளு சிற்றிலக்கியத்தின் குறிக்கோள் யாது?**
உழவன் உழத்தியரது வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் குறிக்கோள்.
2. **திருமலை முருகன் பள்ளு என்ற நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?**
திருமலையில் கோவில் கொண்டுள்ள முருகப் பெருமான் ஆவார்.
3. **திருமலை முருகன் பள்ளுவில் விரவி வந்துள்ள பாவகைகள் யாவை?**
கலித்துறை, கலிப்பா, சிந்து போன்ற பாவகைகள் திருமலை முருகன் பள்ளுவில் விரவி வந்துள்ள பாவகைகள் ஆகும்.
4. **கண்காணி என்பதன் பொருள் விளக்கம் தருக?**
நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும். கண்காணி என்பது இந்த ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.
5. **திருமலை முருகன் பள்ளு கூறும் உழவுக்கருவிகள் யாவை?**
கலப்பை, நுகம், பூட்டு, கயிறு, வள்ளைக்கை, உழக்கோல், கொழுகயமரம், மண்வெட்டி, வடம் என்பன திருமலை முருகன் பள்ளு கூறும் உழவுக்கருவிகள்.
6. **திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகள் யாவை?**
   - பைங்குழலாள்
   - சீதாபோகம்
   - ரங்கஞ்சம்பா
   - மணல்வாரி
   - அதிக்கிராதி
   - அரிக்ராவி



PROOF COPY
www.tnpscjob.com

- முத்துவெள்ளை
- புழுகுசம்பா
- சொரிகுரம்பை
- புத்தன்வாரி
- சிறைமீட்டான்
- கருங்சூரை
- பூம்பாளை
- குற்றாலன்
- பாற்கடுக்கன்
- கற்பூரப்பாளை
- காடை கழுத்தன்
- மிளகுசம்பா
- பனைமுகத்தன் ஆகியவையாகும்.

7. **திருமலை முருகன் பள்ளு கூறும் மாடு வகைகள் யாவை?**
   - காரி
   - தொந்திக்காளை
   - மால்காளை
   - மறைகாளை
   - மயிலைக் காளை
   - மேழைக்காளை
   - செம்மறையான்
   - கருமறையான் ஆகியவையாகும்.

8. **வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன்**
   **மாடம் எங்கும் அகிற்புகை நாறும் -**
   **அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?**
   நீண்டு வளர்ந்த சோலையில் மேகக்கூட்டங்கள் தங்கிச் செல்லும்.

III. **மூன்று மதிப்பெண் வினாக்கள்**

1. **வடகரை நாட்டின் வளம் பற்றி திருமலை முருகன் பள்ளு கூறுவனவற்றை விளக்குக?**

   வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும். வண்டின் இசை கேடு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும்.

   தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துக்களை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும். மின்னலையொத்த பெண்கள் பெய் என்றால் மழை பெய்யும். உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும். இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும். இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்றன திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றனர்.

2. **தென்கரை நாட்டின் வளம் பற்றி திருமலை முருகன் பள்ளு கூறுவன யாவை?**
   - தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும்.
   - இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் அகில் புகையின் நறுமணம் பரவிக் கொண்டே இருக்கும்.
   - இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.
   - செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது காவல் காப்பர்.
   - இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர்.



PROOF COPY

www.tnpscjob.com

- இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துக்களை ஏந்தி வரும்.
- அவ்வலைகள் கரைகளில் மோதும்பொழுது முத்துக்கள் சிதறி வெடிக்கும்.
- இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.

**3. சலச வாவியில் செங்கயல் பாயும்- இடஞ்சுட்டி விளக்குக.**

**இடம்:** பெரியவன் கவிராயர் இயற்றிய **திருமலை முருகன் பள்ளு** என்ற நூலில் இப்பாடல் வரி இடம்பெற்றுள்ளது.

**பொருள்:** தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.

**விளக்கம்:** வடகரை நாட்டின் வளத்தைப் பற்றிக் கூறும்பொழுது இந்நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டும் பாடும். மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும். தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துக்களை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும். மின்னலையொத்த பெண்கள் பெய் என்றால் மழை பெய்யும். உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும். இவையே வடகரை நாட்டின் வளமாகும்.

## 2. ஏதிலிக்குருவிகள்

**I. ஒரு மதிப்பெண் வினாக்கள்:**

1. உயிர்களின் இருப்பை **இயற்கைச் சூழலே** முடிவு செய்கிறது.
2. இயற்கைக்கும் மனிதர்க்கும் தொப்புள்கொடி **மழைத்துளி.**
3. மண்ணில் முதல் துளி விழுகையில் **உயிர்கள்** மலர்கின்றன.
4. ஏதிலிக்குருவிகள் என்ற கவிதையின் ஆசிரியர் **அழகிய பெரியவன்.**
5. அழகிய பெரியவன் பிறந்து வாழ்ந்த ஊர் எது?
   **வேலூர் மாவட்டம் பேரணாம்பேட்டை.**
6. அழகிய பெரியவனின் இயற்பெயர் **அரவிந்தன்.**

**II. இரு மதிப்பெண் வினாக்கள்:**

**7. அழகிய பெரியவன் படைப்புத்தளங்கள் எவை? எவை?**

நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற படைப்புத்தளங்களில் இயங்குபவர்.

8. தமிழக அரசின் விருதினைப் பெற்றவர் **அழகிய பெரியவன்.**

**9. அழகிய பெரியவன் தமிழக அரசின் விருதினை எதற்காக எப்பொழுது பெற்றார்?**

அழகிய பெரியவன் ‘தகப்பன் கொடி’ என்ற புதினத்திற்காக 2003ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருதினைப் பெற்றார்.



www.tnpscjob.com

**10. அழகிய பெரியவன் ஆற்றும் பணி யாது?**

அரசுப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார்.

**11. அழகிய பெரிவனின் சிறுகதைத் தொகுப்புகள் எவை?**

குறடு, நெரிக்கட்டு முதலியன அழகிய பெரியவனின் சிறுகதைத் தொகுப்புகள்.

**12. அழகிய பெரியவனின் கவிதைத் தொகுப்புகள் எவை? எவை?**

உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு முதலியன அவரது கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

**13. அழகிய பெரியவனின் கட்டுரைத் தொகுப்புகள் எவை?**

மீள்கோணம், பெருகும் வேட்கை முதலியன அழகிய பெரியவனின் கட்டுரைத் தொகுப்புகளாகும்.

**14. ஏதிலிக்குருவிகள் கவிதை எவற்றைக் காட்சிப்படுத்துகின்றன?**

சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலத்தைக் காட்சிப்படுத்துகிறது ஏதிலிக்குருவிகள் கவிதை.

**15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின- தொடரின் பொருள் யாது?**

மரங்கள் வெட்டப்பட்டன, வானம் பொய்த்துவிட்டது, மண் மறுகியது ஆதலால் ஏதிலியாய்க் குருவிகள் அழிந்து போய்விட்டன.

**III. மூன்று மதிப்பெண் வினாக்கள்:**

**16. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?**

இக்காலத்தே குருவிகளையும் கூடுகளையும் பார்க்க முடியவில்லை. முன்பு ஊரில் அடைமழை பெய்யும், ஆற்றில் நீர் புரண்டோடும். ஆற்றங் கரையோரம் பெரிய மரங்கள் இருக்கும். அம்மரத்தில் பறவைகள் குரல் எழுப்பும். போகும் வழியெல்லாம் தூக்கணங்குருவிகள் கூடுகள் அமைந்திருக்கும். அவை காற்றிலாடும் புல் வீடுகள். மூங்கில் கிளை மேலே சிட்டுக்குருவிகள் சுழித்தோடும் நீரைப் பார்த்து பாடிக்கொண்டிருக்கும்.

இன்றோ, மரங்கள் வெட்டப்பட்டன. வானம் மழை பெய்வதைத் தவிர்த்தது. மண் மறுகி விட்டது. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ சென்றுவிட்டன. காற்றில் ஆடும் புல் வீடுகள் தூக்கணாங்குருவிக் கூடுகள் ஆகும்..

## 3. ஐங்குறுநூறு

**I. ஒரு மிதிப்பெண் வினா:**

1. ஐங்குறுநூறு பிரிக்கும் முறை?

**ஐந்து + குறுமை + நூறு.**

2. ஐங்குறுநூற்றின் அடி வரையறை என்ன?

**3 அடிச் சிறுமையும் 6 அடிப் பெருமையும் உடையது.**

3. ஐங்குறுநூறு ............. பாக்களால் ஆனது. **அகவற்பாக்களால்**

PROOF COPY



www.tnpscjob.com

4. ஐங்குறுநூற்றில் ஐந்து என்பது எதனைக் குறிக்கும்.
**ஐந்து என்பது ஐந்து திணைகளைக் குறிக்கும்.**
5. ஐங்குறுநூற்றுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடலை பாடியவர் யார்?
**பாரதம் பாடிய பெருந்தேவனார்.**
6. ஐங்குறுநூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர் யார்?
**புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்.**
7. ஐங்குறுநூற்றுப் பாடல்களை தொகுப்பித்தவன் யார்?
**யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை.**
8. நமது பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஐங்குறுநூற்றின் ஆசிரியர் யார்? **பேயனார்**
9. சங்ககாலப் புலவர்களில் ஒருவர் **பேயனார்.**
10. பேயனார் இயற்றிய **105** பாடல்கள் கிடைத்துள்ளன.
11. ஆடுகம் விரைந்தே என்ற தலைப்பில் அமைந்த ஐங்குறுநூறு பாடலின் திணை **முல்லை.**
12. ஆடுகம் விரைந்தே என்ற தலைப்பில் அமைந்த ஐங்குறுநூறு பாடலின் துறை யாது?
**பருவம் (கார் காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.**
13. ஆடுகம் விரைந்தே என்ற ஐங்குறுநூற்று பாடல் யார் கூற்று? **தலைவன்.** யாரிடம் கூறினார்? **தலைவியிடம்.**
14. மக்கள் வாழ்வோடு இயைந்தது எது? **மலர்கள்.**
15. ஆடுகம் விரைந்தே என்ற ஐங்குறுநூற்று பாடலில் இடம்பெற்றுள்ள மலர்கள் யாவை? **காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம்.**
16. ஆடுகம் விரைந்தே என்பதின் பொருள் யாது?
**ஆட விரைந்து வா என்பது.**

II. **குறுவினா:**

1. **ஐங்குறுநூறு பாடல்களின் எண்ணிக்கை எத்தனை? அதன் அமைப்பு முறை யாது?**
ஒவ்வொரு திணைக்கும் 100 பாடல்கள் வீதம் ஐந்து திணைக்கும் மொத்தம் 500 பாடல்கள் உள்ளன.
2. **ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு திணையும் பாடிய புலவர்கள் யார்? யார்?**

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | கபிலர் |
| முல்லை | - | பேயனார் |
| மருதம் | - | ஓரம்போகியார் |
| நெய்தல் | - | அம்முவனார் |
| பாலை | - | ஓதலாந்தையார் |

3. **சங்கப்பாடல்கள் தலைவனைப் பற்றிப் பேசுவது என்ன?**
இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொன்னும்



www.tnpscjob.com

PROOF COPY

பொருளும் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிப் பல சங்கப் பாடல்கள் பேசுகின்றன.

4. **ஆடுகம் விரைந்தே என்ற ஐங்குறுநூறு பாடல் எத்தகைய பாடல்?**
தலைவனின் வரவைத் தலைவிக்கு அறிவிக்கும் பாடல்.

5. **நமது பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள திணை எது? அதன் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை அட்டவணைப்படுத்துக:**

**திணை:** முல்லை

**முதற்பொருள்:** நிலம்: காடும் காடு சார்ந்த நிலமும்
பெரும்பொழுது: கார்காலம்
சிறுபொழுது: மாலை

**உரிப்பொருள்:** இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

**கருப்பொருள்:** 1. தெய்வம்: திருமால். 2. மக்கள்: இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர். 3. உணவு: வரகு, சாமை. 4. விலங்கு: முயல், மான். 5. பூ: முல்லை, தோன்றி. 6. மரம்: கொன்றை, காயா. 7. பறவை: காட்டுக்கோழி, மயில், அன்னம். 8. ஊர்: பாடி, சேரி. 9. நீர்: காட்டாறு. 10. பறை: ஏறுகோட் பறை. 11. யாழ்: முல்லை. 12. பண்: சாதாரி. 13. தொழில்: காளை தழுவல், வரகு விதைத்தல், களை பறித்தல், ஆநிரை மேய்த்தல், குழலூதல்.

III. **நெடு வினா:**

1. **ஐங்குறுநூற்றுப் பாடலின் மூலம் தலைவன் தலைவிக்கு உரைத்த செய்திகளைக் கூறுக.**
   - பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்றான் தலைவன்.
   - அவன் தான் வருவதாக சொல்லிவிட்டுச் சென்ற காலத்திற்கு முன்னரே வீட்டிற்குத் திரும்புகிறான்.
   - வருவதாகக் கூறிச் சென்ற மழைக்காலம் முடியும் முன்னே வந்து விட்டதனை உணர்த்த நினைக்கிறான்.
   - பெரிய அழகிய கண்களை உடையவளே!
   - அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிவடம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன.
   - அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்.

2. **ஐங்குறுநூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள மலர்களைப் பற்றிக் கூறுக.**

1. **காயா:**
   - காயா என்பது ஒருவகை மலர். இது காய்ப்பது இல்லை. கபிலர் இயற்றிய குறிஞ்சிப் பாட்டில் கூறப்பட்டுள்ள 99 மலர்களுள் ஒரு மலர்.
   - குயம்புச்செடி, காசா மரம், பூங்காலி, அஞ்சனி, பூவை என்றெல்லாம் அழைக்கப் பெறும்.

2. **கொன்றை:**
   - கொன்றை அல்லது சரக்கொன்றை எனப்படும்.

PROOF COPY



www.tnpscjob.com

- பூக்கும் தாவரம். • கேரளாவின் மாநில மலராகும்.
- அலங்கார அழகு தாவரம், மருத்துவ குணம் வாய்ந்ததாகும்.
- தமிழ் நூலில் இந்த தாவரம் கொன்றை எனப்படும்.
- சங்க காலத்தில் இது முல்லை நிலத்திற்குரிய பூவாகவும் கருதப்பட்டது.
- இது தாய்லாந்து நாட்டின் தேசியப்பூ மற்றும் மலராகும்.

3. **தளவம்:** சங்ககாலத்தில் தளவம் என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டு வந்த மலர் இக்காலத்தில் செம்முல்லை என வழங்கப்படுகிறது. இது முல்லைப் பூவின் இனம். இந்த முல்லை மொட்டு செந்நிறத்தில் இருப்பதால் இதனை செம்முல்லை என்றனர். இது இரு வித்திலைத் தாவரம்.

4. **முல்லை:** முல்லை என்னும் சொல்லே காட்டில் மலரும் வனமுல்லையைத் தான் குறிக்கும். பாரி வள்ளல் தன் தேரை வழங்கியது இந்த முல்லைக்குத்தான். இக்காலத்தில் மகளிர் தலையில் சூடிக் கொள்ளும் முல்லை நன்முல்லை ஆகும். இதனைச் சூடிக் கொண்ட புலவர் நன்முல்லையார். இதற்குப் பருவகாலம் இல்லை. கார் காலத்தில் முதல் மழை பெய்த நாளில் அடும்பு விட்டு பூத்துக் குலுங்கும்.

5. **பிடவம்:** பிடவம் மலர் பிடவு என்னும் குறிக்கப்படும் கார் கால முதல் மழையின் போது ‘குப்’ என்று ஒரே நாளில் காடெல்லாம் பூத்துக் குலுங்கும். மறுநாளே அத்தனையும் கொட்டிப் போகும். ஒரு வார காலம் பூக்கும். இவ்வளவு தான் இதன் வாழ்வு. இதனை இக்காலத்தில் குட்டிப்பிலாத்தி என்கின்றனர். இலை இல்லாமல் பூத்துக் குலுங்கும்.

6. **நெய்தல்:**
   - நெய்தல் மலர் கடற்கரை நிலங்களில் மிகுதியாகப் பூக்கும்.
   - ஆம்பல், கொட்டி, நீலம், நெய்தல், குமுதம், செங்கழுநீர் இவையாவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை.
   - குறிஞ்சிப்பாட்டு இதன் இரண்டு வகைகளைக் குறிப்பிடுகிறது.
   - நீர்நிலை மலர், வயல்வெளி மலர்.
   - நெய்தல் பெண்களின் கண்ணுக்கு உவமையாகக் காட்டப்படும்.

(ஒவ்வொரு மலரைப் பற்றியும் தனித்தனியாக குறுவினாவில் கேட்கப்படலாம்.)

## இயல் - 3
## 1. காவடிச் சிந்து

**I. ஒரு மதிப்பெண் வினா:**

1. காவடிச் சிந்து பாடலின் ஆசிரியர் யார்? **சென்னிகுளம் அண்ணாமலையார்.**



PROOF COPY
www.tnpscjob.com

2. காவடிச் சிந்து **அருணகிரியாரின்** திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியமாகும்.
3. காவடிச் சிந்து எத்தகைய இலக்கியம் **சந்த இலக்கியம்.**
4. காவடிச் சிந்து பாடல்களின் மெட்டுகள் யாரால் அமைக்கப்பட்டன? **அண்ணாமலையாரால்.**
5. தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியவர் **அண்ணாமலையார்.**
6. காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? **சென்னிகுளம் அண்ணாமலையார்.**
7. அண்ணாமலையார் எந்த வயதில் அரசவைப்புலவரானார்? **18ஆம் வயதில்.**
8. அண்ணாமலையார் யாரிடம் அரசவைப்புலவராக இருந்தார்? **ஊற்றுமலை குறுநிலத் தலைவர் இருதயாலய மருதப்பத் தேவர்.**
9. அண்ணாமலையார் இயற்றிய வேறு நூல்கள் யாவை? **வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி.**
10. தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று **காவடி.**
11. காவடி எடுத்து ஆடுவது எங்கு வழக்கமாக உள்ளது? **குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.**

**II. குறுவினா:**

**1. காவடிச் சிந்து என்பது யாது?**

- தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச் சிந்து எனலாம்.
- முருகப் பெருமான் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களை கொண்டு செல்வர்.
- ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.
- அவர்களின் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச் சிந்து என்ற பாவடிவம் தோன்றியது.

**III. பெருவினாக்கள்:**

**1. காவடிச்சிந்து பாடலின் பொருள் விளக்கம் தருக.**

- சென்னிகுளம் என்னும் நகரில் வாழ்கின்ற அண்ணாமலை தாசன் ஆகிய நான் பாடிய உலகம் போற்றும் காவடிச் சிந்து என்னும் மதுரமான கவிமாலையைத் தன் மலை போன்ற அகன்ற தோளில் சார்த்திக் கொள்கிறான் முருகன்.
- அந்தக் கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் வளத்தை நான் சொல்கிறேன். பெண்ணே!

PROOF COPY



www.tnpscjob.com

- கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க முருகன் கோவில் திகழ்கிறது.
- காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைகிறது.
- நெஞ்சம் நெகிழ்ந்துருக தங்கத்தினும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் முருகன் அருளைப் பெறுவார். இன்பம் அடைவார்.

**2. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.**

காவடி என்பது தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது. காவடி எடுத்துச் செல்வோர் அதைச் சுமையாக எண்ணாமல் பாடியவாறே செல்வதாகும்.

## 2. குறுந்தொகை

**I. ஒரு மதிப்பெண் வினாக்கள்:**

1. எட்டுத்தொகை நூல்களில் நல்ல என்ற அடைமொழி பெற்ற நூல் எது? **குறுந்தொகை**
2. குறுந்தொகை பாடல்கள் எவ்வகை திணையைச் சார்ந்தவை? **அகத்திணை**
3. குறுந்தொகையில் உள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை? **401.**
4. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கொள் காட்டப்பட்ட நூல் எது? **குறுந்தொகை**
5. முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூல் எது? **குறுந்தொகை**
6. குறுந்தொகை நூலைத் தொகுத்தவர் யார்? **பூரிக்கோ**
7. குறுந்தொகை நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்? **பாரதம் பாடிய பெருந்தேவனார்**
8. நமது பாடல் பகுதியின் ஆசிரியர் யார்? **வெள்ளிவீதியார்**
9. வெள்ளிவீதியார் **சங்க காலப் பெண் புலவர்களில்** ஒருவர்.
10. வெள்ளிவீதியார் பாடிய பாடல்கள் எவை?
    **சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்களை இவர் பாடியுள்ளார்.**

**II. சிறுவினாக்கள்:**

**1. அம்ம வாழி என்ற குறுந்தொகை பாடல் எவற்றைக் காட்சிப்படுத்துகிறது?**

அன்பும் அறனும் விளையும் திருமண வாழ்வைத் தலைவி விரும்புவதையும், இரு மனம் இணையும் திருமணத்தை உறுதி செய்ய இரு வீட்டார் முனைவதையும் குறுந்தொகை பாடல் காட்சிப்படுத்துகிறது.

**2. நல்ல குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

- எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்துக் கூறும் பழம்பாடலில் ‘நல்ல



www.tnpscjob.com

குறுந்தொகை’ என்று அடை கொடுத்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

- குறுமை + தொகை = குறுந்தொகை. குறுகிய அடிகளை உடைய செய்யுட்களின் தொகையாதலின் குறுந்தொகை என வழங்கப்பட்டது.
- நான்கடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையும் உடையது.
- நானூறு செய்யுட்களை உடையது.
- ஆசிரியப் பாவால் ஆனது.
- குறுந்தொகை நானூறு என்ற பெயரும் உண்டு.

**11. குறுந்தொகை பாடல் இடம்பெற்ற திணை யாது?**

**திணை:** குறிஞ்சி

**12. அம்ம வாழி தோழி என்ற குறுந்தொகை பாடலின் பாவகை யாது?**

நேரிசை ஆசிரியப்பா.

**III. பெருவினாக்கள்:**

**1. குறிஞ்சித் திணைக்குரிய முதல், கருப்பொருள், உரிப்பொருள் இவற்றை விளக்குக.**

| திணை | நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த நிலமும் | கூதிர், முன்பனி | யாமம் | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |

**கருப்பொருள்:**

1. தெய்வம்: சேயோன்
2. மக்கள்: பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி, குறவர், கானவர், குறத்தியர்
3. புள்: கிளி, மயில்
4. விலங்கு: சிங்கம், புலி, கரடி, யானை
5. ஊர்: சிறுகுடி
6. நீர்: அருவி நீர், சுனை நீர்
7. பூ: வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ
8. மரம்: சந்தனம், தேக்கு, அகில், மூங்கில்
9. உணவு: மலை நெல், மூங்கிலரிசி
10. பறை: தொண்டகப்பறை
11. யாழ்: குறிஞ்சி யாழ்
12. பண்: குறிஞ்சிப் பண்
13. தொழில்: வெறியாடல், மலை நெல் விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்

PROOF COPY



www.tnpscjob.com

2. **வெள்ளி வீதியார் இயற்றிய 'அம்ம வாழி தோழி!' என்ற பாடலின் பொருள் விளக்கத்தை எழுதுக.**

ஊர் மக்களின் அவையின் முன்பு பலமுறை தலைவனின் பரிசப் பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டன. இன்றோ, தலைப்பாகை அணிந்து கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகத் தலைவன் போதுமென்று சொல்லத்தக்க அளவு பரிசப் பொருட்களைக் கொண்டுவந்து அவைமுன் வைத்துள்ளான். அவையில் இருந்த தலைவியின் உறவினரும் கண்டு 'நன்று நன்று' என்று கூறி மகிழ்ந்தனர். இக்காட்சியைக் கண்ட தலைவி, "அடி தோழியே! நம்முடைய ஊரில் முன்பெல்லாம் பரிசத்தொகை போதவில்லை என்பதற்காகப் பிரித்துவிடப்பட்ட தலைவன் தலைவியரைப் போதிய பரிசத்தொகை கிடைத்தவுடன் சேர்த்து வைப்போர் இருந்தனரா?" என்று வினவுகின்றாள்.

3. **குறுந்தொகை பாடலில் இடம்பெற்ற துறை யாது?**

தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப, தன் தமர் மறுப்பரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி "தலைவன் வரைவை நமர் ஏற்றுக் கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது.

4. **குறுந்தொகை பாடலில் இடம்பெற்றுள்ள துறைய விளக்குக.**

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறாள். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக் கொண்டனர். மணம் மறுத்தால் சான்றோர் மன்றத்தில் முறையிட்டுக் கொள்ளலாம் என்று தேற்றுகிறாள்.

## 3. புறநானூறு

I. **ஒரு மதிப்பெண் வினாக்கள்:**

1. **தமிழரின் வாழ்வியல் கருவூலம் எது?** புறநானூறு
2. **புறநானூறு எதைப் பற்றிப் பேசுகிறது?**
   வீரத்தையும் ஈரத்தையும் மட்டும் பேசாது வாழ்வின் விழுமியங்களையும் பேசுகிறது.
3. **பிறவிப்பயன் எது?** பிறர்க்கென வாழ்வதே பிறவிப்பயன் ஆகும்.
4. **'உண்டால் அம்ம' என்ற புறநானூற்றுப் பாடல் யாரைப் பற்றிப் பேசுகிறது?**
   தனக்கென வாழா மனிதர்களைப் பற்றிப் பேசுகிறது.
5. **எட்டுத்தொகை நூல்களுல் ஒன்று எது?** புறநானூறு
6. **புறநானூற்றில் மொத்தம் எத்தனைப் பாடல்கள் உள்ளன?**
   புறநானூற்றில் புறத்திணை சார்ந்த நானூறு பாடல்கள் உள்ளன.



PROOF COPY
www.tnpscjob.com

**7. புறநானூற்றுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**
புறம், புறப்பாட்டு என்று வழங்கப்படும்.
**8. புறநானூறு எவ்வகைப் பாக்களால் ஆனது?** அகவற்பாக்களால் ஆனது.
**9. புறநானூற்றுப் பாடல்கள் எவற்றைப் பற்றி எடுத்துரைக்கின்றன?**
புறநானூற்றின் பாடல்கள் சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.
**10. 'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்ற பாடலின் ஆசிரியர் யார்?**
கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
**11. 'உண்டால் அம்ம இவ்வுலகம்' - பாடலின் பாவகை எது?**
நேரிசை ஆசிரியப்பா.

**II. இரு மதிப்பெண் வினாக்கள்:**

**1. இளம்பெருவழுதி - பெயர்க்காரணம் தருக.**
அரிய குணங்கள் அனைத்தையும் தம் இளமைக் காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள் இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர்.
**2. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி - பெயர்க்காரணம் தருக.**
கடற்செலவு ஒன்றிலிறந்துபோனமையால் இவர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார்.
**3. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி இயற்றிய பாடல்கள் யாவை?**
புறநானூற்றில் ஒரு பாடலும், பரிபாடலில் ஒரு பாடலும் இயற்றியுள்ளார்.
**4. புறநானூறு பாடல்கள் எந்த தலைப்பில்? எம்மொழியில்? யாரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?**
- The four hundred songs of war and wisdom: An anthology of poem from classical Tamil, the Purananuru
- ஆங்கிலத்தில் • பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட்

**5. புறநானூற்றில் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?**
ஜி.யு. போப்
**6. புறநானூற்றுப் பாடல்களை ஜி.யு. போப் எந்தத் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்?**
Extrats from Purananooru & Purapporul Venbamalai.
**7. புறநானூற்றுப் பாடல்களை முதன்முதலில் பதிப்பிட்டு வெளியிட்டவர் யார்? எப்பொழுது?**
உ.வே. சாமிநாதய்யர் 1894ஆம் ஆண்டு முதன்முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார்.
**8. 'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்ற பாடலில் இடம்பெற்றுள்ள திணை எது?**
பொதுவியல் திணை

PROOF COPY



www.tnpscjob.com

**9. பொதுவியல் திணை பற்றி விளக்குக.**

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**10. புறநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள துறை யாது?**

பொருண்மொழிக் காஞ்சித் துறை.

**11. பொருண்மொழிக் காஞ்சித் துறை பற்றி விளக்குக.**

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்.

**12. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?**

தமிழர்கள் புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர். பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

**III. பெருவினாக்கள்:**

**23. 'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்ற புறநானூற்றுப் பாடலின் கருத்தினை விளக்குக.**

- தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள்.
- இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது இனிமையானது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள்.
- யாரையும் வெறுக்க மாட்டார்கள்
- சோம்பலின்றிச் செயல்படுவார்கள்
- பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்
- புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர்
- பழிவரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளார்.
- எதற்கும் மனம் தளர மாட்டார்கள்.
- இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**24. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.**

அ. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று (குறள்-82)

ஆ. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (குறள்-428)

இ. பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் (குறள்-996)

ஈ. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள்-212)



PROOF COPY
www.tnpscjob.com

## 4. திருக்குறள்

**I. ஒரு மதிப்பெண் வினாக்கள்:**

1. உலகப் பொதுமறை என்று போற்றப்படும் தமிழ் இலக்கியம் எது? **திருக்குறள்**
2. உலகப் பொதுமறை என்று போற்றப்படக் காரணம் என்ன?
   **உலக மக்கள் அனைவருக்கும் எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்தமையால் திருக்குறள் உலகப்பொதுமறை என்று அழைக்கப்படுகிறது.**
3. திருக்குறள் எவ்வகை நூல்களில் ஒன்று? **பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.**
4. வாழ்வியல் நூல் எது? **திருக்குறள்.**
5. திருக்குறள் 1330 குறட்பாக்களால் ஆனது.
6. திருக்குறளுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
   **• உலகப் பொதுமறை • பொய்யாமொழி • வாயுறை வாழ்த்து**
   **• முப்பால் • உத்தரவேதம் • தெய்வநூல்**
   இவை திருக்குறளுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் ஆகும்.
7. திருக்குறள் அனைத்தும் **குறள் வெண்பா** என்னும் பா வகையால் ஆனது.
8. திருக்குறளுக்கு உரை வழங்கியவர்கள் எத்தனை பேர்?
   **திருக்குறளுக்கு உரை வழங்கியவர்கள் மொத்தம் பத்து பேர்.**
9. திருக்குறளுக்கு உரை வழங்கியவர்கள் யாவர்?
   **• பரிமேலழகர் • மணக்குடவர் • காலிங்கர் • பரிதி • பரிப்பெருமாள்**
   **• தருமர் • தாமத்தர் • நச்சர் • திருமலையர் • மல்லர்**
10. திருக்குறளின் சிறப்பினை விளக்க வந்த நூல் எது? **திருவள்ளுவ மாலை**
11. திருவள்ளுவமலையின் ஆசிரியர் யார்? **பல புலவர்கள் பாடியது.**
12. திருவள்ளுவருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
    **• தேவர் • நாயனார் • தெய்வப்புலவர் • செந்நாப்போதர் • பெருநாவலர்**
    **• பொய்யில் புலவர் • பொய்யாமொழிப் புலவர் • மாதானுபங்கி • முதற்பாவலர்**
    இவையே திருவள்ளுவருக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்கள் ஆகும்.
13. திருக்குறளின் முப்பெரும் பிரிவுகள் யாவை?
    **• அறத்துப்பால் • பொருட்பால் • இன்பத்துப்பால்**
14. அறத்துப்பாலில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன? **38 அதிகாரங்கள்**
15. அறத்துப்பாலில் எத்தனை இயல்கள் உள்ளன? **4 இயல்கள்**
16. அறத்துப்பாலில் உள்ள இயல்களின் பெயர்கள் யாவை?
    - **பாயிரவியல் - 04 அதிகாரங்கள்**
    - **இல்லறவியல் - 20 அதிகாரங்கள்**
    - **துறவறவியல் - 13 அதிகாரங்கள்**
    - **ஊழியல் - 01 அதிகாரம்**
17. பொருட்பாலில் எத்தனை இயல்கள் உள்ளன? **3 இயல்கள்**

PROOF COPY



www.tnpscjob.com

18. பொருட்பாலில் உள்ள இயல்களின் பெயர்கள் யாவை?

- **அரசு இயல் - 25 அதிகாரங்கள்**
- **அமைச்சு இயல் - 32 அதிகாரங்கள்**
- **ஒழிபியல் - 13 அதிகாரங்கள்**

19. இன்பத்துப்பாலில் எத்தனை இயல்கள் உள்ளன? **2 இயல்கள்**

20. இன்பத்துப்பாலில் உள்ள இயல்களின் பெயர்கள் யாவை?

- **களவியல் - 07 அதிகாரங்கள்**
- **கற்பியல் - 18 அதிகாரங்கள்**

21. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.

**விடை: நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**

22. துன்பப்படுபவர்

அ) தீக்காயம்பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

**விடை: ஈ) நாவைக் காக்காதவர்.**

23. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.
ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.
இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்

**விடை: நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ்வுலகு.**

**24. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

பூக்களுக்கும் முள்களுக்கும் இடையில்
புழங்குகிறது மோனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நசுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்ற

PROOF COPY



www.tnpscjob.com

வெளியில் குண்டுகளும்
வீட்டில் சண்டைகளும்...
ஆசை அறுத்தல் எளிதல்ல !
முயன்று பார்க்கலாம் வா !

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

**விடை: இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.**

25. ஒப்புரவு என்பதன் பொருள் ..................

அ) அடக்கமுடையது, ஆ) பண்புடையது, இ) ஊருக்கு உதவுவது, ஈ) செல்வமுடையது. **பதில்: இ) ஊருக்கு உதவுவது.**

26. பொருத்துக:

**அ) வாழ்பவன் - ஒத்ததறிபவன்**
**ஆ) வாழதாதவன் - வீழ்பவன்**
**இ) தோன்றுபவன் - புகழ் தரும் பண்புடையவன்**
**ஈ) வெல்ல நினைப்பவன் - காத்திருப்பவன்**
**உ) பெரும் பண்புடையாள் - மருந்தாகும் மரமானவன்**

27. இலக்கணக் குறிப்புத் தருக:

**அ) சுடச்சுடரும் - முற்றும்மை**
**ஆ) சுடச்சுடரும் பொன் - பெயரெச்சம்**
**இ) சுடச்சுட - அடுக்குத்தொடர்**

28. விரைந்து கெடுபவன் யார்?

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வான நினைப்பவன்

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன் தன்னை உயர்வாக நினைக்காதவன்

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

**விடை: பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவாகக் கெடுவான்.**



PROOF COPY
www.tnpscjob.com

29. வேளாண்மை செய்தற் பொருட்டு பொருள் கூறுக.

**விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.**

**30. பற்று நீக்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது.**

அ) பற்றுகள் பெருகும் - பொருள்களின் இன்பம் பெருகும்

ஆ) பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்

இ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்

ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் - பற்றுகள் பெருகும்

**விடை: பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்**

**31. அருவினை- புணர்ச்சி விதி கூறுக.**

அருவினை அருமை + வினை. ஈறுபோதல் என்ற விதிப்படி மை விகுதி கெட்டு அருவினை எனப் புணர்ந்தது.

**II. குறுவினாக்கள்:**

**1. தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?**

- தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டாகும் ஆனால் உள்ளே ஆறிவிடும் ஆதலால் அதைப் புண் என்றார்.
- நாவினால் சுட்ட புண் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது. அதனால் அதை வடு என்று குறிப்பிடுகின்றார்.

**2. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்-**
**இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

**உவமை:** தன் எல்லா உறுப்புகளும் நோய்க்கு மருந்தாகிப் பயன்படுதலில் தவறாத மரம்.

**உவமேயம்:** பிறர்க்கு உதவி செய்யும் பெருந்தன்மை உள்ளவனிடத்தில் சென்று சேரும் செல்வம்.

**பொருத்தம்:** பெருந்தகையானுக்கு மருந்து மரமும், பெருந்தகையான் செல்வம் பயன்படுதலுக்கு மருந்து மரம் பயன்படுதலும் உவமைகளாம்.

**விளக்கம்:** மருந்து மரம் தன் இலை, பூ, காய், கனி முதலியவற்றைப் பறித்தலோடு அமையாமல் தன் மேற்பட்டை முதலியவற்றைச் செதுக்கிக் கொண்டே போகும். அது தன் குறைகளைப் பொருட்படுத்தாது அவர்கள் நோயைப் போக்கும். அதுபோல ஒப்புரவாளன் செல்வமும் பிறருக்குப் பயன்படுவதால் உண்டாகும் தன் குறைவையும் நோக்காது எல்லாருடைய வருத்தத்தையும் தப்பாமல் தீர்க்கும் என்பதாம்.



PROOF COPY
www.tnpscjob.com

3. **நல்ல செயல்களை விரைந்து செய்யச் சொல்வதன் மூலம் நிலையாமை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?**

- நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர்க்கு இறுதி வரும் முன், நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும். • நேற்று இருந்தவன் இன்று இல்லை என்றும் நிலையாமைப் பெருமை உடையது இவ்வுலகம்!
- ஆதலால் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.

4. **சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?**

- தான் செய்யப் போகும் செயலின் வலிமை
- அச்செயலைச் செய்யும் தன்னுடை வலிமை
- தனக்கு எதிராக உள்ள பகைவனின் வலிமை
- பகைவனுக்குத் துணையானார் வலிமை

இந்நான்கும் சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் ஆகும்.

5. **மருந்து மரமாக இருப்பவர் யார்? மருந்து எது?**

மருந்து மரமாக இருப்பவர் பிறருக்கு உதவி செய்யும் பெருந்தன்மை உடையவர். மருந்து எது என்றால் பிறருக்கு உதவி செய்யும் பெருந்தன்மை உடையவரிடத்தில் சென்று சேரும் செல்வம்.

**III. சிறுவினாக்கள்:**

1. **தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**அணிச்சுட்டல்:** வேற்றுமை அணி இக்குறட்பாவில் பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம்:** முதலில் இரு பொருள்களுக்கு ஒப்புமை கூறி, பின்னர் அவற்றை வேறுபடுத்தி, ஒன்றை விட ஒன்று உயர்ந்ததாய்க் கூறுதல் வேற்றுமையணி ஆகும்.

**விளக்கம்:** நெருப்பால் சுட்ட புண் விரைந்து ஆறும். நாவினால் சுட்ட வடு ஆறாது என்பது இப்பாட்டின் பொருள். முதலில் தீயினால் சுடுதலும் நாவினால் சுடுதலும் ஒப்புமை தோன்றக் கூறப்பட்டன. பின்னர் தீயினால் சுட்ட புண் ஆறும். நாவினால் சுட்டது ஆறாது என வேறுபடுத்திக் கூறப்பட்டமையால் இது வேற்றுமை அணி ஆகும்.

2. **புகழுக்குரிய குணங்களாக நீவிர் கருதுவன யாவை?**
**புகழின் பெருமையைப் பொதுமறை நின்று கூறுக?**

- ஏழைகளுக்கு வேண்டியதைத் தருக! அதனால் புகழ் பெருக வாழ்க! அப்புகழைத் தவிர மனித உயிர்க்கு நன்மை தருவது வேறொன்னும் இல்லை. இதுவே நிலையான புகழ்.

**புகழின் பெருமையைப் பற்றி பொதுமறை:**

- இணையற்ற உயர்ந்த புகழைப் போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.



PROOF COPY
www.tnpscjob.com

- தோன்றினால் புகழ் தரும் பண்புகளுடன் தோன்றுக! இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது.
- பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர்.
- புகழில்லாமல் வாழ்பவரே வாழாதவர் என்று புகழின் பெருமையைப் பற்றி பொதுமறை கூறுவன ஆகும்.

3. **நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும் - இக்குறட்பாவை அலகிட்டு வாய்ப்பாடு கூறுக.**

| எண் | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | நாச்/செற்/று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2. | விக்/குள்/மேல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3. | வா/ரா/முன் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4. | நல்/வினை | நேர் நிரை | கூவிளம் |
| 5. | மேற்/ சென்/று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6. | செய்/யப் | நேர் நேர் | தேமா |
| 7. | படும் | நிரை | மலர் |

இக்குறட்பா **மலர்** என்னும் வாய்ப்பாட்டால் நிறைவு பெறுகிறது.

4. **சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கி கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**
**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணை வலியும் தூக்கிச் செயல்**

**சொற்பொருள் பின்வருநிலையணி விளக்கம்:** செய்யுளில் இடம்பெறும் ஒரு சொல் அதே பொருளில் பலமுறை பயின்று வருதல் சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

**குறளின் விளக்கம்:** ஒருவன் தான் செய்யக் கருதிய செயலின் வலிமையையும், அதனைச் செய்ய விரும்பும் தனக்கிருக்கும் வலிமையையும், அதற்கு ஊறு செய்து விலக்கக்கூடிய பகைவனுக்கு உள்ள வலிமையையும், தனக்குத் துணையாவார், பகைவனுக்குத் துணையாவார் ஆகிய இருவர் தம் வலிமையையும் நன்கு ஆராய்ந்து எல்லா வகையிலும் தனக்குள்ள வலிமை மிகுந்திருந்தால் அச்செயலைச் செய்க.

**அணிப் பொருத்தம்:** இக்குறட்பாவில் வலி என்ற சொல் நான்கு முறை வந்து வலிமை என்ற பொருளையே தருவதால் இக்குறட்பாவில் வந்துள்ள அணி சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

5. **விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக?**
இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டு தவம் செய்தால் நாம் விரும்பியதை

PROOF COPY



www.tnpscjob.com

அடையலாம். **வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்**

விரும்பிய பயன்களை விரும்பியவாறே அடைய முடியும். ஆகையால் செய்யத்தக்க தவம் இல்லற வாழ்க்கையிலும் முயன்று செய்யப்படும்.

**III. நெடுவினாக்கள்:**

1. **கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.**

**தாளாற்றி தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

**ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.**

உயர்ந்தாரின் உலக நடைமுறையோடு ஒத்துப் போகிறவனே உயிர் வாழ்பவன். மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே மதிக்கப்படுவான்.

**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்**

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்று எல்லோர்க்கும் பயன்படும்.

2. **அடக்குமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.**

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

தன் இயல்பான நிலையில் இருந்து மாறாது அடக்கத்தோடு வாழ்பவனுடைய உயர்வு மலையைக் காட்டிலும் மிகவும் பெயரிது.

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

ஒருவன் தன் வாழ்நாளில் எதைக் காக்கா விட்டாலும் நாவைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொற்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவார்.

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு வந்தாலும் உள்ளே ஆறிவிடும். நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது. எனவே ஒருவன் தன் வாழ்நாளில் அடக்கத்துடன் வாழ்ந்தால் வாழ்வினில் உயரலாம்.

PROOF COPY



www.tnpscjob.com

3. **உவமை அணியைச் சான்று தந்து விளக்குக.**

**அணி:** உவமை அணி

**அணி இலக்கணம்:** உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமைந்தது போன்ற உவம உருபு பெற்று வருவது உவமை அணி ஆகும்.

**சான்று:** மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கன் படின்.

**உவமை:** மருந்தாகித் தப்பா மரம்

**உவமேயம்:** செல்வம் பெருந்தகை யான்கண் படின்

**உவம உருபு:** அற்று

**விளக்கம்:** மருந்து மரம் தன் இலை, பூ, காய், கனி முதலியவற்றைப் பறித்தலோடு அமையாமல், தன் மேற்பட்டை முதலியவற்றைச் செதுக்கிக் கொண்டே போகும். இது தன் குறையைப் பொருட்படுத்தாது அவர்கள் நோயைப் போக்கும். அதுபோல ஒப்புரவாளன் செல்வமும் பிறர்க்குப் பயன்படுவதால் உண்டாகும் தன் குறையையும் நோக்காது எல்லாருடைய வருத்தத்தையும் தப்பாமல் தீர்க்கும் என்பதாகும். பெருந்தகையானுக்கு மருந்து மரமும், பெருந்தகையான் செல்வம் பயன்படுதலுக்கு மருந்து மரம் பயன்படுதலும் பொருத்தமான உவமைகளாம்.

4. **பிறிதுமொழிதலணியைச் சான்று தந்து விளக்குக?**

**அணி:** பிறிதுமொழிதல் அணி

**அணி இலக்கணம்:** கவிஞன் ஒரு செய்யுளில் உவமையை மட்டும் கூறி, உவமேயத்தைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும்.

**சான்று:** பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

**விளக்கம்:** மிக மென்மையான மயிலிறகை அளவுக்கு அதிகமாய் வண்டியில் ஏற்றினால் மிக வலிமையான அவ்வண்டியின் அச்சும் முரிந்துவிடும். இந்த உவமையிலிருந்து ஒருவன் வலியனே ஆயினும் அவன் எளியர் என்று பகைவர் மேல் செல்வானாயின் அவர்கள் பலர் கூடினால் அவன் வலியிழந்து கெட நேரும் உவமேயப் பொருள் பெறப்படுகிறது. இதனால் இது பிறிதுமொழிதல் அணியாகும்.

## இயல் - 4
## 1. விஞ்ஞானி

I. **சிறுவினாக்கள்:**

1. விஞ்ஞானி என்ற கவிதை நூலின் ஆசிரியர் யார்? **மீரா**
2. மீராவின் இயற்பெயர் என்ன? **மீ. ராசேந்திரன்**

PROOF COPY



www.tnpscjob.com

3. மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரு தளங்களிலும் பரவலாக அறியப் படுபவர் யார்? **மீரா**
4. மீரா அவர்கள் எங்கு பணியாற்றினார்?
   **சிவகங்கை அரசுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.**
5. மீராவின் கவிதை நூல்கள் எவை? எவை? **ஊசிகள், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் போன்றவை மீராவின் கவிதை நூல்கள்.**
6. மீரா அவர்கள் நடத்திய இதழ்கள் யாவை?
   **அன்னம் விடு தூது, கவி ஆகியன மீரா நடத்திய இதழ்கள் ஆகும்.**
7. முதன்முதலாக கவியரங்கத்தை ஒலிபரப்பியது எது?
   **தில்லி வானொலி நிலையம் உருது மொழியில் முஷைரா என்னும் கவியரங்கத்தை முதன்முறையாக ஒலிபரப்பியது.**
8. தமிழிலும் கவிதைகளை ஒலிபரப்ப வேண்டுமென்று விரும்பியவர்?
   **சிட்டியும் (சுந்தரராஜன்) சோமுவும்.**
9. சிட்டியும் (சுந்தரராஜன்) சோமுவும் **கவியரங்கம்** என்ற பெயரிட்டு ஒரு நிகழ்ச்சியை நடத்தினர்.
10. முதல் கவியரங்கத்தை ஒலிபரப்பியவர் யார்? **திருச்சி வானொலி நிலையம்**
11. திருச்சி வானொலி நிலையம் முதல் கவியரங்கத்தை எப்பொழுது ஒலிபரப்பியது?
    **தமிழ்ப்புத்தாண்டு நாளையொட்டி 13.04.1944 அன்று ஒலிபரப்பியது.**
12. தமிழ்நாட்டில் நடந்த முதல் கவியரங்கத்தின் தலைப்பு என்ன? **எழில்**
13. விஞ்ஞானி என்ற தலைப்பிலான கவிரயங்கக் கவிதை யார் தலைமையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது?
    **கவிஞர் கண்ணதாசன் தலைமையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.**

**II. பெருவினாக்கள்:**

**1. இன்னும் எவற்றிற்கெல்லாம் விஞ்ஞானம் வழிவகுக்குமென மீரா கூறுகிறார்?**

- கடல் நீரில் பயிர் விளைச்சல் கண்டு பெருக்கிடவும்.
- படகேறிச் சடுகின்ற பாலையிலே சென்றிடவும்.
- இறந்தவனை உயிரோடு எழுப்பிடவும்.
- மனிதன் தன்னை உயர்வடையச் செய்து ஆண்டவனைப் போலெங்கும் ஆட்சி செலுத்திடவும் விஞ்ஞானம் வழி வகுக்கும் என்கிறார் மீரா.

**2. மீரா பற்றிய கூற்றுகளுள் தவறானதைத் தேர்க.**

அ) விஞ்ஞானி என்பது மீராவின் கவியரங்கக் கவிதை ஆகும்.
ஆ) அன்னம் விடு தூது இதழை நடத்தியவர்
இ) கனவுகள்+ கற்பனைகள்= காகிதங்கள் என்பது மீராவின் கவிதை நூல்
ஈ) எழுத்து என்னும் இதழின் ஆசிரியராக விளங்கியவர்

**விடை: ஈ) எழுத்து என்னும் இதழின் ஆசிரியராய் விளங்கியவர்.**



PROOF COPY
www.tnpscjob.com

## 2. நீலகேசி

**I. சிறுவினாக்கள்:**

1. ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று எது? **நீலகேசி**
2. அறிவியல் சிந்தனைகளை விளக்கும் ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றாக **நீலகேசி** விளங்குகிறது.
3. புத்தமதத் துறவியருடன் **நீலகேசி** வாதம் புரிகின்றாள்.
4. தமிழர்தம் பண்டைய இலக்கியங்களிலே எவற்றைக் காணலாம்?
**இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளின் இணைச்சிந்தனைகளைத் தமிழர் தம் பண்டைய இலக்கியங்களிலேயே காணலாம்.**
5. அறிவியல் உலகில் தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்ற உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியவர் யார்? எந்த நூற்றாண்டு?
**ஜகதீச சந்திரபோஸ். 19ஆம் நூற்றாண்டு.**
6. ஒளியின் திசைவேகத்தை உலகிற்கு வெளிப்படுத்தியவர் யார்? அவர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?
**ஒளியின் திசைவேகத்தை உலகிற்கு வெளிப்படுத்தியவர் ரோமர்.**
**காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு.**
7. ஒலியின் திசைவேகத்தை உலகிற்கு வெளிப்படுத்தியவர் யார்?
**பியரி கேசன்டி என்பவர் ஒலியின் திசைவேகத்தை உலகிற்கு வெளிப்படுத்தினார்.**
8. ஒலியின் திசைவேகம் **331மீ/வி.**
9. ஒளியின் திசை வேகம் **3 X 10 மீ/வி.**
10. ஒரே நேரத்தில் தோன்றுபவை எவை? எவை?
**ஒலி, ஒளி இவை இரண்டும் ஒரே நேரத்தில் தோன்றும்.**
11. ஒலி, ஒளி இவை இரண்டில் நம்மை விரைவில் வந்தடைவது எது?
**ஒளியே நம்மை விரைவில் வந்தடையும்.**
12. நீலகேசி எவ்வகைப் பாவால் இயற்றப்பட்டது? **விருத்தப்பா**
13. நீலகேசிக்கு வழங்கப்படும் மற்றொரு பெயர் என்ன? **நீலகேசித் தெருட்டு**
14. நீலகேசி எந்த நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்ட நூல்? **குண்டலகேசி**
15. நீலகேசி பெயர்க்காரணம் தருக.
**நீலகேசி என்னும் சமண சமயப் பெண், சமயத் தலைவர் பலரிடம் வாதம் செய்து, சமண நெறியை நிலைநாட்டுவதாக நூல் அமைந்துள்ளது. ஆதலால், இந்நூலுக்கு நீலகேசி என்ற பெயர் ஏற்பட்டது.**
16. தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல் எது? **நீலகேசி**
17. நீலகேசி ஒரு **தருக்க நூல்.**
18. நீலகேசி நூலில் எத்தனை பகுதிகள் உள்ளன?
**கடவுள் வாழ்த்து உட்பட, பதினொரு பகுதிகள் உள்ளன.**



PROOF COPY
www.tnpscjob.com

19. நீலகேசியில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன? **894 பாடல்கள் உள்ளன.**

20. நீலகேசி நூலின் ஆசிரியர் யார்?

**நீலகேசியை எழுதியவர் யார் என அறியப்படவில்லை.**

21. நீலகேசி நூலின் உரையாசிரியர் யார்?

**நீலகேசி நூலின் உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர்.**

**22. நமது பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பகுதி எது?**

நீலகேசியில் உள்ள மொக்கலவாதச் சருக்கம் 3 பாடல்களும், புத்தவாதச் சருக்கத்தில் 2 பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

**II. பெருவினாக்கள்:**

**1. ஒலி, ஒளி பற்றி நீலகேசி தரும் அறிவியல் செய்தி யாது?**

காதுகளால் ஒலியைக் கவர இயலாது. ஒரே நேரத்தில் தோன்றுகின்ற ஒளி, ஒலியை நாம் ஒரு சேரப் பெறுவதில்லை. ஒளியை முன்னரே காண்கிறோம். அதன் பின்னரே ஒலியைக் கேட்கின்றோம். எனவே ஒலிதான் செவியை வந்தடைகின்றது. செவி ஒலியை அடைவதில்லை.

ஒலியானது வெளியில் இருந்து வந்து காதுகளை அடைகிறது. ஒலி உள்ளே தோன்றுவது கிடையாது. ஒலியைக் காதுகள் ஈர்ப்பது இல்லை. உணர்கின்றன. நம் புலன்கள் உணர்வுடையன. தீயின் வெப்பத்தை உடல் உணர்கின்றது. அதைப் போன்று புலனறிவின் மூலம் காதும் ஒலியை உணர்கின்றது. இவையே ஒலி, ஒளி பற்றி நீலகேசி தரும் அறிவியல் செய்தி ஆகும்.

**2. "உற்றில வாய் ஒலி கொள்ளும் செவியென ஓதுகின்றாய்"**

**- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:** இப்பாடல் வரி நீலகேசி என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்:** காதுகள் ஒலியைக் கவரும் என்கிறாய். காதுகளால் ஒலியைக் கவர இயலாது.

**விளக்கம்:** காதுகள் ஒலியைக் கவரும் என்கிறாய். காதுகளால் ஒலியைக் கவர இயலாது. ஒரே நேரத்தில் தோன்றுகின்ற ஒளி, ஒலியை நாம் ஒரு சேரப் பெறுவதில்லை. ஒளியை முன்னரே காண்கிறோம். அதன் பின்னரே ஒலியைக் கேட்கின்றோம். எனவே ஒலிதான் செவியை வந்தடைகின்றது. செவி ஒலியை அடைவதில்லை.

**3. அறிவியல் சிந்தனைகள் நிரம்பிய காப்பியம் நீலகேசி - இக்கருத்தினை நும் பாடப்பகுதி வாயிலாக ஆராய்க.**

- தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதை நீலகேசி பாடல் வாயிலாக அறியலாம்.
- மொக்கலனே. நீ உண்ணும் பழத்தோலிற்கு உயிர் இல்லாததைப் போன்று தாவரங்களுக்கும் உயிரில்லை என்கிறாய்.



PROOF COPY

www.tnpscjob.com

- நீ உண்ணும் பழத்தோல் நெருப்பில் பட்டுச் சுருங்கினால் அது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பாது. ஆனால்,
- தொட்டால் சுருங்கித் தாவரம் நாம் தொடுவதை நிறுத்தினால் சற்று நேரத்தில் மீண்டும் பழைய நிலையை எய்திவிடும். எனவே, தாவரங்களுக்கும் உயிர் உண்டு.
- இளவேனிலில் மரங்கள் வளர்கின்றன; மலர்கின்றன; நோய்வாய்ப்பட்டுப் பிறகு மீள்கின்றன.
- இவ்வாறு தாவரங்கள் உயிரினப் பண்புகளைப் பெற்றுள்ளன.
- தாவரங்களுக்கும் உயிர் உண்டு. அவை பருவ மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றத்திற்கு உட்படுகின்றன.

**ஒலி, ஒளித் திசைவேகம்:**

- காதுகளால் ஒலியைக் கவர இயலாது.
- ஒரே நேரத்தில் தோன்றுகின்ற ஒளி, ஒலியை நாம் ஒரு சேரப் பெறுவதில்லை.
- ஒளியை முன்னரே காண்கிறோம். அதன் பின்னரே ஒலியைக் கேட்கிறோம்.
- ஒலிதான் செவியை வந்தடைகின்றது. செவி ஒலியை அடைவதில்லை.
- ஒலியானது வெளியில் இருந்து வந்து காதுகளை அடைகிறது.
- ஒலி உள்ளே தோன்றுவது கிடையாது.
- ஒலியைக் காதுகள் ஈர்ப்பது இல்லை. உணர்கின்றன.
- நம் புலன்கள் உணர்வுடையன.
- தீயின் வெப்பத்தை உடல் உணர்கின்றது.
- அதைப்போன்று புலனறிவின் மூலம் காதும் ஒலியை உணர்கின்றது.

என்பன போன்ற அறிவியல் சிந்தனைகள் நிரம்பிய நூல் நீலகேசி ஆகும்.

**4. வாய்த்துரை ஈதென என்ற நீலகேசி பாடலின் பாவகை யாது?**

கட்டளைக் கலித்துறை.

## 3. புறநானூறு

**I. ஒரு மதிப்பெண் வினாக்கள்:**

**1. பழந்தமிழரின் வாழ்வியல் கருவூலமாகக் கருதப்படும் எட்டுத்தொகை நூல் எது?**

புறநானூறு

**2. புறநானூறு மூலம் அறியப்படும் செய்திகள் யாவை?**

பழந்தமிழரின் நாகரிகம், செல்வம், மக்களின் வாழிடங்கள், போர் நிகழ்வுகள், அரசர்கள் வரலாறு, குறுநில மன்னர்கள் வரலாறு, வானவியல், இயற்பியல் போன்ற தகவல்களை அறியலாம்.

**3. நமது பாடல் பகுதியான புறநானூறு தெரிவிக்கும் செய்தி யாது?**

வானியல் பற்றிக் கணிப்பவர்கள் அன்றே இருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் பாடல்.



www.tnpscjob.com

4. **செஞ்ஞாயிற்றுச் செலவும் என்ற பாடலில் இடம்பெற்றுள்ள திணை யாது?**
பாடாண் திணை

5. **செஞ்ஞாயிற்றுச் செலவும் என்ற புறநானூற்றுப் பாடலில் பாடப்பட்ட மன்னன் யார்?** நலங்கிள்ளி

6. **செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்று - இப்பாடலடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்?**
அ) நிறுத்தம், ஆ) பயணம், இ) அழிவு, ஈ) பணம்.
**விடை: ஆ) பயணம்**

**II. சிறுவினாக்கள்:**

1. **பாடாண் திணை - விளக்குக.**
பாடு + ஆண் + திணை = பாடாண் திணை. பாடப்படுகின்ற ஆண் மகனது ஒழுகலாறுகளைப் பற்றிக் கூறுவது. ஒரு ஆண் மகனின் வீரம், கொடை, புகழ், அறிவு, ஆற்றல் முதலியனவற்றைப் புகழ்ந்து பாடுவது ஆகும்.

2. **இயன்மொழி வாழ்த்துத் துறை - விளக்குக.**
ஒரு வேந்தன் எதிர்சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழ்வது இயன்மொழித் துறையாகும். அவனது இயல்பைப் புகழ்ந்து கூறி வாழ்த்துவது இயன்மொழி வாழ்த்து எனப்படும்.

**III. பெருவினாக்கள்:**

1. **களிறுகவுள் அடுத்த எறிகல் போல - உவமையைப் பொருளோடு பொருத்துக.**
**உவமை:** யானை தன் கதுப்பில் அடக்கி வைத்திருந்த பின்பு எறியும் கல்.
**உவமேயம்:** நலங்கிள்ளி தன் திறமையை ஒளித்து வைத்திருக்கும் ஆற்றல் படைத்தவன்.
**உவம உருபு:** போல.
**விளக்கம்:** யானை தன் கதுப்பில் அடக்கி வைத்திருக்கும் உணவு உண்டு முடித்து பின்புகல்லை எறியும். அதுபோல நலங்கிள்ளி தன் திறமை முழுவதையும் ஒளித்து வைத்திருக்கும் ஆற்றல் படைத்தவன்.

2. **சங்ககாலத் தமிழரின் வானியல் அறிவினை முதுகண்ணனார் பாடல்வழிப் புலப்படுத்துக.**
செந்நிறச் சூரியன் செல்லும் வீதியும், அந்தச் சூரியனின் இயக்கமும், அவ்வியக்கத்தால் சூழப்பட்ட புவிமண்டிலமும் காற்று போய் வருகின்ற திசையும், ஒருவித ஆதாரமும் இன்றி தானே நிற்கும் ஆகாயமும் என்று சொல்லப்படுகின்ற இவற்றை எல்லாம் சென்று அளந்து அறிந்தவர் போல, எப்பொழுதும் இது இது இப்படிப்பட்ட அளவுடையன என்று சொல்லும் அறிவுடையோரும் இருக்கின்றனரே என்று சங்ககாலத் தமிழர்களின் வானியல் அறிவினை முதுகண்ணனார் தம் பாடல்வழிப் புலப்படுத்தியுள்ளார்.



PROOF COPY
www.tnpscjob.com

3. **முதுகண்ணனார் பாடல் மூலம் அறியலாகும் நலங்கிள்ளியின் திறமையைக் கூறி விளக்குக.**

கடலில் கூம்புகளையும் பாய்மரங்களையும் செலுத்திப் பொருள் ஈட்டி வரும் வளமுடையவை பரதவர்களின் கலங்கள்.

அவ்வாறு அவர்கள் ஈட்டிய பொருட்கள் யாவும் வழிநெடுகிலும் சிந்தும். அப்படிச் சிந்துகின்ற பொருட்களைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடும் அளவிற்கு வளங் கொண்ட நாட்டின் தலைவன் நலங்கிள்ளி.

அவன் நாட்டில் கதிரவன் வீதியையும் அதன் இயக்கத்தையும் காற்றின் திசையையும், முடிவில்லாத வானத்தையும் நேரில் சென்று அறிந்தவர்கள் போல அவற்றின் தன்மைகளைக் கூறும் அறிஞர்கள் உள்ளனர்.

அப்படிப்பட்ட அவர்களால்கூட அறிந்துகொள்வதற்கு அரியவன் நலங்கிள்ளி. அவன், யானை தன் கதுப்பில் அடக்கி எறியும் கல்லைப் போலத் தன் திறமையை ஒளித்து வைத்திருக்கும் ஆற்றல் படைத்தவன். அதனால், புலவர்கள் அவனை எங்ஙனம் பாடுவர்?

## இயல் - 5

## 1. பிள்ளைக்கூடம்

**I. ஒரு மதிப்பெண் வினா:**

1. பிள்ளைக்கூடம் என்ற தலைப்பில் அமைந்த கவிதையின் ஆசிரியர் யார்?
   **இரா. மீனாட்சி**
2. இரா. மீனாட்சி எந்த ஊரில் வாழ்ந்து வருகிறார்?
   **பாண்டிச்சேரி ஆரோவில்லில் வாழ்ந்து வருகிறார்.**
3. இரா. மீனாட்சி அவர்கள் எவ்வெவற்றில் ஈடுபாடு கொண்டவர்?
   **ஆசிரியப் பணியிலும், கிராம மேம்பாட்டிலும் ஈடுபாடு கொண்டவர்.**
4. பிள்ளைக்கூடம் என்ற கவிதை எந்த நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது?
   **கொடி விளக்கு**
5. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் .......... என்பதாகும். அ) நூல், ஆ) ஓலை, இ) எழுத்தாணி, ஈ) தாள்.
   **விடை: அ) நூல்**

**II. குறுவினா:**

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | கல்வி அழகே அழகு | - | 1) தொல்காப்பியம் சிறப்புப் பாயிர உரையாடல் |
| ஆ) | இளமையில் கல் | - | 2) திருமந்திரம் |
| இ) | துணையாய் வருவது தூய நற்கல்வி | - | 3) ஆத்திச்சூடி |
| ஈ) | பாடம் போற்றல் | - | 4) திருக்குறள் |
| | கேட்டவை நினைத்தல் | - | 5) நாலடியார் |



PROOF COPY

www.tnpscjob.com

1) அ-2, ஆ-3, இ-4, ஈ-1 2) அ-3, ஆ-4, இ-1, ஈ-2
3) அ-5, ஆ-3, இ-2, ஈ-1 4) அ-4, ஆ-1, இ-2, ஈ-3

**விடை: 3) அ-5, ஆ-3, இ-2, ஈ-1**

2. **இரா. மீனாட்சி அவர்கள் இயற்றிய கவிதைத் தொகுப்புகள் யாவை?**
   - நெருஞ்சி • தீபாவளிப் பகல் • மறுபயணம் • வாசனைப்புல்
   - உதய நகரிலிருந்து • கொடி விளக்கு

   உள்ளிட்ட கவிதைத் தொகுப்புகளைப் படைத்துள்ளார்.
3. இரா. மீனாட்சி அவர்கள் எப்பொழுதிலிருந்து கவிதைத் தொகுப்பினை எழுதுகிறார்?
   **1970களில் எழுதத் தொடங்கியுள்ளார்.**
4. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
   கோடையில் கொட்டும் பூக்கள்
   எண்ணச் சொல்கிறார்கள்
   எண்ணச் சொல்கிறவர்கள் யார்?
   ஆசிரியர்கள் எண்ணுபவர்கள் யார்? **பிள்ளைகள்**

## 2. நற்றிணை

**I. ஒரு மதிப்பெண் வினா:**

1. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் பாடப்பட்ட நூல் எது?
   **நற்றிணை**
2. நற்றிணை ............... என்ற அடைமொழியால் போற்றப்படும் சிறப்பினை உடையது. **நல்ல திணை**
3. நற்றிணையில் உள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?
   **நானூறு பாடல்களைக் கொண்டது.**
4. நற்றிணை பாடல்களின் அடிவரையறை யாது?
   **9 அடிச் சிற்றெல்லையாகவும் 12 அடிப் பேரெல்லையாகவும் கொண்டது.**
5. நற்றிணை பாடல்களைத் தொகுப்பித்தவன் யார்?
   **பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.**
6. நற்றிணை நூலுக்கு கடவுள் வாழ்த்து பாடலைப் பாடியவர் யார்?
   **பாரதம் பாடிய பெருந்தேவனார்.**
7. நமது பாடப்பகுதியில் இடம்பெற்ற நற்றிணை பாடலைப் பாடியவர் யார்?
   **போதனார்.**
8. ............... ஒரு சங்ககாலப் புலவர். **போதனார்**
9. போதனார் பாடிய நற்றிணை பாடல் எது?
   **போதனார் நற்றிணையால் 10ஆம் பாடலை மட்டும் பாடியுள்ளார்.**
10. நற்றிணை பாடல்களின் பேரெல்லை எது?
    **நற்றிணை பாடல்களின் பேரெல்லை 12 அடி.**



PROOF COPY
www.tnpscjob.com

11. போதனார் பாடிய நற்றிணை பாடலில் உள்ள அடிகள் எத்தனை?

**போதனார் பாடிய நற்றிணை பாடலின் அடி 13.**

12. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்.

அ) நற்றிணை, ஆ) குறுந்தொகை, இ) அகநானூறு, ஈ) ஐங்குறுநூறு.

**விடை: அ) நற்றிணை**

13. நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள நற்றிணை பாடலின் திணை யாது?

**பாலைத் திணை**

14. நற்றிணை பாடலில் இடம்பெற்றுள்ள துறை யாது?

**மகள் நிலை உரைத்தல்.**

15. மகள்நிலை உரைத்தல் என்ற துறைக்கு வழங்கப்படும் வேறு பெயர் என்ன?

**மனைமருட்சி எனப்படும்.**

II. **பெருவினாக்கள்:**

1. **"ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனன் கொல்"-**
**- இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:** போதனார் இயற்றிய நற்றிணை பாடலில் இவ்வரி இடம்பெற்றுள்ளது.

**பொருள்:** தேன் கலந்த இனிய பால் உணவை உண்பாயாக எனச் செவிலித் தாய் செல்லமாக கேட்க, மகளோ நான் உண்ணேன் என மறந்து அங்குமிங்கும் ஓடுவாள். இப்படிப்பட்ட விளையாட்டுப் பெண் இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறையையும் எங்கு கற்றாள்.

**விளக்கம்:** நம் வீட்டில் தேன் கலந்த இனிய பால் உணவை ஒளிமிக்க பொற் கலத்தில் இட்டுச் செவிலியிர் ஒரு கையில் ஏந்தி வருவர். நம் மகளை உண்ண வைப்பதற்காக இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறு கோலை வைத்திருப்பர். வீட்டின் முற்றத்தில் பந்தரின் கீழ் 'இதை உண்பாயாக' எனச் செல்லமாக அக்கோலால் அடித்து வேண்டுவர். மகளோ 'நான் உண்ணேன்' என மறுத்து முத்துப்பரல்கள் இட்ட பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள். செவிலியர் அவளைப் பின்தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பர். இப்படிப் பட்ட விளையாட்டுப் பெண் நம் மகள். இவள் எப்படி இப்போது இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறையும் கற்றாள்? தான் மணந்து கொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்து பாராள். ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பது போல் ஒரு பொழுது இடைவேளை விட்டு ஒரு பொழுதும் உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு?

2. **பாலைத்திணையின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் இவற்றை விளக்குக.**

**முதற்பொருள்:** நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

PROOF COPY



www.tnpscjob.com

**முதற்பொருளும் உரிப்பொருளும்**

| திணை | நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|---|
| பாலை | சுரமும் சுரம்சார்ந்த நிலமும் | இளவேனில் முதுவேனில் | நண்பகல் |

**உரிப்பொருள்:** பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

**கருப்பொருள்:**

1. தெய்வம் - கொற்றவை
2. மக்கள் - காளை, மீளி, எயிற்றி, எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர்
3. புள் - புறா, பருந்து, கழுகு
4. விலங்கு - செந்நாய்
5. ஊர் - குறும்பு
6. நீர் - நீரில்லாக் குழி, கிணறு
7. பூ - குராஅம்பூ, மராம்பூ
8. மரம் - பாலை, உழிஞை, ஓமை
9. உணவு - வழியிற் பறித்த பொருள்
10. பறை - சூடி
11. யாழ் - பாலையாழ்
12. தொழில் - போர்செய்தல், சூறையாடல்
13. பண் - பஞ்சுரப்பண்

**III. சிறுவினாக்கள்:**

**1. நற்றிணை பாடல் யார் கூற்று? யாரிடம் கூறியது?**

தலைவி இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறியது.

**2. நற்றிணை பாடலின் செவிலித்தாயின் கூற்றின் விளக்கம் யாது?**

திருமணம் முடிந்து கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்று வந்த செவிலி, நற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி இத்தகைய இல்லற அறிவை எப்படிப் பெற்றாள் என வியந்து கூறுதல்.

**3. மகள் நிலை உரைத்தல் துறையை விளக்குக?**

மகள் நிலை உரைத்தல் என்பது தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித் தாய் எண்ணிக் கூறுவது. இத்துறை 'மனைமருட்சி' என்றும் கூறப்படும்.



www.tnpscjob.com

PROOF COPY

III. **நெடுவினா:**

1. **தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?**

தலைவியின் இல்லறத் பாங்கினைச் சென்று பார்த்து வந்த செவிலித்தாய் நற்றாயிடம் தலைவியைப் பற்றி வியந்து கூறுவன. நம் வீட்டில் தேன் கலந்த இனிய பால் உணவை ஒளிமிக்க பொற்கலத்தில் இட்டுச் செவிலியர் ஒரு கையில் ஏந்தி வருவர். நம் மகளை உண்ண வைப்பதற்காக இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறுகோலை வைத்திருப்பர்.

வீட்டின் முற்றத்தில் பந்தரின்கீழ் 'இதை உண்பாயாக' எனச் செல்லமாக அக்கோலால் அடித்து வேண்டுவர். மகளோ 'நான் உண்ணேன்' என மறுத்து முத்துப் பரல்கள் இட்ட பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள். செவிலியர் அவளைப் பின்தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பர். இப்படிப்பட்ட விளையாட்டுப் பெண். நம் மகள்.

இவள் எப்படி இப்போது இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறையையும் கற்றாள்? தான் மணந்து கொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையரின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பாராள். ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பது போல ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு என்று தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுகிறாள்.

## 3. தொல்காப்பியம்:
## சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல்

I. **ஒரு மதிப்பெண் வினா:**

1. தொல்காப்பியரால் தொகுத்தும் பகுத்தும் சேர்த்தும் எழுதப்பட்ட நூல் எது?
   **தொல்காப்பியம்**
2. தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை இயற்றியவர் யார்?
   **தொல்காப்பியர்**
3. தொல்காப்பியம் எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?
   **தொல்காப்பியம் மூன்று பிரிவுகளை உடையது. அவை 1.எழுத்து 2.சொல் 3.பொருள்**
4. நாட்டின் எதிர்காலமாய் விளங்குபவர் யார்? **மாண்பு பொருந்திய மாணவர்**
5. மாண்பு பொருந்திய மாணவர் எவ்வாறு கற்க வேண்டும் என்பதை கூறும் நூல் எது? பாடல் எது?
   **தொல்காப்பியம். தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம் உரை விளக்கப் பாடல் ஆகும்.**


www.tnpscjob.com

6. நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களில் காலத்தால் பழமையான இலக்கண நூல் எது? **தொல்காப்பியம்**
7. தொல்காப்பியத்தில் ஒவ்வொரு அதிகாரத்திலும் எத்தனை இயல்கள் உள்ளன?
   **தொல்காப்பியத்தில் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் உள்ளன.**
8. தொல்காப்பியத்தில் மொத்தம் எத்தனை இயல்கள் உள்ளன?
   **தொல்காப்பியத்தில் மொத்தம் இருபத்தேழு இயல்கள் உள்ளன.**
9. தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்கள் யாவர்?
   **தொல்காப்பியத்திற்கு பலர் உரை எழுதியுள்ளனர்.**
10. தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பழமையான உரையாசிரியர்கள் யாவர்?
    **• இளம்பூரணர் • நச்சினார்க்கினியார் • கல்லாடனார் • சேனாவரையர்**
    **• தெய்வச்சிலையார் • பேராசிரியர் ஆகியோர் ஆவர்.**
11. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை.
    அ) 9, ஆ) 3, இ) 27, ஈ) 13. **பதில்: இ) 27**
12. வழக்கு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
    **வழக்கு இரு வகைப்படும். அவை: 1. உலக வழக்கு, 2. நூல் வழக்கு.**

**II. நெடுவினா:**

**1. மாணவர்கள் எவ்வாறு கற்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியம் சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் மூலம் விளக்குக?**

- சிறப்புடைய மாணவர் எனப்படுவோர் உலக வழக்கு, நூல் வழக்கு இலக்கணங்களை ஆசிரியர்களிடம் குற்றமின்றி அறிவர்.
- பாடங்களைப் போத்றிக் கற்பர்.
- ஆசிரியர்களிடம் கற்ற பாடங்களை மீண்டும் நினைத்துப் பயிற்சி பெறுவர்.
- ஆசிரியரை அணுகிப் பாடக்கருத்துகளைக் கேட்டுத் தெளிவு அடைவர்.
- ஆசிரியர்களைப் போன்ற உயர் சிந்தனை உடையவர்களுடன் கலந்துரையாடிப் பயிற்சி பெறுவர்.
- தங்களது ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவித் தெளிவுறுவது.
- அவ்வாறு தெளிவுற்ற கருத்துகளைப் பிறர்க்கு உணர்த்தித் தெளிவடையச் செய்வர்.
- ஆசிரியர் கூறும் கருத்துகளை ஒருமுறைக்கு இருமுறை கேட்கும் மாணவர்கள் நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர்.
- மூன்று முறை கேட்போர் பாடக்கருத்துக்களைப் பிறர்க்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர்.
- இத்தன்மையில் பாடம் கேட்டலைக் கடமையாகக் கொண்ட மாணவர்கள் அறியாமையிலிருந்து விலகிச் சிறந்து விளங்குவர்.



PROOF COPY
www.tnpscjob.com

## இயல் - 6

## 1. சீறாப்புராணம்

**I. சிறுவினா:**

1. இசுலாகியத் தமிழ் இலக்கியத்தில் முதன்மையானதாக விளங்குவது எது? **சீறாப்புராணம்**
2. சீறா என்பது **சீறத்** என்னும் அரபுச் சொல்லின் திரிபு ஆகும்.
3. சீறாப்புராணம் - பொருள் விளக்கம் தருக. **சீறா என்பது வாழ்க்கை என்பது பொருள். புராணம் என்பது வரலாறு. அதாவது நபிகள் பெருமானின் வாழ்க்கை வரலாறு என்பதாகும்.**
4. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்? **உமறுப்புலவர்**
5. உமறுப்புலவர் யார் வேண்டுகோளுக்கு இணங்க இந்நூலை இயற்றினார்? **வள்ளல் சீதக்காதி**
6. சீறாப்புராணம் நூல் அமைப்பு முறை யாது? **சீறாப்புராணம் 3 காண்டங்களையும், 92 படலங்களையும் 5027 விருத்தப் பாடல்களையும் கொண்டது.**
7. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை? **சீறாப்புராணம் 3 காண்டங்களை உடையது. அவை: 1. விலாதத்துக் காண்டம், 2. நுபுவ்வத்துக் காண்டம், 3. ஹிஜிறத்துக் காண்டம்.**
8. சீறாப்புராணத்தின் பெரும் பிரிவு எது? சிறு பிரிவு எது? **சீறாப்புராணத்தின் பெரும் பிரிவு காண்டம், சிறு பிரிவு படலம் என்பதாகும்.**
9. சீறாப்புராணத்தில் எத்தனை படலங்கள் உள்ளன? **92 படலங்கள் உள்ளன.**
10. சீறாப்புராணத்தில் மொத்தம் எத்தனைப் பாடல்கள் உள்ளன? **5027 விருத்தப் பாடல்கள் உள்ளன.**
11. உமறுப்புலவர் சீறாப்புராணத்தை முடிக்கும் முன்பே இறந்தமையால் நூலை முழுமையாக முடித்தவர் யார்? **பனுஅகமது மரைக்காயர்**
12. பனுஅகமது மரைக்காயர் பாடிய பகுதியின் பெயர் என்ன? **சின்னச்சீறா**
13. எட்டயபுரத்தின் அரசவைப் புலவர் யார்? **உமறுப்புலவர்**
14. கடிகை முத்துப் புலவரின் மாணவர் யார்? **உமறுப்புலவர்**
15. உமறுப்புலவர் இயற்றிய மற்றொரு நூல் யாது? **முதுமொழி மாலை**
16. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல்கள் யாவர்? **1. வள்ளல் சீதக்காதி, 2. அப்துல் காசிம் மரைக்காயர் ஆகியோர் உமறுப்புலவரை ஆதரித்தனர்.**
17. இறைவனின் திருத்தூதர் யார்? **நபிகள் நாயகம்**
18. நபிகள் நாயகம் எத்தன்மை உடையவர்? **அளவற்ற அருளும், அன்பும் உடையவர் நபிகள் நாயகம்**
19. தமிழ் இலக்கிய மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட தலைசிறந்த இசுலாமிய இலக்கியம் எது? **சீறாப்புராணம்**

PROOF COPY



www.tnpscjob.com

20. மதீனா நகரம் எத்தகையது?

**பகையும் வறுமையும் நோயும் தீண்டாப் பொருள் வளம் நிறைந்தது மதீனா நகரம்.**

21. மதீனா நகரத்தில் வாழ்ந்த மக்கள் எத்தன்மை உடையவர்?

**தானத்திலும் தவத்திலும் சிறந்து விளங்கிய மக்கள் மதீனா நகரத்தில் வாழ்ந்தனர்.**

22. ஹிஜ்றத்துக் காண்டம் என்பதன் பொருள்? **செலவியற் காண்டம்**

23. செலவியற் காண்டம் எதைக் காட்சிப்படுத்துகிறது?

**தீன் நெறியை வளர்த்த பாங்கினை செலவியற் காண்டம் காட்சிப்படுத்துகிறது.**

24. ஹிஜிறத் என்படு என்ன மொழிச் சொல்? **அரபு மொழிச் சொல்**

25. ஹிஜிரத் என்ற அரபு மொழிச் சொல்லுக்குப் பொருள் என்ன?

**இடம்பெயர்தல்**

26. நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் செய்தவர் யார்?

**மக்கா நகரத்தில் வாழ்ந்த குறைசி இன மக்கள்.**

27. நபிகள் நாயகத்தை யார்? எங்கு அழைத்தனர்?

**நபிகள் நாயகத்தை மதீனா மக்கள் மதீனாவிற்கு அழைத்தனர்.**

28. நபிகள் நாயகம் மதீனாவிற்கு எதற்காகச் சென்றார்?

**இசுலாமிய அறநெறிகளை வளர்க்க மக்காவை விட்டு மதீனாவிற்குச் சென்றார்.**

29. நபிகள் நாயகம் மதீனா நகரத்திற்குத் தம் துணைவரான **அபூபக்கர்** என்பவருடன் சென்றார்.

30. நபிகள் நாயகத்தின் துணைவர் யார்? **அபூபக்கர்**

31. நபிகள் நாயகம் மக்காவிலிருந்து எந்நிலங்களைக் கடந்து மதீனா நகரத்தில் நுழைந்தார்? **முல்லை நிலத்தையும், குறிஞ்சி நிலத்தையும் கடந்து மதீனா நகரத்தில் நுழைந்தார்.**

32. நமது பாடப்பகுதி இடம்பெற்றுள்ள காண்டம் எது? **ஹிஜிரத்துக் காண்டம்**

33. நமது பாடப்பகுதி இடம்பெற்றுள்ள படலம் எது? **மதீனம் புக்க படலம்**

34. மதீனா நகரம் எத்தகைய நகரமாக விளங்குகிறது?

**1. மாளிகை நகரம், 2. மனை நகரம், 3. கொடை நகரம், 4. மாநகரம், 5. பொன்னகரம், 6. ஒண்ணகரம், 7. செம்மை நகரம்.**

**II. குறுவினா:**

**1. மதீனா நகரம் - மாளிகை நகரம் எவ்வாறு?**

- மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன.
- அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொளி போன்று இருந்தது.
- மதீனா நகரத்தின் வீதிகள் பிரபஞ்சத்தைப் போன்று பரந்திருந்தன.
- அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன. அதனால் மதீனா நகரம் மாளிகை நகரமாகும்.



www.tnpscjob.com

**2. மதீனா நகரம் - கொடை நகரம் விளக்குக.**

- பழமையான மதீனா நகரம் கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது.
- அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை.
- அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு.
- அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம். ஆதலால் இது கொடை நகரம் ஆகும்.

**3. மதீனா நகரம் - பொன்னகரம் விளக்குக.**

- மதீனா நகரத்தில் கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடு போல நெருங்கியிருந்தன.
- மலை போன்ற யானைகள் அவ்விடத்தில் நிறைந்திருந்தன.
- வழிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன.
- இவற்றால் முழுமை பெற்ற பூமியைப் போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது. அதனால் மதீனா நகரம் பொன்னகரம் ஆகும்.

**4. மதீனா நகரம் - மனை நகரம் விளக்குக.**

- மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக் கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன.
- வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக் கிடந்தன.
- ஒவ்வொருவரையும் அழைத்துக் கொடுக்கும் விருந்தானது இனிமையுடன் இருந்தது.
- இதனால் அந்நகர் திருமண் வீட்டைப் போன்று பொலிவுடன் காட்சியளித்தது. அதனால் இது மனை நகரம் என்று அழைக்கப்படும் சிறப்புடையது.

**5. மதீனா நகரம் - ஒரு மாநகரம் விளக்குக.**

- பகை, வறுமை, நோய் முதலியவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன.
- குறைவில்லாத மானுட அறத்தை அடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும் புகழ் பெற்ற சிறந்த அரசைப் போலப் பொலிவுடன் மாநகரத்தைப் போன்று காட்சியளித்தது மதீனா நகரம்.

**6. ஒண்ணகரம் மதீனா - விளக்குக.**

- அலைகடலானது முத்தையும் பல்வேறு அணிகளையும் சிதறவதுபோல மதீனா நகரில் மக்கள் பல்வேரு மொழிகளைப் பேசுகின்றனர்.
- தேன் அருந்தியவர்கள் மயங்குவதைப் போலப் பலவாறான பொருள் வளத்தால் ஒண்ணகரம் போல ஒளிபெற்றுத் திகழ்கிறது மதீனா நகரம்.

**7. மதீனா நகரம் - செம்மை நகரம் விளக்குக.**

- மதீனா நகரில் தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன.



PROOF COPY

www.tnpscjob.com

- திண்ணிய வலிமை நல்கும் வெற்றி.
- அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன.
- தீன் என்னும் செல்வம் பழுத்திருந்த செம்மை பொருந்திய நகரமாக மதீனா இருந்தது.

8. **'ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்**
**தீன் எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்'**
**- இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?**
ஒளிரக் காய்த்தது - ஊக்கம். பழுத்தது - தீன் எனும் செல்வம்.

9. **மறுவிலாத அரசென இருந்த மாநகர் - உவமையைப் பொருளுடன் விளக்குக.**

**உவமை:** குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும் புகழ் பெற்ற சிறந்த அரசு.

**உவமேயம்:** பொலிவுடன் திகழ்கின்ற மாநகரம் மதீனா நகரம்.

**உவம உருபு:** போல

**விளக்கம்:** மதீனா நகரத்தில் பகை, வறுமை, நோய் முதலியன அந்நகரில் இருந்து ஓடிவிட்டன. மேலும் குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும் புகழ்பெற்ற சிறந்த அரசைப் போலப் பொலிவுடன் இருந்தது மதீனா நகரம்.

**பொருத்தம்:** குற்றமில்லாத பெரும் புகழ்பெற்ற சிறந்த அரசுக்கு பகை, வறுமை, நோய் முதலியன நீங்கிய மதீனா நகரம் ஒப்பிடப்பட்டுள்ளது. பொருத்தமான உவமை ஆகும்.

**III. நெடுவினா**

1. **மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

மதீன நகரம் மாளிகை நகரம், கொடை நகரம், பொன்னகரம், செம்மை நகரம், மனை நகரம், மாநகரம், ஒண்ணகரம் என்று ஒரு வளமான நகரமாக விளங்குவதை உமறுப்புலவர் பாடலின் மூலம் காண்போம்.

**1) மாளிகை நகரம்:**

- மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன.
- அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொளி போன்று இருந்தது.
- மதீனா நகரத்தின் வீதிகள் பிரபஞ்சத்தைப் போன்று பரந்திருந்தன.
- அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.



PROOF COPY
www.tnpscjob.com

**2) கொடை நகரம்:**

- பழமையான மதீனா நகரம் கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது.
- அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை.
- அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு.
- அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம். ஆதலால் இது கொடை நகரம் ஆகும்.

**3) பொன்னகரம்:**

- மதீனா நகரத்தில் கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடு போல நெருங்கியிருந்தன.
- மலை போன்ற யானைகள் அவ்விடத்தில் நிறைந்திருந்தன.
- வழிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன.
- இவற்றால் முழுமை பெற்ற பூமியைப் போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது. அதனால் மதீனா நகரம் பொன்னகரம் ஆகும்.

**4) செம்மை நகரம்:**

- மதீனா நகரில் தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன.
- திண்ணிய வலிமை நல்கும் வெற்றி.
- அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன.
- தீன் என்னும் செல்வம் பழுத்திருந்த செம்மை பொருந்திய நகரமாக மதீனா இருந்தது.

**5) மனை நகரம்:**

- மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக் கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன.
- வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக் கிடந்தன.
- ஒவ்வொருவரையும் அழைத்துக் கொடுக்கும் விருந்தானது இனிமையுடன் இருந்தது.
- இதனால் அந்நகர் திருமண வீட்டைப் போன்று பொலிவுடன் காட்சியளித்தது. அதனால் இது மனை நகரம் என்று அழைக்கப்படும் சிறப்புடையது.

**6) மாநகரம்:**

- பகை, வறுமை, நோய் முதலியவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன.
- குறைவில்லாத மானுட அறத்தை அடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும் புகழ் பெற்ற சிறந்த அரசைப் போலப் பொலிவுடன் மாநகரத்தைப் போன்று காட்சியளித்தது மதீனா நகரம்.

PROOF COPY



www.tnpscjob.com

**7) ஒண்ணகரம்:**

- அலைகடலானது முத்தையும் பல்வேறு அணிகளையும் சிதற்வதுபோல மதீனா நகரில் மக்கள் பல்வேரு மொழிகளைப் பேசுகின்றனர்.
- தேன் அருந்தியவர்கள் மயங்குவதைப் போலப் பலவாறான பொருள் வளத்தால் ஒண்ணகரம் போல ஒளிபெற்றுத் திகழ்கிறது மதீனா நகரம். இவ்வாறு மதீனா நகரம் வளமான நகரமாகக் காட்சியளிக்கிறது.

## 2. அகநானூறு

**1. அகநானூற்றுப் பாடல்களின் சிறப்பு யாது?**

சொல்ல வந்த கருத்தை 'உள்ளுறை' வழியாக உரைப்பது அகநானூற்றுப் பாடல்களின் சிறப்பு.

**2. கவிஞர்கள் பாடும் முறை யாது?**

கவிஞர்கள் சொல்லின் பயன்பாடு குறையாமல் கூறுவதோடு மரபின் நாகரிகம் குறைவுபடாது கூறவும் வேண்டும். அன்பை மறக்கவும் வேண்டும். பயன்பாடு கருதி வெளிப்படுத்தவும் வேண்டும்.

**3. அகநானூற்றுப் பாடல்களில் தோழியின் பொறுப்பு என்ன?**

தலைவியைத் தலைவன் சந்திக்க வேண்டிய குறியிடத்தைக் குறிப்பைப் பொதிந்து வெளியிடுவது தோழியின் பொறுப்பு.

**4. அகநானூற்றில் உள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?**

அகநானூற்றில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன.

**5. அகநானூற்றுப் பாடல்கள் முழுவதையும் எத்தனைப் புலவர்கள் பாடியுள்ளனர்?**

145 புலவர்கள் பாடியுள்ளனர்.

**6. அகநானூற்றுப் பாடல்கள் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன? அவை யாவை?**

அகநானூற்றுப் பாடல்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை: 1. களிற்றியானை நிரை - 120 பாடல்கள். 2. மணிமிடைப் பவளம் - 180 பாடல்கள். 3. நித்திலக் கோவை - 100 பாடல்கள்.

**7. அகநானூற்றுக்கு வழங்கப்படும் மற்றொரு பெயர் என்ன?**

நெடுந்தொகை நானூறு.

**8. அகநானூற்றுப் பாடல்களின் திணை அமைப்பு முறை யாது?**

பாலைத்திணை: 1, 3, 5, 7... என ஒற்றைப்படை வரிசையில் 200 பாடல்கள் உள்ளன.

குறிஞ்சித்திணை: 2, 8, 12, 18... என்ற முறையில் 80 பாடல்கள் உள்ளன.

முல்லைத்திணை: 4, 14, 24, 34... என்ற முறையில் 40 பாடல்கள் உள்ளன.

மருதத்திணை: 6, 16, 26, 36... என்ற முறையில் 40 பாடல்கள் உள்ளன.

நெய்தல் திணை: 10, 20, 30, 40... என்ற முறையில் 40 பாடல்கள் உள்ளன.



PROOF COPY

www.tnpscjob.com

**9. நமது பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அகநானூற்றுப் பாடலின் ஆசிரியர் யார்?**
வீர வெளியன் தித்தனார்

**10. 'பெருங்கடல் முகத்த' என்ற அகநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள திணை யாது?**
குறிஞ்சித்திணை

**11. 'பெருங்கடல் முகத்த' என்ற அகநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள துறை யாது?**
இரவில் சிறப்புறமாகத் தோழி சொல்லியது.

**12. இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது - துறை விளக்கம் தருக.**
வேங்கை மலர்ந்தது; தினையும் விளைந்தது. தலைவியின் கூட்டத்தை விரும்பியவனாகத் தலைமகன் வந்து ஒரு புறத்தே காத்திருக்கின்றான். இனித் தாம் சந்திக்க இயலாத தன்மையை அவனுக்குக் குறிப்பாகப் புலப்படுத்தி வரைந்து வேட்டு மணந்து கொள்ளச் செய்யத் தோழி இப்படிக் கூறுகின்றாள்.

**13. இறைச்சி - விளக்குக.**

- அகப்பாடலில் வருகின்ற ஒரு உத்தி இறைச்சி ஆகும்.
- இது குறிப்புப் பொருளில் வரும்.
- உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே இறைச்சியாகும்.
- இது வடமொழியினர் குறிப்பிடுகிற தொனிக்கு இணையானது.
- குறிப்புப் பொருளுக்கு மேலும் ஒரு குறிப்புப் பொருள் அமைந்திருக்கு மானால், அதற்கு இறைச்சி என்று பெயர்.
- இறைச்சிப் பொருள் கவிதைப் பொருளின் புறத்தே குறிப்புப் பொருளாய் வெளிப்படுகிறது.

**14. குறிஞ்சித் திணைக்குரிய முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என்ன?**
**முதற்பொருள்:** நிலமும் பொழுதும்
**குறிஞ்சித்திணை:** நிலம்  மலையும் மலை சார்ந்த நிலமும்
**பெரும் பொழுது:** கூதிர், முன்பனி
**சிறுபொழுது:** யாமம்
**உரிப்பொருள்:** புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
**கருப்பொருள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | தெய்வம் | - | சேயோன் |
| 2. | மக்கள் | - | பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி, குறவர், கானவர், குறத்தியர் |
| 3. | புள் | - | கிளி, மயில் |
| 4. | விலங்கு | - | சிங்கம், புலி, கரடி, யானை |
| 5. | ஊர் | - | சிறுகுடி |
| 6. | நீர் | - | அருவி நீர், சுனை நீர் |

PROOF COPY



www.tnpscjob.com

7. பூ - வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ
8. மரம் - சந்தன மரம், தேக்கும், அகில், மூங்கில்
9. உணவு - மலை நெல், மூங்கிலரிசி
10. பறை - தொண்டகப்பறை
11. யாழ் - குறிஞ்சி யாழ்
12. பண் - குறிஞ்சிப் பண்
13. தொழில் - வெறியாடல், மலை நெல் விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்

**15. மேகத்திடம் கூறுவதைப்போல தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?**

- தலைவனுக்குக் குறியிடம் சொல்லும் தோழி மேகத்திடம் சொல்வதைப் போல் சொல்கிறாள்.
- நீரை முகந்து கொண்டு செல்லும் மேகக் கூட்டமே! வானம் இருளும்படி உலாவுகிறாய்.
- போர் முரசம் போல் முழங்குகிறாய்.
- முறைமை தெரிந்து அறநெறி பிழையாமல் திறமையுடன் ஆளும் அரசனின் போர்க் களத்தில் திறமி மிக்க போர் வீரன் சுழற்றும் வாள் போல மின்னுகிறாய்.
- முழக்கமும் மின்னலுமாக நாள்தோறும் வெற்று ஆரவாரம் செய்கிறாயா அல்லது மழை பொழிவாயா?
- பொன்னென மலர்ந்த வேங்கை மலரைக் கட்டி அணிந்து கொண்டிருக்கும் தோழியர் ஆயத்தோடு மெல்ல மெல்ல நடந்து குறமகள் தினைப்புனம் காப்பாள்.
- தழலை, தட்டை ஆகிய கருவிகளில் ஒலியெழுப்பிப் பறவைகளை ஓட்டிக் கொண்டு காப்பாள்.
- அவள் அசோக இலைகளால் தழையாடை அணிந்திருப்பாள்.
- குறமகள் அப்படித் தினைப்புனம் காக்கும் பகுதியிலும் நீ மழை பொழிவாயா?
- தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்பது குறிப்பு. இது இறைச்சிப் பொருள்.

**16. சரியானதைத் தேர்ந்தெடுக்க:**

அ) வரை - மலை, ஆ) வதுவை - திருமணம்,
இ) வாரணம் - யானை, ஈ) புடவி - கடல்.
**i)** அ, ஆ, இ சரி. ஈ தவறு. **ii)** ஆ, இ, ஈ சரி. அ தவறு.
**iii)** அ, இ, ஈ சரி. ஆ தவறு. **iv)** அ, ஆ, ஈ சரி. இ தவறு.
**விடை: i) அ, ஆ, இ - சரி. ஈ - தவறு.**


www.tnpscjob.com

## 3. திருக்குறள்

**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க. (படம்: பக்கம் 181)**

அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
கொல்லேர் உழவர் பகை.

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

**பதில்: அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**கொல்லேர் உழவர் பகை.**

**2. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

கொடி கவித்ததைப் பாரி
அறிந்து கொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்து கொண்டான்

பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக் கொள்.

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

**பதில்: ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்.**

**3. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ............................................ நினை.**

அ) முகக்குறிப்பை அறிந்தவரை, ஆ) எண்ணியதை எண்ணியவரை,
இ) மறதியால் கெட்டவர்களை, ஈ) சொல்லேர் உழவரை

**பதில்: இ) மறதியால் கெட்டவர்களை**

**4. பொருள் கூறுக:**

அ) ஏமம் - பாதுகாப்பு. ஆ) மருந்துழைச் செல்வான் - மருந்து, மருந்தாளுநர்

**5. இலக்கணக் குறிப்பு தருக.**

அ) கெடுக - வியங்கோள் வினைமுற்று
ஆ) குறிப்புணர்வார் - வினையாலனையும் பெயர்



PROOF COPY
www.tnpscjob.com

**II. குறுவினா:**

**1. மருத்துவத்தின் பிரிவுகளைக் குறள் கூறுவன யாவை?**

'உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து.'

நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.

**2. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?**

'மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.'

வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்கு உரியவர் ஆதல் ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பு.

**3. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிட வேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.**

'இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.'

**4. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?**

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.'

உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று தேவையில்லை.

**III. சிறுவினா:**

**1. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துகாட்டாகத் தந்து விளக்குக.**

**உருவக அணி:** உவமை வேறு, உவமேயம் வேறு என்று தோன்றாமல் இரண்டும் ஒன்றே என்று தோன்றுமாறு கூறுவது உருவக அணி எனப்படும்.

**சான்று:** இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**விளக்கம்:** பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.

இக்குறட்பாவில் உவமை வேறு உவமேயம் வேறு என்று தோன்றாமல் இரண்டும் ஒன்று என்று தோன்றுமாறு பாதுகாப்பற்ற படகு, கொடாமை பாறை இரண்டையும் ஒன்றென உருவகப்படுத்தப்பட்டதால் இதில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

**2. இளைதாக முள்மரம் கொள்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

**அணிச்சுட்டல்:** இக்குறட்பாவில் பயின்று வந்துள்ல அணி பிறிதுமொழிதல் அணி.

**அணி இலக்கணம்:** உவமையைக் கூறி உவமேயத்தைக் குறிப்பால் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.



PROOF COPY
www.tnpscjob.com

**குறள் விளக்கம்:** சிறியதாக இருக்கையிலேயே முள்மரத்தைக் களைந்து விடுக! முதிர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே வருத்தும் என்ற உவமையைக் கூறி, பகைவர் வலிமையற்று இருக்கும் போதே வென்றுவிட வேண்டும் என்னும் உவமேயத்தைக் குறிப்பால் பெற வைப்பதால் இக்குறட்பாவில் பிறிதுமொழிதல் அணி அமைந்துள்ளது.

3. **மருந்து, மருத்துவர், மருத்துவம் - ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?**

**மருந்து:** **'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.'**

உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

**மருத்துவர்:** **'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.'**

நோயையும் அதன் காரணத்தையும் அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**'உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்.'**

நோயாளியின் வயதையும் நோயின் அளவையும் மருத்துவத்தின் காலத்தையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

**மருத்துவம்:** **'உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து.'**

நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.

**IV. நெடுவினா:**

1. **வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கூறும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.**

**'இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.'**

தங்களின் மகிழ்ச்சியில் கடமையை மறக்கும்போது மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**'உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்.'**

எப்போதும் எண்ணியதையே எண்ணிக் கொண்டிருந்தால், எண்ணியதை அடைதல் எளியதே!

**'குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்.'**

முகக்குறிப்பில் அக்குறிப்பை அறிபவரை என்ன பொறுப்பைக்



PROOF COPY
www.tnpscjob.com

கொடுத்தாவது துணையாக்கிக் கொள்க.

**'பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்**

**வகைமை உணர்வார்ப் பெறின்.'**

கண்ணின் குறிப்புகளை உணர்பவரைப் பெற்றால் பகைமையும் நட்பையும் அவரது கண்ணே அறிவித்து விடும்.

**'பகைஎன்னும் பண்பில் அதனை ஒருவன்**

**நகையேயும் வேண்டற்பாற்று அன்று.'**

பகை என்னும் பண்பற்றதை ஒருவன் விளையாட்டுக்குக் கூட விரும்பக் கூடாது.

**'வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**

**சொல்லேர் உழவர் பகை.'**

வில் வீரரின் பகையைப் பெற்றாலும், சொல்வன்மை உடைய அறிஞரின் பகையைப் பெறக்கூடாது.

**'இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**

**கைகொல்லும் காழ்த்த இடத்து.'**

சிறியதாக இருக்கையிலேயே முள் மரத்தைக் களைந்துவிடுக. முதிர்ந்து விட்டால், வெட்டுபவரின் கையையே வருத்தும். இவையெல்லாவற்றையும் நம் வாழ்வில் கடைப்பிடித்து வந்தால், வாழ்வில் உயரலாம்.

## இயல் - 7

## 1. ஆத்மாநாம் கவிதைகள்

1. ஆத்மாநாம் தமிழ்க் கவிதை ஆசிரியரின் இயற்பெயர் என்ன?
   **மதுசூதனன்**
2. மதுசூதனனின் முக்கியமான கவிதைத் தொகுப்பு எது?
   **காகிதத்தில் ஒரு கோடு.**
3. மதுசூதனன் நடத்திய சிற்றிதழின் பெயர் என்ன?
   **'ழ' என்னும் சிற்றிதழ்.**
4. மதுசூதனன் இயக்கிய தளங்கள் யாவை?
   **மதுசூதனன் இயக்கிய தளங்கள் மூன்று. அவையாவன,**
   **1. கவிதை, 2. கட்டுரை, 3. மொழிபெயர்ப்பு.**
5. மதுசூதனனின் கவிதைகள் என்ன பெயரில் வெளிவந்துள்ளன?
   **ஆத்மாநாம் கவிதைகள் என்னும் பெயரில் ஒரே தொகுப்பாக வெளிவந்துள்ளன.**
6. ஆத்மாநாம், கவிதை என்ற கலை வடிவத்தின் அழகியல் ஊடாக **மானுடத்தின் விழுமியங்களை** உரத்த குரலில் பேசியவர்.
7. ஆத்மாநாம் கவிதை பாடுதலைச் **சமூக அக்கறையாக** மாற்றிக் கொண்டவர்.
8. ஆத்மாநாம் கவிதையில் **அணிலையும் புளிய மரத்தையும்** காட்சிப்படுத்தி நம்முடன் உரையாடுகிறார்.

PROOF COPY



www.tnpscjob.com

9. ‘ழ’ என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது என்று போற்றப்படுவது **<u>சிற்றிதழ்.</u>**

10. ஒரு புளிய மரம் சமீபத்தில் **<u>என் நண்பன்</u>** ஆயிற்று.

**II. சிறுவினா:**

**1. உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.**

| | |
|---|---|
| கல்வியும் ஒழுக்கமும் | நாடும் வீடும் |
| பண்பாடும் நாகரிகமும் | சிறக்கவும் செழிக்கவும் |
| பணமும் பதவியும் | சுதந்திரமும் வாழ்க்கையும் |

பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் என்பதே எங்களின் கனவாகும்.

## 2. குற்றாலக் குறவஞ்சி

**1. சங்க இலக்கியங்கள் எவற்றைப் பற்றிப் பாடின?**
வீரர்களை, அரசர்களை, வள்ளல்களை, தனி மனிதர்களைப் பாடின சங்க இலக்கியங்கள்.

2. சமய நூல்கள் **<u>கடவுளைப்</u>** பாடின.

3. சிற்றிலக்கியங்கள் **<u>கடவுளோடு</u>** மனிதர்களையும் பாடின.

**4. குற்றாலக் குறவஞ்சி எவ்வாறு திகழ்கிறது?**
இயற்றமிழின் செழுமையையும் இசைத் தமிழின் இனிமையையும் நாடகத் தமிழின் எழிலினையும் ஒருங்கே கொண்டு முத்தமிழ்க் காவியமாகத் திகழ்வது குற்றாலக் குறவஞ்சி.

**5. குற்றாலக் குறவஞ்சி எதைப் பற்றிப் பாடப்பட்டது?**
தமிழ்நாட்டின் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து, அங்குள்ள குற்றால நாதரைப் போற்றிப் பாடப்பட்டது குற்றாலக் குறவஞ்சி.

**6. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?** திரிகூட ராசப்பக் கவிராயர்

**7. குற்றாலக் குறவஞ்சி எவ்வாறு போற்றப்பட்டது?**
திரிகூட ராசப்பக் கவிராயரின் ‘கவிதைக் கிரீடம்’ என்று போற்றப்பட்டது.

**8. குற்றாலக் குறவஞ்சி யார் வேண்டுகோளுக்கு இணங்கப் பாடி அரங்கேற்றப்பட்டது?**
மதுரை முத்து விசயரங்க சொக்கலிங்கனார்

**9. திரிகூட ராசப்பக் கவிராயர் எங்கு தோன்றினார்?** திருநெல்வேலியில்.

**10. திரிகூட ராசப்பக் கவிராயர் எங்கு பணிபுரிந்தார்?**
குற்றால நாதர் கோயிலில் பணியாற்றினார்.

**11. திரிகூட ராசப்பக் கவிராயர் எவற்றில் தேர்ச்சி பெற்றார்?**
சைவ சமயக் கல்வியிலும், இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சி பெற்றார்.

**12. திருக்குற்றால நாதர் கோயில் வித்துவான் என்று சிறப்புப் பட்டப் பெயர் பெற்றவர் யார்?** திரிகூட ராசப்பக் கவிராயர்.



PROOF COPY
www.tnpscjob.com

**13. திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய நூல்கள் யாவை?**
குற்றாலத்தின் மீது தல புராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

14. குறவஞ்சி என்பது ஒரு வகை **நாடக இலக்கிய** வடிவமாகும்.

15. சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று **குற்றாலக் குறவஞ்சி.**

**16. குறவஞ்சி - பெயர்க்காரணம் தருக.**
பாட்டுடைத் தலைவன் உலா வரக் கண்ட தலைவி அத்தலைவன் மீது காதல் கொள்ள, குறவர் குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தலைவிக்குக் குறிகூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுவதால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது.

**17. குறவஞ்சிக்கு வழங்கப்படும் மற்றொரு பெயர் யாது?** குறத்திப்பாட்டு.

**18. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?**
1) சேலத்து நாட்டில் குறிசொல்லிப் பெற்ற சிலம்பு.
2) கோலத்து நாட்டார் முறுக்கிட்ட தண்டை.
3) பாண்டியனார் மகள் வேண்டும் குறிக்காக இட்ட பாடகம்.
4) ஆண்டவர் குற்றாலச் சந்நிதிப் பெண்கள் அளித்த அணிமணி.
5) கண்டிய தேசத்தில் பண்டு பெற்ற காலாழி பீலி.

இவையே சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன.

**19. கொத்தார் குழலார் யார்?** பூமாலை அணிந்த கூந்தலை உடைய பெண்கள்.

**20. கோலத்து நாட்டார் என்பது யாரைக் குறிக்கிறது?** கலிங்க நாட்டார்.

**21. நாங்கூழு என்பது குறிப்பது எதை?** மண்புழு.

**22. காலுக்கு மேலே பெரிய வரியன் கடித்துக் கிடப்பது எது?**
சேலத்து நாட்டில் குறி சொல்லிப் பெற்ற சிலம்பு.

**23. திருகு முருகு என்ன?** கோலத்து நாட்டார் முறுக்கிட்ட தண்டை.

**24. நீண்டு குறுகியும் நாங்கூழுப் போல நெளிந்த நெளிவு என்ன?**
பாண்டியனார் மகள் வேண்டும் குறிக்காக இட்ட பாடகம்.

**25. மாண்ட தவளை உன் காலிலே கட்டிய மார்க்கம் என்ன?**
ஆண்டவர் குற்றாலர் சந்நிதிப் பெண்கள் அளித்த அணிமணிக் கெச்சம்.

**26. சுண்டு விரலிலே குண்டலப்பூச்சி சுருண்டு கிடப்பது என்ன?**
கண்டிய தேசத்தில் பண்டு பெற்ற காலாழி பீலி.

27. பரிசில் பெற்றுவரும் **சிங்கிக்கும் சிங்கனுக்கும்** இடையிலான உரையாடல் சுவைமிக்கது.

**28. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.**
அ) விரியன் - 1) தண்டை, ஆ) திருமுருகு - 2) காலாழி,
இ) நாங்கூழ்ப்புழு - 3) சிலம்பு, ஈ) குண்டலப்பூச்சி - 4) பாடகம்
**i)** 3 4 2 1, **ii)** 3 1 4 2, **iii)** 4 3 2 1, **iv)** 4 1 3 2
**பதில்: ii) 3 1 4 2.**

PROOF COPY



www.tnpscjob.com

## 3. திருச்சாழல்

1. **திருச்சாழல் என்றால் என்ன?**
மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் செய்யும் வகை திருச்சாழல் ஆகும்.
2. **திருச்சாழல் எவ்வாறு பாடப்படும்?**
ஒரு பெண் இறைவனைப் பழிப்பது போலவும் இன்னொருத்தி இறைவனது செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடப்படும்.
3. **திருச்சாழல் பாடியவர் யார்?** மாணிக்கவாசகர்
4. **மாணிக்கவாசகர் எத்தனைப் பாடல்கள், யாரைப் பற்றிப் பாடியுள்ளார்?**
மாணிக்கவாசகர் இறைவனின் பெருமையைத் தெரிவிக்கும் இருபது பாடல்களைப் பாடியுள்ளார்.
5. **சாழல் என்றால் என்ன?**
சாழல் என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு.
6. **சாழல் எவ்வாறு அமைந்திருக்கும்?**
ஒருத்தி வினா கேட்க, மற்றொருத்தி விடை கூறுவதாக அமைந்திருக்கும்.
7. **திருச்சாழல் எத்தகைய வடிவம் உடையது?**
இறைவன் செயல்களையும் அவற்றால் விளங்கும் உண்மைகளையும் விளக்குவது திருச்சாழல் வடிவமாகும்.
8. **திருச்சாழல் வடிவத்தைப் பயன்படுத்திய மற்றொருவர் யார்?**
திருமங்கையாழ்வார்
9. **திருமங்கையாழ்வார் திருச்சாழல் வடிவத்தை எந்த நூலில் பயன்படுத்தியுள்ளார்?**
பெரிய திருமொழி
10. **இன்றைய மக்கள் வழக்கில் உள்ளது எது?**
மக்கள் வழக்கில் ஒருவர் விடுகதை சொல்லியும் அதற்கு மற்றொருவர் விடை கூறியும் விளையாடுவது இன்றைக்கும் வழக்கில் உள்ளது.
11. **சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு எது?** திருவாசகம்
12. **திருவாசகத்தை இயற்றியவர் யார்?** மாணிக்கவாசகர்
13. **சைவ சமயத்தின் திருமுறைகள் மொத்தம் எத்தனை?** பன்னிரு திருமுறைகள்.
14. **திருவாசகம் எத்தனையாவது திருமுறை?** எட்டாம் திருமுறை
15. திருவாசகத்தில் **51 திருப்பதிகங்கள்** உள்ளன.
16. **திருவாசகத்தில் அடங்கியுள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?** 658 பாடல்கள்.
17. **திருவாசகத்தில் எத்தனை சிவத்தலங்கள் பாடப் பெற்றுள்ளன?** 38 சிவத்தலங்கள்.
18. **திருவாசகப் பாடல்கள் எத்தன்மையன?**
பக்திச் சுவையும் மனத்தை உருக்கும் தன்மையையும் கொண்டவை திருவாசகப் பாடல்கள்.

PROOF COPY



www.tnpscjob.com

**19. திருவாசகத்தைப் பற்றிய முதுமொழி யாது?**
'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது முதுமொழி.

**20. திருச்சாழல் எக்கோயிலில் பாடப்பெற்றது?** தில்லைக் கோயிலில் பாடப்பெற்றது.

**21. திருவாசகம் முழுமையும் யார், எம்மொழியில் மொழிபெயர்த்துள்ளார்?**
திருவாசகம் முழுமையும் ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**22. மாணிக்கவாசகர் யார்?** சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர்.

**23. மாணிக்கவாசகரின் ஊர் எது?** திருவாதவூர்

**24. மாணிக்கவாசகர் ஆற்றிய பணி யாது?**
அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.

**25. மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் யாவை?**
மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் 1. திருவாசகம், 2. திருக்கோவையார்.

**26. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று;**
அ) சாழல், ஆ) சிற்றில், இ) சிறுதேர், ஈ) சிறுபறை. **பதில்: அ) சாழல்**

**சிறுவினா:**

1. **தமிழகப் பெண்கள் பாடிக் கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?**

**பெண் 1:** சுடுகாட்டைக் கோயிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்ட உங்கள் தலைவனுக்குத் தாய் தந்தையும் இல்லை. இத்தன்மையனோ உங்கள் கடவுள்.

**பெண் 2:** எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லாவிடினும் அவன் சினத்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும்.

**பெண் 1:** அக்காலத்தில் பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சை சிவன் உண்டான். அதற்குக் காரணம் யாதோ?

**பெண் 2:** அந்த நஞ்சை இறைவன் உண்டிருக்காவிட்டால் பிரமன், விஷ்ணு உள்ளிட்ட தேவர்கள் அன்றே அழிந்து ஒழிந்திருப்பார்கள்.

**பெண் 1:** தான் முடிவு இல்லாதவனாக இருந்தும், அவனை அடைந்த என்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்தானெ, இது என்ன புதுமை?

**பெண் 2:** உன்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும்.

## இயல் - 8

## 1. புரட்சிக்கவி

1. மக்களாட்சி முன்பு வரை **சட்டம், நிர்வாகம், நீதி** ஆகியவை அரசரிடமே குவிந்து இருந்தன.
2. மக்கள் புரட்சியால் மாற்றப்பட்டுத் தற்பொழுது **மக்களாட்சி முறை** பல்வேறு நாடுகளில் மலர்ந்துள்ளது.

PROOF COPY



www.tnpscjob.com

3. **மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகள் யாவை?**
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகள் ஆகும்.

4. மக்களாட்சிச் சிந்தனைகளைப் பரப்பியதில் **இலக்கியத்திற்கும்** பெரும் பங்கு உண்டு.

5. **காலந்தோறும் இலக்கிய வடிவங்களின் மூலம் கவிஞர்கள் எதை வலியுறுத்தி வருகின்றனர்?**
அரசு என்பது மக்களுக்கானதே என்று காலந்தோறும் இலக்கிய வடிவங்களின் மூலம் கவிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

6. **புரட்சிக்கவி என்ற நூலை இயற்றியவர் யார்?** பாரதிதாசனார்.

7. **புரட்சிக்கவி என்ற நூல் எப்பொழுது இயற்றப்பட்டது?** 1937ல்.

8. **புரட்சிக்கவி எத்தகைய நூல்?** வழிநூல்.

9. **புரட்சிக்கவி என்ற நூல் எக்காவியத்தைத் தழுவி எழுதப்பட்டது?**
வடமொழியில் எழுதப்பட்ட பில்கணீயம் என்னும் காவியத்தைத் தழுவி தமிழில் எழுதப்பட்டது.

10. **பாரதிதாசனின் இயற்பெயர் யாது?** கனகசுப்புரத்தினம்

11. **பாரதிதாசன் - பெயர்க் காரணம் தருக.**
பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாகக் கனகசுப்புரத்தினம் என்னும் தம் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார்.

12. **புரட்சிக் கவிஞர், பாவேந்தர் என்று பாரதிதாசன் அழைக்கப்படக் காரணம் என்ன?**
மொழ், இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றித் தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியமையால் புரட்சிக்கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார்.

13. **தொழிலாளர் சட்டம் எம்மொழியில் இருந்தது?** பிரெஞ்சு மொழியில்.

14. **பிரெஞ்சு மொழியில் இருந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழ் வடிவில் தந்தவர் யார்?**
பாரதிதாசன்.

15. **பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?**
குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, சேர தாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

16. **பாரதிதாசன் நடத்திய இலக்கிய இதழ் என்ன?** குயில்

17. **பாரதிதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது?**
பிசிராந்தையார் நாடகம்

18. **பாரதிதாசனின் பிசிராந்தையார் நாடகம் பெற்ற விருது யாது?**
சாகித்திய அகாதெமி விருது

19. **புதுவை அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தை எழுதியவர் யார்?** பாரதிதாசன்

PROOF COPY



www.tnpscjob.com

**20. புதுவை அரசின் தமிழ்த்தாய் வாழ்த்து எது?**
'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே.'

**21. பாரதிதாசனைத் தமிழக அரசு எவ்வாறு பெருமைப்படுத்தியுள்ளது?**
பாரதிதாசன் பெயரில் திருச்சியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவி அவரைப் பெருமைப்படுத்தியுள்ளது.

**22. அரசனின் மகள் பெயர் என்ன?** அமுதவல்லி

**23. அரசனின் விருப்பம் என்ன?**
தன் மகளுக்குக் கவிதை எழுதும் கலையினைக் கற்றுத் தர விரும்புகிறான்.

**24. அரசன் யாரிடம் ஆலோசனை கேட்கிறான்?** அமைச்சர்

**25. அமைச்சர் அரசனிடம் முன்மொழிந்தவன் பெயர் என்ன?** உதாரன்

**26. உதாரன் எத்தகைய தன்மை உடையவன்?**
அழகும் அறிவும் இளமையும் உடையவன் உதாரன்.

**27. அரசன் தன் மகள் உதாரனனிடம் கவிதை கற்க தயங்கக் காரணம் என்ன?**
தன் மகள் அமுதவல்லி எளிய கவிஞரோடு காதல் வயப்படுவாளோ என எண்ணி அரசன் தயங்குகிறான்.

**28. அமைச்சர் அரசனிடம் கூறிய உத்தி என்ன?**
உதாரன் பார்வையற்றவன் என்று அமுதவல்லியிடமும் அமுதவல்லி தொழுநோயாளி என்று உதாரனனிடமும் தெரிவிக்கின்றனர். இதுவே அமைச்சர் கூறிய உத்தி.

29. உதாரன் அமுதவல்லி இருவருக்கும் இடையில் **திரையிடப்படுகிறது.**

**30. அமுதவல்லி உதாரனனை விரும்பக் காரணம் என்ன?**
ஓர் இரவுப் பொழுதில் அழகிய நிலவினைக் கண்டு உதாரன் தன்னை மரந்து கவிதை ஒன்றைப் பாடுகிறான். பார்வை தெரியாத ஒருவன் நிலவின் அழகைக் கண்டு எவ்வாறு கவிபாட முடியும் என்று ஐயம் கொண்ட அமுதவல்லி, திரையினை விலக்கினாள். அழகிய ஆண் மகன் இருக்கக் கண்டு அவனை விரும்பத் தொடங்கினாள்.

**31. அரசன் உதாரனனுக்கு மரண தண்டனை அளிக்கும் காரணம் என்ன?**
உதாரன் அழகான அமுதவல்லியைக் கண்டு விருப்பம் கொள்கிறாள். அமுதவல்லியும் அவன் பால் விருப்பம் கொள்கிறாள். இருவரிடையே அன்பு மலர்ந்தது. இவர்களின் விருப்பம் அரசனுக்குத் தெரிய வருகிறது. இதனை விரும்பாத அரசன், உதாரனனைக் குற்றவாளியாக்கி மரண தண்டனை விதிக்கிறான்.

**32. அரசன் இருவருக்கும் மரண தண்டனை ஏன் விதித்தான்?**
அரசன் உதாரனனுக்கு மரண தண்டனை விதிக்கிறான். அமுதவல்லி அதனை எதிர்க்கிறாள். அதனால் சினம் கொண்ட மன்னன், இருவருக்கும் சேர்த்தே மரண தண்டனை விதிக்கிறான்.



PROOF COPY
www.tnpscjob.com

**33. அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன் - யார் யாரிடம் கூறியது?**

அ) அமைச்சர் கவிஞரிடம், ஆ) மன்னர் அமைச்சரிடம்,

இ) அமைச்சர் மன்னனிடம், ஈ) மன்னர் அமுதவல்லியிடம்.

**விடை: இ) அமைச்சர் மன்னனிடம்**

**34. அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன் யார்? யாரிடம் கூறியது?**

அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன் உதாரன் என்று அமைச்சர் அரசனிடம் கூறினார்.

**35. உயர் தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்:** பாரதிதாசன் இயற்றிய புரட்சிக்கவி என்ற நூலில் உதாரன் என்ற கவிஞரின் கூற்றாக இவ்வரி இடம்பெற்றுள்ளது.

**பொருள்:** குற்றமில்லாத உயர்ந்த தமிழ் மொழியே இவ்வுலகில் உள்ள மக்கள் அனைவரும் உயிர் என்று மதித்து போற்ற வேண்டும்.

**விளக்கம்:** உதாரன் கொலைக் களத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டு இருந்த நிலையில் அங்கு கூடியிருந்த மக்களைப் பார்த்து பேசலுற்றான். தமிழை நன்கு அறிந்த அரசன் நான் ஒரு தமிழ்க்கவி என்று அறிந்து தன் மகளுக்குத் தமிழைக் கற்பிக்க என்னை அழைத்தான்.

மன்னன் மகள் நான் ஒரு தமிழ்க்கவி என்பதால் என் மேல் ஆசை கொண்டு என்னைக் காதலித்தாள்.

அமுதம் என்று சொல்லக்கூடிய இந்தத் தமிழ் என் உயிர் அழிவதற்குக் காரணமாக இர்நுதது என்று சமுதாயம் நினைத்திடுமோ? என் தாய்மொழிக்குப் பழி வந்தால் அதை என்னால் தாங்க முடியாது. ஆதலால், இங்கு கூடியுள்ள மக்களே! உங்களை ஒன்று நான் வேண்டுகின்றேன். குற்றமில்லாத இந்த உயர்ந்த தமிழை உங்கள் உயிர் போன்று போற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறான்.

## II. நெடுவினா:

**36. பாரதிதாசன் 'இரு புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.**

**முன்னுரை:** மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றித் தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியமையால் பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார் என்பதனை அவர்தம் புரட்சிக்கவி என்ற நூலில் உதாரன் என்ற பாத்திரம் வாயிலாக அறியலாம்.

**இனம்:** பாழ் நிலமாகக் கிடந்த இந்த பூமியை மக்கள் வாழ் நிலமாக மாற்றியவர்கள் யார்? சிற்றூர்களையும் வயல்களையும் வாய்க்கால்களையும் உருவாக்கியவர்கள் யார்?

கல்லைப் பிளந்து மலையைப் பிளந்து சுரங்கங்கள் வெட்டி வேண்டிய கருவிகளைச் செய்து தந்தது யாருடைய கைகள்?



PROOF COPY
www.tnpscjob.com

பொன்னையும் முத்தையும் மணியையும் எடுப்பதற்கு அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?

நீர் என்றும் நெருப்பு என்றும் பார்க்காமல் சேறு என்றும் சினப்பாம்பு என்றும் பார்க்காமல் உழைத்தவர்கள் யார்?

பசியையும் நோயையும் பொருட்படுத்தாமல் உழைத்து உழைத்து நல்ல வருவாய் தரும் நாடாக இந்த நாட்டை மாற்றியவர்கள் யார்? அவர்கள் எல்லோரும் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியாது.

**மொழி:** நான் தமிழ் அறிந்ததால் தன் மகளுக்குச் சொல்லிக் கொடுக்க மன்னன் என்னை அழைத்தான். நான் தமிழ்க்கவி என்பதால் மன்னன் மகள் என்னை காதலித்தாள்.

அமுது என்று சொல்லும் இந்தத் தமிழ்மொழி என் உயிர் பிரிவதற்குக் காரணமாய் இருந்தது என்று சமுதாயம் நினைத்திருடுமோ? அதனால் என் தமிழ் மொழிக்குப் பழி வந்துவிடுமோ? என்று தனது இறுதி மூச்சில் கூடத் தமிழ்மொழிக்குப் பழி வந்துவிடக் கூடாது என்று உதாரன் கருதியதாகத் தெரிவித்துள்ளார் பாரதிதாசன்.

**குடியாட்சி உரிமை:** அரசனுக்குப் பின் இந்த தூய நாட்டை ஆளப்பிறந்த அரசன் மகள் தன் அரசாட்சி காலத்ஹில் இந்நாட்டை ஆளும் உரிமையைக் குடிமக்களுக்குப் பொதுவாக்க நினைத்திருந்தாள் என்ற வரிகள் மூலம் மக்களாட்சி மலருவதைப் பற்றிக் கூறியுள்ளார். இவ்வகையில் மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் பற்றி புரட்சிக்கவி என்ற நூலில் உதாரன் என்ற கவிஞன் மூலம் தம் பற்றை வெளிப்படுத்தி உள்ளார்.

## 2. பதிற்றுப்பத்து

1. **எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களுள் ஒன்று எது?**
   பதிற்றுப்பத்து.
2. **பதிற்றுப்பத்து யாரைப் பற்றிய நூல்?**
   சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் நூல்.
3. **பதிற்றுப்பத்தில் இடம்பெற்றுள்ள திணை எது?** பாடாண் திணை.
4. **பதிற்றுப்பத்தில் எந்த பத்து கிடைக்கவில்லை?**
   முதல் பத்தும் இறுதி பத்தும் கிடைக்கவில்லை.
5. **பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பாடலிலும் எவை இடம்பெற்றிருக்கின்றன?**
   பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பாடலின் பின்னும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் என்பவை இடம்பெற்றிருக்கின்றன.
6. **பதிற்றுப்பத்துப் பாடலில் எது தலைப்பாகத் தரப்பட்டிருக்கும்?**
   பாடலில் வரும் சிறந்த சொற்றொடர் பாடலுக்குத் தலைப்பாகத் தரப்பட்டிருக்கும்.



PROOF COPY
www.tnpscjob.com

7. **பதிற்றுப்பத்தில் நமது பாடப்பகுதியின் தலைப்பு என்ன?** நிரைய வெள்ளம்.

8. **நிரைய வெள்ளம் என்றால் என்ன?**
சேரலாதனின் படைவீரர் பகைவர் முன் நிரையபாலரைப் போல (நரகத்து வீரர்கள்) படைவெள்ளமாக நின்றதால் இது நிரைய வெள்ளம் எனப்படுகிறது.

9. **நமது பாடப்பகுதி பதிற்றுப்பத்தில் எந்த பத்து?** இரண்டாம் பத்து.

10. **இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?**
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.

11. **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் புகழ்ந்து இரண்டாம் பத்து பாடியவர் யார்?**
குமட்டூர்க் கண்ணனார்.

12. **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குமட்டூர்க் கண்ணனாருக்கு அளித்த பரிசுகள் யாவை?** உம்பற்காட்டில் 500 ஊர்களையும் தென்னாட்டு வருவாயின் பாதியையும் பரிசாகப் பெற்றார்.

13. **அரசனின் கடமை என்ன?**
நாட்டில் வாழும் உயிர்கள் இன்புற்று வாழ வேண்டும். அவ்வாழ்வு சிறக்க அரசன் மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும். இவையே அரசனின் கடமை ஆகும்.

14. **வள்ளுவர், நாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளது என்ன?**
'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு' என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

15. **எது சிறந்த நாடு?** பசியும், நோயும், பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு.

16. **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம் பெற்றோர் யாவர்?**
தந்தையார் - உதியன் சேரலாதன்
தாயார் - வேண்மாள்

17. **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சிறப்பினைக் கூறுக.**
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வடக்கே இமயமலை வரை படையெடுத்துச் சென்று, வெற்றி பெற்று இமயத்தில் வில்லினைப் பொறித்தவன். இத்தகைய சிறப்புகளை உடையவன்.

18. **தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவன் யார்?** இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.

19. **இயமவரம்பன் நெடுஞ்சேரலாதன் யாரை வென்றான்?**
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடம்பர்களை வென்றான்.

20. **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யாருக்குக் கவசமாக விளங்கினான்?**
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் வீரர்களுக்குக் கவசமாக விளங்கினான்.

21. **குமட்டூர்க் கண்ணனார் சேரலாதனின் எத்தகைய பண்புகளைப் புகழ்ந்து இரண்டாம் பத்தில் பாடியுள்ளார்?**
சேரலாதனின் நாடு காத்தற் சிறப்பையும், கொடைச் சிறப்பையும் புகழ்ந்து குமட்டூர்க் கண்ணனார் இரண்டாம் பத்தில் பாடியுள்ளார்.



PROOF COPY
www.tnpscjob.com

**22. பாடாண் திணை எத்திணைக்குப் புறனாகும்?** கைக்கிளைக்குப் புறனாகும்.

**23. பாடாண் திணை - விளக்குக.**

ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவதாகும். பாடப்படும் ஆண் மகளின் ஒழுகலாறுகளைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**24. செந்துறைப் பாடாண் பாட்டு - துறை விளக்கம் தருக.**

செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது செந்துறைப் பாடாண் பாட்டு எனப்படும்.

**25. வண்ணம் என்றால் என்ன?**

வண்ணம் என்பது சந்த வேறுபாடு. 'வண்ணந் தாமே நாலைந் தென்ப.' தொல். பொ. 524.

**26. இப்பாடலில் அமைந்துள்ள வண்ணம் என்ன?**

இப்பாடலில் இடம்பெற்றுள்ள வண்ணம் ஒழுகு வண்ணம் ஆகும்.

**27. ஒழுகு வண்ணம் என்றால் என்ன?**

'ஒழுகு வண்ண மோசையி னொழுகும்.' தொல். பொ. 538.

ஒழுகு வண்ணம் என்பது ஒழுகிய ஓசையால் செல்வது ஆகும்.

**28. தூக்கு என்றால் என்ன?**

தூக்கு என்பது செய்யுள் அடிகளை வரையறை செய்வதாகும்.

**29. இப்பாடலில் இடம்பெற்றுள்ள தூக்கு யாது?**

இப்பாடலில் இடம்பெற்றுள்ள தூக்கு செந்தூக்கு ஆகும்.

**30. செந்தூக்கு என்றால் என்ன?**

'வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.' தொல். பொ. 383.

செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரியவடியின் இறுதி போன்றோ அமையும்.

**31. சேர நாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.**

சேர நாடு செல்வ வளம் மிக்கது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான். ஆகவேதான், அவன் நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை. புது வருவாய்ப் பெருக்கமும் ஈத்துவக்கும் இன்பமும் உடையவன் சேரலாதன்.

**32. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் கலைஞர்கள் வாழ்த்தி இசைக்கக் காரணம் என்ன?**

- சேரலாதனே! பகை நாட்டில் ஓராண்டு வரை தங்கிப் போர் செய்வாய்.
- உன்னுடனே நரகத் துன்பத்தை தரும் உன் வீரர்கள் வெள்ளமென வருவர்.
- பகை நாட்டில் நீ மூட்டிய தீயால் அந்நாட்டின் பழைய அழகு அழிந்தது.
- காய்ந்த வயல்களில் வீரர்கள் தங்கினர்.



PROOF COPY

www.tnpscjob.com

- இத்துன்பத்தை மறந்து உன்னை எதிர்த்து அழிந்த பகைவர் நாடுகளைக் கண்டு வந்தேன்.
- பல வளங்களை உடைய உன் நாட்டில் தொடர்ச்சியான விழாக்களைக் கொண்டாடும் பழமையான ஊரில் உன் வெற்றி முரசு கொட்டுகிறது.
- நெடுஞ்சேரலாதனே! கலைஞர்கள் உன்னை வாழ்த்து இசைக்கின்றனர்.
- என்று புலவர் குமட்டூர் கண்ணனார் புகழ்ந்து கூறியுள்ளார்.

**33. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பற்றிக் குமட்டூர்க் கண்ணனார் கூறிய செய்திகளை அவர் தம் பாடலின் மூலம் விளக்குக.**

- சேரலாதனே! உன் குடிமக்கள் எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்து வருபவர்கள்.
- பசி, பிணி அறியாத அவர்கள் நாட்டை விட்டுப் புலம் பெயராமல் உன் நாட்டிலேயே சுற்றத்தாரோடு வாழ விரும்புவர்.
- அவ்வாறான, குடிமக்களால் நீ போற்றப்படுகிறாய்.
- இப்பெரிய நிலவுலகத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவனே.
- நீ சான்றோர்களுக்கு அரிய பொருள்கள் நல்குஆய்.
- எப்பொழுதும் விழாக்கள் நிகழும் நாட்டிற்கு நீ உரிமை உடையவன்.
- நெடியோன் போன்ற புகழினை உடைய உன் நாட்டின் வளத்தையும் பகை நாட்டின் அழிவையும் கண்டு வியப்படைகிறேன்.
- சேர நாடு செல்வ வளம் மிக்கது.
- இமயவரம்பன் தன் நாட்டையும், மக்களையும் கண்ணெனக் காத்தான்.
- ஆகவேதான், அவன் நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை.
- புது வருவாய்ப் பெருக்கமும் ஈத்துவக்கும் இன்பமும் உடையவன் சேரலாதன்.

என்று குமட்டூர்க் கண்ணனார் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

**34. 'பதிபிழைப்பு' அறியாது என்ற பாடலின் பாவகை?** நேரிசை ஆசிரியப்பா.

## இயல் - 9

### 1. ஜப்பானிய ஹைக்கூ.

1. **ஹைக்கூ எதற்கு ஒப்பானது?** ஹைக்கூ ஓவியத்துக்கு ஒப்பானது.
2. **ஹைக்கூ கவிதைகள் காட்சியின் பொருளை எவ்வாறு வெளிக்கொணரும்?**
இறுகியிருக்கும் மலர் மொட்டின் மெல்லிய இதழ்களைக் கதிரவனும் மழையும் எவ்வாறு விரிய வைக்கின்றனவோ அவ்வாறு வாய் திறந்து பேசாத ஓவியமென நின்று காட்சியின் பொருளை ஹைக்கூ வெளிக்கொணரும்.

PROOF COPY



www.tnpscjob.com

**3. ஹைக்கூ கவிதைகள் எதனைத் தன்னுள் கொண்டது?**

ஜென் உரைகளின் இலக்கியப் பங்கினைத் தன்னுள் கொண்டதாகும்.

**4. ஹைக்கூ என்பதற்குத் தமிழில் என்ன பொருள்?** துளிப்பா.

**5. ஹைக்கூ கவிதைகள், தத்துவப் பொருளை வெளிக்கொணரும் நுட்பத்தினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

1. விழுந்த மலர்
   கிளைக்குத் திரும்புகிறது
   அடடா... வண்ணத்துப்பூச்சி

- ஓர் அழகு போனாலும் மற்றொரு அழகு அதன் இடத்தை நிரப்பும் என்பது இதன் உட்கருத்து.

2. பட்டுப்போன மரக்கிளை
   அமர்ந்து ஓய்வெடுக்கும் காகம்
   இலையுதிர் கால மாலை

- தனிமையும் அமைதியும் இக்கவிதையின் உட்கருத்து.

3. பெட்டிக்கு வந்தபின்
   எல்லாக் காய்களும் சமம்தான்
   சதுரங்கக் காய்கள்

- சதுரங்க விளையாட்டின் போது வெவ்வேறு அதிகாரங்களைப் பெறும் காய்கள் பெட்டிக்குள் வந்தபின் சமமாகின்றன. மனிதர் நிலையும் அத்தன்மையதே. இவ்வாறு ஹைக்கூ கவிதைகள் தத்துவப் பொருளை உள்ளடக்கி உள்ளன.

**6. மழை என்னும் தலைப்பில் கவிதையொன்றை எழுதுக.**

ஐம்பூதங்களில் முதன்மையானது
முக்கியமானது நீர் - மானுட வாழ்விற்கு
இதுவே ஆதாரம் - உன்னால் இதற்கு
ஆகக்கூடாது சேதாரம்.
மழையால் தானே வளம் உயரும் மலை
வளம் உயரும் - உனது பிறப்பிடம் தானே வானும்.
மும்மாரி பொழிந்தாய் அன்று;
காவேரிக்குக் கூட வர மறுக்கிறாய்
இரவும், பகலும், கிழக்கும், மேற்கும் இதுபோல் இன்று?
ஆக்கமும் அழிவும் இதற்கு உதாரணம் நீ
அளவாக பெய்தால் ஆக்கம்
அதிகமாக பெய்தால் நாசம்
ஆதி பகவானைவிட மக்கள் அதிகம்
விரும்புவது வருண பகவானை
கருணை பகவானாக உன்னை எண்ணுவதால்.



PROOF COPY
www.tnpscjob.com

## 2. காவியம்

**1. பிரமிள் என்ற பெயரில் எழுதியவர் யார்?** சிவராமலிங்கம்

2. சிவராமலிங்கம் **பிரமிள்** என்ற பெயரில் கவிதை எழுதுகிறார்.

**3. சிவராமலிங்கம் எந்த ஊரில் பிறந்தார்?** இலங்கையில்.

**4. சிவராமலிங்கத்தின் புனைப்பெயர்கள் என்னென்ன?**

பானுசந்திரன், அரூப் சிவராம், தருமு சிவராம்.

**5. சிவராமலிங்கத்தின் விரிந்த தளம் என்ன?**

புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம், மொழியாக்கம் என விரிந்த தளத்தில் இயங்கியவர்.

**6. சிவராமலிங்கம் எவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார்?**

சிவராமலிங்கம் ஓவியம், சிற்பம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

**7. சிவராமலிங்கத்தின் கவிதைகள் எந்த பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன?**

சிவராமலிங்கத்தின் கவிதைகள் முழுமையாகப் பிரமிள் கவிதைகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

**8. சிவராமலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பு எது?**

சிவராமலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பு லங்காபுரி ராஜா.

**9. சிவராமலிங்கத்தின் நாடகத்தின் பெயர் என்ன?**

சிவராமலிங்கத்தின் நாடகம் நட்சத்திரவாசி.

**10. சிவராமலிங்கத்தின் கட்டுரைத் தொகுப்பு எது?**

சிவராமலிங்கத்தின் கட்டுரைத் தொகுப்பு ‘வெயிலும் நிழலும்’.

**11. இறகுகளின் தொகுதியை என்னவென்று சொல்வர்?**

இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர்.

**12. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் செல்கிறது?**

சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது

**13. வாழ்வை எழுதுவது எது?**

சிறகிலிருந்து பிரிந்த இறகு, நிலத்துக்கும் வானத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் நிகழும் காற்றின் தீராத தழுவல்களால் மண்ணில் வீழாது தன் வாழ்வை எழுதுகிறது.

**14. வாழ்வு என்பது என்ன?**

வாழ்வு என்பது காவியத்துக்கான பொதுவான பாடுபொருள்.

**15. வாழ்வு எப்பொழுது நிரந்தரமாகின்றது?**

சிறகிலிருந்து பிரிந்த இறகின் இடையறாத இருப்பில் வாழ்வு நிரந்தரமாகின்றது.



PROOF COPY
www.tnpscjob.com

## 3. தொலைந்து போனவர்கள்

**1. அப்துல்ரகுமான் கவிதைகளின் பல வடிவங்கள் யாவை?**
புதுக்கவிதை, வசனக்கவிதை, மரபுக்கவிதை

**2. அப்துல்ரகுமான் ஆற்றிய பணி யாது?**
அப்துல்ரகுமான் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

**3. அப்துல்ரகுமான் தமிழ்ப் பேராசிரியராக எங்கு பணியாற்றினார்?**
வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

4. அப்துல்ரகுமான் **வானம்பாடிக்** கவிஞர்களில் ஒருவர்.

**5. அப்துல்ரகுமான் இயற்றிய நூல்கள் யாவை?**
பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன், ஆலாபனை முதலான பல நூல்களை அப்துல்ரகுமான் இயற்றியுள்ளார்.

**6. அப்துல்ரகுமான் பெற்ற விருதுகள் யாவை?**
1. பாரதிதாசன் விருது.
2. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழன்னை விருது.
3. ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி விருது போன்ற விருதுகளை அப்துல்ரகுமான் பெற்றுள்ளார்.

**7. பாரதிதாசன் விருது பெற்றக் கவிஞர் யார்?** அப்துல்ரகுமான்

**8. ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பிற்கு அப்துல்ரகுமான் பெற்ற விருது யாது?**
சாகித்திய அகாதெமி விருது.

**9. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழன்னை விருது பெற்றவர் யார்?**
அப்துல்ரகுமான்

**10. சாகித்திய அகாதெமி விருது பெற்ற அப்துல்ரகுமானின் கவிதைத் தொகுப்பு எது?**
ஆலாபனை என்னும் கவிதைத் தொகுப்பு.

**11. நமது பாடப்பகுதி அப்துல்ரகுமானின் எந்த கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?**
சுட்டுவிரல் என்னும் கவிதைத் தொகுப்பில்.

**12. மௌலானா ரூமி என்பவர் எங்கு? எப்பொழுது பிறந்தார்?**
மௌலானா ரூமி என்பவர் ஆப்கானிஸ்தானில் 1207 இல் பிறந்தார்.

13. மௌலானா ரூமி **ஆன்ம ஞானியாக** மாறினார்.

**14. மௌலானா ரூமி எப்பிரிவைத் தழுவினார்?**
மௌலானா ரூமி சூஃபி என்ற பிரிவைத் தழுவினார்.

**15. மௌலானா ரூமி எழுதிய உலகப்புகழ் பெற்ற காவியம் எது?**
மௌலானா ரூமியின் மஸ்னவி என்பது உலகப்புகழ் பெற்ற காவியம்.

**16. மஸ்னவி எத்தகைய காவியம்?**
மஸ்னவி உலகப்புகழ் பெற்ற பாரசீக ஞான காவியம் ஆகும்.



PROOF COPY
www.tnpscjob.com

**17. மௌலானா ரூமியின் மஸ்னவி என்ற காவியத்தைப் பற்றி யார் எழுதியிருக்கிறார்?**

மௌலானா ரூமியின் மஸ்னவி என்ற காவியத்தைப் பற்றி அப்துல்ரகுமான் எழுதியிருக்கிறார்.

**18. மௌலானா ரூமி தன்னுடைய மஸ்னவ் என்ற காவியத்தில் எதைப் பற்றிக் கூறியுள்ளார்?**

புல்லாங்குழலை ஆன்மாவாகக் குறியீடு செய்து கவிதை படைத்திருக்கிறார் மௌலானா ரூமி.

**19. மௌலானா ரூமியின் புல்லாங்குழலை பற்றிய கவிதை யாது?**

என்னை
மூங்கிற் காட்டிலிருந்து
வெட்டி வீழ்த்திப்
பிரித்ததற்காக
நான் எழுப்பும்
கூக்குரல் கேட்டு
ஆடவன் பெண்டிர் யாவரும்
அழுது புலம்புகின்றனர்.

**20. மௌலானா ரூமியின் புல்லாங்குழல் கவிதை பற்றிய அப்துல்ரகுமானின் விளக்கம் யாது?**

- தீய குணங்கள் என்ற கறைகள் படியாத தூய உலகம் அது.
- அப்போது ஆன்மா இறைத் தரிசனம் என்ற பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது.
- இத்தகைய நிலையிலிருந்த ஆன்மாவைப் போர், பொறாமை, பூசல், அகந்தை, கள்ளம், கபடம், பேராசை, சினம், காமம் முதலியன நிறைந்தது சடவுலகு.

**21. சடவுலகு என்பது எத்தகையது?**

போர், பொறாமை, பூசல், அகந்தை, கள்ளம், கபடம், பேராசை, சினம், காமம் முதலியன நிறைந்தது சடவுலகு.

**22. அப்துல்ரகுமான் தம் கவிதையில் எதைப் பற்றி உணர்த்துகிறார்?**

மானுட சமுதாயத்தின் விழிகள் ஒளியிழந்து கிடப்பதை அப்துல்ரகுமான் தன் கவிதையில் உணர்த்துகிறார்.

23. மானுட சமுதாயத்தின் விழிகளுக்கு **ஒளியூட்ட** விழைகிறார் **அப்துல்ரகுமான்.**

**24. தொலைந்து போனவர்கள் என்ற தலைப்பில் அமைந்த கவிதையின் தத்துவம் என்ன?**

நடக்காததை நடந்ததாகக் கருதிக் கொண்டு மாயையில் வாழும் மக்கள் ஒளியில் உண்மையைத் தேடும் தத்துவம்தான் இக்கவிதை.

**நெடுவினா:**

**1. எவற்றையெல்லாம் மாயை என்று கவிக்கோ கருதுகிறார்? மாயையிலிருந்து விடுபட அவர் கூறும் வழிமுறைகளை ஆராய்க.**

- நாள்தோறும் நீ விடிந்தது என்று கூறுகின்றாய். ஆனால், வானம் வெளுப்பது உனது விடியல் இல்லை.
- ஒரு காரியம் முடிந்தது என்கிறாய். இங்கு முடிதல் என்பது எதற்கும் இல்லை.



www.tnpscjob.com

- கற்றேன் என்று கூறுகின்றாய். கல்வி கற்றாயா? வெறும் காகிதம் தின்பது என்பது கல்வி இல்லை.
- பெற்றேன் என்கின்றாய். எதைப் பெற்றாய்? வெறும் பிள்ளைகள் பெறுவது பெறுவதல்ல.
- யுகம் யுகமாய் குளித்தேன் என்கிறாய். நீ கொண்டுள்ள அழுக்கு போகவில்லை.
- அளித்தேன் என்பாய். உண்மையிலேயே நீ கொடுத்தது எதுவும் உனக்கு உரியது அல்ல.
- உடை அணிந்தேன் என்று சொல்லுகிறாய். வெறும் உடலுக்கு அணிவது உடை அல்ல.
- விடையைக் கண்டேன் என்று உரைக்கின்றாய். ஆனால் நீயே ஒரு வினாவாய் நிற்கின்றாய்.
- தின்றேன் என்கிறாய். அணுஅணுவாய் உனைத் தின்னும் பசிகளுக்கு நீயே இரையாகின்றாய்.
- மனிதர்கள் எல்லாம் வென்றேன் என்கின்றனர். அவர்கள் பெறும் வெற்றியிலே தான் தோற்கின்றனர்.
- நான் என்பாய். அது நீயில்லை. வெறும் நாடக வசனம் பேசுகின்றாய்.
- ஏன் என்று கூறுகின்றாய். இது கேள்வியில்லை. இதெல்லாம் மாயை என்கின்றார் அப்துல்ரகுமான்.
- இந்த மாயையிலிருந்து நீ வெளிப்பட வேண்டும் என்றால் அந்த 'ஏன்' என்னும் ஒளியில் உன்னைத் தேடு என்கின்றார் அப்துல்ரகுமான்.

25. **கற்றேன் என்பாய் கற்றாயா - வெறும்**
**காகிதம் தின்பது கவியில்லை - இவ்வடிகளில் பயின்றுவருவது**
அ) அடி எதுகை, அடி மோனை, ஆ) சீர் மோனை, அடி எதுகை,
இ) அடி மோனை, அடி இயைபு, ஈ) சீர் மோனை, அடி மோனை.
**பதில்: ஈ) சீர் மோனை, அடி மோனை**

26. **'கற்றேன் என்பாய் கற்றாயா?' என்று அப்துல்ரகுமான் யாரிடம் கேட்கிறார்?**
'கற்றேன் என்பாய் கற்றாயா' என்று இந்த மானுட சமுதாயத்தை நோக்கி அப்துல்ரகுமான் கேட்கிறார்.

## 4. வில்லிபாரதம்

1. **உலகிலுள்ள பழமையான மொழிகளில் எவை எவை தோன்றியுள்ளன?**
இதிகாசங்களும் காப்பியங்களும் உலகிலுள்ள பழமையான மொழிகளில் தோன்றியுள்ளன.
2. **இந்தியாவில் வடமொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் யாவை?**
இந்தியாவில் வடமொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் இராமாயணம், மகாபாரதம் ஆகும்.



PROOF COPY
www.tnpscjob.com

3. **வடமொழி என்பது எது?** வடமொழி என்பது சமஸ்கிருதம்.
4. **தமிழில் உள்ள இதிகாசங்கள் எவை?**
தமிழில் உள்ள இதிகாசங்கள் கம்ப ராமாயணம், வில்லிபாரதம்.
5. **கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் எவை?**
கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் ஹோமரின் இலியட், ஒடிசி.
6. **கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இதிகாசத்தை இயற்றியவர் யார்?**
கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இதிகாசத்தை இயற்றியவர் ஹோமர்.
7. **தமிழில் எழுதப்பட்ட முதல் இரு காப்பியங்கள் யாவை?**
தமிழில் எழுதப்பட்ட முதல் இரு காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை.
8. **தமிழில் எழுதப்பட்ட முதல் இரு காப்பியங்கள் எதற்கு முதன்மை தருகின்றன?**
தமிழில் எழுதப்பட்ட முதல் இரு காப்பியங்கள் பெண்ணுக்கு முதன்மை தருகின்றன.
9. **பிறமொழி இதிகாசங்கள் எதனை முதன்மைப்படுத்திப் பேசும்?**
பிறமொழி இதிகாசங்கள் போரினை முதன்மைப்படுத்திப் பேசும்.
10. **தமிழ்க் காப்பியங்கள் எதற்கு முதன்மை கொடுக்கவில்லை?**
தமிழ்க் காப்பியங்கள் போருக்கு முதன்மை கொடுக்கவில்லை.
11. **தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவராகத் திகழ்ந்தவர் யார்?**
வில்லிபுத்தூரார்
12. **வில்லிபுத்தூரார் எம்மொழிகளில் புலமை பெற்று விளங்கினார்?**
தமிழிலும் வடமொழியிலும்.
13. **வடமொழியில் மகாபாரதத்தை இயற்றியவர் யார்?** வியாசர்
14. **வடமொழியில் எழுதப்பட்ட மகாபாரதத்தைத் தழுவித் தமிழில் இயற்றியவர் யார்?**
வில்லிபுத்தூரார்
15. **வக்கபாகை என்னுமிடத்தை ஆண்ட மன்னர் யார்?** வரபதி ஆட்கொண்டான்.
16. **வில்லிபுத்தூராரை ஆதரித்தவர் யார்?**
வக்கபாகை என்னுமிடத்தை ஆண்டு வந்த மன்னன் வரபதி ஆட்கொண்டான் என்பவரால் ஆதரிக்கப்பட்டார் வில்லிபுத்தூரார்.
17. **வில்லிபாரதம் எத்தனை பருவங்களை உடையது?**
வில்லிபாரதம் பத்துப் பருவங்களைக் கொண்டது.
18. **வில்லிபாரதம் முதல் பருவம் எது? இறுதி பருவம் எது?** வில்லிபாரதத்தின் முதல் பருவம் ஆதி பருவம். இறுதி பருவம் சௌப்திக பருவம்.
19. **வில்லிபாரதத்தில் உள்ள பாடல்கள் எத்தனை?**
வில்லிபாரதத்தில் 4351 விருத்தப் பாடல்கள் உள்ளன.
20. **வில்லிபாரதம் என்னும் பெயர் வரக் காரணம் என்ன?**
மிகச் சிறந்து விளங்கிய இந்நூல் ஆசிரியர் பெயரோடு இணைத்தே வில்லிபாரதம் என வழங்கப்படுகிறது.



PROOF COPY
www.tnpscjob.com

**21. நம்முடைய பாடப்பகுதி எந்தப் பருவத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது?**
நம்முடைய பாடப்பகுதி கன்ன பருவத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

22. தத்துவம் **அற** உணர்வையும் ஏற்படுத்தும்.

**23. உலகின் இயல்பை உணர்ந்தோர் இலட்சியம் என்ன?**
உலகின் இயல்பை உணர்ந்தோர் பலரும் கொடுப்பதை இலட்சியமாய்க் கொண்டுள்ளனர்.

**24. மகாபாரதம் எத்தகைய நூல்?**
இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கும்
பொய்மையிலிருந்து உண்மைக்கும்
மரணத்திலிருந்து இறவாமைக்கும்
நாம் செல்ல வழிகாட்டும் நூல்களில் மகாபாரதம் ஒன்றாகும்.

**25. மகாபாரதத்தில் உள்ள நாயகர்களில் இறவாப் புகழுடையவன் யார்?**
மகாபாரதத்தில் உள்ள நாயகர்களில் இறவாப் புகழுடையவன் கன்னன் (கர்ணன்).

**26. கன்னன் எதை வென்றான்?**
தாயால் வந்த துயரத்தை தர்மத்தால் வென்றவன் கன்னன்.

**27. கன்னன் எதைக் காத்தான்?**
அறமற்ற போரிலும் செஞ்சோற்றுக்கடன் தீர்த்து அறம் காத்தவன் கன்னன்.

**28. பாரதப் போர் யார் யாருக்கு இடையே நடைபெற்றது?**
தருமன் தலைமையில் பாண்டவர்களுக்கும் துரியோதனன் தலைமையில் கௌரவர்களுக்கும் இடையே பாரதப் போர் நடைபெற்றது.

**29. பாரதப் போரில் கன்னன் யாருக்காக போர் செய்தான்?**
பாரதப் போரில் கன்னன் துரியோதனனுக்காகத் தீரத்துடன் போர் புரிந்தான்.

30. **17ஆவது நாள்** போரில் கன்னன் தேர்ச் சக்கரத்தில் சாய்கிறான்.

**31. போரில் எவ்வாறு கன்னன் தேர்ச் சக்கரத்தில் சாய்கிறான்?**
கண்ணனின் தந்திரத்தால் அர்ச்சுனனின் வில்லடிபட்டுக் கன்னன் தேர்ச் சக்கரத்தில் சாய்கிறான்.

**32. போரில் கன்னன் வில்லடிபட்டும் இறவாமலிருக்கக் காரணம் என்ன?**
போரில் கன்னன் வில்லடிபட்டும் இறவாமலிருக்கக் காரணம் அவன் செய்த தர்மம் காத்தது.

**33. கன்னன் பிறருக்குச் செய்தது என்ன?** கன்னன் பிறருக்கு செய்தது ஈகை.

**34. கன்னன் பிறருக்குச் செய்த ஈகையின் பயனைப் பறிக்கத் தீர்மானித்தவர் யார்? அவர் எவ்வடிவில் வருகிறார்?**
கன்னன் பிறருக்குச் செய்த ஈகையின் பயனைப் பறிக்கத் தீர்மானித்தவர் கண்ணன். அவர் வேதியர் வடிவில் வருகிறார்.


PROOF COPY
www.tnpscjob.com

**35. கன்னப் பருவம் என்பது என்ன?**

கண்ணன் கன்னனிடம் சென்று அவனது ஈகையின் பயனைக் கேட்டதும், அதற்கு கன்னன் சொன்ன பதிலும் அடங்கியதே கன்னப் பருவம் ஆகும்.

**36. வேதியர் வடிவில் வந்த கண்ணன் கன்னனிடம் இரந்து கேட்டது யாது?**

- அருணனால் செலுத்தப்படும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினைக் கொண்ட சூரியனின் தோன்றலே!
- கடல் சூழ்ந்த இவ்வுலகில் வறுமையால் தளர்ச்சியுற்றோர்க்கு வேண்டியவற்றைத் தருபவன் நீ என்பதைக் கேள்வியுற்றேன்.
- மேருமலையில் தவம் செய்த நான், மிக்க வறுமைத் துயரால் பெருந்துன்பமுற்றேன்.
- 'உன்னால் இயன்றதை இக்கணத்தில் எனக்கு அளிப்பாயாக' என்று வேதியர் வடிவில் வந்த கண்ணன், கன்னனிடம் இரந்து கேட்டான்.

**37. 'நின் புண்ணியம் அனைத்தும் உதவுக' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:** வில்லிபுத்தூரார் இயற்றிய வில்லிபாரதத்தில் இவ்வடி இடம் பெற்றுள்ளது.

**பொருள்:** வேதியர் வடிவில் வந்த கண்ணன் அருச்சுனனின் அம்புகளால் உடல் தளர்ந்து தேரின் மீது விழுந்த நிலையில் இருந்த கன்னனிடம் "நின் புண்ணியம் அனைத்தும் உதவுக" என்றான்.

**விளக்கம்:** வெற்றி பொருந்திய அருச்சுனனின் அம்புகளால் உடல் தளர்ந்து தேரின் மீது விழுந்த நிலையில் இருந்த கன்னனிடம் வேதியர் வடிவில் இருந்த கண்ணன், மேருமலையில் தவம் செய்த நான் மிக்க வறுமைத் துயரால் பெருந்துன்பமுற்றேன். நீ வறுமையால் தளர்ச்சியுற்றோர்க்கு வேண்டியவற்றைத் தருபவன் என்பதைக் கேள்வியுற்றேன். உன்னால் இயன்றதை இக்கணத்தில் எனக்கு அளிப்பாயாக என்றான்.

இதைக் கேட்ட கன்னனின் இரு செவிகளும் அமுதம் போலக் கேட்டு, 'நல்லது' எனக்கூறி நகைத்தவாறு "என்னால் தரத்தகுந்த பொருளை நீர் உரைப்பீர்" என்றான்.

நான்கு வேதத்தவனாகிய கண்ணன், "நின் புண்ணியம் அனைத்தும் எனக்கு அளித்து உதவுக" என்றான். இதைக் கேட்ட கன்னன் உள்ளம் மகிழ்ந்தான்.

**38. வில்லிபாரதத்தில் சூரியனின் தோன்றல் என்று குறிப்பிடப்படுபவர் யார்?** கன்னன்.

**39. கன்னன் கண்ணனிடம் வேண்டிய வரம் யாது?**

- கன்னன் தன் புண்ணியம் அனைத்தையும் தானமாக வழங்கினான்.
- அழகிய மாலை சூடிய கன்னனை மகிழ்வுடன் நோக்கினான் கண்ணன்.
- "நீ வேண்டும் வரங்களைச் சொல்லுக. உனக்குத் தருகிறேன்" என்றான்.



PROOF COPY
www.tnpscjob.com

- கதிரவன் மகனான கன்னன், "பிறவித் துன்பங்களுக்குக் காரணமான தீவினையால் இன்னும் பிறவியெடுத்தாலும் எழு பிறப்பிலும் இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்று உரையாத உள்ளம் அளிப்பாய்" என்று கேட்டான்.

**40. கண்ணன் கன்னனுக்கு அளித்த வரம் யாது?**

- "இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்று உரையாத உள்ளம் அளிப்பாய்" என்று கன்னன் வேண்டினான்.
- கன்னன் வேண்டிய வரத்தைக் கேட்டதும் முக்கடவுளும் ஒரு மூர்த்தியான கண்ணன் உள்ளம் மகிழ்ந்தான்.
- கன்னனைத் தன் கை மலர்களால் தழுவி செந்தாமரை மலரொப்பக் கண்களிலிருந்தும் தோன்றும் கருணை நீர் வெள்ளத்தில் ஆழ்த்தி,
- "கன்னா! நீ எத்தனைப் பிறவி எடுத்தாலும் அந்தப் பிறவிகளுள் கொடை செய்வதையும் அதற்கான செல்வத்தையும் எய்தி முடிவில் வீடுபேறு அடைவாய்" என்று உரைத்தான்.

**நெடுவினா:**

**1. கண்ணன் கன்னனிடம் வேண்டி நின்ற நிகழ்வை வில்லிபாரதம் வழி விரிவாக எழுதுக.**

**முன்னுரை:** வில்லிபுத்தூரார் எழுதிய வில்லிபாரதத்தில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையில் நடைபெற்றா பாரதப் போரில் கன்னன் துரியோதனனுக்காகத் தீரத்துடன் போர் செய்தான். 17ஆம் நாள் போரில் கண்ணனின் தந்திரத்தால் அர்ச்சுனனின் வில்லடிபட்டுக் கன்னன் தேர்ச் சக்கரத்தில் சாய்கிறான். அவன் இறவாதபடி அவன் செய்த தர்மம் காத்தது. அவன் பிறருக்குச் செய்த ஈகையின் பயனைப் பறிக்கத் தீர்மானித்த கண்ணன் வேதியர் வடிவில் வந்து கன்னனிடம் சென்று கேட்டதும் கன்னன் சொன்ன பதிலும் குறித்துக் காண்போம்.

**வேதியர் வடிவில் கண்ணன் இரந்து கேட்டல்:**

- அருணனால் செலுத்தப்படும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினைக் கொண்ட சூரியனின் தோன்றலே!
- கடல் சூழ்ந்த இவ்வுலகில் வறுமையால் தளர்ச்சியுற்றோர்க்கு வேண்டியவற்றைத் தருபவன் நீ என்பதைக் கேள்வியுற்றேன்.
- மேருமலையில் தவம் செய்த நான், மிக்க வறுமைத் துயரால் பெருந்துன்பமுற்றேன்.
- உன்னால் இயன்றதை இக்கணத்தில் எனக்கு அளிப்பாயாக.

**தரத்தகு பொருள் நீ நவில்க எனக் கன்னன் உரைத்தல்:**

- வெற்றி பொருந்திய அர்ச்சுனனின் அம்புகளால் உடல் தளர்ந்து தேரின் மீது விழுந்த நிலையில் இருந்தான் கன்னன்.

PROOF COPY



www.tnpscjob.com

- அந்தணன் உரைத்த செய்தி இரு செவிகளுக்கு அமுதம் போலக்கேட்டு 'நல்லது' எனக்கூறி நகைத்தான்.
- பின் "என்னால் தரத்தகுந்த பொருளை நீர் உரைப்பீர்" என மொழிந்தான்.
- உடனே நான்கு வேதத்தவனாகிய கண்ணன் "நின் புண்ணியம் அனைத்தும் எனக்கு அளித்து உதவுக" என்றான். இதைக் கேட்ட கன்னன் உள்ளம் மகிழ்ந்தான்.

**கன்னன் தனது புண்ணியத்தைத் தானமாகத் தரல்:**

- என் உயிர்நிலை கலங்கியுள்ளது. அவ்வுயிர் உடலின் உள்ளேயோ வெளியேயோ அறியேன்.
- பாவியாகிய நான், இரப்பார்க்கு வேண்டிய பொருள் எல்லாம் ஈந்த பொழுது நீ வரவில்லை.
- இதுவரை முடிவின்றிப் பயன் செய்யும் புண்ணியம் அனைத்தும் தருகிறேன்.
- நீ பெற்றுக் கொள்வாயாக.
- உமக்கு நான்முகனும் ஒப்பாகான் என்றால்,
- என் புண்ணியம் அதைவிட பெரியதோ? என்று தன் புண்ணியத்தைத் தந்தான் கன்னன்.

**கன்னன் அளித்த புண்ணியங்களைக் கண்ணன் தன் உள்ளங்கையில் ஏற்றல்:**

- கன்னன், வேதியனாய் வந்த கண்ணனின் முன்னே கைகளைக் கூப்பி வணங்கினான்.
- தன்னை வணங்காதார்க்குப் பேரிடியைப் போன்ற கண்ணன் மகிழ்வுடன் கன்னனை நோக்கி,
- நீருடன் தானம் செய்க என்றான்.
- கன்னன் தன் மார்பில் தைத்த அம்பின் வழியே வரும் குருதியோடு சேர்த்துப் புண்ணியம் அனைத்தையும் தாரை வார்த்துக் கொடுத்தான்.
- முன்பொருநாள் மாவலிச் சக்கரவர்த்தியிடம் வாமனனாய் வந்து மூன்றடி மண் தானம் பெற்று, மூன்றடியால் மூவுலகத்தையும் கவர்ந்த கண்ணன்,
- தன் உள்ளங்கையில் குருதியை ஏற்றான்.

**கன்னன் வேண்டும் வரம்:**

- தன் புண்ணியம் அனைத்தையும் தானமாக வழங்கிய, அழகிய மாலை சூடிய கன்னனை மகிழ்வுடன் நோக்கிய கண்ணன்,
- 'நீ வேண்டும் வரங்களைச் சொல்லுக, உனக்குத் தருகிறேன்' என்றான்.
- கதிரவன் மகனான கன்னன், "பிறவித் துன்பங்களுக்குக் காரணமான தீவினையால் இன்னும் பிறவியெடுத்தாலும் எழு பிறப்பிலும் இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்று உரையாத உள்ளம் அளிப்பாய்" என்று கேட்டான்.



PROOF COPY
www.tnpscjob.com

**கண்ணன் வரம் தருதல்:**

- கன்னன் வேண்டிய வரத்தைக் கேட்டதும் முக்கடவுளும் ஒரு மூர்த்தியான கண்ணன் உள்ளம் மகிழ்ந்தான்.
- கன்னனைத் தன் கை மலர்களால் தழுவி, செந்தாமரை மலரொப்பக் கண்களிலிருந்தும் தோன்றும் கருணை நீர் வெள்ளத்தில் ஆழ்த்தி,
- "கன்னா! நீ எத்தனைப் பிறவி எடுத்தாலும் அந்தப் பிறவிகளுள் கொடை செய்வதையும் அதற்கான செல்வத்தையும் எய்தி முடிவில் வீடுபேறு அடைவாய்" என்று உரைத்தான்.

**முடிவுரை:** கண்ணன் வேதியன் வடிவில் வந்து கன்னன் செய்த புண்ணியங்கள் அனைத்தும் தானமாகப் பெற்று, கன்னனுக்கு வீடுபேறு அடைய வழிவகை செய்தான்.

## இயல் - 10
## 1. ஒவ்வொரு புல்லையும்

1. **இன்குலாப்பின் இயற்பெயர் என்ன?** சாகுல் அமீது.
2. **இன்குலாப் எந்த தளங்களில் இயங்கியவர்?**
   கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு என இலக்கியத்தில் விரிவான தளங்களில் இயங்கியவர்.
3. **இன்குலாப் கவிதைகள் எந்த பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன?**
   'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' என்ற பெயரில் அவருடைய கவிதைகள் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்லன.
4. **இன்குலாப்பின் மரணத்திற்குப் பின் அவரது உடல் என்ன செய்யப்பட்டது?**
   இன்குலாப்பின் மரணத்திற்குப் பிறகு அவருடைய உடல் அவர் விரும்பியபடி செங்கை அரசு மருத்துவக் கல்லூரிக்குக் கொடையளிக்கப்பட்டது.
5. **மகாகவியின் நீட்சி என்ன?**
   காக்கை குருவி எங்கள் ஜாதி என்பது மகாகவியின் நீட்சி ஆகும்.
6. **இன்குலாப்பின் குரல் கவிதைகளில் எவ்வாறு ஒலிக்கிறது?**
   'கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும்' என்னும் இன்குலாப்பின் குரலாக ஒலிக்கிறது.
7. **இன்குலாப் எவ்வாறு வாழ்ந்தவர்?**
   தன் எழுத்துகள் எளிய மக்களுக்கானவை என்னும் உறுதியுடன் எண்ணம், சொல், செயல் என்று மூவகையிலும் நின்று வாழ்ந்தவர் இன்குலாப்.
8. **இன்குலாப்பின் பெயரைச் சொல்லி அழைக்க ஆசைப்பட்டது யார்?**
   இன்குலாப்பின் பெயரைச் சொல்லி அழைக்க ஆசைப்பட்டது ஒவ்வொரு புல்லும்.



www.tnpscjob.com

9. **கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு.**

அ) பெயர் மரபு, ஆ) வினை மரபு, இ) ஒலி மரபு, ஈ) இவை மூன்றும்.

**விடை: இ) ஒலி மரபு**

10. **'நீளும் கைகளில் தோழமை தொடரும்**
**நீளாத கைகளில் நெஞ்சம் படரும்' - தொடை நயங்களை எழுதுக.**

1. மோனை: **நீ**ளும் - **நீ**ளாத, 2. எதுகை: நீ**ளு**ம் - நீ**ளா**த,

3. இயைபு: தொட**ரும்** - பட**ரும்**.

**சிறுவினா:**

1. **இன்குலாப் "உலகிற்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.**

ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன். பறவைகளுக்கு எல்லை கடப்பது பிரச்சனையில்லை. அதுபோல் நானும் எல்லை கடப்பேன். பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் எனக்குத் தெரிந்த மொழியால் அழைப்பேன். உரிமையோடு நீள்கின்ற கைகளில் நட்பு தொடரும். நீளாத கைகளிலும் என் அன்பு படரும்.

எனக்கு வேண்டும் உலகம் கடலைப்போல. இந்த உலகத்திற்கு நானும் ஓர் துளியாய் வேண்டும். கூவுகின்ற குயிலும் கரைகின்ற காகமும் எனது உலகக் கிளையில் அடையும்.

போதி மரத்தின் நிழலும், சிலுவையும், பிறையும் சமத்துவம் என்கிற புனலில் கரைந்துவிடும். எந்த மூலையில் விசும்பல் வந்தாலும் அவை என செவிகளில் கேட்கும்.

கூண்டில் மோதி மோதி சிறகுகளில் குருதி. அதுபோல என் மனச்சிறகிலும் குருதியின் கோடு இருக்கும்.

சமயம் கடந்து மானுடம் பாடும். எல்லோர் முகங்களிலும் நான் விழிப்பேன். மானுடம் என்ற இசையைப் பாடுவேன். சமத்துவம் என்ற நிலையை உருவாக்க வேண்டும். மனித நேயம் உருவாக் பாடுபட வேண்டும்.

## 2. மனோன்மணீயம்

1. **தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் எது?** மனோன்மணீயம்
2. **மனோன்மணீயம் எவ்வகை நூல்?** மனோன்மணீயம் ஒரு வழிநூல் ஆகும்.
3. **மனோன்மணீயத்தின் முதல் நூல் எது?**
   லிட்டன் பிரபு என்பவர் எழுதிய இரகசிய வழி (The Secret Way) என்பது மனோன்மணீயத்தின் முதல் நூல் ஆகும்.
4. **லிட்டன் பிரபு இரகச்ய வழி என்ற நூலை எப்பொழுது இயற்றினார்?**
   1866ல் லிட்டன் பிரபு இரகசிய வழி என்ற நூலை இயற்றினார்.
5. **மனோன்மணீயம் என்ற நூலை எழுதியவர் யார்?**
   பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணீயம் என்ற நூலை எழுதினார்.



PROOF COPY

www.tnpscjob.com

**6. மனோன்மணீயம் என்ற நூல் எந்த பாவால் அமைந்தது?**

மனோன்மணீயம் எளிய நடையில் ஆசிரியப் பாவால் அமைந்த நூல் ஆகும்.

**7. லிட்டன் பிரபுவின் 'இரகசிய வழி' என்ற நூலைத் தமிழில் எழுதியவர் யார்? எந்த ஆண்டு? எந்த பெயரில்?**

பேராசிரியர் சுந்தரனார் 1881 இல் மனோன்மணீயம் என்ற பெயரில் தமிழில் எழுதினார்.

**8. மனோன்மணீயம் நூலில் எத்தனை அங்கங்கள் உள்ளன?**

மனோன்மணீயம் நூல் ஐந்து அங்கங்களை உடையது.

**9. மனோன்மணீயம் நூலில் எத்தனை களங்கள் உள்ளன?**

மனோன்மணீயம் நூல் இருபது களங்களை உடையது.

**10. மனோன்மணீயம் நூலின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ளவை எவை?**

மனோன்மணீயம் நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம்பெற்றுள்ளது.

**11. மனோன்மணீயம் நூலில் இடம்பெற்றுள்ள கிளைக்கதை எது?**

மனோன்மணீயம் நூலில் இடம்பெற்றுள்ள கிளைக்கதை சிவகாமியின் சரிதம் ஆகும்.

**12. பேராசிரியர் சுந்தரனார் எங்கு? எப்பொழுது பிறந்தார்?**

பேராசிரியர் சுந்தரனார் திருவிதாங்கூரில் உள்ள ஆலப்புழையில் 1855 இல் பிறந்தார்.

**13. பேராசிரியர் சுந்தரனார் எங்கே? என்ன பணியாற்றினார்?**

பேராசிரியர் சுந்தரனார் திருவனந்தபுரம் அரசுக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார்.

**14. பேராசிரியர் சுந்தரனார் பெற்ற பட்டம் யாது?**

பேராசிரியர் சுந்தரனார் பெற்ற பட்டம் ராவ்பகதூர்.

**15. பேராசிரியர் சுந்தரனாருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கியது யார்?**

பேராசிரியர் சுந்தரனாருக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் ராவ்பகதூர் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

**16. பேராசிரியர் சுந்தரனாரைத் தமிழக அரசு எவ்வாறு பெருமைப்படுத்தியது?**

தமிழக அரசு பேராசிரியர் சுந்தரனாரைப் பெருமைப்படுத்தும் விதமாக அவரது பெயரில் திருநெல்வேலியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவி பெருமைப்படுத்தியுள்ளது.

**17. மனோன்மணீயம் நூல் தோன்றிய காலம் எது?**

மனோன்மணீயம் நூல் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது.

**18. மனோன்மணீயம் நூல் எவ்வெவ்வற்றை ஊட்டுவதாகத் திகழ்கிறது?**

மொழிப் பற்றையும், நாட்டுப் பற்றையும், வீர உணர்வையும் ஊட்டுவதாக மனோன்மணீயம் நூல் திகழ்கிறது.

PROOF COPY



www.tnpscjob.com

**19. மனோன்மணீயம் எத்தகைய நூல்?** மனோன்மணீயம் ஒரு நாடக நூல் ஆகும்.

**20. தமிழன்னை பெற்ற நல் அணிகலன் எது?**

தமிழன்னை பெற்ற நல் அணிகலன் மனோன்மணீயம் நூலாகும்.

**21. மனோன்மணீயம் நூல் எத்தகைய நூலாக விளங்குகிறது?**

மனோன்மணீயம் என்னும் நாடக நூல், காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பிய நூலாக விளங்குகிறது.

**22. மனோன்மணீயம் நூலில் தமிழர்கள் பற்றி கூறியுள்ளது யாது?**

இயற்கையில் ஈடுபாடு கொண்டு, அதனில் தோய்ந்து இணையில்லாத இன்பமும் அமைதியும் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதை மனோன்மணீயம் நூல் கூறுகிறது.

**23. மனோன்மணீயம் நூலில் உள்ள முனிவர் யார்?**

மனோன்மணீயம் நூலில் இடம்பெற்றுள்ள முனிவர் சுந்தர முனிவர்.

**24. சுந்தர முனிவர் தன் அறையிலிருந்து ஆசிரமம் வரை சுரங்கம் அமைக்கும் பணியை யாரிடம் அளித்திருந்தார்?**

சுந்தர முனிவர் தனது அறையிலிருந்து ஆசிரமம் வரை யாரும் அறியா வண்ணம் சுரங்கம் அமைக்கும் பணியை நடராசனுக்கு அளித்திருந்தார்.

**25. 'இப்புல்லின் பரிவும் பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையும் சிறுமையாச் சிந்தனை செயாது' எனும் பாடல் அடிகளுடன், 'ஆயிரம் மிதிபடல்களிலும் / நிமிர்ந்து நிற்கும் / புற்களே உன் / வழிகாட்டி' - என்ற புதுக்கவிதை வரிகளை ஒப்பிட்டு உங்கள் கருத்துகளை உரைக்க.**

புல்லுக்கும் குறிக்கோள் உண்டு. தன் இனத்தைப் பிற இடங்களுக்கும் பரவச் செய்கின்ற அதன் அன்பும் பொறுமையும் அதிகம். புல்லின் இயற்கை இயல்பையும் குறிக்கோளையும் காண்போர் எதையும் அற்பம் என்று கருதாமல் அவற்றிருக்கின்ற அன்பையும் அழகையும், குறிக்கோளுக்கேற்ற முயற்சியையும் கண்டு அவற்றுடன் அன்பினால் கலந்து இன்பம் அடைகிறார்கள். ஆயிரம் முறை மிதிபட்டாலும் நிமிர்ந்து நிற்கின்றன புற்கள். நாமும் நமக்குத் துன்பம் வரும்போது துவளாமல் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று நமக்கு வழிகாட்டுகின்ற வழிகாட்டியாக உள்ளன.

**26. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?**

ஒழுக்கமும் பொறையும் உனைப் போல் யார்க்குள - இவ்வடி நாங்கூழ்ப் புழுவை பற்றிக் குறிப்பிடுகிறது.

**27. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?**

இதோ! ஓடுகிற வாய்க்காலில் தான் எத்தனை விசித்திரம் உண்டு. கடலை மலையாகவும், மலையைக் கடலாகவும் மாற்றுதற்கல்லவா இவ்வாய்க்கால் ஓடுகிறது.

PROOF COPY



www.tnpscjob.com

பரற்கற்களை உருட்டி உராய்ந்து மணலாக்கி வெள்ளத்தில் சேரும் புல், மண், கல் முதலியவைகளையும் அடித்துக் கொண்டு ஓடுகிற ஆறானது. கடல் என்னும் மடுவை அமைக்கிற காலம் என்னும் தச்சனுக்கு உதவியாக அவற்றைக் கொடுத்து.

சூரியன் ஆணையினால் நீராகி, ஆவியாகி மேகமாகச் சென்று மலைகள் குன்றுகளின் மேல் மழையாகப் பெய்து அருவியாக ஓடி, ஊற்றாகப் பாய்ந்து, ஆறாக ஓடி, மடுவாய்க் கிடந்து, மதகில் குதித்து, வாய்க்காலில் ஓடிப் பலவாறு பாடுபட்டுச் சேர்த்துக் கொண்ட் வந்த கல்லும் மண்ணும் சிறிதேயாயினும், அவற்றையும் ஏற்றுக் கொள்க. இன்னும் போய்க் கொண்டு வருவேன்' என்று கூறி, மீண்டும் மேகமாகி மழையாகப் பெய்து இரவும் பகலும் ஓயாமல் உழைக்கும் உழைப்பாளிகள் யார் உளர்? நடராசன் வாய்க்காலின் நீரைக் கையினால் தடுக்கின்றான். அடு வழிந்து ஓடுகிறது. "ஐயோ! உனக்கு நோகிறதோ! அழாதே, போ" என்று சொல்லி விடுகிறான். 'தண்ணீரே உன்னைப் போல் உலகத்தில் உழைப்பவர் யாவர்? நீங்காத அனபும் ஊக்கமும் உறுதியும் உன்னைப் போலவே எல்லோருக்கும் இருந்தால், எவ்வளவு நன்மை கிடைக்கும் என்று வாய்க்காலின் சிறப்புகள் பற்றி நடராசன் கூறுகின்றான்.

28. **நாங்கூழ்ப்புழு நடராசனிடம் பேசியிருந்தால் - ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**

**நடராசன்:** நாங்கூழ்ப்புழுவே, உன்னுடைய உழைப்பு ஓயாத உழைப்பு.

**நாங்கூழ்ப்புழு:** என்னுடைய உழைப்பினும் உழவர் உழைபே மேலானது.

**நடராசன்:** நீ! உழவருக்குப் பேருதவி செய்கிறாய்.

**நாங்கூழ்ப்புழு:** நான் எவ்வாறு உழவருக்குப் பேருதவி செய்கிறேன்?

**நடராசன்:** மண்ணைப் பக்குவப்படுத்துவதற்காகவே பிறந்தாய்.

**நாங்கூழ்ப்புழு:** எனக்கு ஒன்றும் புரியவில்லை. விவரமாகக் கூறு.

**நடராசன்:** மண்ணைத் தின்று அதை மெழுகுபோலாக்கிப் பதப்படுத்தி, உருட்டி உருட்டி உமிழ்கிறாய்.

**நாங்கூழ்ப்புழு:** நான் யாரைப் போல உழைக்கிறேன்?

**நடராசன்:** புகழை விரும்பாமல் உழைப்பவர் போல நீ உழைக்கின்றாய்.

**நாங்கூழ்ப்புழு:** புகழை விரும்பாதவர் எப்படி இருப்பர்?

**நடராசன்:** புகழை விரும்பாதவர் மண்ணில் மறைந்து வாழ்வது போல, நீ மண்ணில் மறைந்து வாழ்கிறாய்.

**நாங்கூழ்ப்புழு:** நான் என்ன வேலை செய்கிறேன்?

**நடராசன்:** என்ன அப்படிக் கேட்கிறாய்? நீ மண்ணைப் பக்குவப்படுத்தாவிட்டால், பயிர்கள் எப்படி விளையும்?

**நாங்கூழ்ப்புழு:** நான் பயிர்கள் விளைவதற்கு உதவி செய்கின்றேனா?



PROOF COPY
www.tnpscjob.com

**நடராசன்:** ஆம். நீ செய்யும் பேருதவியை எண்ணாமல் எறும்பு முதலிய பூச்சிகள், உன்னைக் கடித்துக் குறும்பு செய்கின்றன. உனக்கு உள்ள பொறுமையும் உழைப்பும் வேறு யாருக்கும் இல்லை.

**நாங்கூழ்ப்புழு:** நீ என்னை ரொம்ப புகழ்ந்து பேசுகிறாய். நான் மண்ணுக்குள் செல்கிறேன்.

**நடராசன்:** நாங்கூழ்ப்புழுவே! நீ புகழை விரும்பவில்லை. நல்லது போ. உன் வேலையைச் செய்.

**29. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக. (மனிதன் ஆற்றுடன் உரையாடுதல்)**

**மனிதன்:** (ஓடுகின்ற நீரைப் பார்த்து) நீ யார்? உன் பெயர் என்ன?

**ஆறு:** எனது பெயர் ஆறு. வடமொழியில் நதி என்று என்னை அழைப்பர்.

**மனிதன்:** நீ எங்கிருந்து வருகிறாய்?

**ஆறு:** நான் மலைப்பகுதியிலிருந்து வருகின்றேன்.

**மனிதன்:** ஆறே உன் இருபுறமும் அமைந்திருப்பதுஎன்ன?

**ஆறு:** என் இரு பகுதியிலும் இருப்பது கரை.

**மனிதன்:** ஏன் உன் இரு பக்கங்களிலும் கரைகள் உள்ளன.

**ஆறு:** கரையை மீறாமல் ஒரு ஒழுக்கத்துடன் ஓட வேண்டும் என்பதற்காக.

**மனிதன்:** ஆம்! உன்னிடமிருண்டு மக்கள் ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆறே! நீ எங்கே செல்கிறாய்?

**ஆறு:** நான் ஏரிகளிலோ, கடலிலோ இணைவதற்குச் செல்கிறேன்.

**மனிதன்:** ஆறே! நீ ஏன் அவற்றுடன் இணைய வேண்டும்.

**ஆறு:** நான் அப்படி இணைந்தால் தான் என்னால் மக்களுக்கு உதவ முடியும்.

**மனிதன்:** நீ எவ்வாறு மக்களுக்கு உதவுகிறாய்?

**ஆறு:** நான் மக்களுக்கு குடிநீராகவும், வேளாண்மைக்கும், தொழிற்சாலைகள், மின்சாரம் உருவாக்குவதற்கும் பயன்படுகிறேன்.

**மனிதன்:** உனைப் போல அடுத்தவர்க்கு உதவி வாழும் பண்பு உன்னிடத்தில் இருப்பது போல, மக்களுக்கும் இந்த பண்பு வேண்டும்.

**30. நடராசன் தனிமொழியிலிருந்து நீவிர் அறியும் கருத்துகளை எழுதுக.**

நடராசன் தன் தனிமொழியில் புல், வாய்க்கால், நாங்கூழுப்புழு இவற்றுடன் உரையாடுகின்றான். அந்த உரையாடலின் மூலம் நாம் பெறும் கருத்துகள்:

**புல்:** உலகத்தில் உள்ள எல்லோர்க்கும் ஒவ்வொரு குறிக்கோள் வேண்டும். குறிக்கோள் இல்லாதவை எவை? இதோ, இங்கு முளைத்துள்ள இச்சிறு புல்லுக்கும் குறிக்கோள் உண்டு.

இது, தன் சிறுபூவை உயரத்தூக்கி அலரச் செய்து, அதில் உள்ள தேன் துளியை வந்து உண்ணுமாறு தேனீக்களை அழைத்து, அவற்றின் மூலமாக,

PROOF COPY



www.tnpscjob.com

மகரந்தப் பொடிகளைக் கருப்பையில் சேர்ப்பித்துக் காய் காய்க்கிறது. காய்த்த காய்கள் ஒரே இடத்தில் விழுந்து உழைத்தால், அவை, நன்றாகத் தழைத்து வளரா. ஆகையால், அக்காய்களைத் தூரத்தில், வெவ்வேறிடங் களுக்கு அனுப்புவதற்காக, அவற்றின் மேல் சுணைகளையும், முட்களையும் உண்டாக்கி, அருகில் வருகிற ஆடு, மாடு, பறவை, மனிதர் முதலியவர் களின் மேல் ஒட்டிக் கொள்ளச் செய்து, அவற்றின் மூலமாக, வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பி, வளரச் செய்கிறது.

இதன் இயற்கை இயல்பையும் குறிக்கோளையும் காண்போர் எதையும் அற்பம் என்று கருதாமல், அவற்றில் உள்ள அன்பையும் அழகையும், குறிக்கோளுக்கேற்ற முயற்சியையும் கண்டு, அவற்றுடன் அன்பினால் கலந்து இன்பம் அடைய வேண்டும்.

**வாய்க்கால்:** இதோ! ஓடுகிற வாய்க்காலில் எத்தனை விசித்திரங்கள் உள்ளன. அவை கடலை மலையாகவும், மலையைக் கடலாகவும் மாற்றுவதற்காகவே ஓடுகின்றது. பரற்கற்களை உருட்டி உராய்ந்து மணலாக்கி வெள்ளத்தில் சேரும் புல், மண், கல் முதலியவைகளையும் அடித்துக் கொண்டு ஓடுகிஅ ஆறானது, கடல் என்னும் மடுவை அமைக்கிற காலம் என்னும் தச்சனுக்கு உதவியாக அவற்றைக் கொடுத்து.

சூரியனின் ஆணையினால், நீராகிய நான் ஆவியாகிய மேகமாகச் சென்று மலைகள் குன்றுகளின் மேல் மழையாகப் பெய்து அருவியாக ஓடி, ஊற்றாகப் பாய்ந்து, ஆறாக ஓடி, மடுவாய்க் கிடந்து, மதகில் குதித்து, வாய்க்காலின் ஓடிப் பலவாறு பாடுபட்டுச் சேர்த்துக் கொண்டுவந்த கல்லும் மண்ணும் சிறிதேயாயினும், அவற்றையும் ஏற்றுக் கொள்க. இன்னும் போய்க் கொண்டு வருவேன் என்று கூறி மீண்டும் மேகமாகி மழையாகப் பெயது, இரவும் பகலும் ஓயாமல் உழைக்கும் உழைப்பாளிகள் யார் உளர்? வாய்க்காலின் நீரைக் கையினால் தடுக்க அது வழிந்து ஓடுகிறது. உனக்கு நோகிறதா! அழாதே போ என்று சொல்லி விடுகிறான்.

தண்ணீரே! உன்னைப் போல் உலகத்தில் உழைப்பவர் யாவர்? நீங்காத அன்பும் ஊக்கமும் உறுதியும் உன்னைப் போலவே எல்லோருக்கும் இருந்தால் எவ்வளவு நன்மை கிடைக்கும்.

**நாங்கூழுப்புழு:** நாங்கூழுப்புழு அதற்கும் குறிக்கோள் உண்டு. நாங்கூழுப்புழுவின் உழைப்பு ஓயாத உழைப்பு. எல்லா உழைப்பினும் உழவர் உழைப்பே மேலானது. உழவருக்குப் பேருதவி செய்கின்றன.

மண்ணைப் பக்குவப்படுத்துவதற்காகவே, நீ பிறந்தாய், மண்ணைத் தின்று, அதை மெழுகு போலாக்கிப் பதப்படுத்தி உருட்டி உருட்டி உமிழ்கிறாய். புகழை விரும்பாமல் உழைப்பவரைப் போல, நீ மண்ணில் மறைந்து



PROOF COPY
www.tnpscjob.com

வாழ்கிறாய். நீ மண்ணைப் பக்குவப்படுத்தாவிட்டால், இந்தப் பயிர்கள் எப்படி விளையும்? நீ செய்யும் இந்தப் பேருதவியை எண்ணாமல் எறும்பு முதலிய பூச்சிகள், உன்னைக் கடித்துக் குறும்பு செய்கின்றன.

உனக்கு உள்ள பொறுமையும் உழைப்பும் வேறு யாருக்கு உண்டு.

நாங்கூழுப்புழு மண்ணுக்குள் மறைவதைக் கண்டு நீ புகழை விரும்பவில்லை. நல்லது போ. உன் வேலையைச் செய்.

புல், வாய்க்கால், நாங்கூழுப்புழு போல மனிதர்களும் குறிக்கோளுடன், அன்பையும் பண்பையும், பொறுமையும் பெற்று விளங்க வேண்டும்.

## இலக்கணம்

## இயல் - 1

## 1. மொழி முதல், இறுதி எழுத்துகள்

**1. தவறான இணையைத் தேர்வு செய்க.**

அ. மொழி +ஆளுமை - உயிர் + உயிர்

ஆ. தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

இ. கடல் + அலை - உயிர் + மெய்

ஈ. மண் + வளம் - மெய் + மெய்

விடை: இ) கடல் + அலை - உயிர் + மெய்

**2. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப் பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**

அ. சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் **அண்ணா.**

ஆ. தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் **திரு.வி. கலியாணசுந்தரனார்.**

இ. உயிரை உணாவை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் **பாரதிதாசன்.**

ஈ. பொதுவுடைமை கொள்கைளின் முன்னோடிகளில் ஒருவர் **ஜீவா.**

**3. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ. காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

**விடை: விடியற்காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.**

ஆ. முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராம போகாது.

**விடை: முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் கிடைக்காமல் போகாது.**

இ. காலத்துக்கேத்த மாரி புதுசுபுதுசா மொழிவடிவத்த மாத்தனும்.

**விடை: காலத்திற்கு ஏற்றவாறு புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.**

ஈ. ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிக்கும்போது எல்லாத்தையும் கவனமா பதிய வைக்கனும்.

PROOF COPY



www.tnpscjob.com

**விடை: ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது எல்லாவற்றையும் கவனமாக பதிய வைக்க வேண்டும்.**

உ. தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சுப் போனா பதட்டமாயிரும்.

**விடை: தேர்வு எழுத விரைவாகச் செல்லுங்கள், தாமதமாகச் சென்றால் பதற்றமாயிருக்கும்.**

**4. வினாக்கள்:**

**அ. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் 22. அவை:
உயிரெழுத்துகள் 12, உயிர் மெய் எழுத்துகள் 10. க,ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் சொல்லின் முதலில் வரும்.

**ஆ. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டு தருக.**

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் 24, உயிரெழுத்து 12, மெய்யெழுத்து 11, குற்றியலுகரம் 1, மொத்தம் 24.

**இ. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.**

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது உயிரீறு எனப்படும்.
**எ-டு: மணி (ண் + இ) + மாலை - உயிரீறு.**

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது மெய்யீறு எனப்படும். **எ-டு: பொன் + வண்டு - பொன்வண்டு - மெய்யீறு.**

**ஈ. உயிர் முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.**

வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது உயிர் முதல் எனப்படும். **எ-டு: வாழை + இலை- வாழையிலை.**

வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது மெய்ம்முதல் எனப்படும்.
**எ-டு: தமிழ் + நிலம் (ந் + இ) - தமிழ்நிலம் - மெய்ம்முதல்.**

**உ. குரங்குக்குட்டி - குற்றியலுகரப் புணர்ச்சியை விளக்கு.**

'நெடிலோடு உயிர்த் தொடர்க் குற்றுகரங்களுள் 'டற' ஒற்று இரட்டும்' என்ற விதிப்படி குரங்கு + குட்டி = குரங்குக்குட்டி எனப் புணர்ந்தது.

**5. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையாதைக் கண்டுபிடிக்க.**

அ. அன்னம், கிண்ணம், ஆ. டமாரம், இங்ஙனம்

இ. ரூபாய், லட்சாதிபதி ஈ. றெக்கை, அங்ஙனம்

**விடை: அ. அன்னம், கிண்ணம்**

**6. உயிரெழுத்து, பன்னிரெண்டு, திருக்குறள், நாலடியார்- இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?**

உயிரெழுத்து - உயிர் + எழுத்து - மெய்யீறு



PROOF COPY
www.tnpscjob.com

பன்னிரண்டு - பத்து + இரண்டு - உயிரீறு

திருக்குறள் - திரு + குறள் - உயிரீறு

நாலடியார் - நான்கு + அடியார் - உயிரீறு

**II. சிறுவினா:**

**1. மொழி முதல் இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.**

**மொழி முதல் எழுத்துகள்:** உயிரெழுத்துகள் பன்னிரெண்டு.

மெய்யெழுத்துகள் க,ங, ச,ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள்.

**மொழி இறுதி எழுத்துகள்:** உயிர் எழுத்துகள் 12. மெய்யெழுத்துகள் 11, ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள். குற்றியலுகரம் 1.

**மொழி முதல் எழுத்துகள்:** அடை, ஆடை, இலை, ஈயம், உரல், ஊர்தி, எலி, ஏணி, ஐவனம், ஒளி, ஓக்கம், ஔவியம்.

**'க' வரிசை:** கலை, காலை, கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேயல் கைதை, கொண்டல், கோடை, கௌவை.

**'ச' வரிசை:** சாலை, சிலை, சீற்றம், சுரும்பு, சூழ்க, செய்க, சேர், சொல், சோறு.

**'த' வரிசை:** தந்தை, தாடி, திற்றி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேவர், தையல், தொண்டை, தோடு, தௌவை.

**'ந' வரிசை:** நடம், நாரை, நிலம், நீர், நுழை, நூல், நெய்தல், நேயம், நைகை, நொய்யன, நோக்கம், நௌவி.

**'ப' வரிசை:** படை, பாடி, பிடி, பீடம், புகழ், பூமி, பெடை, பேடி, பைதல், பொன், போதகம், பௌவம்.

**'ம' வரிசை:** மடம், மாடம், மிடறு, மீளம், முகம், மூதூர், மெலிந்தது, மேனி, மையல், மொழி, மோதகம், மௌவல்.

**'வ' வரிசை:** வளை, வாளி, விளரி, வீடு, வெள்ளி, வேர், வையம், வௌவு.

**'ஞ' வரிசை:** ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

**'ய' வரிசை:** யான்

**குற்றியலுகரம்:** நுந்தை

**மொழி இறுதி எழுத்துகள்:** உயிர் எழுத்துகள்: சில (அ), நிலா (ஆ), நரி (இ), தீ (ஈ), மிளகு (உ), பூ (ஊ), சேஎ (எ), எங்கே (ஏ), மழை (ஐ), நொ (ஒ), மலரோ (ஓ), கௌ (ஔ).

**மெல்லின மெய்:** உரிஞ், பெண், வெரிந், அறம், மான்

**இடையின மெய்:** பொய், பார், பால், தெவ், பாழ், வாள்

**குற்றியலுகரம்:** காடு, மூழ்கு, அஃது

**III. மொழியை ஆள்வோம் - (புத்தகத்தில் பக்கம் 22)**

**1. ஓய்ந்து கிடந்தபின் வாராது வந்து உதித்த புலமைக் கதிரவன் - இத்தொடரில் ஓய்ந்து, வாராது, வந்து, உதித்த ஆகிய சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருக.**



PROOF COPY
www.tnpscjob.com

1. ஓய்ந்து - வினையெச்சம்
2. வாராது - எதிர்மறை வினையெச்சம்
3. வந்து - வினையெச்சம்
4. உதித்த - பெயரெச்சம்

**2. பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக. (புத்தகத்தில் பக்கம் 22)**

உவமைத் தொடர்: பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டு போல.

**3. மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர். விடைக்கேற்ற வினாவை அமைக்க. விடை:** தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

**4. விளங்கினார் - பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

விளங்கு + இன் + ஆர். விளங்கு - பகுதி, இன் - இறந்தகால இடைநிலை, ஆர் - பலர்பால் வினை முற்று விகுதி.

**5. பிறமொழிச் சொற்களை தமிழ்ப்படுத்துக.**

| | | | |
|---|---|---|---|
| வாடகை | - குடிக்கூலி | விசா | - நுழைவு இசைவு |
| மாதம் | - திங்கள் | பாஸ்போர்ட் | - கடவுச்சீட்டு |
| போலீஸ் | - காவலர் | கம்பெனி | - நிறுவனம் |
| நிச்சயம் | - உறுதி | பத்திரிக்கை | - இதழ் |
| உத்திரவாதம் | - உறுதித்தன்மை | கோரிக்கை | - விண்ணப்பம் |
| சந்தோசம் | - மகிழ்ச்சி | யுகம் | - நூற்றாண்டு |
| சம்பளம் | - கூலி, ஊதியம் | ராச்சியம் | - அரசு |
| ஞாபகம் | - நினைவு | சரித்திரம் | - வரலாறு |
| வருடம் | - ஆண்டு | முக்கியத்துவம் | - சிறப்பு |
| தேசம் | - நாடு | சொந்தம் | - உறவு |
| வித்தியாசம் | - வேறுபாடு | சமீபம் | - அருகில் |
| உற்சாகம் | - மகிழ்ச்சி | தருணம் | - நேரம் |

**IV. பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளி: (புத்தகத்தில் பக்கம் - 24)**

**1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

இனிமை, பண்பாடு, அகப்பொருள்.

**2. பத்தியிலுள்ள அளபெடைகளைக் கண்டறிக. (அதூஉம், தழீஇய)**

அதூஉம் - இன்னிசையளபெடை, தழீஇய - சொல்லிசை அளபெடை.

**3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**

தமிழ் என்றால் அமுதம்.

**4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**

திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் தமிழ்மாலை.

PROOF COPY



www.tnpscjob.com

5. **பத்தியின் மையக்கருத்திற்கு ஏற்ப ஒரு தலைப்பிடுக.** தமிழும் சுவையும்.

V. **தொடரிலுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்கு.**

1. **பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும்:** 1. ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.
   2. கலைகள் எல்லாம் இன்பம் தருபவை.
2. **நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்சிக்கும் எனப்படுகிறது மனதை:** 1. தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.
   2. மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.
3. **பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை:** 1. நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக் கூடாது.
   2. பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது.
4. **நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யாரும் இருக்கவில்லைத் தெரியுமா?**
   1. நேற்று வந்த பையன் பக்கத்தில் யாரும் இருக்கவில்லை.
   2. ஏன் தெரியுமா?
5. **கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்.**
   1. கோசல நாடு ஒரு சிறந்த நாடு.
   2. மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

VI. **வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்று.**

1. **வா - வேர்ச்சொல்**

அருணா வீட்டுக்கு வந்தாள் (வினைமுற்று)
அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர் (பெயரெச்சம்)
கருணாகரன் மேடையில் வந்து நின்றார் (வினையெச்சம்)
என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர் (வினையாலணையும் பெயர்)

2. **பேசு - வேர்ச்சொல்**

கனிமொழி மேடையில் பேசினாள் (வினைமுற்று)
யாழினி பேசிய செய்தி அனைவரையும் கவர்ந்தது (பெயரெச்சம்)
இராமு மேடைகளில் நன்றாக பேசி வந்தான் (வினையெச்சம்)
மேடையில் நன்றாகப் பேசியவர் மயங்கி விழுந்தார் (வினையாலணையும் பெயர்)

3. **தா - வேர்ச்சொல்**

என் அண்ணன் எனக்கு பொம்மை தந்தான் (வினைமுற்று)
அவன் தந்த பொம்மை அழகாக இருந்தது (பெயரெச்சம்)
கயல் எனக்கு அவளுடைய புத்தகத்தைத் தந்து சென்றாள் (வினையெச்சம்)
எனக்குப் பேனாவைத் தந்தவள் கவின்மொழி (வினையாலணையும் பெயர்)

PROOF COPY



www.tnpscjob.com

**4. ஓடு - வேர்ச்சொல்**

சிறுவன் பந்தயத்தின் வேகமாக ஓடினான் (வினைமுற்று)

அவன் ஓடிய தூரம் அதிகம் (பெயரெச்சம்)

பாலு ஓடி விழுந்தான் (வினையெச்சம்)

விரைவாக ஓடியவன் வெற்றி பெற்றான் (வினையாலணையும் பெயர்)

**5. பாடு - வேர்ச்சொல்**

மலர்க்கொடி பாடினாள் (வினைமுற்று)

அவள் பாடிய பாடல் இனிமையாக இருந்தது (பெயரெச்சம்)

கவிதா மேடைகளில் பாடி வந்தாள் (வினையெச்சம்)

இனிமையாகப் பாடியவள் பரிசினைப் பெற்றாள் (வினையாலணையும் பெயர்)

## இயல் - 2

## மெய்ம்மயக்கம்

**1. பத்தியைப் படித்து மயங்கொலிப் பிழைகளைத் திருத்துக.**

வேலன் நூலகம் செ**ண்**றான் **(ன்)**. வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் **கன்**டு **(ண்)** மகிழ்ந்து நி**ண்**றான் **(ன்)**. அ**ன்**டங்கள் **(ண்)** குறித்த புத்தகங்களைக் **கன்**டான் **(ண்)**. அந்தப் புத்தகங்களிலிருந்து குறிப்புகளை எடுத்துக் கொ**ன்**டு **(ண்)** நெஞ்சம் மகிழ்**ன்**தான் **(ந்)**.

**2. மெய்ம்மயக்கச் சொற்களை வகைப்படுத்துக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாய்க்கால் | வாழ்க | வாழ்ந்த | பாக்கம் | சேர்தல் | நார்ச்சத்து |
| எச்சம் | மார்கழி | ஆழ்தல் | மொத்தம் | கப்பல் | தாழ்ச்சி |

| உடனிலை மெய்ம்மயக்கம் | வேற்றுநிலை மெய்ம்மயக்கம் |
|---|---|
| வாய்க்கால் பாக்கம்<br>நார்ச்சத்து எச்சம்<br>மொத்தம் கப்பல் தாழ்ச்சி | வாழ்க வாழ்ந்த<br>சேர்தல் மார்கழி<br>ஆழ்தல் |

**3. தொடர்களில் உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் இடம்பெற்றுள்ள மெய்ம்மயக்கச் சொற்களைக் கண்டறிக.**

அ. இந்திய விண்வெளி ஆய்வுக்கழகம் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

ஆ. நேர்மை என்னும் சிறந்த கொள்கையைச் சார்ந்து வாழ்பவர்களே உயர்ந்தவர்களாகக் கருதப்படுவர்.

இ. இயற்கைக் காட்சிகளின் வழியாக எளிய சொற்களைக் கொண்டு, கவிதை எழுதப் பழக வேண்டும்.

ஈ. இந்தியா கணினித் தொழில்நுட்பத் துறையில் வேகமான வளர்ச்சி கண்டு வரலாற்றின் பக்கங்களில் இடம்பெற்று வருகிறது.



PROOF COPY

www.tnpscjob.com

உ. வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வு செய்து 'ஒற்றை வைக்கோல் புரட்சி' என்னும் நூலை ஜப்பான் அறிஞர் எழுதினார்.

| உடனிலை மெய்ம்மயக்கம் | வேற்றுநிலை மெய்ம்மயக்கம் |
|---|---|
| அ. ஆய்வு**க்க**ழகம், குறி**க்கோ**ளாகக் | இ**ந்தி**ய, செய**ல்ப**ட்டு |
| ஆ. கருத**ப்ப**டுவர் | நே**ர்மை**, சிற**ந்த**, கொ**ள்கை** உய**ர்ந்த**வர்களாக, சா**ர்ந்து** |
| இ. இயற்கை**க்கா**ட்சி, சொற்களை**க் கொ**ண்டு, எழுத**ப்ப**ழக | |
| ஈ. கணினி**த்தொ**ழில் நுட்ப**த்து**றை, வள**ர்ச்**சி, வரலா**ற்றி**ன், ப**க்க**ங்களில், பெ**ற்று** | இ**ந்தி**யா, க**ண்டு**, இட**ம்பெ**ற்று |
| உ. வை**க்கோ**ல், ப**ற்றி**, மிக**ச்சி**றந்த ஒ**ற்றை** வை**க்கோ**ல், எ**ன்னு**ம் ஜ**ப்பா**ன் | ஆ**ய்வு**, செ**ய்து** பு**ரட்சி** |

**II. குறுவினா:**

**1. அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அலர் + த் (ந்) + த் + உ = அலர் - பகுதி, த் - சந்தி, 'ந்' ஆனது விகாரம் த் - இறந்தகால இடைநிலை. உ - வினையெச்ச விகுதி

**2. ய், வ், ஞ், ட், ற், ந் - மெய்களுக்கான வேற்றுநிலை, உடனிலை மெய்ம் மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

| உடனிலை மெய்ம்மயக்கம் | வேற்றுநிலை மெய்ம்மயக்கம் |
|---|---|
| நொய்யல், பவ்வம் | பாய்கள், பஞ்சகாவ்யம் |
| விஞ்ஞானம், பட்டம், பற்று | பஞ்சம், காட்சி, பயிற்சி |
| செந்நாய் | செந்தாமரை |

**6. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.**

சொற்களின் இடையில் வல்லின எழுத்துகளுக்குப் பின் வல்லின மெய்கள் மட்டுமே வருவதை இனவெழுத்துகள் அல்லது நட்பெழுத்துகள் என்பர். பிழையின்றிப் பேசவும் எழுதவும் ணகர, நகர, னகர வேறுபாட்டினை அறிய வேண்டும். எங்கெங்கு இவ்வெழுத்துகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை இனவெழுத்துகளால் அறியலாம்.

**7. மொழியை ஆள்வோம் - சான்றோர் சித்திரம் (புத்தகத்தில் பக்கம் 47)**

**IV. விடையளி**

**1. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுது.**

இயக்கம், போற்றப்படும், என்னும், சிற்றூர், புகைப்படக்கலை, அச்சுக்



PROOF COPY
www.tnpscjob.com

கலை, மருத்துவம், விருப்பம், கிடைக்கும் போதெல்லாம், திண்டுக்கல், பணியாற்றும், பெற்று, மக்களால் மருத்துவர், அழைக்கப்பட்டார், பணியாற்றிய, விடுத்து, சித்த மருத்துவம், செலுத்தினார், மக்கள், அழைக்க, நூல்களை யெல்லாம், கற்று, வித்தியா, அமைப்பை, உருவாக்கி நடத்தினார், அனைத்திந்திய, மாநாடுகளுக்கும், உரையாற்றினார், இசைத்தமிழ், எழுபத்தோராண்டுகள், தமிழுக்கு.

2. **வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுது.**

தந்தை, பண்டிதர், தென்காசி, சாம்பவர், பிறந்தவர், கொண்டு, நுட்பங்களை, பயின்றார், அன்புடன், பண்டுவர், ஆண்டுகள், பண்டிதர், தொடங்கினர், பண்டை, நூல்களை, ஆழ்ந்து, சங்கம், இந்திய, நடந்த, சென்று, தொண்டின், கருணாமிர்தசாகரம், எழுபத்தோராண்டுகள், வாழ்ந்து, தொண்டு, செய்தவர், பண்டிதர்.

3. **உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ள சொற்களை எழுதி அடிக்கோடிடுக.**

**எ-டு:** 1. த**ச்ச**ன், 2. ச**க்க**ரம், 3. ப**க்க**ம் - உடனிலை மெய்ம்மயக்கம்

1. வாய்**க்கா**ல், 2. தாழ்**ப்பா**ள், 3. தே**ர்ச்**சி - வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

4. **கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.**

சங்கீதம் - இசை மகாஜனம் - பொதுமக்கள்

வித்தியா - கலைமகள் சாகரம் - கடல்

5. **பகுபத உறுப்பிலக்கணமும் தருக.**

| அ. பயின்றார் | ஆ. தொடங்கினர் |
|---|---|
| பயில் + (ன்) + ற் + ஆர்<br>பயில் - பகுதி,<br>ல் (ன்) - ஆனது விகாரம்<br>ற் - இறந்தகால இடைநிலை<br>ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி | தொடங்கு + இன் + அர்<br>தொடங்கு - பகுதி,<br>இன் - இறந்தகால இடைநிலை<br>அர் - பலர்பால் வினைமுற்று விகுதி |

6. **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. **உலை, உளை, உழை**

மன **உளை**ச்சல் தீரவும் வீட்டில் **உலை** கொதிக்கவும் **உழை**க்க வேண்டும்.

2. **வலி, வளி, வழி**

**வளி** வீசியதால் **வழி** தவறிச்சென்ற மான் அடிபட்டு **வலி**யால் துடித்தது.

3. **கலை, களை, கழை**

**கழை**கள் நிறைந்த காட்டில் **கலை**களைக் கற்று ஏகலைவன் தன் துயர் **களை**ந்தான்.



PROOF COPY

www.tnpscjob.com

4. **கனை, கணை**

இராமன் எய்த **கணை** தைத்து வலியால் குதிரை **கனை**த்தது.

5. **குரை, குறை**

நாய் **குரை**த்ததால் திருட்டு பயம் **குறை**ந்தது.

**7. இலக்கணக் குறிப்பு தருக.**

1. பயின்றார் - வினையாலணையும் பெயர்
2. தொடங்கினர் - வினையாலணையும் பெயர்

## இயல் - 3
## பகுபத உறுப்புகள்

**I. இலக்கணத் தேர்ச்சி கொள்.**

**1. பகுபத உறுப்புகள் எத்தனை? அவையாவன?**

இலக்கண உறுப்புகள் ஆறு.

அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

**2. காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்கு.**

**இறந்தகால இடைநிலைகள்:** த், ட், ற், இன். எ-டு: உரைத்தான், கண்டான், பெற்றான், வணங்கினான்

**நிகழ்கால இடைநிலைகள்:** கிறு, கின்று, ஆநின்று. எ-டு: படிக்கிறான், படிக்கின்றான், படியாநின்றான்

**எதிர்கால இடைநிலைகள்:** ப். வ். எ-டு: ஓடுவான், படிப்பான்

**எதிர்மறை இடைநிலைகள்:** ஆ, அல், இல். எ-டு: ஓடாது, காணலன், படித்திலன்

**3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடத்தில் அமையும்?**

பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புகள் புணரும்போது இடையில் தோன்றும் உறுப்பே சந்தி ஆகும். சந்தி பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.

பகுதியோடு இடைநிலையும் இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாகச் சார்ந்து இயைய வரும் உறுப்பு சாரியை ஆகும்.

சாரியை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

**4. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?**

விகுதி வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் ஆகியவற்றை வெளிப்படுத்தும்.

**5. உறுப்பிலக்கணம் தருக.**

**அமைந்து:** அமை + த்(ந்) + த் + உ. அமை - பகுதி. த் - சந்தி 'ந்' ஆனது விகாரம். த் - இறந்தகால இடைநிலை. உ - வினையெச்ச விகுதி.



www.tnpscjob.com

| சொல் | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| பார்த்தான் | பார் | த் | | த் | | ஆன் |
| தோன்றி | தோன்று | | | | | இ |
| வருகிறார் | வா | | வரு | கிறு | | ஆர் |
| செய்க | செய் | | | | | க |
| நடந்தனன் | நட | த் | ந் | த் | அன் | அன் |
| கொடுத்த | கொடு | த் | | த் | | அ |

6. **பொருந்தா இணையைத் தேர்க.**

அன் - வந்தனன் / இன் - முறிந்தது / கு - காண்குவன் / அன் - சென்றன.

**விடை: இன் - முறிந்தது**

7. **பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| பேசினான் | எழுதினான் | வணங்கினான் |
| பேசுகிறான் | எழுதுகிறான் | வணங்குகிறான் |
| பேசுவான் | எழுதுவான் | வணங்குவான் |
| பேசான் | எழுதான் | வணங்கான் |

8. **வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்கு.**

பார் ➔ ஆ ➔ ஆன் ➔ பாரான்

காண் ➔ அல் ➔ அள் ➔ காணலள்

உரை ➔ இல் ➔ அர் ➔ உரைத்திலர்

9. **"இனிதென்" - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.**

**அ.** உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே. **ஆ.** தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும். **இ.** உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. **ஈ.** உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

**விடை: அ. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்,**
**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**

10. **பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?**

அ. பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

ஆ. பகுதி, இடைநிலை, சாரியை. இ.பகுதி, சந்தி, விகாரம்.

ஈ. பகுதி, விகுதி. **விடை: ஈ. பகுதி, விகுதி.**

II. **சிறுவினா:**

1. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

   1. **வருகின்றாள்** - வா (வரு) + கின்று + ஆள்.



PROOF COPY

www.tnpscjob.com

வா - பகுதி, வரு - என்றானது விகாரம், கின்று - நிகழ்கால இடைநிலை, ஆள் - பெண்பால் வினைமுற்று விகுதி.

2. **வாழ்வான்** - வாழ் + வ் + ஆன்

வாழ் - பகுதி, வ் - எதிர்கால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

3. **காண்பிப்பார்** - காண்பி + ப் + ப் + ஆர்

காண்பி - பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

4. **பிரிந்த** - பிரி + த் (ந்) + த் + அ

பிரி - பகுதி, த் - சந்தி 'ந்' ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

**III. மொழியை ஆள்வோம்: (பத்தி - பக்கம் 72)**

**1. மாநிலக் கல்லூரி - புணர்ச்சிவிதி கூறுக.**

மாநிலம் + கல்லூரி = மவ்வீறு ஒற்றழிந்து வன்மைக்கினமாத் திரிபவும்.

**2. ஆசிரியராக்கினார்: இதன் பகுதி**

அ. ஆசு, ஆ. ஆசிரி, இ. ஆசிரியராக்கு, ஈ. ஆசி. **விடை: அ. ஆசு**

**3. சிறுசிறு தொடர்களாக மாற்றி எழுது.**

1. தாமோதரனார் நீதிநெறி விளக்கம் என்ற நூலை பதிப்பித்து வெளியிட்டார்.
2. கலித்தொகை வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்தார்.
3. கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**4. பெரும்புகழ் - இலக்கணக் குறிப்பு தருக.**

பெரும் புகழ் - பண்புத்தொகை

**5. கல்லூரி, உயர் நீதிமன்றம், வரலாறு, பணி ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுது.**

கல்லூரி - காலேஜ் (College), உயர் நீதிமன்றம் - ஹைகோர்ட் (High Court), வரலாறு - ஹிஸ்டரி (History), பணி - வொர்க் (Work).

**6. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுது.**

1. குமரனை**ப்** பற்றி**த்** தெரிந்து~~க்~~ கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை**த்** தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.
2. அனைத்துத் துறைகளிலும் ஆண்களை**ப்** போலவே~~ப்~~ பெண்களும் அரசு**ப்** பணியை**ப்** பெற வேண்டும்.
3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை~~த்~~ தீமைகளை**ப்** புரிந்து பேசுவர்.
4. தமிழர் ஆற்று**த்** தண்ணீரை**த்** தேக்கி**ச்** சேமித்து**க்** கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
5. சான்றோர் மிகுந்த~~ப்~~ பொறுப்புடன் சிறப்பான சேவை~~ப்~~ புரிந்து கொள்கையை நிலைநாட்ட**ச்** செய்தனர்.



PROOF COPY
www.tnpscjob.com

## இயல் - 4
## புணர்ச்சி விதிகள்

**I. இலக்கண தேர்ச்சி கொள்:**

**1. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய் வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

**எ-டு: மாசற்றார்** - மாசு + அற்றார்

மாசு (ச்+உ) + அற்றார் - 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி 'உ' மறைந்தது. மாச் + அற்றார் - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி 'மாசற்றார்' எனப் புணர்ந்தது.

**2. கருவிழி, பாசிலை, சிறியன், பெருங்கல் ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

1. **கருவிழி:** கருமை + விழி - ஈறுபோதல் என்னும் விதிப்படி மை விகுதி கெட்டு கருவிழி எனப் புணர்ந்தது.
2. **பாசிலை:** பசுமை + இலை - ஈறுபோதல் - பசு + இலை. பாசு + இலை ஆதிநீடல், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், பாச் + இலை உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - பாசிலை எனப் புணர்ந்தது.
3. **சிறியன்:** சிறுமை + அன் - ஈறுபோதல் - சிறு + அன் - இடை உகரம், இய்யாதல். சிறி + அன் - உடம்படுமெய் 'ய்' இடையில் தோன்றும். சிறி + ய் + அன் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - சிறியன் எனப் புணர்ந்தது.
4. **பெருங்கல்:** பெருமை + கல் - ஈறுபோதல். பெரு + கல் - இனமிகல் - பெருங்கல் எனப் புணர்ந்தது.

**3. புணர்ச்சி விதி தந்து விளக்கு.**

புலனறிவு, வில்லொடிந்தது, வழியில்லை, திரைப்படம், ஞாயிற்றுச்செலவு:

1. **புலனறிவு** - புலன் + அறிவு: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி புலனறிவு எனப் புணர்ந்தது.
2. **வில்லொடிந்தது** - வில் + ஒடிந்தது: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி வில்லொடிந்தது எனப் புணர்ந்தது.
3. **வழியில்லை** - வழி + இல்லை: வழி + ய் + இல்லை. 'இ ஈ ஐ வழி யவ்வும்' என்ற விதிப்படி வழியில்லை எனப் புணர்ந்தது.
4. **திரைப்படம்** - திரை + படம்: திரை + ப் + படம்: 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என்னும் விதிப்படி திரைப்படம் எனப் புணர்ந்தது.



PROOF COPY
www.tnpscjob.com

5. **ஞாயிற்றுச்செலவு -** ஞாயிறு + செலவு: ஞாயிற்று + செலவு: ‘நெடிலோடு உயிர்த் தொடர்க் குற்றுகரங்களுள் ல ற ஒற்று இரட்டும் வேறுமை மிகவே’ என்னும் விதிப்படி ஞாயிற்றுச்செலவு எனப் புணர்ந்தது.

4. **விதிவேறுபாடறிந்து விளக்கு.**

1. **தன்னொற்றிரட்டல் -** தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும். பண்புப் பெயர்ப் புணர்ச்சியில் மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல் ஒற்று இரட்டிக்கும்.

**எ-டு:** வெற்றிலை - வெறுமை + இலை: வெற்று + இலை: வெற்றிலை எனப் புணர்ந்தது. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும். நிலைமொழி தனிக்குறில் சார்ந்த மெய்யெழுத்தாக நின்று, வருமொழியின் முதல் உயிரெழுத்தாக இருப்பின் நிலைமொழி ஒற்று இரட்டிக்கும்.

**எ-டு:** கல்லதர் - கல் + அதர்: தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும். கல்ல் + அதர்: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயலே என்னும் விதிப்படி கல்லதர் எனப் புணர்ந்தது.

2. **இனமிகல் -** வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.

இனமிகல் - ஈறுபோதல் விதிப்படி மை விகுதி மறைந்தபிறகு, மகர மெய் வராத நிலையில் இனமிகல் விதியைப் பயன்படுத்த வேண்டும்.

**எ-டு:** கருங்கடல் கருமை + கடல்: ஈறுபோதல்: கரு + கடல்: இனமிகல் விதிப்படி கருங்கடல் எனப் புணர்ந்தது.

நிலைமொழிச் சொல்லின் இறுதி எழுத்தாக மகர மெய் வரும்போது மகர மெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணரும். எடு: பழத்தோல் பழம் + தோல்: பழ + தோல்: மகர மெய் கெட்டு வன்மைக்கு இனமாத் திரிபவும் என்னும் விதிப்படி பழத்தோல் எனப் புணர்ந்தது.

5. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ. அடி அகரம் ஐ ஆதல் | - | செங்கதிர் **(ஆ)** |
| ஆ. முன் நின்ற மெய் திரிதல் | - | பெருங்கொடை **(ஈ)** |
| இ. ஆதி நீடல் | - | பைங்கூழ் **(அ)** |
| ஈ. இனமிகல் | - | காரிருள் **(இ)** |

6. **கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.**
**(புத்தகத்தில் பக்கம் 108ல் உள்ள வினாவிற்கான விடை:)**
**(ii)** அ, இ, ஈ. **சரி.** ஆ. **தவறு.**

7. **பெருங்கலம் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.**
ஆ. ஈறுபோதல், இனமிகல்



www.tnpscjob.com

**II. குறுவினா:**

**1. தன்னொற்றிரட்டல் - விதியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல் ஒற்று இரட்டிக்கும்.

**எ-டு:** நெட்டிலை: நெடுமை + இலை - ஈறுபோதல். நெடு + இலை - தன்னொற்றிரட்டல். நெட்டு + இலை - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும். நெட்ட் + இலை - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி நெட்டிலை எனப் புணர்ந்தது.

**III. சிறுவினா:**

**1. சான்று தந்து விளக்குக.**

**குற்றியலுகரப் புணர்ச்சி:** குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய், வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

மாசற்றார் - மாசு + அற்றார் - மாசு (ச் + உ) + அற்றார்.

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

மாச் + அற்றார் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

**முற்றியலுகரப் புணர்ச்சி:** நிலைமொழியின் இறுதியில் உள்ள முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப் போலவே தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய் வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

வரவறிந்தான் - வரவு + அறிந்தான். வரவு (வ்+உ) + அறிந்தான் - முற்றும் அற்று ஒரோவழி என்னும் விதிப்படி 'உ' மறைந்தது. வரவ் + அறிந்தான் - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி வரவறிந்தான் எனப் புணர்ந்தது.

**IV. மொழியை ஆள்வோம்:**

**1. இராக்கெட்டும் துணைக்கோள்களும் - இலக்கணக் குறிப்புத் தருக.**

எண்ணும்மை

**2. பெருங்குளம், பேரவைத்தலைவர் - புணர்ச்சி விதி தருக.**

பெருமை + குளம் - ஈறுபோதல். பெரு + குளம் - இனமிகல் ஆகி பெருங்குளம் ஆனது. பேரவை + தலைவர் - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி பேரவைத்தலைவர் ஆனது.

**3. நண்பன் - இம்மொழியாக்கத்திற்குரிய வடசொல்லைப் பத்தியிலிருந்து தேர்ந்தெடு.**

நேசன்

**4. பேனா - என்னும் புனைபெயரில் அப்புசாமி பல நூல்களை எழுதியுள்ளார். இத்தொடரில் இடம்பெறும் வினைத்தொகை எது?** புனைபெயர்



PROOF COPY
www.tnpscjob.com

5. **தமிழில் வெளிவந்த முதல் அறிவியல் இதழ் எது?** தமிழர் நேசன்

6. **பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கு. (புத்தகத்தில் பக்கம் 111ல் உள்ள வினாவிற்கான விடை) சுருக்கப்பட்ட பகுதி:**

   ஹீமோகுளோபின் எலும்பு மஜ்ஜையில் இருக்கும் ரத்த சிவப்பணுக்களில் அதிகம் காணப்படுகிறது. சிவப்பணுக்கள் உற்பத்தியாக இரும்புச் சத்து, புரதச் சத்து, வைட்டமின் பி12, சி மற்றும் ஃபோலிக் அமிலம் தேவை. உணவில் தேவையான ஊட்டச்சத்து இல்லாதபோதும், சிவப்பணு கோளாறு, ரத்தமிழப்பு, குடல் புழுக்கள், ரத்தப் புற்று மற்றும் மலேரியா, மஞ்சள் காமாலை போன்ற தொற்றுநோய்கள் காரணமாகவும் ரத்தசோகை ஏற்படுகிறது. ஹீமோகுளோபின் உடல் திசுக்களுக்கு ஆக்ஸிஜனைக் கொண்டு சேர்க்கிறது. இதன் அளவு குறையும் பொழுது அடிக்கடி தலைவலி, படபடப்பு, மயக்கம் போன்ற பல அறிகுறிகள் தெரியும். சிறுவர், சிறுமிகளுக்கு வயதுக்கேற்ற உடல் வளர்ச்சி இருக்காது. நினைவாற்றல், படிப்பில் ஆர்வம் குறையும், தோல், நகம், கண், நாக்கு ஆகியவை வெளுத்துக் காணப்படுவ-தும், முகம் மற்றும் கணுக்கால்கள் வீங்குவதும் இந்நோய்க்கு உரிய முக்கிய அறிகுறிகள்.

7. **குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுது. (புத்தகத்தில் பக்கம் 111ல் உள்ள வினாவிற்கான விடை) பதில்:**

   இன்று வீடுகளில் நாம் அதிக அள்வில் மின்சாதனக் கருவிகளைப் பயன்-படுத்துகிறோம். அவற்றைக் கையாளுவதில் நாம் கவனமாக இருத்தல் வேண்டும். மின்சாதன சொடுக்கிகளை ஈரக்கையில் தொடுவதைத் தவிர்த்தல் வேண்டும். இடி இடிக்கும் நேரங்களில் தொலைக்காட்சி பெட்டிப் பார்ப்பது, அலைப்பேசியைக் கையாள்வது ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும். இவற்றின் சொடுக்கிகளை இரவு நேரங்களில் அணைத்து (நிறுத்தி) விட வேண்டும். அதிகாலை நேரங்களில் மின் கம்பங்களில் எரியும் விளக்குகளை கவனமாக அணைக்க வேண்டும். மேலும் பள்ளிகள், பொதுவிடங்கள், விளையாட்டுத் திடல்களில் இருக்கும் மின் கம்பங்கள் கவனிப்பாரற்று, பாதுகாப்பில்லாமல் இருக்கும். அதனால் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

8. **அடைப்புக்குறிக்குள் உள்ள விடைகளுக்கேற்ப வினாக்கள் அமைக்க.**

   1. தாய்மொழிக் கல்வி

      **விடை:** நாம் அனைவரும் எம்மொழியில் கற்பது சிறந்தது?

   2. அப்துல் கலாம்

      **விடை:** இளைஞர்களே! கனவு காணுங்கள் என்றவர் யார்?

   3. பால் ப்ரோக்கா

      **விடை:** நம்முடைய பேச்சுத் திறமை, நம் மூளையின் இடது முன்பகுதிச்

PROOF COPY



www.tnpscjob.com

சுனையில் இருக்கிறது என்று கண்டுபிடித்தவர் யார்?

4. கணினிப் புரட்சி

**விடை:** இன்றைய யுகம் எத்தகைய புரட்சி யுகம்?

**9. விடுகதைப் பாடல்**

| | |
|---|---|
| 1. எண்ணங்களை எழுத்தாக்கிடுவான் | நினைவுகளைச் சேமித்திடும் |
| அதற்கு வண்ணமும் தீட்டிடுவான் | நல்லன் |
| தொடுதிரையோடு வந்து | மடித்தால் ஒரு பெயரெடுப்பான் |
| மிடுக்காக நின்றிடுவான் | கைக்குள் அடைத்தால் மறுபெயரில் |
| அகிலத்தைத் தன்னுள் அடக்கி | அவதரிப்பான் |
| அறிவை விரிவு செய்விப்பான் | அவன் யார்? |

**விடை: 1. கணினி, 2. மடிக்கணினி, 3. அலைப்பேசி (அல்லது) கைப்பேசி.**

## இயல் - 5
## படைப்பாக்க உத்திகள்

**I. இலக்கணத் தேர்ச்சி கொள்:**

**1. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?**

உவமை வினை (தொழில்), பயன், வடிவம் (மெய்), உரு (நிறம்) என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும்.

**2. உவமைத் தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப் புலவர்கள் பெயர்களைத் தொகுத்து அவற்றில் உள்ள உவமையைக் கண்டறிக.**

உவமைத் தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப் புலவர்கள் செம்புலப் பெயல்நீரார், தேய்புரிபழங்கயிற்றனார், அணிலாடு முன்றிலார்.

**இத்தொடரில் உள்ள உடமைகள்:**

1) செம்புலப்பெயல்நீர், 2) தேய்புரிபழங்கயிறு, 3) அணிலாடுமுன்றில்

**3. ஒட்டுப்போடாத ஆகாயம்போல - இந்த உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவது...**

அ. உவமை, ஆ. உருவகம், இ. உள்ளுறை, ஈ. இறைச்சி

**விடை: அ. உவமை.**

**4. கீழ்க்காண்பனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.**

அ. குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.

ஆ. ஒப்பீட்டுச்செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.

இ. வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.

ஈ. உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.

**விடை: ஈ. உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.**

**5. உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைச் சான்றுடன் ஆய்க.**

உவமைக்குள் மற்றொரு பொருளைக் குறிப்பாக உணர்த்தினால் உள்ளுறை

PROOF COPY



www.tnpscjob.com

உவமை. உள்ளுறை உவமம் கவிதைப் பொருளோடு சேர்ந்து காணப்படுகிறது. குறிப்புப் பொருளுக்குள் மேலும் ஒரு குறிப்புப் பொருள் அமைந்திருக்கு-மானால் அது இறைச்சி. இறைச்சிப் பொருள் கவிதைப் பொருளின் புறத்தே குறிப்புப் பொருளாய் வெளிப்படுகிறது.

**சான்று:** **ஈயல் புற்றத்து ஈரம்புறத்து இறுத்த**
**குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்ற**
**தூங்கு தோல் துதிய வள்ளுகிர் கதுவலின்**
**பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்.**

**விளக்கம்:** இரவு நேரத்தில் காட்டைக் கடந்துவரும் தலைவன் செயலால் தலைவி அஞ்சி, வருந்துவதை இப்பாடல் தெரிவிக்கிறது. கரடி தலைவனுக்கும் பாம்பு தலைவிக்கும் குறியீடுகளாய் அமைந்து உள்ளுறை உவமம் உருவாகிறது. மேலும், இப்பாடலில் உள்ளுறை உவமத்துடன் இறைச்சிப் பொருளும் அமைந்துள்ளது. தலைவனைப் பற்றிய தலைவியின் துயரமே இப்பாடலில் அமைந்துள்ள இறைச்சிப் பொருளாகும்.

6. **நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?**
அ. வினை, ஆ. பயன், இ. வடிவம், ஈ. மெய். **விடை: அ. வினை.**

II. **குறுவினா**

1. **கொழுஞ்சோறு - புணர்ச்சி விதி கூறுக.**
கொழுமை + சோறு - ஈறுபோதல். கொழு + சோறு - இனமிகல் என்னும் விதிப்படி கொழுஞ்சோறு என்று புணர்ந்தது.

2. **உவமை, உருவகம் - வேறுபடுத்துக.**
**உவமை:** உவமேயம் தனியாகவும் உவமை தனியாகவும் வந்து உவம உருபு வெளிப்பட்டு வந்தால் உவமை. உவமையணியில் உவமானமும் உவமேயமும் வேறுவேறானவை.
**உருவகம்:** உவமையின் செறிவார்ந்த வடிவமே உருவகம். உவமையைவிட உருவகம் ஆழமானது. உவமானமும் உவமேயமும் ஒன்று என்று கூறுவது உருவகம்.

III. **மொழியை ஆள்வோம்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

1. **இலக்கணக் குறிப்பு தருக.**
அ. பிறந்தார் - வினையாலணையும் பெயர், ஆ. அருளிய - பெயரெச்சம்.

2. **திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப் - விடக்கேற்ற வினாவை எழுது.**
**விடை:** எதற்காக ஜி.யு.போப் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்?

3. **பதிப்பித்தார் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
பதிப்பித்தார் - பதிப்பி + த் + த் + ஆர்.

PROOF COPY



www.tnpscjob.com

பதிப்பி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

4. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பள்ளி**க்**கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்து**த்** துறை**க்** கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய~~க்~~ கல்வியே~~ப்~~ பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

5. **பொருத்துக.**

அ. தொல்காப்பியம் - i) சங்கநூல் **(இ)**
ஆ. திருக்குறள் - ii) பக்தி நூல் **(ஈ)**
இ. புறநானூறு - iii) அறநூல் **(ஆ)**
ஈ. திருவாசகம் - iv) இலக்கண நூல் **(அ)**

6. **செய்திக்குக் கீழுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை மொழிபெயர்ப்புப் பகுதியிலிருந்து கண்டறிந்து எழுது.**

**Religion** - சமயம், **Philosophy** - தத்துவம், **Medicine** - மருத்துவம், **Science** - அறிவியல், **Idols** - சிலைகள்.

7. **கீழ்க்காணும் பத்தியில் உள்ள உருவகங்களையும் உவமைகளையும் பட்டியலிடுக. உருவகங்களை உவமைகளாக மாற்றுக. உவமைகளை எவ்வகை உவமைகள் என்று எழுதுக. உவமைகள்:**

மின்னல்கள் போன்ற சொற்கள் - **வினை (தொழில்)**
அடுக்கிவைக்கப்படாத புத்தகங்கள் போல் எண்ணங்கள் -
நத்தையைப் போல் நகர்ந்த நேரம் - **வினை (தொழில்)**
நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் - **உரு (நிறம்)**
பூனைக்குட்டியைப் போல அம்மாவின் முந்தானையில் சுருண்டு கொள்ளுதல் - **வினை (தொழில்)**
பூனைக்குட்டியை மடியில் வைத்துக் கொண்டதைப் போல அம்மாவின் கதகதப்பு - **பயன்**

**உருவகம்:** விழிச்சுடர் - சுடர்போன்ற விழி
பசிக்கயிறு - பசியாகிய கயிற்றில் கட்டப்பட்ட பம்பரத்தைப் போல.

8. **கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுது.**

கல்வி என்றால் பயிற்சியின் மூலம் மனதைக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு பயன் தரும் வகையில் அமைவதே கல்வியாகும். கல்வியின் நோக்கம் மனதை ஒருமுகப்படுத்துவது. மன ஒருமைப்பாடே கல்வியின் அடிப்படை. மனதை ஒருமுகப்படுத்தும் அளவுக்கு அறிவு வளரும். அறிவுச் சுடரைப் பெற இதுவே வழி. பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவறையும் செய்ய மாட்டான். மனிதனுக்கும் விலங்கிற்கும் உள்ள வேறுபாடே மனதை ஒருமுகப்படுத்துவது தான். இசை, சிற்பம் போன்ற எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெறவும்,

PROOF COPY



www.tnpscjob.com

மனக்கதவுகளைத் திறக்கும் வலிமை பெறவும் மன ஒருமைப்பாடே அவசியம். இதுவே கல்விக்கு அடிப்படையாகும்.

**9. மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிக்க:**

| | | |
|---|---|---|
| கோத்தாரி | சுவடி | பாரதியார் |
| கல்லாடனார் | பொத்தகம் | மாயா |
| மதரஸா | நற்றிணை | திண்ணைப்பள்ளி |
| இலக்கணம் | பாலபாரதி | பட்டி மண்டபம் |
| பனுவல் | விஜயா | சமணம் |
| கணக்காயன் | மன்றம் | மாண்பு |
| பௌத்தம் | புவி | போதனார் |
| ரகு | பிள்ளைக்கூடம் | |

**10. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

**எ-கா:** கால்நடை. கால்நடைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிப் போனார்கள். சிறிய தொலைவைக் கடக்கக் கால்நடையாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.

1. **பிண்ணாக்கு:** மாடுகளுக்குப் பிடித்த உணவு பிண்ணாக்கு தண்ணீர்.
   **பின் நாக்கு:** பாம்பிற்குப் பின் நாக்கு உண்டு.
2. **எட்டுவரை:** பாமர மக்களும் இன்று எட்டு வரையாவது படித்திருக்க வேண்டும்.
   **எள் துவரை:** எங்கள் தோட்டத்தில் எள் துவரை விளைந்தது.
3. **அறிவில்லாதான்:** இராமன் படிக்காததால் அறிவில்லாதவனாக இருந்தான்.
   **அறிவில் ஆதவன்:** மாணவர்கள் அறிவில் ஆதவனாக விளங்க வேண்டும்.
4. **தங்கை:** இராவணனின் தங்கை சூர்ப்பணகை.
   **தம்கை:** குகன் இராமனைக் காண தேனும் மீனும் தம் கையால் கொண்டு சென்றான். தம் கையே தனக்குதவி.
5. **வைகை:** காவிரியின் வேறு பெயர் வைகை.
   **வைகை:** வைகை மணலில் வை கையை.
6. **நஞ்சிருக்கும்:** பழைய துணிகள் நஞ்சிருக்கும்.
   **நஞ்சு இருக்கும்:** பாம்பின் பல்லில் நஞ்சு இருக்கும்.

**11. மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிக்க (பக்கம் 137)**

| | | | |
|---|---|---|---|
| 1. கோத்தாரி | 2. கல்லாடனார் | 3. மதரஸா | 4. இலக்கணம் |
| 5. கணக்காயன் | 6. பனுவல் | 7. சுவடி | 8. பொத்தகம் |
| 9. விஜயா | 10. பாலபாரதி | 11. மன்றம் | 12. பாரதியார் |
| 13. திண்ணைப்பள்ளி | 16. மாண்பு | 17. வேடல் | 18. சமணம் |
| 19. பிள்ளைக்கூடம் | 20. போதனார் | 21. பௌத்தம் | 22. புவி |
| 23. பட்டிமண்டபம் | 24. ரகு | 25. நற்றிணை | 26. மண்டபம் |

PROOF COPY



www.tnpscjob.com

**12. கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலைப் படித்து நாளிதழில் செய்தியாக வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்**

திரு. எழிலன்,
தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
கிழக்கு வீதி,
திண்டுக்கல்.

**பெறுநர்**

முதன்மை ஆசிரியர் அவர்கள்,
தினமலர் நாளிதழ்,
சென்னை.

பெருமதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்:** "அரியன கேள் புதியன செய்" என்னும் திங்கள் கூடுகையின் நிகழ்ச்சி நிரலைத் தங்கள் நாளிதழில் செய்தியாக வெளியிட வேண்டி விண்ணப்பம்.

பெருமதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

"அரியன கேள் புதியன செய்" என்னும் திங்கள் கூடுகையின் நிகழ்ச்சி-யானது அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 28.05.2018 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற உள்ளது. இதைப் பற்றிய நிகழ்ச்சி நிரலை தங்கள் செய்தித்தாளில் வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
எழிலன்.

இடம்: திண்டுக்கல்
நாள்: 24.05.2018

**நிகழ்ச்சி நிரல்**

**நேரம்:** 2.30 பிற்பகல் **இடம்:** அ.மே.நி. பள்ளி, திண்டுக்கல்.

2.30 - தமிழ்த்தாய் வாழ்த்து
2.35 - வரவேற்புரை - மாணவர் இலக்கியச் செல்வன்
2.40 - தலைமையுரை - திரு. எழிலன், தலைமையாசிரியர்
2.50 - சிறப்புரை - கவிஞர் வாணி (புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை)
3.45 - நன்றியுரை - மாணவர் ஏஞ்சலின்
4.00 - நாட்டுப்பண்

**13. எண்ணங்களை எழுத்தாக்குக.**

**நீரின்றி தவிக்கும் குருவி (பக்கம் 24ல் உள்ள வினாவிற்கான விடை)**

மரங்களை அழிப்பதால் வானம் பொய்த்து மழையில்லாமல் பூமி



PROOF COPY
www.tnpscjob.com

வறண்டு விட்டது. ஏரி குளங்கள் எல்லாம் பொருகிவரும் மக்கள் தொகையால் வீடாக உருமாறிவிட்டன. ஏரி குளங்கள் பராமரிப்பு, அதாவது தூர் வாராததால் தண்ணீர் இல்லாமல் வற்றிவிட்டன. அதனால் பறவையினங்களும், விலங்குகளும் ஏன் மனிதர்கள் கூட நீரின்றி தவிக்கின்றனர். இப்படத்தில் காணப்படும் காட்சியில் குருவி ஒன்று குழாயில் இருந்து சொட்டுகின்றன் நீரை பருகுவதற்குத் தவிக்கின்ற காட்சியது. இந்நிலையானது மாற வேண்டுமென்றால் நாம் மரங்களை வளர்த்து அதிக மழையைப் பெறுவோம். அதுமட்டுமல்லாமல் பெய்யும் மழைநீரை வீணாக்காமல் ஏரி குளங்களில் சேகரித்து நாமும் மற்ற உயிரினங்களும் வாழ வழி செய்வோம்.

3. **விளம்பரத்தை பத்தியாக மாற்றி அமைத்தல்**

**இயற்கை உணவுத் திருவிழா (பக்கம் 48ல் உள்ள வினாவிற்கான விடை)**

"உடம்பை வளர்த்தேன்! உயிர் வளர்த்தேனே" என்ற திருமூலரின் வாக்குப் படி இயற்கை உணவை உட்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இயற்கை உணவுத் திருவிழா சென்னையில் உள்ள தீவுத்திடல் என்னும் இடத்தில் தை மாதம் 5ம் தேதி முதல் 11ஆம் தேதி வரை தினம் மாலை 6 மணி முதல் 10 மணி வரை நடைபெறும். இதில் இடம்பெறும் உணவு வகைகள்: 1. ஆவரம்பூச்சாறு, 2. குதிரைவாலிப் பொங்கல், 3. வாழைப்பூ வடை, 4. தினைப் பணியாரம், 5. வல்லாரை அப்பளம், 6. கம்புப்புட்டு, 7. முள்முருங்கை அடை போன்ற இயற்கை உணவுகள் இன்னும் பல இடம்பெறும். அனைவரும் இவ்விழாவில் கலந்துகொண்டு பயன்பெறுங்கள்.

4. **கட்டுரை ((பக்கம் 73ல் உள்ள வினாவிற்கான விடை))**

**பண்பாட்டைப் பாதுகாப்போம் - பகுத்தறிவைப் போற்றுவோம்**

**முன்னுரை:** 'கலாச்சாரம்' என்பது சமஸ்கிருதச் சொல். பண்பாடு என்பதே தமிழ்ச் சொல். பண்பாடு என்பது நாகரீகம், ஒழுக்கம் ஆகியவற்றைப் பெணுதல் ஆகும். 'பகுத்தறிவு' என்பது மனிதனின் மனதில் நன்றும் தீதுமாய் எண்ணங்கள் கலந்திருக்கின்றன. நன்று, தீது என பிரித்தறியும் அறிவே பகுத்தறிவு ஆகும். பண்பாடு மற்றும் பகுத்தறிவு பற்றிக் காண்போம்.

**பண்பாடு:** நம்முடைய முன்னோர்கள் பண்பாட்டில் தலைசிறந்தவர்களாக விளங்கின. சிறியவர்கள் தங்களைவிட வயதில் மூத்த பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துதல், குருவிற்கு மாணவர்கள் பணிவிடை செய்து, தங்களின் அறிவை வளர்த்தல். அரசர்கள் அறிவில் சிறந்த புலவர்கள், சான்றோர்கள் கூறும் நல்லுரை களுக்கு மதிப்பளித்து அரசாட்சி செய்தல் போன்ற நல்ல விஷயங்களைக் கடைப்பிடித்து வந்தனர்.

ஆடை ஆபரணங்கள் நம் பண்பாட்டை விளக்கும் விதமாக அமைந்திருந்தன. நம் நாடு விருந்தோம்பலில் தலைசிறந்து விளங்கியதை இலக்கியங்கள் மூலம் அறியலாம்.



PROOF COPY
www.tnpscjob.com

கரிகாற்சோழன் தன் இல்லத்திற்கு வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்து அவர்கள் செல்லும்போது மன்னனும் ஏழடி தூரம் நடந்து சென்று வழியனுப்பிய நிகழ்வை படிக்கும்போது விருந்தோம்பலின் சிறப்பு என்ன?

பகைவரிடம் கூட அன்பு பாராட்டியவர்கள் நம் முன்னோர்கள். பொருள் உள்ள வர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவி வாழ்ந்தனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதற்கேற்ப அனைவரும் தம் உறவினர் என்ற நோக்கத்தோடு வாழ்ந்தவர்கள் தமிழர்கள்.

இல்லறத்திலும் தன் குடும்ப நிலைக்கு ஏற்ப பெண்கள் குடும்பம் நடத்திய நிகழ்வை நற்றிணை பாடல் உணர்த்துகிறது. நம் முன்னோர்களின் பண்பாட்டைப் பற்றி புறநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம்.

**பகுத்தறிவு:** பகுத்தறிவு என்பது நன்று எது? தீது எது? என்று பகுத்து அறிவ தாகும். நம் நாட்டில் பகுத்தறிவாளர்கள் பலர் தோன்றி மக்களுக்கு நன்மையைத் தரும் அறக் கருத்துகளைக் கூறியுள்ளார்கள்.

பெரியார் ஒரு பகுத்தறிவாளர். அவர் தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பெண் கல்வி என்று பல கருத்துகளை மக்களுக்கு எடுத்துக்கூறி போராடியவர். மூடப் பழக்கவழக்கங்களைச் சாடியவர் தந்தை பெரியார்.

சாதியே இல்லை. கடவுளால் படைக்கப்பட்ட அனைவரும் ஒன்றே. மனிதனால் உருவாக்கப்பட்ட சாதியைத் தகர்த்திடுவோம். பெண்கள் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் பெண் சுதந்திரம் பெற வேண்டும் என்று விரும்பியவர் பாரதியார்.

பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும். பெண்கள் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டும்.

வள்ளலார் அவர்களும் புல், பூண்டு போன்ற உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என கருணை உள்ளம் கொண்டவர்.

நம் நாட்டில் இத்தகைய எண்ணற்ற பெரியோர்களைப் பெற்ற நாம் அவர்கள் கூறிய அறக் கருத்துகளைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும்.

**முடிவுரை:** தமிழர்களின் பண்பாட்டை நாம் போற்றி பாதுகாத்தல் வேண்டும். நம் முன்னோர்கள் வழங்கிய சங்க இலக்கிய நூல்கள், வள்ளுவன் தந்த குறளின் வரிகளையும் பொக்கிசமாகக் கருதி அதைக் கற்று குறள் வழி நடப்போம்.

"தமிழ் மொழி வாழ்க; தமிழர் வளர்க!"

## இயல் - 6
## பா இயற்றப் பழகலாம்

**I. இலக்கணத் தேர்ச்சி கொள்:**

**1. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவையாவன?**

ஆசிரியப்பா நான்கு வகைப்படும். அவை நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில

PROOF COPY



www.tnpscjob.com

ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகியவை ஆகும்.

2. **ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?**

ஆசிரியப்பாவிற்குரிய சீர், இயற்சீர்.
ஆசிரியப்பாவிற்குரிய தளை, ஆசிரியத்தளை.
(நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை)

3. **அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களின் வகைகளையும் அவை இயற்றுவதற்கான விதிகளையும் கூறுக.**

சீர் அமைப்பை வைத்து அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பல்வேறு வகையாக எழுதப்படுகிறது.

- ஓரடியுள் அரை அடிக்கு ஒரு விளச்சீரும் இருமாச்சீர் வருவனவும்.
- ஓரடியுள் அரை அடிக்கு இரு மாச்சீரும் ஒரு காய்ச்சீர் வருவனவும்.
- ஓரடியுள் நான்கு காய்ச்சீரும் இரு மாச்சீர் வருவனவும் உண்டு.

இயற்றுவதற்கான விதி: கழிநெடிலடிகள் (ஆறு சீர்கள்) நான்கு கொண்டதாக அமைந்து, நான்கடியும் அளவொத்து வர வேண்டும். முதல் சீரிலும் நான்காம் சீரிலும் மோனை அமைத்தும் முதற்சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமைத்தும் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் எழுதலாம்.

4. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ. நேரிசை ஆசிரியப்பா | - | முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும் **(ஆ)** |
| ஆ. இணைக்குறள் ஆசிரியப்பா | - | அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது வரும் **(ஈ)** |
| இ. நிலைமண்டில ஆசிரியப்பா | - | இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும் **(அ)** |
| ஈ. அடிமறிமண்டில ஆசிரியப்பா | - | எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும் **(இ)** |

5. **கவிதைப் பயிற்சி - 1**

மண்ணுக் கழகு மரமாகும்
　மரத்திற் கழகு கிளையாகும்
கண்ணுக் கழகு மையாகும்
　கவிதைக் கழகு பொய்யாகும்
விண்ணுக் கழகு நிலவாகும்
　வீதிக் கழகு வீடாகும்
எண்ணுக் கழகு மதிப்பாகும்
　எழுத்துக் கழகு கருத்தாகும்

**கவிதைப் பயிற்சி - 2**

நாட்டுக் கழகு வளமை
　மனிதனுக் கழகு பண்பு
வீட்டுக் கழகு பெண்கள்
　பெண்கட் கழகு பிள்ளை
காட்டுக் கழகு ஆறு
　மலைக் கழகு உயரம்
ஏட்டுக் கழகு கருத்து
　கவிதைக் கழகு சொல்லாம்

PROOF COPY



www.tnpscjob.com

II. **பலவுள் தெரிக.**

1. **உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு.**

அ. உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி

ஆ. வினைத்தொகை, இடவாகுபெயர்

இ. வினையெச்சம், வினைத்தொகை

ஈ. பெயரெச்சம், பண்புத்தொகை

**விடை: அ. உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி**

4. **சரியானதைத் தேர்ந்தெடுக்க:**

அ. வரை மலை, ஆ. வதுவை திருமணம், இ. வாரணம் யானை, ஈ. புடவி கடல். **விடை: அ, ஆ, இ - சரி; ஈ - தவறு.**

5. **நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது:**

அ. காய் முன் நேர் ஆ. காய் முன் நிரை

இ. கனி முன் நிரை ஈ. மா முன் நேர்

**விடை: மா முன் நேர்**

III. **குறுவினா:**

1. **நெருங்கின, இரங்கி - உறுப்பிலக்கணம் தருக.**

| **நெருங்கின** | **இரங்கு** |
|---|---|
| நெருங்கு + இன் + அ | இரங்கு + இ |
| நெருங்கு - பகுதி | இரங்கு - பகுதி |
| இன் - இறந்தகால இடைநிலை | இ - வினையெச்ச விகுதி |
| அ - பெயரெச்ச விகுதி | |

5. **ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் மாச்சீர், விளச்சீர்.

IV. **சிறுவினா:**

6. **ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.**

1. அகவலோசைக் கொண்டது.
2. எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் (அளவடி) பெற்று வரும்.
3. இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.
4. ஆசிரியத்தளை மிகுந்தும் பிறதளை கலந்தும் வரும்.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. **அன்று, அல்ல என்பவற்றுக்கான பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

**அன்று** - சென்னைக்கு அருகில் இருப்பது கன்னியாகுமரி அன்று.

**அல்ல** - நான் அவன் அல்ல.

2. **சொல்லச்சொல்ல, திளைப்பர் - இலக்கணக் குறிப்பு தருக.**

சொல்லச்சொல்ல - அடுக்குத்தொடர். திளைப்பர் - வினையாலணையும் பெயர்.



PROOF COPY

www.tnpscjob.com

**3. ரசிகர் - தமிழ்ச்சொல் எழுதுக. மாநில மேலவை - ஆங்கில கலைச்சொல் தருக.**

ரசிகர் - விசிறி. மாநில மேலவை - **Lok Sabha**

**4. வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார் - விடைக்கேற்ற வினா அமைக்க.**

**விடை:** டி.கே.சி எதை விரும்பினார்?

**5. மேலவை, புத்துணர்வு - இச்சொற்களின் புணர்ச்சி வகையைக் கண்டறிக.**

மேலவை - மேல் + அவை: மெய்யீற்றுப் புணர்ச்சி.

புத்துணர்வு - பண்புப் பெயர் புணர்ச்சி.

**6. கீழ்க்காணும் பாடலின் முதலடியைக் கவனித்து, பிற அடிகளில் உள்ள சீர்களை ஒழுங்கு செய்க.**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
    குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
    உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
    மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
    ஆடுகின்ற அரசேஎன் அலங்கலணிந் தருளே.

**7. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுது.**

பொருள் இலக்கணம் இரண்டு வகைப்படும். அவை அகப்பொருள், புறப்பொருள். அகப்பொருள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. முதற்பொருளை நிலம், பொழுது என இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர். பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டு வகைப்படும்.

**8. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எலியும் நுழையும், எழிலரசி கையும் நுழையும். **விடை: வளை**
2. அடிக்கவும் செய்யலாம், கோடைக்கு கூழாக குடிக்கவும் செய்யலாம். **விடை: கம்பு**
3. கண்ணிலும் எழுதலாம், வெண் தாளிலும் எழுதலாம். **விடை: மை**
4. அறிவின் பெயரும் அதுதான், அம்புலியின் பெயரும் அதுவேதான். **விடை: மதி**
5. பூவின் உறுப்பும் நானே, புன்னகையின் பிறப்பிடமும் நானே. **விடை: இதழ்**
6. வண்டியையும் இயக்கும், பெரும் கப்பலையும் தாங்கும். **விடை: ஆழி**

PROOF COPY



www.tnpscjob.com

## இயல் - 7
## கலைச்சொல்லாக்கம்

**I. விடையளி:**

**1. கலைச்சொல்லாக்கம் பொருள் தருக.**

கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவை யானவிடத்துப் புதிதாக சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

**2. கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?**

**கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள்:**

- ஆக்கம் பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.
- பொருள் பொருத்தமுடையதாக அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.
- வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.
- ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும்.
- தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக்கூடாது.

**3. பின்வரும் ஆங்கில் சொற்களுக்கு இணையான தமிழ்க்கலைச் சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| Personalit | - ஆளுமை | | |
| Emotion | - உணர்ச்சிவசப்படுதல் | Straw | - உறிஞ்சு குழல் |
| Plastic | - நெகிழி | Mass drill | - அணிவகுப்பு |
| Escalator | - நகரும் படிப்பாதை | Horticulture | - தோட்டக்கலை |
| Apartment | - அடுக்குமாடி குடியிருப்பு | Average | - சாரசரி |

**4. Ship எனும் ஆங்கில் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக?**

கலம், நாவாய்

**5. உலக அளவில் கணித சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் தமிழில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வா. செ. குழந்தைசாமி கூறுகிறார்?**

உலக அளவிலான கணிதச் சூத்திரங்கள் $\Sigma\sqrt{A}=\Pi r^2$

வேதியியல் குறியீடுகள் $H_2O$, ca

**II. பலவுள் தெரிக.**

**5. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயின்வரின் இரட்டும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்தசொல்.**

அ. மூதூர் ஆ. வெற்றிடம் இ. நல்லாடை ஈ. பைந்தளிர்

**விடை: இ. நல்லாடை**

PROOF COPY



www.tnpscjob.com

III. குறுவினா

3. அயர்ந்த, எழுந்த- பகுபத உறுப்பிலக்கணம் தருக.

| அயர்ந்த | எழுந்த |
|---|---|
| அயர்+த் (ந்)+த்+அ<br>அயர் - பகுதி<br>த் - சந்தி ந்ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்சவிகுதி | எழு+த்(ந்)+த்+அ<br>எழு - பகுதி<br>த் - சந்தி (ந்) ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி |

4. தொடர் அமைத்து எழுதுக.

**அன்றொரு நாள்:** அன்றொரு நாள் என் நண்பன் எனக்கு திருக்குறள் புத்தகம் பரிசளித்தான்.

**நிழலிலிருந்து:** நம் முன்னோர்கள் நிழலிலிருந்து நேரத்தைக் கணக்கிட்டார்கள்.

IV. சிறுவினா:

2. கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?

| கலைச்சொல்லாக்கம் | அகராதி |
|---|---|
| கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழி சொற்களுக்குத் தாய்மொழியின் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையான விடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும். | அகராதி என்பது பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம். |

**மொழியை ஆள்வோம்:**

V. விடையளி:

1. தமிழ்ச்சொல்லாக்குக: (சன்மார்க்கம், வித்துவ பால சபை)

சன்மார்க்கம் - நன்னெறி, மெய்நெறி

வித்துவ பால சபை -

2. நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்தவர் சங்கரதாசு சுவாமிகள். அடிக் கோடிட்ட வினையாலணையும் பெயரை வினைமுற்றாக்கித் தொடரை எழுதுக.

சங்கரதாசு சுவாமிகள் நாடகத்தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்தவர்.



PROOF COPY

www.tnpscjob.com

3. **ஈட்டினார்- பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
ஈட்டு+இன்+ஆர்: ஈட்டு - பகுதி. இன் - இறந்தகால இடைநிலை.
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.
4. **தன்னன்ன தானேன தன்னானே- இந்தச் சந்தத்தில் பொருள் பொதிந்த இரண்டு அடிகள் கொண்ட பாடல் எழுதுக.**
தமிழன் என்ற பண்போடு
தலைநிமிர்ந்து வாழ்வாய் அன்போடு.
5. **தமிழ் நாடகத் தலைமையாசிரியர்- சிறப்புப் பெயருக்கான காரணத்தை அளிக்க.**
சங்கரதாசர் சுவாமிகள் நாடகக்குழுவை உருவாக்கி எஸ்.ஜி. கிட்டப்பா, டி.கே.எஸ் சகோதரர்கள் போன்றவர்களை உருவாக்கினார். மேலும் நாடகத்தின் மூலம் மக்களுக்கு அறவொழுக்கத்தையும் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவை மிகுந்த பாடல், உரைநடை வழியே உணர்த்தியதால் நாடகத் துறைக் கலைஞர்கள் இவரை தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றுகின்றனர்.

**VI. தொடர் மாற்றம்:**
1. **மூன்று நாள்கள் கல்லூரிககு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்கு சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத் தொடராக மாற்று)**
மூன்று நாள் கல்லூரி விடுமுறையில் மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலுக்குச் சென்று சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.
2. **தஞ்சைக் கோயில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப் பாணியாகும். (வினாத் தொடராக்கு)**
தஞ்சைக் கோயில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணி கோவிலா?
3. **என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சிற்பக்கலை. (செய்தித் தொடராக்கு)**
மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சிற்பக்கலை சிறப்பு வாய்ந்தது.
4. **நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன். (பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்று).**
நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்லாமல் இல்லை.

**விடுபட்ட இடத்தில் அடுத்த வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**
1. தனிமொழி - அறிவு, **<u>தொடர்மொழி</u>** - வண்ணமயில்
பொது மொழி - **<u>பலகை</u>**
2. கார்காலம் - ஆவணி, **<u>புரட்டாசி</u>**
குளிர்காலம் - ஐப்பசி, **<u>கார்த்திகை</u>**
**<u>முன்பனி</u>** - மார்கழி, தை



www.tnpscjob.com

3. எழுத்து, சொல், **பொருள்**, யாப்பு, அணி

4. எழுத்து, **அசை**, சீர், தளை, அடி, தொடை

5. சேரன் - வில், சோழன் - **புலி**, பாண்டியன் - மீன்

## இயல் - 8
## ஆக்கப் பெயர்கள்

**I. இலக்கணத் தேர்ச்சி கொள்.**

**பயிற்சி-1**

**1. கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்து எழுதுக.**

1. ஆணையாளர்
2. அழைப்பாளர்
3. உரையாற்றினார்
4. கூட்டாளி
5. உதவியாள்
6. மேலாளர்
7. முதலாளி

**பயிற்சி-2**

**2. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.**

1. வேவு பாத்திடுவான்; ஓசையின்றி சென்றிடுவான் (ஆளி)
   **உளவாளி**
2. அறிவைத் தேடிப் போகுமிடம் உலகம் அறிய உதவுமிடம் (அகம்)
   **நூலகம்**
3. வந்தால் மகிழ்ச்சி இது உழைத்தால் கிடைக்கும் (மானம்)
   **சன்மானம்**
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி பட்டம் வாங்கினவன்? (தாரி)
   **பட்டதாரி**
5. அளந்து அளந்து கொட்டிடுவான் அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்)

**பலவுள் தெரிக.**

**5. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள். இவ்வரியில் உள்ள சொற் பிழைகளின் திருத்தம்.**

அ. அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில்

ஆ. அடையாறு பாலத்தின் சுவரில்

இ. அடையாறு பாலத்தின் சுவற்றில்

ஈ. அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

**விடை: ஆ. அடையாறுப் பாலத்தின் சுவரில்**

**5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.**

அ. காவலாளி ஆ. மேலாளர் இ. உதவியாளர் ஈ. ஆசிரியர்

**விடை: ஈ) ஆசிரியர்**



PROOF COPY
www.tnpscjob.com

**II. குறுவினா:**

**4. அலைகடல், புதுக்கியவர் - இலக்கணக் குறிப்பு தருக.**

அலைகடல் - வினைத்தொகை

புதுக்கியவர் - வினையாலணையும் பெயர்

**III. சிறுவினா:**

**3. பெருங்காடு, உழுதுழுது- பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

**பெருங்காடு** - பெருமை+காடு - ஈறுபோதல்

பெரு+காடு - இனமிகல் என்னும் விதிப்படி பெருங்காடு என புணர்ந்தது.

**உழுதுழுது** - உழுது+உழுது - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் உழுத்+உழுதுய்உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி உழுதுழுது எனப் புணர்ந்தது.

**5. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன- ஏன்?**

ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளதால் நம் மொழிக்குப் புதிய புதிய சொற்களை உருவாக்குவதோடு நில்லாமல் மொழி காலந்தோறும் வளர்வதற்கு துணை நிற்கின்றன.

## இயல் - 9
## நிறுத்தக்குறிகள்

**I. இலக்கணத் தேர்ச்சி கொள்**

**1. நிறுத்தக்குறிகளின் பயன்களைக் கூறுக.**

நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்திப் படிக்க முயலும் போது தெளிவாகப் பொருள் உணர்ந்து, படிப்பவர்களும் கேட்பவர்களும் பயன்பெறுவர்.

நிறுத்தக்குறிகளை இடாமல் எழுதுவதோ இடம் மாற்றி இக்குறிகளை இடுவதோ தொடரின் பொருளையே மாற்றிவிடும். சிலவேளைகளில் முற்றிலும் பிழையான பொருளைத் தந்துவிடும். எனவே நிறுத்தக்குறிகள் மொழியைத் தெளிவாகப் பேசவும் எழுதவும் துணை நிற்கின்றன.

**2. முற்றுப்புள்ளி வரும் இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

தலைப்பின் இறுதி, தொடரின் இறுதி, முகவரி இறுதி, சொற்குறுக்கம், நாள் முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி வருதல் வேண்டும்.

**3. விளிக்குறி, வியப்புக்குறி வரும் இடங்களை வேறுபடுத்துக.**

| **விளிக்குறி** | **வியப்புக்குறி** |
| --- | --- |
| விளிக்குறி அண்மையில் இருப்பாரை அழைப்பதற்கும், தொலைவில் இருப்பாரை அழைப்பதற்கும் வருதல் வேண்டும். | வியப்புக்குறி வியப்பிடைச் சொல்லுக்குப் பின்பும் நேர்கூற்று வியப்புத் தொடர் இறுதியிலும் அடுக்குச் சொற்களின் பின்னும் வரும். |



PROOF COPY
www.tnpscjob.com

4. **சிலப்பதிகாரத்தைப் படித்தேன் வியந்தேன் மகிழ்ந்தேன்.**
**இத்தொடர்க்குரிய நிறுத்தகுறிகளைத் தகுந்த இடங்களில் இட்டு எழுதுக.**
சிலப்பதிகாரத்தைப் படித்தேன், வியந்தேன், மகிழ்ந்தேன்.
**பலவுள் தெரிக.**

5. **கொள் என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.**
அ. கொள் ஆ. கொள்ளுதல் இ. கொள்ளும் ஈ. கொள்வோன்
**விடை: ஈ. கொள்வோன்**

II. **குறுவினா:**

2. **தருக - பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**
தா(தரு)+க - தா - பகுதி. தரு - என்றானது விகாரம்.
க - வியங்கோல் வினைமுற்று பகுதி.

5. **முக்காற்புள்ளி இடம்பெற வேண்டிய இடத்தினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**
சிறுதலைப்பு, நூற்பகுதி எண், பெருங்கூட்டத்தொடர் முதலிய இடங்களில் முக்காற்புள்ளி வருதல் வேண்டும்.
**(எ-டு)** சார்பெழுத்து:
பத்துப்பாட்டு 2: 246
எட்டுத்தொகை என்பன வருமாறு:

III. **சிறுவினா:**

5. **நிறுத்தக்குறிகளின் வகைகளையும், அவை எங்கெங்கு இடம் பெறுதல் வேண்டும் என்பதையும் தொகுத்து எழுது.**
**நிறுத்தக்குறிகளின் வகைகள்:** காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, விளிக்குறி, மேற்கொள் குறி (ஒற்றை மேற்கோள், இரட்டை மேற்கோள்)
**காற்புள்ளி பொருளைத் தனித்தனியாக குறிப்பிடும் இடங்கள்:** எச்சச் சொற்றொடர்கள், எடுத்துக்காட்டுகள், இணைப்புச் சொற்கள், திருமுகவிளி, இணைமொழிகள் முதலிய இடங்களில் வரும்.
**அரைப்புள்ளி:** தொடர்நிலைத் தொடர்களிலும் ஒரு சொல்லுக்கு வேறுபட்ட பொருள் கூறும் இடங்களில் அரைப்புள்ளி வருதல் வேண்டும்.
**முக்காற்புள்ளி:** சிறுதலைப்பு, நூற்பகுதி எண், பெருங்கூட்டத்தொடர் முதலிய இடங்களில் முக்காற்புள்ளி வருதல் வேண்டும்.
**முற்றுப்புள்ளி:** தலைப்பின் இறுதி, தொடரின் இறுதி, முகவரி இறுதி, சொற் குறுக்கம், நாள் முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி வருதல் வேண்டும்.
**வினாக்குறி:** ஒரு வினாத்தொடர், முற்றுதொடராகவும் நேர்க்கூற்றுத் தொடராகவும் இருப்பின் இறுதியில் வினாக்குறி வருதல் வேண்டும்.
**வியப்புக்குறி:** வியப்புக்குறி, வியப்பிடைச் சொல்லுக்குப் பின்பும் நேர்கூற்று

PROOF COPY



www.tnpscjob.com

வியப்புத்தொடர் இறுதியிலும் அடுக்குச் சொற்களின் பின்னும் வியப்புக்குறி வருதல் வேண்டும்.

**விளிக்குறி:** அண்மையில் இருப்பாரை அழைப்பதற்கும் தொலைவில் இருப்பாரை அழைப்பதற்கும் விளிக்குறி வருதல் வேண்டும்.

**மேற்கோள்குறி:** ஒற்றை மேற்கோள் குறி.

ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறிக்கும் இடம், கட்டுரைப் பெயர், நூற்பெயர் குறிக்கும் இடம், பிறர் கூற்றுப்பகுதிகள் முதலான இடங்களில் ஒற்றைக்குறி வருதல் வேண்டும்.

**இரட்டை மேற்கோள் குறி:** நேர்கூற்றுகளிலும், மேற்கோள்களிலும் இரட்டைக் குறி வருதல் வேண்டும்.

**IV. மொழியை ஆள்வோம். விடையளி:**

**1. அருட்பெருஞ்சோதி - பிரித்து எழுதுக.**

அருள்+பெரும்+சோதி

**2. கூடா, கூடாது - பொருள் வேறுபாடு தருக.**

கூடா - பொருந்தாத. **எ-டு:** கூடா நட்பு கேடாய் முடியும்.

கூடாது - வேண்டாம். **எ-டு:** தெய்வங்கள் பெயரால் உயிர்ப்பலி வேண்டாம்.

**3. சத்தியம், தருமம் - இணையான தமிழ்ச்சொல் தருக.**

சத்தியம் - வாய்மை. தருமம் - அறம்.

**4. விரும்பினார் - இவ்வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்று.**

விரும்பியவர்

**5. உங்களைக் கவர்ந்த வள்ளலாரின் கருத்து ஒன்றை குறிப்பிடுக.**

எவ்வுயிரையும் தம் உயிர்போல எண்ணி ஒழும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**6. தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.**

மொழியே மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். மொழிவளம் பெறுவதும், வறுமையுறுவதும் அம்மொழி பேசும் மக்களின் மனவளத்தை ஒட்டியன. உலகில் எண்ணற்ற மொழிகள் தோன்றின, வளர்ந்தன. காலப் போக்கில் பல அழிந்தொழிந்தன. சிலவே இன்றளவும் நிலைத்து வாழும் பேற்றினைப் பெற்றிருக்கின்றன. அம்மொழிகளுள்ளும் தமிழ், சீனம் போன்ற ஒரு சில மொழிகளே பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் பயின்று வருகின்றன. வடமொழி, கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய வரலாற்றுப் பழைமை வாய்ந்த மொழிகள் பேச்சு வழக்கு இழந்து மொழிளவில் நின்றுவிட்டன. எனவே தான் பேராசிரியர் சுந்தரனார்,

உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே! என்றார்.



PROOF COPY
www.tnpscjob.com

1. இலக்கியம் படித்தலின் அறிமுகம் ஹட்சன்: **(பக்கம்:10)**
2. மொழிக்கல்வி விட்னி: **(பக்கம்:139)**
3. **கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்திப் புதிய புதிய தொடர்களை உருவாக்குக.**

**விடை:** 1. யாழினி சென்னை சென்றாள்.
2. நான் கல்லூரி சென்றேன்.
3. சித்தர்கள் சித்தமருத்துவம் கண்டறிந்தனர்.
4. நான் கவிதை எழுதினேன்.

4. **அந்தாதித் தொடையின் அடிப்படையில் அடிகளை ஒழுங்குப்படுத்துக**

உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை ஆசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்.

V. **மொழியை ஆள்வோம்**

1. **மறந்ததும் மறைந்ததும் - இதுபோன்ற இரண்டு தொடர்களை உருவாக்குக.**

**(எ-கா)** படித்ததும் படைத்ததும்
1. கிடந்ததும், கிடைத்ததும்
2. மறந்ததும், மறைந்ததும்

2. **அழிந்த வரலாறு, புதிய வெளிச்சம் - அடிக்கோடிட்ட சொற்களின் எச்ச வகைகளை எழுதுக.**

அழிந்த - பெயரெச்சம். புதிய - பெயரெச்சம்.

3. **அழியாச் சிறப்பிடம் - இலக்கணக் குறிப்புத் தருக.**

ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்.

4. **முதலிய, முதலான - பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.**

**முதலிய:** திரிகூடராசப்பக் கவிராயர் குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி முதலிய நூல்களை இயற்றியிருக்கின்றார்.

**முதலான:** திருவள்ளுவருக்கு நாயனார், தேவர், தெய்வப்புலவர் முதலான பல பெயர்கள் உண்டு.

5. **பத்தியில் உள்ள உயர்வு சிறப்பு உம்மையைக் கண்டு எழுதுக.**

போற்றும்

VI. **மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக**

1. **சொந்தக்காலில் நிற்றல்:** நாம் நம் வாழ்க்கையில் பிறர் உதவியை எதிர்பாராமல் சொந்தக்காலில் நிற்றல் வேண்டும்.
2. **தாளம் போடுதல்:** உரிய வயதில் படிக்காததால் இராமு எந்த வேலையும் இல்லாமல் சோற்றுக்குத் தாளம் போடுகிறான்.

PROOF COPY



www.tnpscjob.com

3. **மதில் மேல் பூனை:** நான் எதிர்கால இலக்கைப் பற்றி சரியான முடிவெடுக்க முடியாமல் மதில் மேல் பூனையாக உள்ளேன்.
4. **நிறைகுடம்:** அமுதா நிறைகுடமாக எப்போதும் அமைதியாக இருப்பாள்.
5. **கைதூக்கிவிடுதல்:** கல்வி இல்லாதவர்களுக்குச் சிறந்த கல்வியைக் கொடுத்து நாம் கைதூக்கிவிடுதல் வேண்டும்.
6. **கண்ணாயிருத்தல்:** நாம் எப்பொழுதும் நம் செயலில் கண்ணாயிருத்தல் வேண்டும்.
7. **அவசரக்குடுக்கை:** வகுப்பில் ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கு அவசரக்குடுக்கையாக பதிலளித்தால் தவறாகிவிடும்.
8. **முதலைக்கண்ணீர்:** இராமனுடையப் பொருளை தான் எடுக்கவில்லை என்று கூறி சோமு முதலைக்கண்ணீர் விட்டான்.
9. **கானல் நீர்:** தேர்தல் நேரங்களில் அரசியல்வாதிகள் கூறும் வாக்குறுதிகள் அனைத்தும் கானல் நீராயின.

**VII. வரைபடம் கொண்டு விவரிக்க.**

பேருந்து நிறுத்தத்தில் இருந்து நேராகச் சென்றால் மேலைத்தேர்த்தெரு வரும். அதில் வலதுபுறமாக சிறிது தூரம் சென்றவுடன் சாலையின் இடது புறத்தில் காந்தி சதுக்கம் வரும். அதை ஒட்டி இடதுபுறம் திரும்பினால் அறம் வளர்த்த மாடத்தெரு. அதில் நேராகச் சென்றால் கீழைத்தேர்த் தெருவைச் சென்று சந்திக்கும். அந்த இடத்தின் எதிர்ப்புறத்தில் நகலகம் உள்ளது.

## இயல் - 10

## மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்

**I. விடையளி: இலக்கணத் தேர்ச்சி கொள்க.**

**1. திருத்தக் குறியீடுகளின் வகைகளைத் கூறுக.**

1. பொதுவானவை (General)
2. நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை (Punctuations)
3. இடைவெளி தர வேண்டியவை (Spacing)
4. இணைக்க வேண்டியவை (Alignment)
5. எழுத்து வடிவம் (Type/ Font)

**2. பலவுள் தெரிக:**

**சொற்களை ஒழுங்குப்படுத்திச் சொற்றொடராக்கு:**

**பதில்:** இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

**3. மொழியை ஆள்வோம்:**

1. **பொறுமையைப் பூணுங்கள்: பொறுமையின் ஆற்றலை உணருங்கள், உணர்ந்து உலகை நோக்குங்கள். (ஒரே தொடராக மாற்றுக)**



PROOF COPY

www.tnpscjob.com

**பதில்:** பொறுமையைப் பூண்டு ஆற்றலை உணர்ந்து உலகை நோக்குங்கள்.

2. **எவையேனும் இரண்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுச் சொற்களைப் பத்தியிலிருந்து எடுத்து எழுதுக. ()**

3. **தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க அழைக்கப்படுகிறார்.**
   **(இத்தொடரை செய்வினைத் தொடராக மாற்றுக)**
   **பதில்:** திரு.வி.கவைத் தமிழ்த்தென்றல் என்று அழைத்தனர்.

4. **ஞாயிற்றொளி - புணர்ச்சி விதி கூறுக.**
   ஞாயிற்றொளி - ஞாயிறு + ஒளி
   உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - ஞாயிற் + ஒளி.
   தன்னொற்றிரட்டல் - ஞாயிற்ற் + ஒளி
   உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - ஞாயிற்றொளி.

5. **எண்ணும்மைத் தொடர்கள் இரண்டனை எடுத்து எழுது.**
   **பதில்:** 1. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
   2. இந்தியாவும் விடுதலையும்

**பயிற்சி: 3**

1. **ஒவ்வோரடியிலும் முதலிரு சீர்கள் ஈரசையாகவும் இறுதிச்சீர் நேரீற்று மூவகைச் சீராகவும் அமைத்துப் பாடிடுக.**

| | | |
|---|---|---|
| வாழ்க | வாழ்க | வண்டமிழர் |
| வெல்க | வெல்க | கொடும்பகையை |
| செல்க | செல்க | சீரங்கத்தை |
| கொள்க | கொள்க | கொழுந்தமிழை |
| காண்க | காண்க | கடவுளரை |
| சேர்க | சேர்க | சொர்க்கமதை |

2. **எண்ணங்களை எழுத்தாக்குக.**
   **மருத நிலக் காட்சி (படம்: பக்கம் 195)**
   இயற்கையான சூழலில் ஆற்று நீரில் அமர்ந்து அங்கு துள்ளி விளையாடும் மீன்களைக் காணும் காட்சி நம் மனதைக் கவர்கின்றது. ஆற்றின் இரு கரையோரங்களிலும் செழித்து நீண்டு வளர்ந்து காணப்படும் மரங்களில் மலர்ந்து காணப்படும் பூக்களின் காட்சி நம் மனதை நெகிழ வைக்கிறது. இத்தகைய சூழலில் மீனவனொருவன் ஆற்றில் பாய்ந்தோடும் மீன்களைத் தூண்டில் போட்டு பிடித்துக் கொண்டிருக்கின்றான்.

3. **எண்ணங்களை எழுத்தாக்குக.**
   **குறிஞ்சி நிலத் தொழில் (படம்: பக்கம் 165)**
   குறிஞ்சி நிலம் என்பது மலை சார்ந்த பகுதி. இங்கு வாழும் மக்கள் தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், தினை விதைத்தல் போன்ற தொழில்களை



PROOF COPY
www.tnpscjob.com

மேற்கொள்கின்றனர். இக்காட்சியில் மலைகளில் உள்ள பாறை இடுக்குகளில் உள்ள மரங்களில் இருக்கின்ற மலர்களில் இருந்து தேனீக்கள் தேனைச் சேகரித்து தான் கட்டியுள்ள கூடுகளில் அந்தத் தேனைச் சேமிக்கின்றன. அவ்வாறு தேனீக்கள் சேகரித்த தேனை அங்குள்ள மக்கள் எடுப்பதற்காக பாறைகளின் மேற்புறத்தில் உள்ள மரங்களில் கயிற்றைக் கட்டி அந்த தேன்கூட்டைப் பக்குவமாக கீழே விழாமல் எடுத்து அதில் தேனைச் சேகரிக்கின்றன. மிக உயர்ந்த மலைப்பாறைகளின் இடுக்குகளில் இருந்து சேகரிக்கப்பட்ட மலைத்தேன் மிகச் சிறந்த மருத்துவ குணமுடையது.

**4. எண்ணங்களை எழுத்தாக்குக. (படம்: பக்கம் 48)**

மரவெட்டி ஒருவன் காட்டில் உள்ள அனைத்து மரங்களையும் வெட்டுகிறான். காலையிலிருந்து தொடர்ந்து வெட்டிக் கொண்டே இருந்ததால் அவன் மிகுந்த களைப்பு அடைந்தான். நண்பகல் வேளையின் போது சூரியனின் தாக்கம் அதிகமானதால் அவன் மிகவும் சோர்வடைந்தான். தன் சோர்வைப் போக்க சிறிது நேரம் நிழலில் அமர வேண்டும் என எண்ணுகிறான். தன்னைச் சுற்றி எங்காவது நிழல் இருக்கின்றதா என்று பார்க்கும்போது எல்லா மரங்களும் வெட்டப்பட்டு வெட்டவெளியாகக் காட்சியளித்தது. அவன் இறுதியாக தான் வெட்டிக் கொண்டிருந்த மரத்தின் ஒரு பகுதி வெட்டப்படாமல் இருந்தது. அந்த இடத்தில் சிறிது நிழல் இருந்தது. உடனே அந்த மரம் வெட்டி அந்த மரத்தின் நிழலில் அமர்ந்து தன் களைப்பைப் போக்கிக் கொள்கிறான். அப்பொழுதுதான் அவன் உணருகின்றான். மரங்களை எல்லாம் வெட்டினால் சூரியனின் தாக்கம் அதிகமாகி நாம் உயிர் வாழ்வது கடினம் என்று எண்ணுகிறான். இனி மரங்களை அழிக்கக்கூடாது என மனதில் உறுதி கொள்கிறான்.

**5. எண்ணங்களை எழுத்தாக்குக. (படம்: பக்கம் 137)**

தொழில்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பற்றி இக்காட்சி உணர்த்துகிறது. நம் நாடு இன்று கணினித் துறையில் அதீத முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. மருத்துவத் துறையில் புதிய புதிய கண்டுபிடிப்புகளைக் கொண்டு நோய்களைக் குணப்படுத்த முடிகின்றது. அன்று கால்நடையாகச் சென்ற மனிதன் வானூர்தியைக் கண்டு விண்வெளிக்குச் சென்று ஆராய்ச்சி செய்யும் திறமையைப் பெற்றுள்ளான். வேளாண் துறையில் புரட்சி செய்து உற்பத்தியைப் பெருக்கியுள்ளான். கணிதத் துறையில் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளான். கலைத்துறையில் அதாவது ஓவியம் வரைதல், நாட்டியம் ஆடுதல், உயர்ந்த கட்டடங்களை எழுப்புதல், கோவில் கட்டுதல் போன்றவற்றிலும் தனது புதிய திறமைகளைக் கொண்டு கலை நுணுக்கத்தோடு செயலாற்றும் திறமையைப் பெற்று மனிதன் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருக்கிறான்.



PROOF COPY

www.tnpscjob.com

**6. கீழுள்ள கட்டத்தினுள் நுழைந்து சொற்களை எடுத்து தேவையான சொற்களைச் சேர்த்தும் தொடரமைக்க. (அடைபட்ட பகுதியில் உள்ள சொற்களைத் தவிர்க்கவும்.)**

(i) மாணவர்கள் ஆசிரியரை வழிபடுதல் வேண்டும்.

(ii) காமராசர் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

(iii) மாணவர்கள் வாசிப்புத் திறனை வளர்த்தல் வேண்டும்.

(iv) பள்ளிக்கூடத்தில் விளையாடுதல் மூலம் உடல் உறுதிபெறும்.

(v) வகுப்பறையில் ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகோல் கொண்டு எழுதியோ, படங்களை வரைந்தோ பாடங்களை நடத்துதல் வேண்டும்.

(vi) நுண்கலைகளையையும் கூடுதல் நேரம் கற்று அதிக சிந்தனைகளை வளர்த்து வேலைவாய்ப்பைப் பெறுதல் வேண்டும்.

**7. குறுக்கெழுத்துப் புதிர் (படம்: பக்கம் 265)**

**இடமிருந்து வலம்:**

1. மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளைக் கூறும் துறை (9) - பொருண்மொழிக்காஞ்சி.

7. தேன் - மற்றொரு சொல் (4) - பிரசம்.

15. புல்லின் இதழ்கள் - நூலாசிரியர் (4) - விட்மன்.

16. கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் (4) - மன்றம்.

17. சி.சு.செல்லப்பா நடத்திய இதழ் (4) - எழுத்து.

19. ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பக்தி இலக்கியம் (6) - திருவாசகம்.

**வலமிருந்து இடம்:**

6. யானை - வேறொரு சொல் (5) - அஞ்சரம்.

9. வந்தவாசிக்கு அருகில் சமணப்பள்ளி இருந்த ஊர் (3) - வேடல்.

12. உமறுப்புலவரை ஆதரித்தவர் (5) - சீதக்காதி.

20. கவிஞர் மீரா நடத்திய பதிப்பகம் (4) - அன்னம்.

**மேலிருந்து கீழ்:**

2. புதுமைப்பித்தனின் புகழ்பெற்ற சிறுகதை (4) - காஞ்சனை.

3. பாரதி நடத்த விரும்பிய கருத்துப்பட இதழ் (6) - சித்திரவாளி.

4. இளையராஜா உருவாக்கிய இராகம் (5) - பஞ்சமுகி.

5. நற்றிணை 153 ஆவது பாடலை இயற்றியவர் (6) - தனிமகனார்.

6. அணுவைப்போல சிறந்து நிற்கும் ஆற்றல் (3) - அணிமா

12. இந்தச் சொல்லின் திரிபே சீறா (3) - சீறத்.

13. மகாபாரதத்தில் கொடை வீரன் (4) - கர்ணன்.

14. பாரதிதாசன் நடத்திய இதழ் (3) - குயில்.

PROOF COPY



www.tnpscjob.com

**கீழிருந்து மேல்:**

7. தவறு - வேறொரு சொல் (2) - பிழை.
8. தருமு, சிவராமு என்னும் புனைப் பெயரிலும் எழுதியவர் (4) - பிரமிள்.
9. மூங்கில் மற்றொரு சொல் (2) - வேய்.
10. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் (6) - திருவாதவூர்.
11. ஐங்குறுநூறு பாடும் மலர்களில் ஒன்று (2) - வேய் / கழை.
18. மலை என்னும் சொல்லாம் (2) - கிரி / வரை.

**8. எண்ணங்களை எழுத்தாக்குக. (படம்: பக்கம் 264)**

அஃறிணையிடத்தும் அன்பு செய். இக்காட்சியில் ஒரு குழந்தை நாயிடம் அன்பு செலுத்துகிறது. நாய்களை நாம் வீடுகளில் செல்லப் பிராணியாக வளர்க்கின்றோம். அதுவும் நம்மிடம் மிகுந்த அன்பும் நன்றி பாராட்டக்கூடிய விலங்கு. நாமும் விலங்குகளை துன்புறுத்தாமல் அன்பு செலுத்தினால் அதுவும் நம்மிடம் மிகுந்த நன்றி பாராட்டும் என்பதை இக்காட்சி உணர்த்துகிறது.

**9. தன்விவரக் குறிப்பு:**

**மெய்ப்புத்திருத்துநர் பணிக்கு விண்ணப்பம்**

**அனுப்புநர்**

பா.சங்கரன்,
53, தெற்கு மாட வீதி,
மதுரை.

**பெறுநர்**

திரு. முதன்மை ஆசிரியர் அவர்கள்,
தினமணி நாளிதழ் அலுவலகம்,
சென்னை.

**பொருள்:** தினமணி நாளிதழில் மெய்ப்புத்திருத்தும் பணி வேண்டி விண்ணப்பம்.

பெருமதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம்.

தினமணி நாளிதழில் மெய்ப்புத்திருத்தும் பணிக்குத் தகுதி வாய்ந்தவர்கள் தேவை என விளம்பரம் செய்திருந்தீர்கள். நான் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளேன். எனக்கு அந்த வேலை வாய்ப்பினைக் கொடுத்தால் கடமை தவறாமல் என் பணியினைச் செவ்வனே செய்வேன் என உறுதியளிக்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
பா.சங்கரன்

இடம்: மதுரை
நாள்: 25.05.2018

PROOF COPY



www.tnpscjob.com

**தன்விவரக்குறிப்பு**

| | |
|---|---|
| பெயர்: | பா.சங்கரன் |
| வயது: | 33 |
| பாலினம்: | ஆண் |
| பிறந்த தேதி: | 16.05.1985 |
| பெற்றோர்: | பாலசந்தர், சரஸ்வதி |
| முகவரி: | பாலசந்தர்,<br>53, தெற்கு மாட வீதி, மதுரை. |
| அலைபேசி எண்: | 96032 78001. |
| அறிந்த மொழிகள்: | ஆங்கிலம், இந்தி |
| எடை: | 55 கிலோ |
| உயரம்: | 154 |
| குருதி வகை: | O+ |
| கல்வித்தகுதி: | எம்.ஏ., தமிழ் |

**10. அறிவிப்புப் பதாகை**

**தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கு (படம்: பக்கம் 73)**

| | |
|---|---|
| **நடைபெறும் நாள்:** | ஜனவரி 13 |
| **இடம்:** | மதுரையில் உள்ள தெப்பக்குளம் அருகில்,<br>பாரதி கலைக்கூட அரங்கம். |
| **நடத்துபவர்:** | சமூக நல அமைப்பான “சிறகுகள் அமைப்பு” |
| **தலைப்பு:** | “பண்பாடுகளால் வாழும் தமிழர்” |
| **உரையாற்றுபவர்:** | சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி |
| **கலந்துரையாடலில் கலந்துகொள்பவர்கள்:** | பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள்,<br>சமூக ஆர்வலர்கள் |
| **பதிவாளர்:** | இனியன் |

**11. குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுதுக. (பக்கம் 111)**

(வீடு - மின்சாதனக் கருவி - கவனம் - ஈரக்கை - தவிர்த்தல் - தொலைக் காட்சி - அலைப்பேசி - இரவு - அணை - அதிகாலை - பள்ளிகள் - பொது விடங்கள் - திடல் - மின்கம்பம் - கவனம்)

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று எல்லா வீடுகளிலும் மின் சாதனக் கருவிகள் உள்ளன. மின்சாதனக் கருவிகள் இல்லாத வீடுகளைக் காண முடியாது. மின்விசிறி, அரவை இயந்திரம், குளிரூட்டும் பெட்டி போன்ற மின்சாதனக் கருவிகளைப் பயன்படுத்தும்போது அதிக கவனம் தேவை. ஈரக்கைகளைக் கொண்டு மின் பொருத்தியைத் தொடுவதைத் தவிர்த்தல்



PROOF COPY
www.tnpscjob.com

வேண்டும். இல்லையேல் உயிருக்கு உத்திரவாதம் இல்லை.

தொலைக்காட்சி, அலைப்பேசி போன்றவற்றை இரவு நேரங்களில் அணைத்து வைத்தல் வேண்டும்.

அதிகாலையில் பள்ளிக்கூடம், பொதுவிடங்கள், தெரு விளக்குகள், திடல் போன்ற இடங்களில் உள்ள மின் கம்பங்களில் எரியும் மின் விளக்குகளை அணைத்தல் வேண்டும். கவனத்துடன் மின்சாதனக் கருவிகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

PROOF COPY



www.tnpscjob.com

## உரைநடை உலகம்
## இயல் - 1
## பேச்சு மொழியும் கவிதை மொழியும் - இந்திரன்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கலைகளின் உச்சம் **கவிதை** என்பர்.
2. இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் **உத்தமம்** என்றும் அதுவே மானுடத்துக்கு **எழுத்தாளர்கள்** செய்யும் கடமை என்றும் கூறினார் **மகாகவி பாரதி.**
3. மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் **'உலகம்'** என்பதும் **'நான்'** என்பதும் தனித்தனியாகப் பிரிந்துவிட்டன.
4. மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்படும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்கின்ற என்று கூறியவர் **எர்னஸ்ட் காசிரர்.**
5. உலகத்தை இழையிழையாகப் பிரித்தும் வகுத்தும் தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்தும் கொடுத்தது **மொழி.**
6. பெயர்களுக்கு **கடந்தகாலம் நிகழ்காலம், எதிர்காலம்** ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியைக் கொடுத்தது மொழி.
7. **மொழி** வானினும் வலிமையானது.
8. மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின் மீது ஒரு **அதிகாரம்** வந்துவிடுவதை உணரலாம்.
9. உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற **தொண்டையிலிருந்து** சொற்கள் எழுகின்றன.
10. எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி **உணர்ச்சிக்கு** மிக அருகில் இருக்கிறது.
11. எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத்தானே பேசிக் கொள்கிற **பேச்சு.**
12. பேச்சு என்பது **மொழியில் நீந்துவது.**
13. நேரடிமொழி எனப்படும் **பேச்சுமொழிக்கு** ஒருபோதும் பழமை தட்டுவதில்லை.
14. மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்றவர் **மலையாளக்கவி ஆற்றூர் ரவிவர்மா.**
15. பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் **மேல்தோல்** போல் இயங்குகிறது.
16. கவிதை மரபான செய்யுள் தனது **சந்தத்தில்** இருந்து **விடுதலை** அடைந்துவிட்டது.
17. பேச்சுமொழியை கவிதையில் பயன்படுத்துபவர்களில் **மூன்று** வகையினர் உண்டு.
18. முதல் வகையினர் **வால்ட் விட்மனைப்** போன்றவர்கள்.
19. **கவிஞர் மல்லார்மே** போன்றவர்கள் இரண்டாம் வகையினர்.

PROOF COPY



www.tnpscjob.com

20. **குறியீடுகளின் கூட்டம்** ஒரு முனையிலும் மொழி மறுமுனையிலும் இருக்கையில் கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில் புழங்குகிறது.
21. குறியீட்டுக் கவிதை என்பது **பொருளைப்** பதிவு செய்வதன்று.
22. ஸ்டெஃபான் மல்லார்மே **பிரான்சு** நாட்டைச் சேர்ந்தவர்.
23. **ஆங்கில ஆசிரியராகப்** பணியாற்றியவர்.
24. ஸ்டெஃபான் மல்லார்மே என்பவரைப் புரிந்துகொள்வதன் மூலமே **குறியீட்டியத்தையும்** புரிந்துகொள்ள முடியும்.
25. ஸ்பானிஷ் மொழிக் கவிஞர் **பாப்லோ நெரூடா.**
26. பாப்லோ நெரூடா தென் அமெரிக்காவிலுள்ள **சிலி** நாட்டில் பிறந்தவர்.
27. பாப்லோ நெரூடா **இலத்தீன் அமெரிக்காவின்** மிகச்சிறந்த கவிஞர்.
28. பாப்லோ நெரூடா தன்னுடைய கவிதைகளுக்காக **1971** ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றவர்.
29. **கவிதை** என்பது ஒரு பொருளன்று.
30. கவிதை என்பது **படைப்புச் செயல்பாடு.**
31. கவிதை என்பதே **மொழிதான்.**
32. இந்திரனின் இயற்பெயர் **இராசேந்திரன்.**
33. இந்திரன் சிறந்த **கலை விமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர்** எனப் பன்முகத்தன்மை கொண்டவர்.
34. ஒரியமொழிக் கவிஞர் **மனோரமா பிஸ்வாஸ்.**
35. இந்திரன் **"பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்"** என்ற மொழி பெயர்ப்பு நூலுக்காக, 2011 ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமியின்** விருது பெற்றுள்ளார்.
36. இந்திரனின் கவிதைத் தொகுப்புகள் **முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள்.**
37. இந்திரனின் கட்டுரை நூல்கள் **தமிழ் அழகியல், நவீன ஓவியம்.**
38. இந்திரன் நடத்திய இதழ்கள் **வெளிச்சம், நுண்கலை** போன்றவை.

**II. குறு வினாக்கள்:**

1. **கவிதை என்பது யாது?** கலைகளின் உச்சம் கவிதை என்பர்.
2. **மகாகவி பாரதியின் கூற்று என்ன?**
   இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும், அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்பதும் கவிதை குறித்த மகாகவி பாரதியின் கூற்று ஆகும்.
3. **உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது எது?** உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது மொழி ஆகும்.
4. **உலகம் எப்போது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது?** மொழி என்ற ஒன்று தோன்றையவுடன்தான் உலகம் கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது.


PROOF COPY
http://kalviamuthu.blogspot.com
www.tnpscjob.com

**5. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பில் இருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

**6. சொற்கள் எங்கிருந்து எழுகின்றன?**

உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன.

**7. சொற்களின் பொருள் வேறுபாடுகளை எவ்வாரு உணரமுடியும்?**

சொற்களின் பொருள் வேறுபாடுகளை அவற்றின் ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றின் மூலம் உணர முடியும்.

**8. மொழி வெளிப்பாட்டின் பகுதிகள் எவை?**

கை, கால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் செயல்பாடுகள் மொழி வெளிப்பாட்டின் பகுதிகள் ஆகும்.

**9. மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மாவின் கூற்று யாது?**

மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மாவின் கூற்று 'மொழிதான் ஒரு கவிஞர் நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது' என்பதாகும்.

**10. வால்ட் விட்மன் - குறிப்பு வரைக.**

வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்தவர். கவிஞர்; இதழாளர்; கட்டுரையாளர்; புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர். இவருடைய 'புல்லின் இதழ்கள்' என்ற நூல் உலகப் புகழ் பெற்றது.

**11. குறியீட்டியத்தை எங்ஙனம் புரிந்துகொள்ள முடியும்?**

ஸ்டெஃபான் மல்லார்மே பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரைப் புரிந்துகொள்வதன் மூலமே குறியீட்டியத்தையும் புரிந்துகொள்ள முடியும்.

**12. குறியீட்டுக் கவிதை என்பது யாது?**

குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

**13. பாப்லோ நெரூடா - குறிப்பு வரைக.**

பாப்லோ நெரூடா தென் அமெரிக்காவில் உள்ள சிலி நாட்டில் பிறந்தவர். இலத்தின் அமெரிக்காவின் மிகச்சிறந்த கவிஞர். தன்னுடைய கவிதைகளுக்காக 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.

PROOF COPY



www.tnpscjob.com

**14. கவிதை குறித்து ஆசிரியர் இந்திரனின் கருத்து யாது?**

'கவிதை என்பது ஒரு பொருளன்று, அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள் மொழியையும் நுழைத்துவிடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு' என்பதே கவிதை குறித்த ஆசிரியர் இந்திரனின் கருத்து ஆகும்.

**III. சிறு வினாக்கள்:**

**1. 'என்னுயிர் தமிழ் மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.**

மொழி என்பது அறிமுகமாவதற்கு முன்னால் பொருட்களும் விலங்குகளும் பறவைகளும் வானும் நிலவும் சூரியனும் மரங்களும் செடிகளும் இருந்திருக்கவே இல்லை. மொழி உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது. 'மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்கின்றன' என்றார் எர்னஸ்ட் காசிரர். மொழி என்ற ஒன்று தோன்றியவுடந்தான் உலகம் கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது. உலகத்தை இழையிழையாகப் பிரித்தும் வகுத்தும் தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்தும் கொடுத்தது மொழி. மொழியின் சாவியைப் போட்டுத் திறக்கும்போது எல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பொருட்களுக்குப் பெயர் சூட்டப்பட்டது. பெயர்களுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி கொடுத்தது. அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்ப அவற்றை ஒருமையாகவும் பன்மையாகவும் அடுக்கும் திறனை மொழி வழங்கியது. இவையே 'என்னுயிர் தமிழ் என்பேன்' என்னும் தலைப்பில் நாங்கள் கொண்டுள்ள மொழிப்பற்று ஆகும்.

**2. கூற்று - குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.**

**கவிதை - கூண்டு திறந்தது**
**சிறகடிக்கவா?**
**இல்லை, சீட்டெடுக்க**

**கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

கவிஞர் மல்லார்மே இவர்களுடைய பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று. இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்கிறது. குறியீடுகளின் கூட்டம் ஒரு முனையிலும் மொழி மறுமுனையிலும்



PROOF COPY

www.tnpscjob.com

இருக்கையில் கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில் புழங்குகின்றது. இதன்படி ஆராய்ந்து பார்த்தால் கூற்றில் குறியீடு எனப்படுவது கவிதையில் 'சீட்டெடுக்க' என்னும் பொருளாக வந்துள்ளது.

**3. நேரடி மொழி என்பது யாது?**

எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத்தானே பேசிக் கொள்கிற பேச்சு. ஆனால் பேச்சு என்பது அப்படிப்பட்டதன்று. பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. உண்மையில் சொல்லப்போனால் பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின் போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல அமைக்கின்றனர். இதையே ஆர்கள் நேரடிமொழி எனக் கருதுகின்றனர்.

**4. மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளவை எவை?**

உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை ஏற்படுத்த முடியும் என்பதை உணரலாம். இது மட்டுமன்றி, கைகால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.

**IV. நெடுவினாக்கள்:**

**1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

**பெருங்கவிஞர்களின் வாய்மொழி:**

பேச்சுமொழியில் ஒரு கவிதைசெய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல் தோல் போல் இயங்குகிறது.

பேச்சுமொழியை கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உண்டு.

**முதல் வகையினர்,** வால்ட் விட்மனைப் போன்றவர்கள். இவர்களுடைய கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கியமானதாகி விடுவது இல்லை. எழுத்துகள் எப்படிச் சொற்களில் கரைந்து போகின்றனவோ அதுபோன்று சொற்கள் கவிதைகளில் கரைந்து போவதில்லை. இவற்றில் சொற்கள் தங்களுக்குத் தாங்களே பேசிக் கொள்வதில்லை. இக்கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்டகம்பிச் சுருளைப்

PROOF COPY



www.tnpscjob.com

போன்று அல்லாமல் பேச்சு மொழிக்கே உரிய தளர்வோடு கட்டப்பட்டவை. இதில் பல நேரங்களில் கவிதை என்பது நடனமாடிக் கொண்டிருப்பவன், அவ்வப்போது நடப்பதற்குத் தாவிவிடுவது போல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவிவிடும்.

கவிஞர் மல்லார்மே போன்றவர்கள் **இரண்டாம் வகையினர்**. இவர்களுடைய பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று. மின்சார ரயிலின் நெருக்கத்தில் படியில் தொங்கிக் கொண்டு போகிறபோது வெளியில் பரந்து கிடக்கும் தனிமையைச் சாட்சியாக வைத்துத் தங்களுக்குத் தாங்களே உதடு பிரித்துப் பேசிக் கொள்ளும் வகை. இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகின்றது. தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்கிறது. குறியீடுகளின் கூட்டம் ஒரு முனையிலும் மொழி மறுமுனையிலும் இருக்கையிக்ல் கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில் புழங்குகின்றது. குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

**மூன்றாவது வகையினர்** ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய பாப்லோ நெரூடா போன்றவர்கள். ஒரு கவிதை, ஒரு பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும், அஃது அப்பொருளைப் பற்றியது அன்று. அது வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறது. ஒரு வடிவம் கொள்ளுதல் என்பதை நோக்கி வாழ்க்கை தொடர்ந்து முயல்கிறபோதும் அது இந்த முயற்சியில் ஒருபோதும் வெற்றி கொள்வதில்லை. இதுபோன்ற கவிதை, எந்தவித முன்கூட்டிய திட்டமோ, ஒருமுழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவதுபோலக் காட்டி உடனே எதையும் சுட்டாமல் முடிந்து போகிறது. அறியப்பட்டிராததை நோக்கி நகர்கிஅ அதே நேரத்தில் நெரூடாவின் கவிதை விரிந்ததாகவும் மையத்தை நோக்கி நகர்வதாகவும் இருக்கிறது.

**கவிதை என்பது ஒரு பொருளன்று;** அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள் மொழியையும் நுழைத்து விடுவதற்கு முயலும் ஒரு தொடர்ந்த படைப்புச் செயல்பாடு. எனவே கவிதை என்பதே மொழிதான். கவிதைக்குள் உலவும் மொழியின் தர்க்கம் கவிதைக்கான உலகத்தைக் கட்டி எழுப்புகிறது. எனவே, எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும் பேச்சுவழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

இவ்வாறாக மொழியை வெளிப்படுத்தும் நிலையில் கவிதையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் நாம் உணரலாம்.



PROOF COPY

www.tnpscjob.com

## இயல் - 2
## இயற்கை வேளாண்மை

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மண்ணுக்கு வளம் சேர்ப்பன **மண்புழு, ஊடுபயிர், இயற்கை உரங்கள்.**
2. வான் பொய்த்தது என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள் **மழை பெய்யவில்லை.**
3. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை **மதிப்புக் கூட்டுப் பொருட்கள்.**
4. மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது **வேளாண்மை.**
5. **'உழவு உலகிற்கு அச்சாணி'** என்று வள்ளுவரும் **'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'** என்று பாரதியாரும் போற்றுகின்றனர்.
6. மங்கை **நம்மாழ்வார்** ஐயாவின் வழியைப் பின்பற்றி இயற்கை முறையில் வேளாண்மை செய்ய முடிவெடுத்தாள்.
7. மங்கைக்குப் பால், மோர் எல்லாம் **நெகிழிப் பையில்** வாங்குகிற பழக்கம்.
8. **பனை மரம்** நம்ம தமிழ்நாட்டோட மாநில மரம்.
9. பனை மரம் **ஏழு** ஆண்டுல பலன் தரும்.
10. பனங்கொட்டையை **மூன்றடிக்கு மூன்றடி** இடைவெளி விட்டு நட வேண்டும்.
11. **பனை மரம்** ஏழைகளோட கற்பக விருட்சம்.
12. பனை வளர பெரிய அளவுக்குத் **தண்ணீர்** தேவையில்லை.
13. இன்றைக்கு மண் நஞ்சாகிப் போகக் காரணம் **உரம், பூச்சிக் கொல்லி** போன்றவை.
14. வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் அறிஞர் **மசானபு ஃபுகோகா.**
15. மசானபு ஃபுகோகா **1978** ஆம் ஆண்டு **'ஒற்றை வைக்கோல் புரட்சி'** என்னும் நூலை எழுதியவர்.
16. பண்ணையத்துக்கு **வெயிலும்** ரொம்ப முக்கியம்.
17. நெல்லுக்கு ஊடுபயிராகப் போடுவது **உளுந்து.**
18. அறுவடை செய்தபின் நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்வது **வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன்.**
19. மண்ணில் உள்ள **நுண்ணுயிர்ப் பெருக்கத்துனால** மண்ணும் தன்னோட வளத்தை இழக்கிறதில்லை.
20. **ஆடிப்பட்டத்துல** உழவைத் தொடங்குகிறேன் என்றாள் மங்கை.

**II. குறுவினாக்கள்.**

**1. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.**

தமிழ்நாட்டின் மாநில மரம் பனை மரம். பனை மரம் ஏழைகளோட கற்பக விருட்சம்னு சொல்லலாம். சிறந்த காற்றுத் தடுப்பானும்கூட. ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமிச்சு வைக்கிற தன்மையுடையது. பனை



www.tnpscjob.com

வளர, பெரிய அளவுக்குத் தண்ணீர் தேவையில்லை. ஏழு ஆண்டில் காய்க்கத் தொடங்கிவிடும்.

2. **மதிப்புக் கூட்டுப் பொருள் என்றால் என்ன?**

பனை மரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருட்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப் பொருட்கள் என அழைக்கின்றனர்.

3. **நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிப்பவை எவை?**

நிலத்தில் வைக்கோலைப் பரப்புவது, உரச் செடிகளை வளர்ப்பது, நிலத்தில் இருந்து கிடைக்கும் குப்பை கூளம், செடி செத்தைகளை நிலத்திற்கே கொடுப்பது என்ற செயல்கள் நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றன.

4. **வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் யார்? அவர் எழுதிய நூல் எது?**

வைக்கோல் பர்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் நாட்டு அறிஞர் மசானபு ஃபுகோகா. இவர் 1978 ஆம் ஆண்டு ‘ஒற்றை வைக்கோல் புரட்சி’ என்னும் நூலை எழுதியவர்.

5. **ஜப்பான் அறிஞர் கூறிய ஐந்து விவசாய மந்திரங்கள் எவை?**

உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல். இவையே ஜப்பான் நாட்டு அறிஞர் கூறிய ஐந்து விவசாய மந்திரங்கள்.

III. **சிறுவினாக்கள்:**

1. **வேதிக் கலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.**

வேதிக் கலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியம். நம் முன்னோர்கள் இரசாயனப் பூச்சிக் கொல்லியைப் பயன்படுத்தவில்லை. வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை இவை எல்லாவற்றையும் நன்றாக இடித்துக் கோமியத்துல ஊற வைத்து அதைத் தெளித்தால் போதும். பூச்சியெல்லாம் போய்விடும். மேலும், பூச்சிகள் வருவது படிப்படியாகக் குறையும். அதோடு நிலத்தில் இருக்கின்ற மண்புழு போன்ற சின்ன உயிர்கள் அழிவது தடுக்கப்படுகிறது. மன்னில் உள்ள நுண்ணுயிர்ப் பெருக்கத்தினால், மண்ணும் தன்னுடைய வளத்தை இழக்கிறதில்லை.

2. **தொழு உரம் என்றால் என்ன?**

தோழு உரம் என்றால் மாட்டுச்சானம், கோமியம் ஆகியவர்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்க வேண்டும். இது நன்செய்



PROOF COPY
www.tnpscjob.com

நிலத்துக்கு உதவும். புன்செய் நிலம் என்றால் காய்ந்த இலைச் சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து போட்டால் போதும். சாம்பல் என்றால் எங்காவது போய், தொழிற்சாலைக் கழிவை எடுத்து வந்து போடக்கூடாது! ஆடு, மாடு முதலிய கால்நடைகளின் சாணத்தை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும்.

IV. **நெடுவினாக்கள்:**

1. **'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.**

மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால் தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும், 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதியாரும் போற்றுகின்றனர். இயற்கையில் இருந்து விலகி மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிர் களுக்கும் ஊறு விளைவிக்கின்ற நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப் பொலிவு பெறவும் வேண்டும் என்பது குறித்துப் பார்ப்போம்.

இயற்கை வேளாண்மை முறையால் வளர்க்கப்படும் பனை மரம் தமிழ் நாட்டினுடைய மாநில மரம். பனங்கொட்டையை மூன்றடிக்கு மூன்றடி இடைவெளிவிட்டு நட்டு வைக்க வேண்டும். நான்கு ஆண்டுகள் நட்டு வைத்த பின் ஏழு ஆண்டில் பலன் தரும். பனை மரம் ஏழைகளோட கற்பக விருட்சம் என்று சொல்லலாம். சிறந்த காற்றுத் தடுப்பானும்கூட. ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமிக்க வைக்கின்ற தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது. பனை வளர பெரிய அளவுக்குத் தண்ணீர் தேவையில்லை.

மேலும் நிலத்தைச் சரிசெய்வது எப்படி என்றால், முதலில் அறுவடை முடிந்தபிறகு வைக்கோலைச் சமமாகப் பரப்பி, மடியச்செய்து மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உழ வேண்டும். இந்த வைக்கோல் மென்மையானதாகவும் லேசானதாகவும் இருக்கும். இந்த வைக்கோலின் உண்மையான மதிப்பை மக்கள் அறிந்துகொண்டால் உலகம் ஒருமுறை குலுங்கும். நிலத்தில் வைக்கோலைப் பரப்புவது, உரச் செடிகளை வலர்ப்பது, நிலத்தில் இருந்து கிடைக்கும் குப்பை கூளம், செடி செத்தைகளை நிலத்திற்கே கொடுப்பது என்ற செயல்கள் நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றன.

வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்தவர் ஜப்பான் அறிஞர் மசானபு ஃபுகாகோ. இவர் 1978 ஆம் ஆண்டு 'ஒற்றை வைக்கோல் புரட்சி' என்னும் நூலை எழுதியவர். உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர்



PROOF COPY
www.tnpscjob.com

நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர். வைக்கோலை மடக்கி உழுவதோடு மட்டும் இல்லாமல் பருவம் வந்தவுடன் நீரைத் தேக்கி உழுதல் வேண்டும். உழும்போது தொழு உரம் இட வேண்டும். ஆனால் ஒரே ஆண்டில் நிலத்தின் நஞ்சு நீங்காது. இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகும். பண்ணையத்துக்கு வெயிலும் ரொம்ப முக்கியம். மழைநீர்ச் சேகரிப்பினால் கிணற்றுத் தண்ணீர் மட்டம் உயரும். இயற்கை வேளாண்மை என்றால், ஒட்டு மொத்தமாக விதைக்கிறதுல இருந்து விளைச்சல் முடிகிற வரைக்கும் வேதிக் கலப்பே இருக்கக்கூடாது. வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை இவை எல்லாவற்றையும் நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்ஹ்டுத் தெளித்தால் பூச்சி எல்லாம் போய்விடும். மேலும், மண்ணில் உள்ள நுண்ணுயிர்ப் பெருக்கத்தினால், மண்ணும் தன்னுடைய வளத்தை இழக்கிறதில்லை. நாம் பயன்படுத்தும் உரம், மருந்து எல்லாமே இயற்கையாக் நம்மிடம் இருப்பதுதான். இதுதான் சுற்றுச் சூழலைக் காப்பதற்கான வழி. இப்படிச் செய்வதால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் நிலமும் நன்றாக இருக்கும்.

## இயல் - 3

## மலை இடப் பெயர்கள்: ஓர் ஆய்வு - ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கூற்று 'கோடு' என்பது தமிழ்ச்சொல் ஆகும். விளக்கம் கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

   அ) கூற்று சரி, விளக்கம் தவறு.

   ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி

   இ) கூற்று தவறு, விளக்கம் சரி

   ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

   **விடை: ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி.**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. **<u>மலை,</u>** மனித சமூகத்தின் ஆதி நிலமாகும்.
2. தமிழ் அகத்திணையியல், மலை மற்றும் மலை சார்ந்த பகுதியைக் **<u>குறிஞ்சி</u>** என்று குறிக்கும்.
3. **<u>மலை, குன்றுகளின்</u>** பெயர்கள் குறித்த ஆய்வை **<u>OROLOGY</u>** என்ற கலைச் சொல்லால் அழைப்பர்.
4. **<u>திராவிடர்கள்</u>** அடிப்படையில் **<u>மலைவாழ் மக்கள்.</u>**
5. திராவிடர்களை, **<u>'மலைநில மனிதர்கள்'</u>** என்று அழக்கிறார் **<u>கமில் சுவலபில்.</u>**
6. 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று உரைக்கிறது **<u>தொல்காப்பியம்.</u>**



PROOF COPY
www.tnpscjob.com

7. 'விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ' என்கிறது **திருமுருகாற்றுப்படை.**
8. பழங்குடியினர் **ஓடும் நீரையே** தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்.
9. பழங்குடியினர் தங்கள் குடியிருப்புப் பகுதியைவிட உயரமான இடத்திலோடும் **சிற்றாறுகள், ஓடைகளில்** இருந்து நேரெடுத்துப் பருகுகிறார்கள்.
10. நீலகிரியில் உள்ள **தோடர்** இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள்.
11. தோடர் வீடுகளில் **திண்டுகள் (மேடைகள்)** முக்கிய இடம் பெறுகின்றன.
12. **குறும்பர்** மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் **'மெட்டு'** என்ற சொ, அதன் உயரமான மேடான அமைப்பை விளக்குகிறது.
13. திராவிடச் சொல்லான 'மலை' என்பது **சம்ஸ்கிருத** மொழியில் **'மலய'** என்று வழங்கப்படுகிறது.
14. பாண்டிய மன்னன் ஒருவன் **'மலயத்துவஜ'** என்று அழைக்கப்பட்டான்.
15. வடமொழியில் 'மலய' என்ற சொல் **மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளையே** குறிக்கிறது.
16. தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் **'மலை'** என்பது **'உயரமானது'** என்றும், **'குன்று'** என்பது **'உயரம் குறைவானது'** என்றும் பொருள்படுவன.
17. கர்நாடகத்தில் மலை என்ற வடிவம் **'தோணிமலை'** என்னும் இடப்பெயரில் ஒரே ஒரு முறை பயன்படுத்தப்படுகிறது.
18. இந்தியாவில் 'கோட்டை' என்ரு முடியும் 248 இடப்பெயர்களும் **தமிழ்நாட்டில் தான்** உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
19. ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப **இந்தியவியல் மற்றும் திராவிடவியல் ஆய்வாளர்.**
20. **தினமணி நாளிதழில் துணையாசிரியராகவும், கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர் குழுவிலும்** தீவிரப் பங்காற்றியிருக்கிறார் ஆர்.பாலகிருஷ்ணன்.
21. ஆர்.பாலகிருஷ்ணனின் நூல்கள் அன்புள்ள **அம்மா, சிறகுக்குள் வானம்.**
22. ஆர்.பாலகிருஷ்ணன் 1984 ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணித் தேர்வை, முதன்முதலாக, முழுவதுமாகத் தமிழிலேயே எழுதி, **முதல் முயற்சியிலேயே தேர்ச்சி** பெற்றவர்.
23. பாடப்பகுதி **'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்'** என்னும் ஆர்.பாலகிருஷ்ணன் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

**III. குறுவினாக்கள்:**

1. **'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?**
தமிழ்மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது. திராவிட வேர்ச் சொல் அகராதி, கோட்டை என்ற சொல்லோடு தொடர்புடைய பல்வேறு திராவிட மொழிச் சொற்களைக் கீழ்வருமாறு பட்டியலிடுகிறது.

PROOF COPY



www.tnpscjob.com

| | | |
|---|---|---|
| தமிழ்: | - | கோட்டை, கோடு. |
| மலையாளம்: | - | கோட்ட, கோடு. |
| கன்னடம்: | - | கோட்டே, கோண்டே. |
| தெலுங்கு: | - | கோட்ட. |
| துளு: | - | கோட்டே. |
| தோடா: | - | க்வாட். |

2. **'மலை' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள இனக்குழுப் பெயர்கள் எவை?**

| | | |
|---|---|---|
| மால் பஹாடியா | - | ஜார்க்கண்ட் |
| மல அரயன் | - | மேற்குத் தொடர்ச்சி மலைகள் - கேரளம் |
| மல குறவன் | - | நெடுமாங்காடு - கேரளம் |
| மல மூத்தன் | - | எர்நாட் - கேரளம் |
| மல பணிக்கர் | - | வடகேரளம் |
| மலயன் | - | பாலக்காடு - கேரளம் |
| மல வேடா | - | இடுக்கி - கேரளம் |
| மலேரு | - | தட்சிண கன்னடா - கர்நாடகம் |

இதைப்போலவே,

| | | |
|---|---|---|
| கோட்டா | - | நீலகிரி - தமிழ்நாடு |
| கொண்டாதோரா | - | ஆந்திரப்பிரதேசம் |
| கோண்டு, கொய்ட்டெர் | - | ஒடிஸா |

ஆகிய திராவிடப் பழங்குடி இனக்குழுப் பெயர்களும் 'மலை', 'குன்று' என்று பொருள் தரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டே ஆக்கம் பெற்றுள்ளன.

3. **இந்தியாவில் வடக்கு, மேற்கு, கிழக்கு, மாநில இடப் பெயர்களில் திராவிட இடச் சொற்களில் நேரடித் தொடர்பு இன்றுவரை நீடிப்பதை அட்டவணை மூலம் உறுதிப்படுத்துக.**

| **திராவிடச் சொற்கள்** | **மாநிலம்** | **மாவட்டம்** |
|---|---|---|
| மலை | உத்திராஞ்சல் | சமோலி |
| | ஜார்க்கண்ட் | கும்லா |
| | உத்தரப்பிரதேசம் | ஜவுன்பூர் |
| வரை | குஜராத் | வல்ஸட் |
| | மஹாராஷ்டிரா | தாணே |
| | ஹிமாச்சலப்பிரதேசம் | காங்க்ரா |
| மலா | பஞ்சாப் | ஜலந்தர் |
| | ராஜஸ்தான் | அஜ்மீர் |
| | கர்நாடகம் | உடுப்பி |



PROOF COPY

www.tnpscjob.com

**4. தமிழ்மொழியில் 'வரை' என்ற சொல் எவ்வெப்பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது?**

தமிழ்மொழியில் 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. நுனி முதல் அடிவரை மற்றும் அடிமுதல் நுனி வரை என்ற தொடர்களில் 'வரை' என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**IV. சிறுவினாக்கள்:**

**1. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டு-களுடன் விவரிக்க.**

திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள். திராவிடர்களை, 'மலைநில மனிதர்கள்' என்று அழைக்கிறார் கமில் சுவலபில்.

பழந்தமிழர் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப் பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.

திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர் தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக் கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன. பழங்குடியினர் ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்பு உடையவர்கள். எனவே, அவர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியைவிட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள், ஓடைகளில் இருந்து நீரெடுத்துப் பருகுகின்றனர். நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதில் சுவர்களை அமைத்திருக்கின்றனர். அவர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.

குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்ற சொல் அதன் உயரமான, மேடான அமைப்பை விளக்குகிறது. ஆந்திராவிலும் ஒடிஸா விலும் உள்ள 'ஜதாப்பு' எனப்படும் திராவிடப் பழங்குடியினரின் குடியிருப்புகள் பெரும்பாலும் மலை உச்சிகளில் அமைந்துள்ளன. பழங்குடித் தலைவரின் வீடு, மற்ற வீடுகளைவிட உயரமான இடத்தில் அமைந்துள்ளது.

இங்ஙனம் 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை அறியலாம்.

**V. நெடுவினா:**

**1. இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங் களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.**

திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர் தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக்கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன. திராவிடச் சொல்லான 'மலை' என்பது சம்ஸ்கிருத மொழியில் 'மலய' என்று வழங்கப்படுகிறது. பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ'



PROOF COPY

www.tnpscjob.com

என்று அழைக்கப்பட்டான் என்பதும் 'மலய' என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது. மேலும், வடமொழியில் 'மலய' என்ற சொல் மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளையே குறிக்கிறது.

தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் 'மலை' என்பது 'உயரமானது' என்றும் 'குன்று' என்பது 'உயரம் குறைவானது' என்றும் பொருள்படுவன ஆகும். மலை, குன்று என்னும் இரண்டு சொல்லாட்சி களும் வெளிக்கொணரும் உயர வேறுபாட்டை வடமேற்குப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மலை சார்ந்த இடப்பெயர்கள் உறுதிசெய்வது வியப்பளிக்கின்றது.

இதைப்போலவே தமிழ் மொழியில் 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப் படுகிறது. நுனி முதல் அடி வரை மற்றும் அடி முதல் நுனி வரை என்ற தொடர்களில் 'வரை' என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 'மலை' என்ற சொல் 17 இடப் பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப்பெயர்களில் பின்னொட்டாகவும் இடம் பெறுகின்றது.

தமிழ் மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது. இந்தியாவில் 'கோட்டை' என்று முடியும் 248 இடப்பெயர்களும் தமிழ்நாட்டில்தான் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சொல் செயற்கையான காப்பரண்களான கோட்டைகளைக் கட்டியெழுபிய நகர நாகரிகத்தின் பின்னணியில் தோன்றியது என்பதைவிட அதற்கும் தொன்மையான மலைசார்ந்த சூழலில் உருப்பெற்றிருக்கும் என்பதுதான் உண்மையாகத் தோன்றுகிறது. ஏனெனில் 'கோடு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருளோடு வல்லரண், கோட்டை என்ற பொருளும் உண்டு. மலையரண், காட்டரண் போன்ற இயற்கை அரண்கள், மதில் சுவர்களால் அமைந்த செயற்கையான கோட்டைகளை விடவும் தொன்மையானவை. இதைபோலவே 'கோடை' என்னும் தமிழ்ச் சொல் 'மலை' என்னும் பொருளில் வழக்கப்படுகின்றது என்பதை அறியலாம்.

இவ்வாறு இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன.



PROOF COPY
www.tnpscjob.com

## இயல் - 4
## தலைமைச் செயலகம் - சுஜாதா

**I. பொருந்தாத ஒன்றை சுட்டுக:**

அ. தாமஸ் ஆல்வா எடிசன்

ஆ. ஐன்ஸ்டீன்

இ. ஸ்டீபன் ஹாக்கிங்

ஈ. நோம் சோம்ஸ்கி

**விடை: ஈ. நோம் சோம்ஸ்கி**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. 'எண்சாண் உடம்புக்குத் **தலையே** பிரதானம்' என்ற பழமொழி தலைக்குள் இருக்கும் **மூளை**யைத் தான் குறிப்பிடுகிறது.
2. நமது உடலை அடக்கியும் கட்டளைகளைப் பிறப்பித்தும் இயங்கும் மூளையைத் **தலைமைச் செயலகம்** என்று கூறுவது பொருத்தமே.
3. உலகிலேயே மிகமிக ஆச்சரியம் **மனித மூளை.**
4. **நியூரான்களின்** வலைப் பின்னலே **புத்திசாலித்தனம், படைப்புணர்ச்சி, ஞாபகம், தன்னுணர்வு** எனலாம்.
5. இன்றைய **கணிப்பொறிகளுடன்** ஒப்பிட்டால், மூளை ரொம்ப நிதானம்.
6. சராசரி மூளை **ஒன்றரைக் கிலோ** எடை இருக்கிறது.
7. ஒரு கொரில்லாவின் மூளையைக் காட்டிலும் மனித மூளை **மூன்று மடங்கு** கனம்.
8. மூளை **முதுகுத் தண்டிலிருந்து** முளைக்கிறது.
9. மூளைக்கு ஒரு நிமிடத்துக்கு **800 மில்லி** குருதி தேவைப்படுகிறது.
10. நம்மோடு ஒப்பிட்டால் **தேனீக்களுக்கு** ரொம்பச் சின்ன மூளை.
11. மனித மூளை சுமார் **10 வாட்** சக்தியை உற்பத்தி செய்கிறது.
12. சராசரி மனித மூளையின் எடை **1349 கிராம்.**
13. மிக அதிக எடையுள்ள மனித மூளை **2049 கிராம்.**
14. மனித மூளையில் 80% **தண்ணீரே** உள்ளது.
15. **நீர் வறட்சி** மூளையைப் பாதிப்புக்கு உள்ளாக்கலாம்.
16. தொடர்ச்சியான இடைவெளியில் தண்ணீர் பருகிக் கொண்டிருப்பது **ஆரோக்கியமான** மூளைச் செயல்பாடுகளுக்கு வழி வகுக்கும்.
17 **தாமஸ் ஆல்வா எடிசன்** 'உங்கள் உடலின் முக்கியப் பணி, உங்கள் மூளையைத் தாங்கிச் செல்வது' என்றார்.
18. **ஞாபகம்** தலைமைச் செயலகத்தின் மற்றொரு விந்தை.
19. மனித ஞாபகத்தை, ஒரு **கணிப்பொறியுடனோ** ஒரு **நூலகத்துடனோ** சிலர் ஒப்பிடுகிறார்கள்.
20. அமெரிக்க உளவியல் மொழியியலாளர் **நோம் சோம்ஸ்கி.**
21. கற்கக் கற்க மூளையின் எடை **கொஞ்சம்** கூடுகிறது.

PROOF COPY



www.tnpscjob.com

22. **ஸ்டான்போர்டு** பல்கலைக்கழகப் பேராசிரியர் **க்வாபெனா போஹென்.**
23. சுஜாதாவின் இயற்பெயர் **ரங்கராஜன்.**
24. சுஜாதாவின் புகழ்பெற்ற அறிவியல் நூல்கள் **கணிப்பொறியின் கதை, சிலிக்கன் சில்லுப்புரட்சி, அடுத்த நூற்றாண்டு** முதலியன.
25. அறிவியலை எளிய தமிழில் ஊடகங்களில் பரப்பியதற்காக, **மத்திய அரசின் விருது** பெற்றவர்.
26. இந்தியாவில் **மின்னணு வாக்குப் பதிவுக்** கருவியைக் கொண்டு வந்ததில் சுஜாதாவின் பங்களிப்பு அதிகம்.

**III. குறுவினா:**

**1. மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமையாக நோம் சோம்ஸ்கி எதனைக் கூறுகிறார்?**

மொழி அதாவது இலக்கண விதியின்படி பேசுவது மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமை என நோம் சோம்ஸ்கி குறிப்பிடுகிறார்.

**2. மூளையைக் கொண்டு நாம் கண்டுபிடித்தவை எவை?**

அக்ரூட் போலிருக்கும் மூளையைக் கொண்டு தான் விவசாயம் கண்டுபிடித் தோம்; சக்கரங்கள் செய்தோம்; மாட்டைப் பழக்கினோம்; காட்டை வெட்டி னோம் ; வியாதிகளை வென்றோம்; சந்திரனுக்குச் சென்றோம்.

**3. எதிர்காலத்தில் நம் மூளையின் பல செயல்பாடுகள் எதன் மூலம் செய்யலாம்?**

எதிர்காலத்தில் நம் மூளையின் பல செயல்பாடுகளைச் சிலிக்கன் சில்லுகள் மூலம் செய்யலாம்.

**4. மூளையின் மூன்று பாகங்கள் எவை? விளக்கு.**

மூளையின் மூன்று பாகங்கள் முன்மூளை, நடு மூளை, பின் மூளை. முன் மூளையில் மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ளன. பின் மூளையில் உள்ள சிறுமூளை தான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.

**5. பியர்பால்ப்ரோக்கா- குறிப்பு வரைக.**

மொழி! அது நம் மூளையில் எங்கே புரிந்து கொள்ளப்படுகிறது என்பதைப் பற்றி 100 வருடங்களுக்கு மேல் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். 1861 ஆம் ஆண்டில் பியர்பால்ப்ரோக்கா என்னும் பிரெஞ்சு சர்ஜன் கண்டுபிடித்தது சரித்திரப் பிரசித்தமானது.

ஒரு நோயாளி இறந்தும் அவன் மூளையைத் திறந்து பார்த்ததில் மூளையின் ஒரு பகுதி சேதப்பட்டு இருந்ததைத் கண்டறிந்தார். இறந்தவனுக்குப் பேசவே வராது. ஒரே ஒரு வார்த்தை தான் எல்லாவற்றிற்கும் பதிலாகச் சொல்வான். இந்த மாதிரி இன்னும் எட்டுப் பேர் மூளையைத் திறந்து பார்த்த ப்ரோக்கா நம்முடைய பேச்சுத்திறமை நம் மூளையின் இடது முன்பகுதிச் சுளையில் இருக்கிறது என்று கண்டுபிடித்தார். ப்ரோக்காவுக்கு



PROOF COPY
www.tnpscjob.com

அஞ்சலியாக மூளையின் இந்தப் பகுதியை, ப்ரோக்காவின் பேட்டை ப்ரோக்காஸ் ஏரியா என்கிறார்கள்.

**IV. சிறுவினா:**

**1. இடப்பக்க மூளையில் செய்திகள் பதிவதால் ஏற்படும் நன்மைகள் குறித்த சுஜாதாவின் கருத்துகளை விளக்குக.**

மூளைக்கு செல்லும் நரம்புகளில் இடவல மாற்றம் நிகழ்கிறது. அதாவது வலப்பக்கச் செய்திகள் மூளையின் இடது பாதிக்கும் இடப்பக்கச் செய்திகள் வலது பாதிக்கும் இடம் மாறுகின்றன. நம்மில் பெரும்பாலானோர் வலது கைக்காரர்களாக இருப்பதற்குக் காரணம், நம் மூளையின் இடது பாதியின் அதிகப்படியான செல்வாக்கினால் என்று சொல்கிறார்கள். இடது பாதி தான் பேச, எழுத, கணக்கிட, தர்க்கரீதியில் சிந்திக்க உதவுகிறது. பிரச்சனை களை அலசுவது, சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறப்பது இதெல்லாம் இடதுபாதி. நம் மொழியறிவு முழுவதும் இடது. இடது ஆக்கிரமிப்பு அதிகம் இருப்பவர்கள் பட்டயக் கணக்கர்கள், கணக்கு ஆசிரியர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவக்ள், வருமானவரி அதிகாரிகள். இவையே இடப்பக்க மூளையில் செய்திகள் பதிவதால் ஏற்படும் நன்மைகள் குறித்த சுஜாதாவின் கருத்துகள் ஆகும்.

**2. மனித மூளை - தேனீக்களின் மூளை - ஒப்பிடுக.**

மனித மூளையுடன் ஒப்பிட்டால் தேனீக்களுக்கு ரொம்பச் சின்ன மூளை. பத்து மைக்ரோவாட் சக்திதான் அதற்குத் தேவைப்படுகிறது. (மைக்ரோவாட் என்பது ஒரு வாட் சக்தியில் பத்து லட்சத்தில் ஒரு பாகம்). அதன் மூளை கணக்கிடும் வேகம், பத்து டெர்ராஃப்ளாப். தேனீ மூளையின் குறிக்கோள், தேனைச் சுலபமாகவும் கணிசமாகவும் கொண்டு வர வேண்டியது; தேனீக்களால் பார்க்க, நுகர, பறக்க, நடக்க, சமப்படுத்திக் கொள்ள முடியும். அளவில் ஒரு சில மில்லிமீட்டர்களே இருக்கும் இதன் அதிசய மூளை, உலகின் மிகச் சிறந்த இன்றைய சூப்பர் கணிணியை விடவும் ஆயிரம் மடங்கு வேகம். தேனீயின் மூளை பத்து லட்சம் நியுரான்கள் கொண்ட எளிய மூளை. மனிதனின் மூளையானது 100 பில்லியன்! அதாவது பத்தாயிரம் கோடி நியுரான்கள் கொண்ட மூளை.

**3. மூளையின் இயல்பு யாது?**

பிறக்கும்போதே நம் கைவசம் மூளைக்கு எல்லா நரம்பு செல்களும் கிடைத்துவிடுகின்றன. மற்ற உறுப்புகளைப் போல் இல்லாமல் மூளை செல்கள் இறந்தபின், அவை புதுப்பிக்கப்படுவதில்லை. இருபது வயது வந்ததும் நம் மூளையின் செல்கள், தினப்படி ஆயிரக்கணக்கில் பழசாகி இறந்துபோகின்றன. ஆண்டுக்கு ஒரு கிராம் இழக்கிறோம். இருபடு வயதுக்கு அப்புறம், நமக்குக் கொஞ்சம் தேய்மானம்தான்! கண் பார்வை,

PROOF COPY



www.tnpscjob.com

கேட்புத் திறன், ருசி, வாசனைத் திறமை மெல்ல மெல்லக் குறைகின்றன. அனுபவம் என்ற ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு கதை பண்ணிக் கொண்டிருக்கிறோம். தாமஸ் ஆல்வா எடிசன், 'உங்கள் உடலின் முக்கியப் பணி, உங்கள் மூளையைத் தாங்கிச் செல்வது' என்றார். அவர் மூளையை நன்றாக உபயோகப்படுத்தினார். அவரது கூற்று சரியாகத்தான் இருக்கும்.

V. **நெடுவினா.**

1. **அறிவியல் கருத்துகளை தமிழ் மொழி வாயிலாக எளிதில் விளக்க இயலும் என்பதைத் 'தலைமைச் செயலகம்' என்னும் பாடம் வழி நிறுவுக.**

**பேச்சும் மூளையும்:**

மொழி! அது நம் மூளையில் எங்கே புரிந்துகொள்ளப்படுகிறது என்பதைப் பற்றி 100 வருடங்களுக்கு மேல் ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள். 1861ஆம் ஆண்டில் பியர் பால் ப்ரோக்கா என்னும் பிரெஞ்சு சர்ஜன் கண்டுபிடித்தது சரித்திரப் பிரசித்தமானது.

ஒரு நோயாளி இறந்ததும் அவன் மூளையைத் திறந்து பார்த்ததில் மூளையின் ஒரு பகுதி சேதப்பட்டிருந்ததைக் கண்டறிந்தார். இறந்தவனுக்குப் பேசவே வராது. ஒரே ஒரு வார்த்தைதான் எல்லாவற்றிற்கும் பதிலாகச் சொல்வான். அந்த வார்த்தை 'தான்' தான். அதனால், அவனை அவ்வாறே அழைத்தனர். இந்த மாதிரி இன்னும் எட்டுப் பேர் மூளையைத் திறந்து பார்த்த ப்ரோக்கா, நம்முடைய பேச்சுத் திறமை, நம் மூளையின் இடது முன்பகுதிச் சுளையில் இருக்கிறது என்று கண்டுபிடித்தார். ப்ரோக்காவுக்கு அஞ்சலியாக மூளையின் இந்தப் பகுதியை, 'ப்ரோக்காவின் பேட்டை' 'ப்ரோக்காஸ் ஏரியா' என்கிறார்கள்.

மொழி அதாவது இலக்கண விதியின்படி பேசுவது மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமை! சிம்பன்ஸி போன்ற குரங்குகளுக்குச் சொல்லிக் கொடுத்தும் இந்தத் திறமை வருவதில்லை. நோம் சோம்ஸ்கி என்னும் உளவியல் மொழியியலாளர், 'நாம் பிறக்கும்போதே சில 'ஆழ்ந்த அமைப்புகளுடன்' பிறக்கிறோம். இந்த ஆழ்ந்த அமைப்புகளின் இலக்கண விதிகளும் அதனை அர்த்தம் பண்ணிக் கொள்ளும் திறமையும் பொதிந்திருக்கிறது' என்ற கருத்தைத் தெரிவித்தார்.

கற்பது நம் மூளையில் மாறுதல்களை ஏற்படுத்துகிறது என்பது பரிசோதனை மூலம் கண்டறிந்த விஷயம். நாம் தினமும் கற்கிறோம். கற்கக் கற்க மூளையின் எடை கொஞ்சம் கூடுகிறது. நியுரான்களின் இணைப்புச் சிக்கல்களும் அதிலுள்ள ப்ரொட்டீன் அளவும் அதிகமாகிறது. நியுரோ ட்ரான்ஸ்மிட்டர்களைக் கட்டுப்படுத்தும் வினையூக்கி அளவும் அதிகமாகிறது. பெப்டைட் என்னும் சங்கதியும் அதிகம் உண்டாகிறது. கற்பது, அனுபவ அறிவு ஆகியவை மூளையின் பல பகுதிகளைப் பாதிக்கிறது என்பது மட்டும்



PROOF COPY
www.tnpscjob.com

உத்தரவாதம். சமீபத்திய ஆராய்ச்சியின் மூளை பற்றிக் கிடைத்த ஆறுதலான விஷயம், உடலின் சக்தியை அதிகரிப்பதன் மூலம் மூளையின் ஆற்றலும் அதிகரிக்கும் என்பதுதான். இதைத்தான் நம்மவர்கள் ‘சுவரில்லாமல் சித்திரம் இல்லை’ என்று குறிப்பாகச் சொல்லியிருப்பார்கள். நாம் நம்முடைய சுவரைப் பாதுகாப்பதோடு மேல்மாடியான மூளையையும் பாதுகாப்போம். இவையே அறிவியல் கருத்துகளை தமிழ் மொழி வாயிலாக எளிதில் விளக்க இயலும் என்பதைத் ‘தலைமைச் செயலகம்’ பாடம் விளக்கும் கருத்துகளாகும்.

## இயல் - 5
## தமிழகக் கல்வி வரலாறு

**I. சரியான விடையைத் தேர்க.**

1. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ................ என்பதாகும். அ. நூல், ஆ. ஓலை, இ. எழுத்தாணி, ஈ. நாள்.
**விடை: அ. நூல்.**

2. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ. | கல்வி அழகே அழகு | 1. | தொல்காப்பியம் சிறப்புப் பாயிர உரைப்பாடல் **(ஈ)** |
| ஆ. | இளமையில் கல் | 2. | திருமந்திரம் **(இ)** |
| இ. | துணையாய் வருவது தூய நற்கல்வி | 3. | ஆத்திச்சூடி **(ஆ)** |
| ஈ. | பாடம் போற்றல் கேட்டல் நினைத்தல் | 4. | திருக்குறள் |
| | | 5. | நாலடியார் **(அ)** |

3.
| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) அ | 2 | ஆ | 3 | இ | 4 | ஈ | 1 |
| (2) அ | 3 | ஆ | 4 | இ | 1 | ஈ | 2 |
| (3) அ | 5 | ஆ | 3 | இ | 2 | ஈ | 1 |
| (4) அ | 4 | ஆ | 1 | இ | 2 | ஈ | 5 |

**விடை: (3) அ - 5 ஆ - 3 இ - 2 ஈ - 1**

**II. குறுவினா:**

**1. சங்க காலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?**
‘சங்க காலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது. தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் மற்றும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொது மொழியாகவும் விளங்கி வந்தது’ என்பது சங்க


PROOF COPY
www.tnpscjob.com

காலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று ஆகும்.

2. **உ.வே.சா அவர்கள் பயின்ற கல்வி முறை குறித்துக் குறிப்பு வரைக.**

உ.வே.சா அவர்கள் பயின்ற கல்வி முறை உயர் நிலைக் கல்வி முறை ஆகும். தனி நிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர் நிலைக் கல்வி முறை என்ற வகைமைக்குள் இக்கல்வி முறை விளங்கும். திருவாவடுதுறை அதீன மடத்தின் தலைமைப் புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதர் பாடம் பயின்ற முறை இம்முறையாகும்.

3. **சங்க காலத்தவர் எவற்றை உணர்ந்து கல்வி கற்றனர்?**

சங்க காலத்தவர் குடும்பம், அரசு, சமூகம் என்ற மூன்று நிலைகளிலும் சிறப்பினைப் பெறக் கல்வி தேவை என்பதனை உணர்ந்து கற்றனர்.

4. **கல்வி கற்பிக்கும் இடங்களை இலக்கியங்கள் எவ்வாறு குறிப்பிட்டுள்ளன?**

கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் 'பள்ளி' என்று பெரிய திருமொழியும், ஓதும் பள்ளி என்று திவாகர நிகண்டும், கல்லூரி என்று சீவக சிந்தாமணியும் குறிப்பிட்டுள்ளன.

5. **கற்றலுக்கு உதவும் ஏட்டுக் கற்றைகள் எவ்வாறு குறிக்கப்பட்டன?**

கற்றலுக்கு உதவும் ஏட்டுக் கற்றைகளை ஏட், சுவடி, பொத்தகம், நூல் எனப் பல பெயரிட்டு அழைத்தனர். முன் மூன்றும் ஓலைக் கற்றையையும் பின்னிரண்டும் உட்பொருளையும் சிறப்பாகக் குறித்தன.

6. **பட்டி மண்டபம் - குறிப்பு வரைக.**

தமிழர்கள் இன்று பரவலாக ஏற்றுக் கொண்டிருக்கும் பட்டி மண்டபம் என்ற கலை வடிவம் சமயத் துறையிலிருந்து தோன்றியது. பட்டி மண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது. 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகல் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்று அந்நூல் பேசுகிறது.

7. **தாமஸ் மன்றோ காலத்தில் நடத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ன?**

சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்தன என்றும் அவற்றின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளில் அப்போதைய கல்வித் தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே காணப்பட்டது என்றும் தாமஸ் மன்றோ காலத்தில் நடத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. **கீழைத்தேயவாதிகள் என்று அழைக்கப்பட்டவர் யார்?**

அக்காலத்தில் இந்தியாவில் தாய்நாட்டு இலக்கியங்களையும் கீழைத் தேசத்துக் கலைகளையும் பயிற்றுவிக்க வேண்டும் என்னும் கொள்கை கொண்டவர்கள் கீழைத்தேயவாதிகள் என்று அழைக்கப்பட்டனர்.

9. **மேற்கத்தியவாதிகள் என்று அழைக்கப்பட்டவர் யார்?**

மேற்கத்தியப் பாணிக் கல்வி முறையான ஆங்கில வழிக் கல்வி முறை

PROOF COPY



www.tnpscjob.com

மூலமாகவே இந்தியர்களை முன்னேற்ற முடியும் என்று ஒரு சாரார் வாதிட்டனர். இவர்கள் மேற்கத்தியவாதிகள் என்று அழைக்கப்பட்டனர்.

**10. மெக்காலே கல்விக்குழு எப்போது உருவாக்கப்பட்டது?**

1835 ஆம் ஆண்டில் மெக்காலே கல்விக்குழு உருவாக்கப்பட்டது.

**11. 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' என்று போற்றப்படுவது எது?**

1854 ஆம் ஆண்டு சார்லஸ்வுட் தலைமையிலான குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தற்காலக் கல்வியும் தேர்வு முறையும் உருவெடுத்தது. சார்லஸ் வுட்டின் அறிக்கை, 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' என்று போற்றப்படுகிறது.

**12. ஹண்டர் கல்விக் குழு எவற்றைக் கட்டாயமாக்கியது?**

கி.பி. 1882 ஆம் ஆண்டு உருவான ஹண்டர் கல்விக்குழு சீருடை முறை, தாய்மொழி வழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது. மேலும் புதிய பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் பொறுப்பைத் தனியாருக்கும் வழங்கப் பரிந்துரைத்தது.

**III. சிறுவினா:**

**1. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.**

பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை ஓதற் பிரிவு எனக் குறிப்பதோடு எண் வகை மெய்ப்பாடு பற்றிக் கூறும்போது கல்வியின் பொருட்டு ஒருவருக்கு, 'பெருமிதம்' தோன்றும் என்றும் கூறுகிறது. தொல்காப்பியமும் நன்னூலும் ஆசிரியர்கள், மானவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன. அதன்வழி வந்த சங்க இலக்கியங்களும் கல்வியின் சிறபைப் பெரிதும் போற்றுகின்றன.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!' (புறம், 183, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்) என்ற புறநானூற்று அடிகள் பொருள் கொடுத்தும் தொண்டு செய்தும் ஆசிரியரிடம் மாணவர்கள் கல்வி கற்றதைச் சிறப்புடன் குறிக்கின்றன.

கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் 'பள்ளி' என்று பெரிய திருமொழியும், ஓதும் பள்ளி என்று திவாகர நிகண்டும், கல்லூரி என்று சீவகசிந்தாமணியும் குறித்துள்ளன. சங்கம் என்ற அமைப்பு, பலர் கூடி விவாதிக்கும் பாங்குடையது. இது தவிர, மன்றம், சான்றோர் அவை, அறங்கூர் அவையம், சமணப் பள்ளி, பௌத்தப் பள்ளி போன்ற அமைப்புகள் சங்க கலத்திலும் சங்கம் மறுவிய காலத்திலும் கற்பித்தல் பணியைத் தமிழகத்தில் செய்து வந்துள்ளன. மன்னராட்சிக் காலத்தில் போர்ப் பயிற்சிகளைத் தருவதும் முக்கியமான கல்வியாகக் கருதப்பட்டது.

PROOF COPY



www.tnpscjob.com

**2. சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் - குறிப்பு வரைக.**

கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும். சமணத்தைச் சேர்ந்த திகம்பரத் துறவிகள் மலைக்குகையில் தங்கினர். அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குப் போதித்தனர். 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள். அவர்களின் படுக்கைகளின் மீது மாணவர்கள் அமர்ந்து கற்றதனால் கல்விக்கூடம், பள்ளிக்கூடம் என அழைக்கப்படலாயிற்று. பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும்.

சமணப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கைகள் பற்றித் திருச்சி மலைக்கோட்டையிலும் தமிழகத்தின் புகழ்பெற்ற சமணக் குன்றான கழுகுமலையிலும் உள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. வந்தவாசி அருகில் உள்ள வேடல் என்னும் ஊரில் இருந்த சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணார்களுக்குக் கல்வி கற்பித்தார். பட்டினிக் குரத்தி என்னும் சமணப் பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளியொன்றை நிறுவியுள்ளார். இவை, சமணப் பள்ளிகளில் பெண்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் பெண் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன.

**3. பௌத்தமும் சமணமும் தமிழகத்தின் கல்வி வரலாற்றுக்குச் செய்த பெரும் பங்கினை விளக்குக.**

தமிழர்கள் இன்று பரவலாக ஏற்றுக் கொண்டு இருக்கும் பட்டி மண்டபம் என்ற கலை வடிவம் சமயத் துறையிலிருந்து தோன்றியது. பட்டி மண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது. 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்று அந்நூல் பேசுகிறது.

தமிழகத்திலுள்ள காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்த சீனப் பயணி யுவான் சுவாங், அங்கிருந்த பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கிச் சிறப்புரை ஆற்றியிருக்கிறார் என்ற செய்தியும் பௌத்தமும் சமணமும் தமிழகத்தின் கல்வி வரலாற்றுக்குச் செய்த பெரும் பங்கினை விளக்குகிறது.

**IV. நெடுவினா:**

**1. பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபு வழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.**

**சமண, பௌத்தப் பள்ளிகள்:**

கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும்.



www.tnpscjob.com

வந்தவாசிக்கு அருகிலுள்ள வேடல் என்னும் ஊரில் இருந்த சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார். பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன.

**மரபு வழிக் கல்வி முறைகள்:**

மரபு வழிக் கல்வி முறையானது குருகுலக் கல்வி முறை, திண்ணைப் பள்ளிக் கல்வி முறை, உயர் நிலைக் கல்வி முறை என மூன்று வகைகளில் அமைக்கப்பெற்றிருந்தது. இம்முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட மாறுதல்களைக் காண்போம்.

1854 ஆம் ஆண்டு சர்லஸ் வுட் தலைமையிலான குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தற்காலக் கல்வியும் தேர்வு முறையும் உருவெடுத்தது. சார்லஸ் வுட்டின் அறிக்கை, 'இந்தியக் கல்வி வளர்ச்சியின் மகாசாசனம்' என்று போற்றப்படுகிறது. கி.பி. 1882 ஆம் ஆண்டு உருவான ஹண்டர் கல்விக்குழு சீருடை முறை, தாய்மொழி வழிக் கல்வி போன்ற வற்றைக் கட்டாயமாக்கியது. மேலும், புதிய பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் பொறுப்பைத் தனியாருக்கும் வழங்கப் பரிந்துரைத்தது.

ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த 19 ஆம் நூற்றாண்டில் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவரின் எண்ணிக்கை 15 விழுக்காடாக இருந்தது. நாடு விடுதலை பெற்றவுடன் இந்நிலையை மாற்றக் கருதிய நம் அரசு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 45இன் கீழ் நாட்டிலுள்ள 14 வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

சட்டமியற்றியதுடன் அக்குறிக்கோளை நிறைவேற்ற ஐந்தாண்டுத் திட்டங் களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்தது. இதன் விளைவாக நாடெங்கிலும் கல்வி நிலையில் வளர்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக, தமிழகத்தில் கல்வி நிலை சீராக வளரத் தொடங்கியது. மேலும், அரசு வளர்ந்து வரும் காலத்திற்கேற்ற கல்வி முறையில் மாற்றமும் ஏற்றமும் கொண்டுவரப் பல குழுக்களை அமைத்தது. கல்விக் குழுக்களின் பரிந்துரைகள் நம்முடைய நாட்டின் கல்வி வரலாற்றில் முக்கியத் திருப்புமுனைகளாக அமைந்ததோடு இன்றைய ஏற்றமிகு வளர்ச்சிக்கு ஆதாரங்களாகவும் விளங்கின. குருகுலக் கல்வி முறை, திண்ணைப் பள்ளி, கல்வி நிலையம் என்னும் பல்வேறு பரிணாமங்களைக் கண்ட கல்வி அமைப்பு முறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

நம் தமிழக அரசின் கல்வித்துறை பல்வேறு நலத்திட்டங்களை வகுத்துத் திறம்படச் செயல்படுத்தியதன் விளைவாக, இக்காலம் கல்வித் துறையின் பொற்காலம் என்று சொல்லும் வகையில் நம் கல்வி முறை மாற்றமும்

PROOF COPY



www.tnpscjob.com

ஏற்றமும் பெற்று நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

V. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கல்வியின் நோக்கம் **நாகரிகத்தையும், பண்பாட்டையும்** வளர்ப்பதாகும்.
2. **'கல்லுதல்'** என்ற பொருளின் அடிப்படையில் கல்வி என வழங்கலாயிற்று.
3. பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை **ஓதற்பிரிவு** எனக் குறிப்பிடுகிறது.
4. கல்வியின் பொருட்டு ஒருவருக்குப் **பெருமிதம்** தோன்றும்.
5. **தொல்காப்பியமும் நன்னூலும்** ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன.
6. சங்க காலத்தவர் **குடும்பம், அரசு, சமூகம்** என்ற மூன்று நிலைகளிலும் சிறப்பினைப் பெறக் **கல்வி** தேவை என்பதனை உணர்ந்து கற்றனர்.
7. சங்க காலத் தமிழகத்தில் தமிழ் **ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக** விளங்கியுள்ளது.
8. கற்ற மாணவர்களை முறையே **சிறுவன், மாணவன், கேட்போன்** என்று வகைப்படுத்தினர்.
9. **கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம்** ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும்.
10. 'பள்ளி' என்ற சொல்லுக்குப் **'படுக்கை'** என்று பொருள்.
11. பள்ளி என்னும் சொல் **சமண, பௌத்த** சமயங்களின் கொடையாகும்.
12. பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் **பெண் பள்ளிகள்** என்று அழைக்கப்பட்டன.
13. பட்டி மண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று **மணிமேகலையில்** சுட்டப்படுகின்றது.
14. தமிழகத்திலுள்ள காஞ்சிபுரத்திற்கு வந்த சீனப்பயணி **யுவான் சுவாங்** அங்கிருந்த பௌத்தப் பல்கலைக் கழகத்தில் தங்கிச் சிறப்புரை ஆற்றி இருக்கிறார்.
15. திண்ணைப் பள்ளிகளைத் **தெற்றிப் பள்ளிகள்** என்று அழைத்தனர்.
16. திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் **கணக்காயர்கள்** என்றே அழைக்கப்பட்டனர்.
17. ஆங்கிலேயர்கள், திண்ணைப் பள்ளிகள், பாடசாலைகள், மக்தாபுகள், மதரஸாக்கள் போன்ற கல்வி அமைப்புகளை **நாட்டுக் கல்வி** என்று அழைத்தனர்.
18. சென்னை மாகாணத்தில் **12,498** திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்தன.
19. சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு **1857.**
20. 1910 ஆம் ஆண்டு **தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம்** தொடங்கப்பட்டது.



PROOF COPY
www.tnpscjob.com

## இயல் - 6
## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

**I. பலவுள் தெரிக.**

**1. பொருந்தாதைத் தேர்க.**

அ. ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

ஆ. ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்.

இ. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஈ. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத் திங்கள் தேவைப்பட்டன.

(1) அ, ஆ (2) ஆ, இ (3) அ, இ (4) ஆ, ஈ. **விடை: (4) ஆ, ஈ.**

**2. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?**

அ. மொழிபெயர்ப்பாளர், ஆ. இந்தியாவின் பெப்பிசு,

இ. தலைமைத் துவிபாஷி, ஈ. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை.

**விடை: ஈ. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பன்மொழிப் புலமையும் பல்துறை ஆளுமையும் கொண்ட ஆனந்தரங்கர் **புதுச்சேரி வரலாற்றினைப்** பதிவு செய்தவரில் முதன்மையானவர்.
2. **நாட்குறிப்பு** என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவு செய்யும் **ஏடாகும்.**
3. நாட்குறிப்பை ஆங்கிலத்தில் **டைரி** என்று அழைப்பர்.
4. டைரி என்ற சொல்லானது **டைரியம்** என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான **டைஸ்** என்ற சொல்லில் இருந்து உருவாயிற்று.
5. நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது EPHEMERIDES என்று அழைக்கப் பெறும் **கிரேக்கக் குறிப்பேடு** ஆகும்.
6. முகலாய மன்னர்களில் **பாபர்** காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்து வந்துள்ளது.
7. **ஔரங்கசீப்** ஆட்சிக் காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது.
8. **1498**இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுகீசிய மாலுமி **வாஸ்கோடகாமா** நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர்.
9. வாஸ்கோடகாமாவின் நாட்குறிப்புகள் **ஆல்வாரோ வெல்லோ** என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.
10. ஆனந்தரங்கர் **18 ஆம் நூற்றாண்டில்** வாழ்ந்தவர்.



PROOF COPY
www.tnpscjob.com

11. **துய்ப்ளே** என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியவர் ஆனந்தரங்கர்.
12. ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள் **25** ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன.
13. **பிரான்சுவா மர்த்தேனுக்குப்** பிறகு **கியோம் அந்த்ரே எபேர்** புதுச்சேரியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார்.
14. நைனியப்பரின் மைத்துனர் **திருவேங்கடம்** என்பார்.
15. திருவேங்கடம் என்பாரின் மகனே **ஆனந்தரங்கர்** ஆவார்.
16. ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் **12 தொகுதிகளாகத்** தமிழில் வெளிவந்துள்ளன.
17. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் **சாமுவேல் பெப்பிசு** ஆவார்.
18. ஆனந்தரங்கர் **06-09-1736** முதல் **11-07-1761** வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார்.
19. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு இந்தியாவின் **முதன்மையான** நாட்குறிப்பாகும்.
20. **இந்தியாவின் பெப்பிசு** என்று அழைக்கப்படுபவர் ஆனந்தரங்கர் ஆவார்.
21. 1758 ஆம் ஆண்டு இறுதியில் சென்னைக் கோட்டை முற்றுகையை **லல்லி** என்பார் தொடங்கியுள்ளார்.
22. ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி **வணிகச் செய்திகளையே** விவரித்துள்ளது.
23. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு **ஆறு திங்கள்** தேவைப்பட்டன.

**III. குறுவினா:**

**1. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**

08-06-1746 ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன. இது பற்றி ஆனந்தரங்கர், "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர் பெற்று எழுந்துவந்தது போலவும், நீண்ட நாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற் போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். இதுவே ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

**2. டைரி என்ற சொல் எப்படி உருவாகியது?**

டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான டைஸ் என்ற சொல்லில் இருந்து டைரி என்ற சொல் உருவாகியது.

**3. ஆனந்தரங்கர் ஆற்றிய பணி யாது?**

பிரெஞ்சுக் கிழக்கிந்திய உரை பெயர்ப்பாளராகவும் துய்ப்ளே என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.



PROOF COPY

www.tnpscjob.com

**4. ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள் எதனை விளக்குவதாகத் திகழ்கின்றன?**

ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள் 25 ஆண்டு காலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன. அக்காலத்திய பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலமாகவும் ஆவணமாகவும் இலக்கியமாகவும் இவருடைய நாட்குறிப்புகள் திகழ்கின்றன.

**5. ஆனந்தரங்கரின் பிறப்பு பற்றி எழுதுக.**

ஆனந்தரங்கர் 1709 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30 ஆம் நாள் சென்னையில் உள்ள பெரம்பூரில் பிறந்தார்.

**6. தந்தையை இழந்தவுடன் ஆனந்தரங்கர் என்ன செய்தார்?**

தம்முடைய பதினேழு வயதில் தந்தையை இழந்த ஆனந்தரங்கர், பிரெஞ்சு மேலதிகாரி அவனுவார் உதவியால் பரங்கிப்பேட்டை நெசவுச்சாலைக்கும் சாயம் துவைக்கும் கிடங்குக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார்.

உழைப்பும் உண்மையும் உறுதியும் மிக்க ஆனந்தரங்கர் பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே காலத்தில் தலைமைத் துவிபாஷியாகப் பணியாற்றினார். வல்லாண்மை மிக்க பிரெஞ்சு ஆட்சியரின் நம்பிக்கைக்கு உரியவராக, மிகுந்த அரசியல் செல்வாக்குடன் திகழ்ந்தார்.

**7. ஆனந்தரங்கர் தம்முடைய நாட்குறிப்பில் எவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதி உள்ளார்?**

ஆனந்தரங்கர், தம்முடைய நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதியுள்ளார்.

**8. இந்தியாவின் பெப்பிசு - குறிப்பு வரைக.**

உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவர். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை (1660 - 1669) நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06-09-1736 முதல் 11-07-1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்.

**9. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு குறித்து உ.வே.சா கூறுவது யாது?**

'தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன' என்பதே ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு குறித்து உ.வே.சா கூறுவதாகும்.



www.tnpscjob.com

**10. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு குறித்து பாரதியின் கருத்து யாது?**

'அந்தக் காலத்தில் நடந்த செய்திகளை எல்லாம் முக்கியமானது, முக்கிய மில்லாதது என்று கூடக் கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர்' என்பதே பாரதியின் கருத்து ஆகும்.

**11. புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் பணியாற்றிய தமிழ் மாலுமி யார்?**

புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் பணியாற்றிய தமிழ் மாலுமி அழகப்பன் ஆவார்.

**12. ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ள பல்வேறு விதமான வராகன்கள் யாவை?**

புதுச்சேரிப் பிறை வராகன், சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன், பரங்கிப்பேட்டை வராகன், ஆரணி வராகன் முதலிய ஆனந்த ரங்கர் குறிப்பிட்டுள்ள பல்வேறு விதமான வராகன்கள் ஆகும்.

**13. ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

1. ஆனந்தரங்கன் கோவை - தியாகராய தேசிகர்
2. ஆனந்தரங்கன் பிள்ளைத் தமிழ் - புரவலேறு அரிமதி தென்னகன்
3. வானம் வசப்படும் - பிரபஞ்சன்

**14. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு எப்போதுடன் முடிவடைந்தது?**

1936 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் நாள் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டு காலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவு செய்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 1761 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது.

**IV. சிறுவினா:**

**1. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.**

ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதை வெளிப்படுத்தும் செய்திகளுள் சிலவற்றைக் காண்போம்.

10-09-1736 ஆம் நாள் குறிப்பு பிரெஞ்சு ஆளுநர் டுமாச் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றதை விளக்குகிறது. பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை, 1746இல் கைப்பற்றியதையும் அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்வர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டதையும் நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.

தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றியதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படை யெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றை

PROOF COPY



www.tnpscjob.com

எல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார். 1758 ஆம் ஆண்டு இறுதியில் சென்னைக் கோட்டை முற்றுகையை லல்லி என்பார் தொடங்கியுள்ளார். கோட்டையை இடித்தும், வீடுகளைத் தரைமட்டமாக்கியும், மதிலை இடித்து அகழியைத் தூர்த்தும் கூடக் கோட்டையை லல்லியால் கைப்பற்ற முடியவில்லை. அக்கோட்டையின் கவர்னர் மேஸ்தர் பிகட் மகத்தா வெற்றி பெற்றார்.

**2. ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள் குறித்து எழுதுக.**

**ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள் வருமாறு:**

480 காசு - ஒரு ரூபாய்
60 காசு - 1 பணம்
8 பணம் - 1 ரூபாய்
24 பணம் - 1 வராகன்
1 பொன் - 1/2 வராகன்
1 வராகன் - 3 அல்லது 3.2 ரூபாய்
1 மோகரி - 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம்
1 சக்கரம் - 1/2 வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம்

**3. ஆனந்தரங்கரின் திறமைகள் குறித்து எழுதுக.**

இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் இடையே போர் மூண்டதால் கப்பல் வணிகம் பெரிதும் தடைப்பட்டது. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை 1745 ஆம் ஆண்டில் தடைபட்டுப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது. புதுச்சேரி வணிகம் முழுவதும் வீழ்ந்தது. மக்கள் எல்லோரும் கப்பல் வருகையையே எதிர்பார்க்கத் தொடங்கினர். ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடப் பணம் இல்லாமல் ஆளுநர் துன்பப்பட்டார். இந்நிலையில் 08-06-1746 ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன. இது பற்றி ஆனந்தரங்கர், “கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர் பெற்று எழுந்துவந்தது போலவும், நீண்ட நாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற் போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது” என்று நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

இதுவே ஆனந்தரங்கரின் திறமை ஆகும்.

**V. நெடுவினா:**

**1. தாம் வாழ்ந்த கால கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.**

ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18 ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பண்பாடு, சமயம், சாதி, நீதி,

PROOF COPY



www.tnpscjob.com

வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளை ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார்.

11-06-1739 ஆம் நாள் புதுச்சேரியின் ஆளுநர் துய்மா பிறப்பித்த ஆணையில், புதுச்சேரி பட்டணத்திற்குள்ளேயும், சம்பாக் கோவிலுக்குத் தெற்காகப் போகிற உப்பங்கழி இடத்திலும் பட்டணத்தின் வீதிகள் எவ்விடத்திலும் காலைக்கடன் கழிப்பவர்களிடம் ஆறு பணம் தண்டம் விதிக்கப்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. மீறியவர்களிடம் இருந்து பெறப்பட்ட தண்டத் தொலையில் இரண்டு பணம் பிடித்துக் கொடுப்பவருக்கும், மீதி நான்கு பணம் சாவடிக்கும் உரியது என்று அறிவிக்கப்பட்டது. இது தெரியாமல் பலரும் தண்டம் கட்டியதாக ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நீதி வழங்குதல், தண்டனை அளித்தல் முதலிய செய்திகளையும் இவருடைய நாட்குறிப்பு பதிவு செய்துள்ளது. பல்வேறு காரணங்களுக்காக மரண தண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித் துள்ளது. கணக்கு வரவு செலவுப் பட்டியல் என அச்செய்திகள் நீண்டுள்ளன. ஆனந்தரங்கரும் பிறரும் வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளதை உணர முடிகிறது. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் வணிகர் பலரைப் பங்குதாரராகக் கொண்ட கூட்டு நிறுவனம் ஆகும். தமது மூலதனத்திற்கு ஏற்ப ஒவ்வோராண்டும் எத்தனை கப்பல்களைக் கீழை நாடுகளுக்கு அனுப்புவது என்பது முன்பே திட்டமிடப்பட்டது. புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் அழகப்பன் என்ற தமிழ் மாலுமி பணியாற்றியதையும் அவர் பதிவு செய்துள்ளார்.

புதுச்சேரியில் பேரிடர் நிகழ்ந்தபோது மக்கள் எல்லாம் உணவும் நீரும் இன்றி வாடியுள்ளனர். அப்போது ஒழுகரையிலே கனகராயர், பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியதை ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் பதிவு செய்து உள்ளார்.

இவ்வாறு தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை அறியலாம்.

## இயல் - 7
## காலத்தை வென்ற கலை

**I. சரியான விடை தேர்க**

**1. கூற்று-1: தஞ்சை பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார். கூற்று-2: அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.**

அ. கூற்று 1 சரி கூற்று 2 தவறு. ஆ. கூற்று இரண்டுமே தவறு



PROOF COPY
www.tnpscjob.com

இ. கூற்று 1 தவறு கூற்று 2 சரி. ஈ. கூற்று இரண்டும் சரி

**விடை: ஈ. கூற்று இரண்டும் சரி**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. **கலையும் அறிவியலும்** மனிதகுல வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்தவை.
2. மனிதனின் படைப்புத் திறனால் உருவானது **கலையாகும்.**
3. ஆயிரம் ஆண்டுகள் கடந்ததும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் **தஞ்சைப் பெரிய கோவிலின்** கட்டடக்கலை நுட்பம் நம்மை வியப்படையச் செய்கிறது.
4. பெரிய கோவிலின் கோபுரங்களில் உயரமானது **கேரளாந்தகன் கோபுரம்.**
5. கேரளாந்தகன் திருவாயிலை அடுத்து உள்ளது **இராசராசன் திருவாயில்.**
6. கோபுரமென்பது **வாயில்களின்** மேலே அமைக்கப்படுவது.
7. விமானமோ **அகநாழிகையின்** மேல் அமைக்கப்படுவது.
8. **கருவறையைத்தான்** அகநாழிகை என்று அழைப்பார்கள்.
9. நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் **தஞ்சைப் பெரிய கோவில்.**
10. கற்றளி என்பது ஏழாம் நூற்றாண்டில் **இரண்டாம் நரசிம்ம வர்மன்** என்னு பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவம்.
11. கோவில் என்பது வெறும் **வழிபடும் தலம்** மட்டுமன்று.
12. கோவிலில் வளர்க்கப்பட்ட அருங்கலைகள் **இசை, நடனம், நாடகம்** போன்றவை.
13. இராசசிம்மேச்சுரம் என்று அழைக்கப்பட்ட கோவில் **காஞ்சிபுரம் கைலாச நாதர் கோவில்.**
14. ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் **புதுமை** என்று பொருள்.
15. தஞ்சைக் கோவிலில் **நத்தியும் சிகரமும்** ஒற்றைக் கல்லால் ஆனது.
16. தஞ்சைக் கோவிலில் உள்ள பெரிய நந்தியும் **மண்டபமும்** நாயக்கர் காலத்தது.
17. **சோழர் காலத்து நந்தி** தற்போது தென்புறத் திருச்சுற்றில் உள்ளது.
18. தமிழக அரசின் சின்னம் **கோவில் கோபுரம்.**
19. நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபு **இரண்டாம் குலோத்துங்கச் சோழன்** காலத்திலிருந்து தொடங்கியது.
20. கோவில்களில் மிகவுயர்ந்த கோபுரத்தை எழுப்பியது **விஜயநகர அரசு.**
21. இராசராசனின் பட்டத்தரசி **ஒலோகமாதேவி.**
22. இரண்டு, மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோவில் கட்டி வந்த காலத்தில் புதிய மரபு படைத்தவன் **இராசராசன்.**

**III. குறுவினா:**

1. **இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை? இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள்:** 1. நாகரம், 2. வேசரம், 3. திராவிடம்.
2. **ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?**



www.tnpscjob.com

ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாக பணிபுரிந்திருக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

3. **ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணப்படும் பெண் அதிகாரிகளின் பெயர்கள் யாவை?**
ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணப்படும் பெண் அதிகாரிகளின் பெயர்கள்: 1. எருதந் குஞ்சர மல்லி, 2. சோமயன் அமிர்தவல்லி.

4. **கேரளாந்தகன் வாயில் கோபுரம் எது? ஏன்?**
பெரிய கோவிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988ஆம் ஆண்டு சேர நாட்டை வெற்றி கொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்குக் கேரளாந்தகன் வாயில் கோபுரம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

5. **சோழர்களின் தனி அடையாளம் என்ன?**
சோழர்களின் தனி அடையாளம் தஞ்சைப் பெரிய கோவிலின் இரண்டு கோபுரங்கள் இருப்பதாகும். முதலில் உள்ளது கேரளாந்தகன் திருவாயில், அதை அடுத்து உள்ளது இராசராசன் திருவாயில்.

6. **கற்றளிக் கோவில்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**
1. மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், 2. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், 3. பனைமலைக் கோவில்

7. **தஞ்சைப் பெரிய கோவில் யாரால் கட்டப்பட்டது?**
11ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை 1003ஆம் ஆண்டு தொடங்கி 1010ஆம் ஆண்டு வரை கட்டினான். 2010இல் இக்கோவிலின் 1000ஆவது ஆண்டு நிறைவடைந்தது.

8. **முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப் பெரிய கோவில் எது?**
முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப் பெரிய கோவில் தஞ்சைப் பெரிய கோவில்.

9. **மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறும் செய்தி யாது?**
செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை இல்லாமலே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் என்று அழைக்கப்பட்ட முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் குடைவரைக் கோவில்களை அமைத்ததாக மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறுகின்றன.

10. **தஞ்சைப் பெரிய கோவில் எந்தக் கலைப்பாணியைச் சேர்ந்தது?**
தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப் பாணியைச் சேர்ந்தது.

11. **தஞ்சைப் பெரிய கோவிலை இராசராச சோழன் தான் கட்டினான் என்று உறுதி செய்தவர் யார்?**



PROOF COPY
www.tnpscjob.com

1886ஆம் ஆண்டு ஜெர்மனி அறிஞர் ஷீல்ஸ் ஆறு ஆண்டுகள் தீவிரமாகக் கல்வெட்டுகளைப் படியெடுத்து வாசித்து இக்கோவிலை இராசராச சோழன் தான் கட்டினான் என்று உறுதி செய்தார்.

**12. எஸ்.கே. கோவிந்தசாமி எங்கு, என்ன பணிபுரிந்தார்?**

1930ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுடையாளராகப் பணிபுரிந்தார்.

**13. திருவாயில் என்று எதனைச் சொல்வார்கள்?**

வெளிக் கோபுரத்தை உயரமாகவும் உட்கோபுரத்தை உயரம் குறைவாகவும் இரண்டு கோபுரங்களைக் கட்டும் புதிய மரபைத் தோற்றுவித்தவன் இராசராசன். அதனைத் திருவாயில் என்று சொல்வார்கள்.

**14. இரண்டு வாயில்கள் இருக்கும் கோவில்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

1. கங்கை கொண்ட சோழபுரம், 2. தாராசுரம், 3. திரிபுவனம் ஆகிய இடங்களில் இரண்டு வாயில்கள் உள்ளன.

**15. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய தச்சர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

வீரசோழன் குஞ்சரமல்லன் இராசராசப் பெருந்தச்சன், மதுராந்தகனான நித்தவினோதப் பெருந்தச்சன், இலத்தி சடையனான கண்டராதித்தப் பெருந் தச்சன் முதலியன ஆகும்.

**IV. சிறு வினா:**

**1. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?**

**ஃபிரெஸ்கோ ஓவியங்கள்:** ஃபிரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் புதுமை என்று பொருள். சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது. இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் காணலாம்.

தஞ்சைப் பெரிய கோவிலில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக் கூடம், சாந்தார நாழிகை பகுதிச் சுவர்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன. அதில் தட்சிணாமூர்த்தி ஓவியம், சுந்தரர் வரலாறு, திரிபுராந்தகர் ஓவியம் முதலியன சுவர் முழுவதுமாகப் பெரிய அளவில் வரையப்பட்டுள்ளன. இவையெல்லாம் ஃபிரெஸ்கோ வகை ஓவியங்கள்.

**கற்றளிக் கோயில்கள்:** செங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவது போல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர். ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்ம வர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவம் இது. மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். அந்த வகையில் முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப் பெரிய கோவில் தஞ்சைப் பெரிய கோவில்தான்.

PROOF COPY



www.tnpscjob.com

**2. தஞ்சைக் கோவில் பெரிய கோவில் என்று அழைக்கப்பட காரணம் யாது?**

தஞ்சைப் பெரிய கோயில் நம் நாட்டில் உள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும், உயரமானதும் ஆகும். இராராச சோழனால் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று இது கட்டி முடிக்கப்பட்டது. தட்சிண மேரு என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட இக்கோவில் விமானம் 216 அடி உயரம் உடையது. கருவறை விமானம் 13 தளங்களை உடையது. எனவே தஞ்சைக் கோயில் பெரிய கோவில் என அழைக்கப்படுகிறது.

**3. பழங்காலத்தில் கோயில்கள் எப்படிக் கட்டப்பட்டன?**

தொடக்கத்தில் மண்ணால் கட்டி மேலே மரத்தால் சட்டகமிட்டார்கள். தில்லைக் கோயில், குற்றாலநாதர் கோயில் அவ்வாறு கட்டப்பட்டவை. அதன் மேல் செப்பு, பொன் தகடுகளால் கூரை வேய்ந்தார்கள். அடுத்த நிலையில் செங்கற் களை அடுக்கிக் கோயில் கட்டினார்கள். அந்த வகையில் சோழன் செங்கணான் எழுபத்தெட்டுக் கோயில்களைக் கட்டியிருப்பதாகத் திருநாவுக்கரசர் தம் பதிகமொன்றில் கூறுகிறார்.

**4. கோயில்கள் ஏன் பெரிதாகக் கட்டப்பட்டன?**

கோயில் என்பது வெறும் வழிபடும் தலம் மட்டுமன்று. அங்கே இசை, நடனம், நாடகம் போன்ற அருங்கலைகள் வளர்க்கப்பட்டன. அது மக்கள் ஒன்றுகூடும் இடமாகவும் இருந்தது. எனவே மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகள் அனைத்துமே அங்கே கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டன. அதுமட்டுமல் லாமல் பஞ்ச காலத்தில் மக்களுக்கு உதவுவதற்கான தானிய கிடங்குகளும் கோயிலுக்குள் அமைக்கப்பட்டு இருந்தன. கருவூலமாகவும் மருத்துவமனை யாகவும் போர்க்காலங்களில் படை வீரர்கள் தங்கக்கூடிய இடமாகவும் கோயில்கள் பயன்பட்டன. எனவே கோயில்கள் பெரிதாகக் கட்டப்பட்டன.

**5. நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபு குறித்து எழுதுக.**

நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபு, இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்திலிருந்து தொடங்கியது. கீழ்ப்பகுதியைக் கல்லாலும் மேற்பகுதியைச் செங்கற்களாலும் கட்டியிருப்பர். புகழ்பெற்ற கோயில்கள் பலவற்றிலும் மிகவுயர்ந்த கோபுரத்தை எழுப்பியது விஜயநகர அரசு, காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் உள்ள கோபுரங்கள் எல்லாமே 150 அடிக்கு மேல் உயரம் உள்ளவை.

**V. நெடு வினா:**

**1. கல்லும் கதை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.**

11ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சை பெரிய கோயிலை 1003ஆம் ஆண்டு தொடங்கி 1010ஆம் ஆண்டு வரை



PROOF COPY

www.tnpscjob.com

கட்டினான். 2010ல் இக்கோயிலின் 1000ஆவது ஆண்டு நிறைவடைந்தது. தஞ்சைப் பெரிய கோயில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோயில்களிலேயே பெரியதும், உயரமானதும் ஆகும். இராசராச சோழனால் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று இது கட்டி முடிக்கப்பட்டது. தட்சிண மேரு என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட இக்கோயில் விமானம் 216 அடி உயரம் உடையது. கருவறை விமானம் 13 தளங்களை உடையது. செங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவது போல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர். அந்த வகையில் முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கோயில் இதுதான். 1930ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த எஸ்.கே. கோவிந்தசாமி தஞ்சைப் பெரிய கோயில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகை பகுதிச் சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டதை முதன்முதலில் கண்டறிந்தார். அதில், தட்சிணாமூர்த்தி ஓவியம், சுந்தரர் வரலாறு, திரிபுராந்தகர் ஓவியம் முதலியன சுவர் முழுவதுமாகக் பெரிய அளவில் வரையப்பட்டுள்ளன. இவை ஃபிரெஸ்கோ வகை ஓவியங்களைச் சேர்ந்தவை.

தஞ்சைக் கோயிலில் நந்தியும் சிகரமும் ஒற்றைக் கல்லால் ஆனது. இங்குள்ள நந்தி சோழர் காலத்தைச் சார்ந்தது அன்று. சோழர் காலத்து நந்தி தற்போது தென்புறத் திருச்சுற்றில் உள்ளது. அந்தச் சிகரத்திலுள்ள பிரமந்திரக் கல் ஒற்றைக்கல் அன்று. பதின்மூன்று தளங்களை உடைய கருவறை விமானத்தின் மேல் எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டன.

12ஆம் நூற்றாண்டிலிருந்து கோபுரங்கள் தனிச்சிறப்புப் பெற்றன என்று சொல்லலாம். வெளிக் கோபுரத்தை உயரமாகவும் உட்கோபுரத்தை உயரம் குறைவாகவும் இரண்டு கோபுரங்களைக் கட்டும் புதிய மரபைத் தோற்றுவித்தான் இராசராசன். அதனைத் திருவாயில் என்று சொல்வார்கள். கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம் ஆகிய இடங்களில் இரண்டு வாயில்கள் இருப்பதைப் பார்க்கலாம்.

நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப் பெறும் மரபு, இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்திலிருந்து தொடங்கியது. புகழ்பெற்ற கோயில்கள் பலவற்றிலும் மிகவுயர்ந்த கோபுரத்தை எழுப்பியது விஜயநகர அரசு.

இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் அரசுப் பணிகளில் இருந்திருக் கிறார்கள். இராசராசனின் பட்டத்தரசி ஓலோகமாதேவி திருவையாற்றில் கட்டிய கோவில் ஒலோகமாதேவீச்சுரம் என்று வழங்கப்படும். அந்தக் கோயிலில்



PROOF COPY
www.tnpscjob.com

உள்ள கல்வெட்டில்,

***உடன் கட்டத்து அதிகாரம் செய்கிற***
***கோவலூர் உடையான் காடன்***
***நூற்றென்மரையும் அதிகாரிச்சி***
***எருதந் குஞ்சர மல்லியையும்***

என்ற வரிகளில் எருதந் குஞ்சர மல்லி என்ற பெண் அதிகாரியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே கோயிலில் முதலாம் இராசாதிராசன் காலத்திலும் ஓர் அதிகாரிச்சி பற்றிய குறிப்பு இருக்கிறது. அவர் பெயர் அதிகாரிச்சி சோமயன் அமிர்தவல்லி. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணி புரிந்திருக்கின்றனர் என்பதற்கு இக்கல்வெட்டுகள் சான்றாகும்.

கற்களே கிடைக்காத காவிரிச் சமவெளிப் பகுதியில் உயரத்தில் இருக்கும் ஒரு கற்கோயில் தஞ்சைப் பெரிய கோயில். இரண்டு, மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோயில் கட்டி வந்த காலத்தில் புதிய மரபு படைத்தவன் இராசராசன்.

தஞ்சைக் கோயிலில் கோயிலைக் கட்டிய தச்சர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுளளது. வீரசோழன் குஞ்சரமல்லன் இராசராசப் பெருந்தச்சன், இலத்தி சடையனான கண்டராதித்தப் பெருந்தச்சன். எடுப்பித்தவன் பெயர் மட்டுமே பெறிக்கப்படும் நிலையில் தச்சர்களின் பெயரும் இந்த அழியாக் கோயிலில் பதிந்திருப்பது மேலும் ஒரு புதுமை.

இவ்வாறாக, கல்லும் கதை சொல்லும் என்று தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு பொருந்துவதை உணர முடிகிறது.

## இயல் - 8

## காற்றில் கலந்த பேரோசை - சுந்தர ராமசாமி

**I. சரியான விடை தேர்க.**

1. ‘ஜனப் பிரளயம்’ என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எது?
அ. மக்கள் அலை, ஆ. உயிர் அலை, இ. மக்கள் வெள்ளம்,
ஈ. மக்கள் அவை. **விடை: இ. மக்கள் வெள்ளம்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நாஞ்சில் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ளது **<u>தோவாளை</u>** என்னும் இடம்.
2. **<u>அரசியல் சிந்தனையிலும் பொதுவுடைமைச் சிந்தனையிலும்</u>** கூர்வாளாய் மெருகேற்றிக் கொண்டவர் ஜீவா.
3. ஜீவாவின் மறைவு **<u>18-01-1963.</u>**
4. மின்சக்திக்கு **<u>ஒளியுருவம்</u>** கொடுத்தவர் ஜீவா.
5. **<u>பேச்சுக்கலை</u>** ஜீவா பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.



PROOF COPY
www.tnpscjob.com

**III. குறுவினா:**

1. **'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல' என்னும் உவமையை ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பிடுக.**

   விசயத்தை வண்டி வண்டியாகக் குவித்துச் சின்ன மூளைகளைக் குழப்பி வாதனைக்கு உள்ளாக்குவது பல பிரசங்கிகளுக்குப் பொழுதுபோக்கு. ஜீவா இதற்கு எதிரி. ஒரு சில கருத்துகளை விரிவாகச் சொல்லிப் புரியவைத்து விட்டால் போதும் என்பதே அவருடைய எண்ணம்.

   வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் இரண்டு கைப்பிடி விசயம்தான் எடுத்துக் கொள்வார். மேடை மீது ஏறி அதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும். பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும்; குடை குடையாய் இறங்கி வரும்; மாலை மாலையாய் இறங்கிவிடும்.

2. **ஜீவாவின் நெஞ்சோடு வளர்ந்த கனவு எது?**

   மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் முன்னின்று தலைமை தாங்கி இட்டுச் சென்று, அதி உன்னதமான ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதாகும்.

3. **ஜீவா பற்றிக் குறிப்பு வரைக.**

   ஜீவா என்றழைக்கப்படும் ப.ஜீவானந்தம் தொடக்கத்தில் காந்தியவாதியாகவும் பிறகு சுயமரியாதை இயக்கப் போராளியாகவும் பொதுவுடைமை இயக்கத் தலைவராகவும் செயல்பட்டார். சிறந்த தமிழ்ப் பற்றாளர். எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்தவர்.

4. **சுந்தர ராமசாமி - குறிப்பு வரைக.**

   நாகர்கோவிலைச் சேர்ந்த சுந்தர ராமசாமி, நவீனத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். பசுவய்யா என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர்.

5. **சுந்தர ராமசாமி எழுதிய புதினங்கள் யாவை? சிறுகதைகள் யாவை?**

   **புதினங்கள்:** ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள் முதலியன.

   **சிறுகதைகள்:** ரத்னாபாயின் ஆங்கிலம், காகங்கள்.

6. **சுந்தர ராமசாமியின் மொழிபெயர்ப்பு பற்றி எழுதுக.**

   செம்மீன், தோட்டியின் மகன் ஆகிய புதினங்களை மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார்.

**IV. சிறுவினா:**

1. **ஜீவாவின் பேச்சுநடை குறித்து சுந்தர ராமசாமி கூறுவன யாவை?**

   **ஜீவாவின் பேச்சுநடை குறித்து சுந்தர ராமசாமி கூறுவன:** பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும். அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு



PROOF COPY

www.tnpscjob.com

நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும். பேச்சுக்கலையை விளகும் பாடப் புத்தகங்கள் எத்தனையோ விதிகள் கூறும் ஜீவா அவற்றைக் காலடியில் போட்டு மிதித்தவர். அவருடைய பாணி இரவல் பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல. நம் நாட்டு மக்களின் தரத்தையும் அனுபவ அறிவையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்துகொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலை நோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அது.

அதோடு, உழுது விதைத்தால் நல்ல அறுவடை காண வேண்டும் என்பதில் ஜீவாவுக்கு நிர்பந்தமுண்டு. இந்தத் தேசத்தில் பேச்சு, அதற்குரிய பயனைத் தர வேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.

2. **ஜீவானின் கொள்கையும் நம்பிக்கையும் குறித்து எழுதுக.**

'மனிதச் சிந்தனையே, கற்பனைக்கும் எட்டாத போராற்றலே, நீ சிந்தித்தவற்றில் சிறந்தவற்றை என்னிடம் ஒரே ஒரு முறை கூறு. அதனை நான் எட்டுத் திசையிலும் பரப்பி மனித ஜாதியை நீ சொன்ன இடத்திற்கு அழைத்து வருகிறேன். சந்தேகப்படாதே. செய்து காட்டுகிறேன். என்னைப் பயன்படுத்திக் கொள். முடிந்தமட்டும் என்னைப் பயன்படுத்திக் கொள். கைம்மாறு வேண்டாம். என்னை நீ பயன்படுத்திக் கொள்வதே நீ எனக்குத் தரும் கைம்மாறு.' இதுவே அவருடைய பிரார்த்தனை. இந்த அடிப்படையான மனோபாவத்திலிருந்து பிறந்தது அவருடைய கொள்கை; அவருடைய நம்பிக்கை.

**V. நெடுவினா:**

1. **சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.**

**நெஞ்சோடு வளர்ந்த கனவு:**

ஜீவா தமக்கென ஒரு தத்துவத்தைச் சிருஷ்டித்துக் கொண்டவர் அல்லர். அவர் தான் நம்பிய தத்துவத்தை, அச்சில் உயிரிழந்து கிடக்கும் அதன் சித்தாந்தக் கருத்துகளைத் தமது அரிய திறமையால், கலை நோக்கால், கற்பனையால், உயிர் பெறச் செய்து, மனிதன் முன் படைத்தவர். மின் சக்திக்கு ஒளியுருவம் கொடுத்தவர் அவர்.

அவருடைய வாழ்வை, அதன் மையமான போக்கை எண்ணிப் பார்க்கையில், ஒரு கனவு, சிறு பிராயத்திலிருந்தே நெஞ்சோடு வளர்ந்த ஒரு கனவு, அவருக்கு இருந்திருக்கத்தான் வேண்டும் என்று தோன்றுகிறது. மனித வெள்ளத்தை அவர்களில் ஒருவனாய் முன்னின்று தலைமை தாங்கி இட்டுச் சென்று, அதி உன்னதமான ஓர் எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே அது.



PROOF COPY
www.tnpscjob.com

**ஆற்றில் விழுந்த கிளை:**

ஆற்றில் ஒரு கிளையைப் போடுகிறோம். அது ஆற்றோடு செல்கிறது. நீரோட்டத்தில் நீந்திக் கன வேகமாக ஓடுகிறது. சுழியில் அகப்பட்டுச் சுழல்கிறது. சில சமயம் கரையோடு ஒதுங்குகிறது. மீண்டும் ஓடுகிறது. ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த சொரிமுத்து ஆற்றில் கிளையைப் போட்டாற் போல் வாழ்ந்திருக்க வேண்டியவர் தான். ஆனால், அவரோ இயற்கையின் விதிகளை மறுத்து எதிர்நீச்சல் போடத் துணிந்தார். அவரை அறிஞர் என்கிறோம்; கற்றுக் கொடுக்க யாருமில்லை. பழந்தமிழ் இலக்கியத்தை யாரும் அவர் காதில் ஓதவில்லை. சொரிமுத்துவுக்கும் தலைவர் ஜீவாவுக்குமுள்ள இடைவெளி கொஞ்சம் தூரமல்ல. அதையொரு கணம் எண்ணிப் பார்த்தால் அவருடைய சாதனை தெரியவரும்.

**'என் வாழ்வு என் கைகளில்':**

'என் வாழ்வு என் கைகளில்' என்று நம்பியவர் அவர். அவருடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கிறபோது அவருடைய நம்பிக்கை பலித்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். கடவுளின் 'முன்னேற்பாடுகளை' முடிந்தமட்டும் அவர் தகர்த்து எறிந்துவிட்டார். நீரில் விழுந்த கிளை மலைக்குச் சென்றுவிட்டது. மரணம் இன்னும் கடவுளுக்குத் தான் சொந்தம். பேரோசை காற்றில் கலந்துவிட்டது.

இவ்வாறு சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்குப் பொருந்துவதாக அமைகிறது.

## இயல் - 9
## சித்தர் உலகம்

**I. சரியான விடையை தேர்க.**

**1. சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் என்பது யார் கூற்று?**

அ. பாம்பாட்டிச் சித்தர், ஆ. சிவவாக்கியர், இ. திருமூலர், ஈ. பட்டினத்தார்.

**விடை: அ. பாம்பாட்டிச் சித்தர்.**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சமயங்களில் இருக்கும் **தேவையற்ற சடங்குகளை** விரும்பாதவர்களாகச் **சித்தர்கள்** அறியப்படுகின்றனர்.
2. சித்தர்கள் **மனித வாழ்வியல்** குறித்த **மெய்யியல் கோட்பாடுகளை** முன்வைத்துள்ளனர்.
3. இயல்பான **மனித நேயம்** கொண்டவர்கள் சித்தர்கள்.
4. தமிழ் இலக்கிய வரலாற்றில் **சித்தர்களுக்கென்று** சிறப்பிடம் உள்ளது.
5. சித்தர்கள் **'பிறப்பறுத்தவர்கள்'** என்று அழைக்கப்பட்டனர்.
6. 'சித்தர்கள்' என்றால் **நிறைவடைந்தவர்** என்று பொருள்.
7. சித்தர்களின் ஆதிசித்தராகக் கருதப்படுபவர் **திருமூலர்.**



PROOF COPY
www.tnpscjob.com

8. சித்தர்களில் கலகக்காரர் என்று கருதப்படுபவர் **சிவவாக்கியர்.**
9. சித்தர்களைப் பொறுத்த அளவில் வீடுபேறு என்பதே கூடத் **'தன்னை அறிதல்'** தான்.
10. தன்னை அறிவதற்கு **'நான்'** என்னும் அகங்காரம் அழிய வேண்டும்.
11. அறிஞர் க.கைலாசப்தி சித்தர்களை **'கிளர்ச்சியாளர்கள்'** என்று கூறுகின்றார்.
12. ஒவ்வொரு சித்தரும் ஓர் **ஆன்மீக இரசவாதி.**

**III. குறுவினா:**

**1. சித்தர்கள் தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளனர்?**
தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர்களுக்கென்று சிறப்பிடம் உண்டு. அவர்கள் வாழும் கலையை அறிந்தவர்கள்; விழிப்பு நிலையை உணர்ந்தவர்கள்; சித்தத்தை வென்று 'சித்து' என்னும் பேரறிவினைப் பெற்றவர்கள். தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணப்படும் 'நிறைமொழி மாந்தர்' என்னும் சொல்லுக்கும், சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் இடம் பெறும் 'சித்தன்' என்னும் சொல்லுக்கும் உரியவர்கள்.

**2. 'சித்தர்கள்' யார்?**
'சித்தர்கள்' என்றால் நிறைவடைந்தவர் என்பது பொருள். தமிழில் 'சித்து' என்னும் சொல் மனம், கருத்து, ஆன்மா என்ற பொருள்களைக் கொண்டது. தமிழ்ப் பேரகராதியின்படி சித்தி என்ற சொல் மெய்யறிதல், வெற்றி, காரியம் கைகூடல் என்று பல பொருள்படும்.

**3. சித்தர் நோக்கம் யாது?**
'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதே சித்தர் நோக்கம்.

**4. ஞானத்தினால் மட்டுமே முத்தியை அடைய முடியும் என்பதே விளக்குக.**
தமிழ்ச் சித்தர் மெய்யுணர்வு, ஆன்மாவை உள்ளுணர்வினால் அறிவது. ஞானத்தினால் மட்டுமே முத்தியை அடைய முடியும். ஞானம் அல்லாத வேறு வழிகள் முத்தியை அளிக்காது. "ஞானத்தின் மிக்க அறிநெறி நாட்டில்லை" (பா. எண். 1467) என்கிற்து திருமந்திரம்.

**5. ஒவ்வொரு சித்தரும் ஓர் ஆன்மீக இரசவாதி எனக் கருதப்படக் காரணம் யாது?**
இரசவாதி எவ்வாறு தாழ்ந்த உலோகத்தைத் தங்கமாக மாற்றுகிறானோ அவ்வாறே சித்தரும் தம்முடைய உடலையும் உள்ளத்தையும் சார்ந்து நிற்கும் உயிரை எந்தச் சார்புமற்ற உயர்ந்த ஆன்ம நிலைக்கு மாற்றுகிறார். எனவே, ஒவ்வொரு சித்தரும் ஓர் ஆன்மீக இரவாதியாகிறார்.

**6. திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ள புகழ்மிக்க பாடலடிகளைக் குறிப்பிடுக.**
'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே', 'உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்' போன்றவை திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள புகழ் மிக்க பாடலடிகளாகும்.

PROOF COPY



www.tnpscjob.com

**7. சித்தர் மொழி யாது?**

அண்டத்தில் உள்ளது பிண்டம்; பிண்டத்தில் உள்ளது அண்டம் என்பது சித்தர் மொழி ஆகும்.

**8. சித்தர்கள் எவற்றை அறிந்திருந்தனர்?**

நாடிகளைப் பிடித்து நோய் அறியும் திறன் பெற்ற அவர்கள் மருந்து தயாரிக்கும் வேதியியல் கூறுகளையும் அறிந்திருந்தனர். சித்தர்கள் மரம், செடி, கொடி பற்றிய அறிவும் அவற்றின் இலை, பூ, காய், கனி என அனைத்திலும் நோய் தீர்க்கும் மருந்துகளை உருவாக்கும் அறிவும் உடையவர்களாக இருந்தனர்.

**9. 'மாங்காய்ப்பால்' - குறிப்பு வரைக.**

'மாங்காய்ப்பால்' எனும் சொல், குண்டலினி சக்தியை உச்சியில் ஏற்றி அமுதம் உண்ணும் நிலையைக் கூறும்.

**10. தமிழ் மொழியின் அறிவுப் பெட்டகம் எது?**

மருத்துவம், மந்திரம், இரசவாதம், யோக, ஞானம் போன்ற பல்துறைகளில் சித்தர்கள் பாடிய பாடல்கள் தமிழ்மொழியின் அறிவுப் பெட்டகம் எனலாம்.

**IV. சிறுவினா:**

**1. "சித்தர்கள் சமூக உணர்வு கொண்டவர்கள்" - இக்கூற்றை உங்கள் பாடப் பகுதி வாயிலாக மெய்ப்பிக்க.**

சித்தர் பாடல்கள் என்றதும் முதலில் நம் நினைவுக்கு வருவது அவர்களுடைய ஆழ்ந்த சமூகவுணர்வே ஆகும். அவர்கள் சமூகத்தில் நிலவிய பல்வேறு கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் பொருளற்ற செயல்களையும் போலிச் சடங்குகளையும் நெஞ்சுரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் கடுமையாகச் சாடியவர்கள். அதனால்தான், அறிஞர் க.கைலாசபதி, சித்தர்களை 'கிளர்ச்சியாளர்கள்' என்று கூறுகின்றார்.

இன்றைய சமூகத்தை மிகவும் அல்லல்படுத்தும் சாதிக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் பாடியவர்கள். 'சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?' என்று சிவவாக்கியரும், 'சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்' என்று பாம்பாட்டிச் சித்தரும் பாடியுள்ளனர்.

***'ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே***
***சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம்'*** **- பத்திரகிரியார்**

**2. சித்தர்கள் - காலமும் எண்ணிக்கையும் குறித்து எழுதுக.**

சித்தர்களின் ஆதி சித்தராகக் கருதப்படுபவர் திருமூலர். இவரது காலம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு அல்லது 6 ஆம் நூற்றாண்டு என்பர். சித்தர்களில் கலகக்காரர் என்று கருதப்படும் சிவவாக்கியரின் காலம் 9 ஆம் நூற்றாண்டு. மற்றவர்கள் கி.பி 14 ஆம் நூற்றாண்டு முதல் வாழ்ந்தவர்கள் என்று கூறுவர். சித்தர் கலத்தைப் போலவே சித்தர்களின் எண்ணிக்கையும் ஆய்வுக்குரிய



PROOF COPY
www.tnpscjob.com

தாகவே உள்ளது. சித்தர் தொகை குறித்த பட்டியல்கள் ஒவ்வொன்றும் மாறுபடுகின்றன.

பதினெண் சித்தர்கள் என்ற வழக்கில் 18 என்பது எண்ணிக்கையைக் குறிக்கவில்லை. மாறாக அவர்கள் பெற்ற 18 பேறுகளைக் குறிக்கிறது என்னும் கருத்தும் உண்டு.

***'எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார் அப்பா***
***யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்'*** **- பாரதியார்.**

**3. சித்தர்களின் கடவுட் கொள்கை பற்றிக் கூறுக.**

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது திருமூலரின் கடவுட் கொள்கை. இதனையே பட்டினத்தாரும் 'ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு' என்று பாடுகிறார். மனிதர்கள் கடவுளின் பெயரால் கருத்து வேறுபாடு கொண்டு தமக்குள் கலகம் விளைவித்துக் கொள்வதில் சித்தர்களுக்கு உடன்பாடு இல்லை. 'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்', 'நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்' என்பன போன்ற பாடலடிகள் இதை மெய்ப்பிக்கின்றன.

**4. அட்டமா சித்திகள் எவை?**

**1. அணிமா -** அணுவைப் போல சிறுத்து நிற்கும் ஆற்றல். **2. மகிமா -** வரையறையற்று விரிந்து படரும் ஆற்றல். **3. லகிமா -** காற்றில் மிதக்கும் ஆற்றல். **4. கரிமா -** எங்கும் வியாபித்திருக்கும் ஆற்றல். **5. பிராகாமியம் -** இயற்கைத் தடைகளைக் கடக்கும் ஆற்றல். **6. ஈசத்துவம் -** படைக்கவும் அடக்கவும் கொண்ட ஆற்றல். **7. வசித்துவம் -** உலகப் படைப்புகளை எல்லாம் அடக்கி ஆளும் ஆற்றல். **8. காமாவசாயித்வம் -** விரும்பியதை முடிக்கும் ஆற்றல்.

**5. சித்தர்களின் குழூஉக்குறி குறித்து நீவிர் அறிவன யாவை?**

தமிழ்ச் சித்தர்களின் பாடல்கள் எளிமையாக இருப்பினும் மறைபொருள் கூற்றுகளாக, குழூஉக் குறிகளாகவே எழுதப்பட்டுள்ளன. அவை யோகம், தந்திரம், மருத்துவம் என்ற மூன்று கூறுகளையும் அறிந்தவர்களால் மட்டுமே பொருள் காணத் தக்கவையாக அமைந்திருக்கின்றன.

'மாங்காய்ப்பால்' எனும் சொல், குண்டலினி சக்தியை உச்சியில் ஏற்றி அமுதம் உண்ணும் நிலையைக் கூறும். இவ்வாறு குறியீட்டுச் சொற்கள் கொண்ட பாடல்கள் சித்தர் இலக்கியங்களில் குவிந்திருக்கக் காணலாம்.

***'தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே - ஒரு***
***தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே!***
***நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே - அங்கே***
***நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே'*** **- வள்ளலார்.**

சுருங்கக்கூறின் சித்தர்கள் எதைப் பாடினாலும் அதன் அடிப்படையிலேயே



PROOF COPY

www.tnpscjob.com

ஆய்ந்து சிந்தித்துப் பாடியுள்ளனர். ஆரவாரத்துக்கோ மேலோட்டமான பார்வைக்கோ அவர்களின் பாடல்களில் மருந்துக்கும் இடமில்லை. மருத்துவம், மந்திரம், இரசவாதம், யோகம், ஞானம் போன்ற பல்துறைகளில் சித்தர்கள் பாடிய பாடல்கள் தமிழ் மொழியின் அறிவுப் பெட்டகம் எனலாம்.

## இயல் - 10
## தாகூரின் கடிதங்கள்

**I. சரியான விடை தேர்க.**

**1. பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே**

அ. வழிபாடு, செய்தி, பயன்பாடு, ஆ. பயன்பாடு, வழிபாடு, செய்தி,
இ. வழிபாடு, பயன்பாடு, செய்தி, ஈ. வழிபாடு, பயன்பாடு, செய்தி.

**விடை: அ. வழிபாடு, செய்தி, பயன்பாடு**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. செய்தியை உரியவருக்குத் தெரிவிப்பதற்காக எழுதி அனுப்பப்படுவது **கடிதம்** ஆகும்.
2. ஐரோப்பாவிலும் **மனிதனுக்குத்தான்** முக்கியமான இடம்.
3. நமது நாட்டில் **மரங்களில்** மலரும் **பூக்கள்** பல உள்ளன.
4. **ஜாதீ** என்பது **முல்லை வகையில்** ஒரு பூ (சமேலி).
5. **ஸேவுந்தி** என்பது எந்த மலரின் பெயர் என்பது இன்று வரையிலும் பலரைக் கேட்டும் பதில் கிடைக்கவில்லை.
6. சாந்தி நிகேதனத்தில் இருக்கும் ஒரு மரத்தின் பெயர் **'பியால'** என்பதாகும்.
7. பரீட்சையில் தேற வேண்டின் **சரித்திரப்** பாடத்தைப் புறக்கணிக்க முடியாடு.
8. நமது தேசப்பற்று அந்தப் **புத்தக மூட்டையால்** உருவானது.
9. தாகூர் 1913 ஆம் ஆண்டு **கீதாஞ்சலி** என்ற கவிதை நூலின் ஆங்கில மொழிபெயர்ப்புக்காக இலக்கியத்துக்கான **நோபல் பரிசு** பெற்றார்.
10. **விஸ்வபாரதி பல்கலைக்கழகம்** நிறுவப்பட்ட ஆண்டு **1921.**
11. சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்கள் என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் **த.நா.குமாரசுவாமி.**
12. வங்க அரசு, தமிழ் வங்க மொழிகளுக்கு தாகூர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி **'நேதாஜி இலக்கிய விருது'** அளித்துச் சிறப்பித்துள்ளது.

**III. குறுவினா:**

**1. நாட்டுப் புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**

நாட்டுப் புறங்களில் இருக்கும்போது எல்லாவற்றையும் விழுங்கவல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது. பட்டணத்திலோ, மனித சமுதாயம் தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. அங்கே



www.tnpscjob.com

மனிதனுடைய கொடூரமான தன்மை வெளிப்படுகிறது. தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவதுகூட இல்லை.

2. **தாகூரின் கடிதங்கள் எவற்றை உள்ளடக்கியவை?**

கவித்துவ இயல்பு கொண்ட தாகூரின் கடிதங்கள் கற்பனை, நகைச்சுவை, ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கியவை.

3. **தாகூர் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டார்? எந்த வயதில் கவிதைகள் எழுதத் தொடங்கினார்?**

'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தம் 16 ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

4. **தாகூர் 'சர்' பட்டத்தைத் துறக்கக் காரணம் என்ன?**

1919 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலையால் மனம் வருந்திய தாகூர் ஆங்கிலேய அரசைக் கண்டித்து அவர்கள் வழங்கிய 'சர்' பட்டத்தைத் துறந்தார்.

5. **தாகூரை மக்கள் எப்படி அழைத்தனர்?**

தாகூரை மக்கள் 'குருதேவ்' என்று அன்போடு அழைத்தனர்.

6. **இந்தியாவின் நாட்டுப்பண், வங்காள தேசத்தின் நாட்டுப்பண் எது?**

தாகூரின் 'ஜனகணமன' என்னும் பாடல் இந்தியாவின் நாட்டுப் பண்ணாகவும், 'அமர் சோனார் பங்களா' என்னும் பாடல் வங்காள தேசத்தின் நாட்டுப் பண்ணாகவும் இன்றும் பாடப்பட்டு வருகின்றன.

7. **தாகூர் கற்றுத் தேர்ந்த மொழிகள் யாவை?**

தாகூர் கற்றுத் தேர்ந்த மொழிகள் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, வங்கம், பாலி, ஆங்கிலம் ஆகியவை ஆகும்.

**IV. சிறுவினா:**

1. **தாமஸிகம் என்றால் என்ன?**

நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு. தோட்டக்காரனின் கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்ச் செப்பினுள் வழக்கம் போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை. இதைத்தான் தாமஸிகம் அதாவது 'மெடீரியலிஸம்' என்கின்றோம்.

**V. நெடுவினா:**

1. **சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.**

**சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகள்:**

ஆறு ஒரேயடியாகக் கரை தளும்ப நிரம்பி இருக்கிறது. எதிர்க் கரையே தென்படவில்லை. ஓரோரிடத்தில் சுழல்களாகப் பொங்குகிறது. மீண்டும் ஓரோரிடத்தில் துள்ளி எழும் வெள்ளத்தைத் தன் இருகரங்களாலும் அடக்கி,



PROOF COPY
www.tnpscjob.com

அழுக்கிச் சமமாகப் பரவச் செய்தவாறு ஓடுகிறடு.

நாட்டுப் புறங்களில் இருக்கும்போது, எல்லாவற்றையும் விழுங்கவல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது. பட்டணத்திலோ, மனித சமுதாயம்தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. அங்கே மனிதனுடைய கொடூரமான தன்மை வெளிப்படுகிறது. தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிரின் சுக துக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவதுகூட இல்லை. ஐரோப்பாவிலும் மனிதனுக்குத்தான் முக்கியமான இடம். அவனுடைய வழியோ மிகச் சிக்கலானது. அவர்கள் மற்ற பிராணிகளைச் சாதாரனமான உயிர்களென்றே நினைத்து விடுவார்கள். பாரத நாட்டினர், மனிதன் விலங்காக மாறுவதையோ, விலங்கு மனிதனாக மாறுவதையோ பற்றி எதுவும் தவறுதலாக எண்ணுவது இல்லை. அதனால்தான் நமது சாத்திரங்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவதை, நடக்க முடியாத ஓர் அதிசயம் என்று விட்டுவிடவில்லை.

நாட்டுப் புறங்களில் இயற்கையோடு ஒன்றி உடனுக்குடன் இணைந்து பழகும்போது என் உள்ளத்திலும் பாரத நாட்டின் இயல்பு தலைதூக்குகிறது. (சிதறிய பக்கங்கள்: 113 ஆம் கடிதம்).

PROOF COPY



www.tnpscjob.com

## பிற்சேர்க்கை
## இலக்கணக் குறிப்பு

**1. தொழிற்பெயர்**
1. காட்டல்
2. கோடல்
3. உண்டல்
4. துஞ்சல்
5. கொளல்
6. அறிதல்
7. போற்றல்
8. நினைத்தல்
9. கேட்டல்
10. பயிறல்
11. ஒழிதல்
12. துய்த்தல்
13. தங்குதல்

**2. உரிச்சொற்றொடர்**
1. மாநகர்
2. நனி இகக்கும்
3. உறுபகை
4. தடந்தேர்
5. மாமதலை
6. கடிநகர்
7. சாலத்தகும்

**3. முற்றும்மை**
1. ஐந்தும்

**4. அசைநிலை**
1. ஆல், அம்ம

**5. அண்மை விளிச்சொல்**
1. கண்ணி

**6. செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்**
1. தரும்

**7. இடைக்குறைவிகாரம்**
1. பொருள் எலாம்
2. நிகர்அலன்

**8. பண்புத்தொகை**
1. செங்கயல்
2. வெண்சங்கு
3. அரும்பிணி
4. செஞ்ஞாயிறு
5. பெருங்கலம்
6. பெருவழி
7. வெண்சுவை
8. தீம்பால்
9. பெரும்புகழ்
10. தெண்டிரை
11. நெடுங்குன்று
12. பேரன்பு
13. நன்னாடு
14. கருங்கடல்
15. பெருந்துயர்
16. வெங்கணை
17. செங்கை
18. வெவ்வினை
19. இளமுகம்
20. நல்லூண்
21. சிறுபுல்
22. பேரழகு
23. முந்நீர்
24. நன்மண்
25. அருஞ்சமம்
26. நல்லாடை

**9. வினையாலணையும் பெயர்**
1. கேட்போர்
2. பிரிந்தோர்
3. குறிப்புணர்வார்
4. புதுக்கியவர்

**10. எண்ணும்மை**
1. மஞ்ஞையும் கொண்டலும்
2. அரும்பும் மலரும்
3. அறிவும் ஒழுக்கமும்
4. தானமும் ஒழுக்கமும்
5. தவமும் ஈகையும்
6. ஈகையும் செல்வமும்
7. புழுக்களும் பூச்சியும்

**11. இருபெயரொட்டுப் பண்புத்தொகை**
1. தமிழ்க்கவிஞர்
2. தேன்துளி

**12. முன்னிலை ஒருமை வினைமுற்று**
1. உரைத்தாய்

**13. ஆறாம் வேற்றுமைத்தொகை**
1. அகிற்புகை

**14. இரண்டாம் வேற்றுமைத்தொகை**
1. கொன்றை சூடு
2. உடை அணிந்தேன்

**15. தன்மைப் பன்மை வினைமுற்று**
1. ஆடுகம்

PROOF COPY



www.tnpscjob.com

**16. இரண்டாம் வேற்றுமை உருபும் உடன்தொக்க தொகை**

1. பொன்நகர்
2. பூக்குலை

**17. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**

1. பொற்காலம்
2. பொற்சிலம்பு

**18. தன்மை ஒருமை வினைமுற்று**

1. மருண்டனென்
2. கற்றேன்

**19. அடுக்குத்தொடர்**

1. நன்றுநன்று
2. உழுதுழுது
3. பார்த்துப்பார்த்து
4. நில்நில்

**20. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

1. முயலா
2. பிழையா
3. ஒடியா
4. ஆசிலா
5. ஓவா

**21. உயர்வு சிறப்பும்மை**

1. முத்தியும் பெறுதி

**22. மெலித்தல் விகாரம்**

1. வென்றி

**23. பெயரெச்சம்**

1. சூழ்ந்த
2. புகுந்த
3. மலிந்த
4. மண்டிய
5. பூத்த
6. பொலிந்த
7. மாண்ட தவளை
8. பின்னிய
9. முளைத்த

**24. உம்மைத்தொகை**

1. வெப்பம் குளிர்
2. புல்புழு
3. இராப்பகல்

**25. வினைத்தொகை**

1. எறிகல்
2. விரிகதிர்
3. ஒழுகுநீர்
4. எறிவாள்
5. சுடுகாடு
6. கொல்புலி
7. குரைகடல்
8. அலைகடல்
9. புகழ்பண்பு
10. வாழ்அயன்
11. செய்புண்ணியம்
12. செய்தொழில்
13. வீழருவி

**26. சொல்லிசை அளபடை**

1. நிலைஇய
2. வளைஇ
3. அசைஇ
4. ஒரீஇய

**27. வியங்கோள் வினைமுற்று**

1. கெடுக
2. ஓதுக
3. பேசிடுக
4. ஆழ்க
5. வாழிய
6. நவில்க
7. உதவுக
8. கொள்க
9. தருக
10. சொல்லுக

**28. வினையெச்சம்**

1. உருட்டி

**29. இசைநிறை அளபடை**

1. தகாஅர்
2. புகாஅர்

**30. போலி**

1. பந்தர் - பந்தல் என்பதன் ஈற்றுப்போலி
2. இடன் - ஈற்றுப்போலி
3. அறன் - ஈற்றுப்போலி
4. திறன் - ஈற்றுப்போலி

**31. ஏவன் பன்மை வினைமுற்று**

1. ஏகுமின்

**32. ஏவல் ஒருமை வினைமுற்று**

1. ஏகுதி

**33. இலக்கணப் போலி**

1. வாய்க்கால்

**35. உவமைத்தொகை**

1. மலையலை
2. குகைமுகம்

**34. இரட்டைக் கிளவி**

1. நெறுநெறு

**35. உருவகம்**

1. காலத்தச்சன்
2. கண்மலர்

PROOF COPY



www.tnpscjob.com